# கொங்கு வட்டார வழக்குச் சொல்லகராதி



பதிப்பாசிரியர்

**நல்ல. பழனிசாமி**

ஆசிரியர்

**இரா. இரவிக்குமார்**

# கொங்கு வட்டார

# வழக்குச் சொல்லகராதி

பதிப்பாசிரியர் :

**மருத்துவர். நல்லா. பழனிசாமி**

தொகுப்பாசிரியர் :

**இரா. இரவிக்குமார்**

வெளியீடு :

**கொங்கு மண்டல ஆய்வு மையம்**

உடுமலைப்பேட்டை.

# நூற்குறிப்பு


நூலின் பெயர் : **கொங்கு வட்டார வழக்குச் சொல்லகராதி**

பதிப்பாசிரியர் : **மருத்துவர். நல்லா. பழனிசாமி,**

கோவை மருத்துவ மையம் (KMCH)

கோயமுத்தூர்.

தொகுப்பாசிரியர்: **இரா.இரவிக்குமார்**

கொங்கு மண்டல ஆய்வு மையம்,

உடுமலை.

அச்சமைப்பு : **ரவி அச்சகம்,** உடுமலை.

முதற்பதிப்பு : நவம்பர் 2008

நூல் அளவு : 22 x 14 செ.மீ

புள்ளி : 11 புள்ளிகள்

எழுத்துருக்கள் : **மறுமலர்ச்சி தமிழ் எழுத்துருக்கள்**

விலை : ரூ. **100/-**

**கி. இராஜநாராயணன்**

04, அரசு வீடுகள், லாசுப்பேட்டை,

புதுச்சேரி – 605 008.



## <u>வாழ்த்துரை</u>

அன்பர் உடுமலை ரவி அவர்களுக்கு நலம்.

உங்களுடைய அகராதி பிடிச்ச வேலையை ஒரு பார்வை பார்த்தேன் ; நல்லாவேதான் வந்திருக்கு.

**அங்கராக்கு** என்பது சரியான கொங்கு வட்டாரச் சொல்தான். இதுக்கு வேறு வட்டாரச் சொற்கள் இங்கே உண்டு. கமுசு என்றும், சொக்காய் என்றும். நமது பூர்வீக கிராமத்து மக்கள் (ஆணும், பெண்ணும்) சட்டை போடுவதில்லை. இவை பின் நாட்களில் வந்தவை. (மலைசாதி மக்களோ நரிக்குறவர்களோ இப்போதும் சட்டை போட்டு நான் பார்த்ததில்லை). நானே கூட ஊரில் இருக்கும்போது சட்டை போடுவதில்லை; வெளியூர் போனாத்தான் சட்டை.

இப்பவெல்லாம் சடசட வென்று (கல் மழை போல!) வட்டாரச் சொல்லகராதிகள் வந்து நம்மைக் கலக்கிக் கொண்டிருக்கின்றன.

கண்ணை மூடித்திறப்பதற்குள், நாஞ்சில், நெல்லை, செட்டிநாடு, கொங்கு என்று வட்டார வழக்குச் சொல்லகராதிகள் வந்து விட்டன. இன்னும் வரும் என்று தோன்றுகிறது; இவை காலத்தின் அவசியம். இவைகளையெல்லாம் ஒன்று சேர்ப்பது போல ஒரு மகா வட்டார வழக்குச் சொல்லகராதி – அகிலத் தமிழ் வட்டார வழக்குச் சொல் அகராதியாக – மைசூரிலிருந்து வரப்போவதாக, பணிகள் தொடங்கி விட்டன என்பது போன்ற பயமுறுத்தும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படி வரவேண்டும் என்பதுதான் எனது நீண்ட நாள் கனவு.

நாமெல்லாம் பெரும் பசியோடு இருப்பவர்கள்; "அவக்குத் தொச்" என்று தின்போம். சாப்பிடும்போது எதோடு எதைச் சேர்த்துத் திங்க வேண்டும் என்கிற முறைமை எல்லாம் நமக்குத் தெரியாது. நாம – நாம என்பது நம்மைப் போன்றவர்கள் – எந்தப் பள்ளிக்கூடத்தில் இதுகளையெல்லாம் படிச்சோம் அதுக்கெல்லாம்.

முறைப்படி பிள்ளையைப் பெற்றுத் தருவது என்று ஒன்று இருக்கெ. அதுபடிக்கு அவர்கள் பெற்றுத் தரப்போகிறார்கள். நல்லதுதானெ. வரட்டும்.

வட்டாரந்தோறும் உள்ள சொல் ஒழிப்புகளையும் காட்ட (‘’) என்றுள்ள அடையாளங்களோடு எனது அகராதியில் சொற்களை பதிவு பண்ண வாய்ப்பு எனக்கு இல்லாததால் ஒருவகை மொட்டைச் சொல் அகராதியாகவே வந்துவிட்டது.

பேசும்போது – நமது மக்கள் பேச்சில் – வருகிற அசைப்பு, இளுவை, வெட்டு, மூக்கொலி இதுகளுக்கு முன்னால் நம்முடைய படைப்பாளிகள் கண்டுபிடித்த நமது தமிழ் எழுத்துக்கள் வெறும் நிராயுதபாணிகள் தான். நமது பேச்சுக்கு முன்னால் இந்த எழுத்துக்கள் பேந்தப் பேந்த முழிக்கும்!

சொல் ஆய்வுக்காரர்கள் இதுக்கெல்லாம் சில அடையாளக் குறி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தந்த அடையாளங்களோடு சொற்களைப் பதிப்பித்தால் மட்டும் போதுமா; அவைகளைக் கண்டு தெரிந்து அதன்படி சரியாக உச்சரிக்கவும் தெரியணும் அகராதியைப் படிப்பவர்களுக்கு.

உங்கள் பணி மேலும், மேலும் சிறப்புற எனது மனமார்ந்த நல்லாசிகள்.



கவிஞர். **சிற்பி பாலசுப்பிரமணியம்**

தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு),

பாரதியார் பல்கலைக் கழகம்,

106,50, அழகப்பா லே.அவுட்,

பொள்ளாச்சி – 642 001.



## வாழ்த்துரை

எல்லா வட்டாரங்களையும் போலவே கொங்கு வட்டார வழக்குகளும் தனித்தன்மை வாய்ந்தவை.

இந்த வட்டார வழக்குகளைத் தொகுப்பது தமிழ் மொழிக்கு உயிர்தண்ணீர் அளிப்பது போன்றது. கலைச்சொற்களைக் கண்டு பிடிக்க முடியாமல் திணறும் மொழி வல்லுநர்களுக்கு இந்தக் களஞ்சியங்கள் ‘இந்தா எடுத்துக் கொள்ளுங்கள்’ என்று வளமான சொற்களை முன் வைக்கின்றன.

கொங்கு நாடு பரந்தது. தருமபுரி மாவட்டம் வரை நீண்டு கிடப்பது. ஆகவே கொங்குச் சொற்களுக்குள்ளே கூட வேறு வேறு வட்டார வழக்குகள் வந்து விட்டன. பெருமாள் முருகன் தொகுத்துள்ள அகராதியில் செம்பரி சொற்கள் சேலம் வழக்குகளாக இருப்பதைக் காணலாம். டி.எம்.காளியப்பா, புலவர் மணியன், ஆகியோருடைய கொங்குச் சொல்லகராதிகளும் வரலாற்றுச் சிறப்புடையவை.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் நான் பணியாற்றும்போது மாணவர்கள் வழியாக கொங்குச் சொல்லகராதி ஒன்றை உருவாக்க முயன்றேன். அந்தத் தொகுப்பின் பிரதி கை தவறிப் போனதைப் பேரிழப்பாக உணர்கிறேன்.

எனக்குத் தெரிந்து எங்கள் கிராமங்களில் வழங்கிய சொற்கள் பல இன்று இல்லை. என் பிள்ளைப் பருவத்தில் நான் ‘ரசத்’ தை உண்டதில்லை. ‘மிளகு சாற்’ றையே பருகி இருக்கிறேன். ‘குழம்பு’ என்ற சொல்லும் கூடப் பெரிதும் ‘சாறு’ என்றே பேசப்பட்டு வந்தது. ‘உங்க ஊட்டுலே என்ன சாறு வெச்சிருக்கீங்க?’ என்று விசாரித்திருந்தார்கள்.

‘சாவி’க்குத் ‘தொறப்புக்கை’ என்றே கூறி வந்தார்கள். அது காப்பாற்றப்பட்டிருந்தால் அன்னியச் சாவி கலந்திருக்காது அல்லவா?

இன்றைய நாகரீக சமூகத்தில் உறவுச் சொற்கள் அன்னியமாகி வருகின்றன. 'டேடி மம்மி' கலாச்சாரம் கரும்புத் தோட்டத்தில் புகுந்த கொம்பன் யானையாக அழித்தொழிப்புச் செய்து வருகிறது. நங்கை, கொழுந்தி, மச்சான், மச்சாண்டார், அப்பாரு, அப்புச்சி, அப்பத்தா, அமுச்சி எல்லாம் விடைபெற்றுப் போன சோகம் விவரிக்க முடியாதது.

இத்தகைய சூழலில் கொங்கு வட்டார வழக்கு அகராதியை நண்பரும், நல்ல சிந்தனையாளருமான உடுமலை இரா.இரவிக்குமார் தேடித் தொகுக்கும் அரும்பணியில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. பொன் வைக்கும் இடத்தில் பூ வைக்கும் முயற்சியாக இவ்வகராதி விளங்குகிறது. பல்கலைக்கழக, கல்லூரித் தமிழ்த்துறைகள் செய்ய வேண்டிய பணியைத் தனிமனிதனாக இயன்றளவு உழைத்து இந்நூலை உருவாக்கியிருக்கிறார்.

இவருடைய நற்பணியை எத்தனை பாராட்டினாலும் தகும். கரிசல் காட்டுப் பிதாமகர் கி.ரா. அவர்களிடமே பாராட்டுப் பெற்ற பிறகு வேறு தகுதி என்ன வேண்டும் இவருக்கு? இரா.இரவிக்குமார் இன்னும் நிறைய நிறையச் சொற்களைத் தொகுத்துக் கொண்டே இருக்க வேண்டுகிறேன்.

இந்த சீரிய முயற்சிக்கு கோவை மருத்துவமனையின் அரும்பெரும் தலைவர், கொங்கு நாட்டுப் பண்புகளின் மாறாத களஞ்சியம் மருத்துவர். நல்லா பழனிச்சாமி அவர்கள் உதவ முன் வந்திருப்பதை மனமாரப் பாராட்டுகிறேன். எத்தனை உயரம் சென்றாலும் பறவை சொந்த மண்ணுக்கு திரும்புவது போல் பண்பாளர் மருத்துவர் நல்லா பழனிச்சாமி இத்தகைய பண்பாட்டுப் பணிகளுக்கு ஆதரவுக்கரம் நீட்டியுள்ளார். அவருக்கு என் அன்பான வாழ்த்துக்கள்.

வளர்க கொங்கு நாட்டுப் பணிகள்.

பொள்ளாச்சி

18.08.2008



# சிவக்குமார்

நடிகர் & ஓவியர்,
சென்னை.

## வாழ்த்துரை

கி.மு.4000 ஆண்டுகளுக்கு முன்பே, பண்டைத் தமிழகம், அந்நாளைய நாகரீக உலக மக்களான எகிப்தியர், ஏலமியர், சுமேரியர், பாலஸ்தீனர், கிரேக்கர், ரோமர் ஆகியவற்றுடனும் அராபியர் வெனீசியருடனும் பல்லாண்டுகளாக இடையறாத வாணிபத் தொடர்பு வைத்திருந்திருக்கிறது.

அன்றைய வணிகச் சரக்குகளாக தேக்கு, அகில், சந்தனம், யானைத் தந்தம், சர்க்கரை, மயில்தோகை, குரங்குகள், அரிசி, மிளகு, திப்பிலி – தமிழகத்திலிருந்தே உலகம் முழுக்க சென்றன.

எகிப்தின் பிரமிடுகள் அடியிலும், சால்டியரின் 'ஊர்' என்ற பண்டைத் தலைநகரிலும், தமிழகக் கொங்கு நாட்டின் தேக்கும், எஃகும், சிந்து வெளியில் தங்கமும் கி.மு.4000 – கி.மு.2000 வரை கொண்டு சென்று பயன்படுத்தப்பட்டிருந்தன என்று தெரிகிறது.

கி.மு.1 – ஆம் நூற்றாண்டிலிருந்து ரோமரும் கி.பி. 6 – ஆம் நூற்றாண்டிலிருந்து அராபியரும், கி.பி.14 – ஆம் நூற்றாண்டிலிருந்து வெனீசியரும், கி.பி.16 – ஆம் நூற்றாண்டிலிருந்து போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் – போன்ற ஐரோப்பிய நாட்டினரும், உலக வாணிகத் தொடர்பில் தமிழருடனும், கொங்குத் தமிழருடனும் பங்கேற்று உள்ளனர்.

உலகின் வாணிகப்பாதை, தமிழகத்தின் மேற்கு கடற்கரையில் இருந்து கிழக்கு கடற்கரைக்கும், கீழ்கடற்கரையிலிருந்து மேல் கடற்கரைக்கும், கொங்கு நாட்டின் முழு அகலமும் கடந்தே சென்றது. இப்பாதை ஆயிரக்கணக்கில் துண்டுகளாக கொங்குப் பெருவழி என்றே அழைக்கப்பட்டு வந்தது.

கி.மு.1–ம் நூற்றாண்டு முதல் கி.பி.5–ம் நூற்றாண்டு வரை ஆண்ட ரோமப் பேரரசர்கள் பெரும்பாலோரின் உருவங்கள், பெயர்கள் பொறிக்கப்பட்ட புத்தம் புதிய தங்க, வெள்ளி, தாமிர நாணயங்கள், பெரும்பாலும் தங்க நாணயங்கள் கொங்கு நாடெங்கிலும் – கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக கருவூர், வெள்ளலூர் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கொங்குத் தலைநகரான கருவூரில் வாழ்ந்த ஒரு சஸ்தப்புலவர் கருவூர் கலிங்கத்தார் – கலிங்க நாட்டுப் பெரு வணிகராகவும் விளங்கியிருக்கிறார்.

சற்றேரக்குறைய 1000 ஆண்டு வரலாற்றைப் புரட்டினால், கொங்கு நாடு என்பது கோயமுத்தூர், நீலகிரி, ஈரோடு, தர்மபுரி – திருச்சி மாவட்டத்தில் கரூர், குளித்தலை, மதுரை மாவட்டத்தில் பழனி – திண்டுக்கல் அடங்கிய பரப்பாக கொள்ளப்பட்டு வருகிறது.

அதியமான், காரி, ஓரி, பாரி, பேகன், குமணன் – கொங்கு மண்டலத்தின் வரலாற்றில் இடம் பெற்ற வள்ளல்கள்.

அதியமான் – இன்றைய தர்மபுரி பகுதியை ஆண்டவன். பொதிகை மலையில் திருமுடிக்காரி, பழனி பகுதியில் பேகன், கொல்லிமலைப் பகுதியில் ஓரி, பரம்புமலைப் பகுதியில் பாரி, உடுமலைப் பகுதியில் குமணன் – ஆண்டிருக்கிறார்கள்.

கொங்கு நாடு எக்காலத்தும் பேரரசுகளின் நேரடி ஆட்சிக்கு முழுமையாக உட்படவில்லை என்று தெரிகிறது.

கொங்கு வேளிர் எழுதிய பெருங்கதையும், அண்ணன்மார் காவியமும், தாராபுரத்தைச் சேர்ந்த திருத்தக்கத் தேவர் எழுதிய சீவக சிந்தாமணியும், நன்னூல், நேமிநாதம் உள்ளிட்ட நூல்களும் கொங்கு நாட்டில் எழுந்தவையே.

கடந்த 50 ஆண்டுகளில் கொங்கு நாடு மாபெரும் தொழிற்சாலை மையமாகி விட்டது. பாரம்பரிய விவசாயம் சார்ந்த வாழ்வியல் முற்றிலும் மாறி, ரேக்ளா வண்டிப் பந்தயம், சேவல் சண்டை, மாட்டுப் பொங்கலன்று பூப்பறிக்கச் செல்லுதல் – ராட்டினத்தூறி, குதிரைத்தூறி, சோம்பி ஆடுதல், சடுகுடு – கார்த்திகை மாதம் சூந்தாடுவது, கிராமச் சாமிகளுக்கு நோம்பி சாட்டி உறவுகளை அழைத்து உற்சாகமாக விருந்தளித்துக் கொண்டாடுவது எல்லாம் படிப்படியாக மறைந்து வருகின்றன.

தென்னிந்தியாவின் மான்செஸ்டர், சிக்கன் சிட்டி, மஞ்சள் நகரம், தேங்காய் நகரம், லாரிக் கட்டமைப்பு நகரம் – என்று கொங்கு நாடு வாணிபத்தில் முன்னேறினாலும், மண் சார்ந்த வாழ்வின் சுவடுகள் மறைந்து வருவது துரதிர்ஷ்டம்.

போகிப்பண்டிகைக்கு பூளைப்பூ, வேப்பிலை, வீடு முழுக்க சொருகி தைப் பண்டிகைக்கு தினை மாவில் விளக்கு ஏற்றி, தினை

முறுக்கு, அரிசி முறுக்கு, தட்ட வடை சுட்டு மொடாக்களில் நிரப்பி மாதக்கணக்கில் மாலை வேளைகளில் கொறித்த நாட்கள் போய்விட்டன.

சந்தைக்குப் போகும் பக்கத்து கிராமத்தார், வேகாத வெய்யிலில் வீடு தாண்டிப் போகும்போது, அவர்களுக்கு நீர் மோரும், பானகமும் தண்ணீர்ப்பந்தலில் வழங்கியவர்கள் நம் மூதாதையர்கள்.

பாக்கு மட்டையில் புளிசாதம் கட்டி, 10 மணி இரவு ரயில் பிடித்து, பழனி மலையில் அதிகாலை 4 மணிக்கு பற்கள் நடுங்க இறங்கி, குளிர் போக வேகவேகமாய் நடந்து கருப்பட்டிச்சத்திரம், மங்கம்மா சத்திரத்தில் சிறிது நேரம் கண்மூடி, விடியுமுன் வரட்டாறு, சண்முக நதி சென்று சடாமுடிச் சாமியார்களோடு, முங்கி எழுந்து, மூச்சிரைக்க மலை சுற்றி உடம்புச் சூட்டில் உடைகளைக் காய வைத்து, பழனி முருகனைச் சந்தித்த நாட்கள் வருமா?

பிரசாதத் தட்டுகளோடு படியிறங்கி ஓடிவர, குறுக்கே பாய்ந்து மிரட்டி, பழங்களையும், தேங்காய் மூடிகளையும் பறித்து தின்னும் குரங்குகளைப் பயத்தோடு பார்த்த நினைவுகள் !

பருத்திச் செடிக்கு நீர்ப்பாய்ச்ச கவலை ஓட்டும்போது, வடக்கயிறு வழுக்கி தலைகுப்புற விழ – தோட்டத்துக்காரன் ஓடி வந்து தூக்கி விட்டு திட்டியது, மடவாக்குழித் தண்ணீரில் மணிக்கணக்கில் முக்குளி போட்டது. சிவராத்திரியில் சாமி மெரமணை – பள்ளயத்தன்று தட்டப்பயிறு – பச்சைப் பயிறு சுண்டல் தின்று – வேர்த்து ஒழுக ஒழுக கோயிலில் செண்டை வாசித்தது!

காடுகரையில் பாம்புகளை அடிக்கடிப் பார்த்தால் – வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலில் போய் பொங்கல் வைத்து பூஜை செய்து – புற்று மண் எடுத்து உடம்பெல்லாம் அப்பிக் கொண்டு – வானுயர்ந்து நிற்கும் வெள்ளை மண் குதிரைகள் பார்த்து வியந்தது – இனி வருமா?

வண்டி கட்டிக் கொண்டு இரவுக் காட்சிக்கு சினிமாவுக்குப் போய், சிகரெட், பீடி நாற்றத்திலும் மூத்திர வாடையிலும் – கந்தர்வ புருசர்களாக சிவாஜி, எம்.ஜி.ஆர் படங்களைப் பார்த்து ரசித்தது – பழங்கதையாகி விட்டன.

கரண்ட் இல்லாத என் கிராமத்தில் இப்போது மின்சாரம் வந்து மிக்சி, பிரிட்ஜ், கேஸ் அடுப்பில் காய்கறியுடன் சமையல் – டி.வி.யில்

உலகச் செய்தியுடன் ஓயாத சினிமாப்படங்கள், அட்டணங்கால் போட்டு அக்கா பார்த்துக் கொண்டிருக்கிறார். கிணற்றடி – குழாயடியாகி, மேக்ஸி – நைட்டியில் அன்றைய பாவாடைப் பெண்கள்!

விடியும் முன்னும், பொழுது சாய்ந்த பின்னும் எலந்தை மரத்தில் அடையும் சிட்டுக்குருவிகளின் கிரிச் ஒலி, இருட்டும் வரை கூட்டுக்குள் அடைய முரண்டு பிடித்து தட்டுப்போர்களிலும், வீட்டுக் கூரைமீதும் தாவும் சேவல்களின் குறும்பு, அழகாய் ஐந்து குட்டி போட்டு வீடு முழுக்க அவைகளைக் கூட்டிக் கொண்டு சுற்றும் பூனை, கண் திறப்பதற்கு முன் மோப்பத்தைக் கொண்டு முலை தேடி பாலூட்டும் நாய்க்குட்டிகள், கன்று போட்டபின் மூன்று நாட்கள் சாப்பிடும் சீம்பால்.

மாலை நேரங்களில் டிபனுக்குச் செய்யும் பச்சைப் பருப்பு வடை, தட்டைப் பயறு வடை, ராகி வடை – அழுக்கேறிய கையில் உருவி உருவி அழகழகாய் வாட்ச், தேள் செய்து தரும் பம்பாய் மிட்டாய்க்காரன் – ஈயம், பித்தாளைக்குப் பேரீச்சம் பழம் தருபவன், செகை ( நீர்க்கருப்பி) பிடித்தால் சோத்துத் தண்ணி இரண்டு கிளாசும், சின்ன வெங்காயம் நாலும் உறித்துத் தரும் அம்மாச்சி.

மூச்சு முட்டும் நிசப்தச் சூழலில் நிலவொளி – நட்சத்திரவொளி !

பாம்பு, பல்லிக்குப் பயந்து ஓங்கிப் பாடிக் கொண்டே, பாதையில் விளக்கில்லாத சைக்கிள் மிதித்த நாட்கள். சிரிச்சுப் பேசாத அப்பன் அம்மா, சேர்ந்து உட்காராத அப்பன் அம்மா வீட்டில் எப்படி ஏழெட்டுக் குழந்தைகள் பிறந்தன என்ற இளவயதுக் கேள்விகள் ! அம்மை பார்த்து பத்து நாள் பத்தியச் சோறு தின்று வேப்ப இலை அரைத்து, பூசி வெந்நீரில் குளித்து – கொள்ளுப் பருப்போடு அரிசி சாதம் சாப்பிட்ட காலம். பனை ஓலையில் காற்றாடி செய்து சோளத்தட்டில் கருவேல முள்ளால் காத்தாடியை இணைத்து – எதிர்காற்றில் ஓடி மகிழ்ந்த காலங்கள், மரப்பாச்சி பொம்மைகளுக்கு வேட்டி கட்டி, மாராப்பு போட்டு திருமணம் செய்தது.

நடு ராத்திரியில் நரி ஊளையிட்டதும், நாலு நாளில் ஒரு பெரிசு மண்டையைப் போடுவது, அடக்கம் செய்யும் வரை, அடுப்பு பத்தவைக்காமல் ஊர் கட்டுப்பாடு காத்தது, சாவு விழுந்த வீட்டுக்கு

வருவோர், சாப்பிட, காபி, டிபனை பக்கத்து வீட்டு பங்காளிகள் சலிக்காமல் செய்து கொடுப்பது.

கிணற்றில் விழுந்தோ, தீப்பற்றியோ – சுருக்குப் போட்டு தற்கொலையோ, ஊரில் யாராவது செத்தால் – மூச்சு வெளியே விடாமல் – மூணு லிட்டர் எண்ணெயும் விறகும் போட்டு போலீசுக்கு எட்டுவதற்குள் எரித்து விடுவது.

விவசாயம் செய்வோர், வேட்டைக்குப் போவோர் சுபகாரியங்களைச் செய்யும் நாவிதர், துணி வெளுக்கும் வண்ணார் – எனத் தொழில் வேறு வேறாக இருப்பினும் பேதம் காட்டாமல் ஒற்றுமையாக, ஊர்க்கட்டுப்பாட்டுடன் வாழ்ந்த நாட்கள் !!

சினிமாவும், அரசியலும் நுழையாத அற்புத நாட்கள் இனி வருமா?

மேலே கூறியவை, இந்த சொல்லகராதியைப் படித்ததால் என் மனதில் தோன்றியவை.

கொங்கு வட்டாரச் சொல்லகராதியைத் தொகுத்துள்ள தம்பி இரா.இரவிக்குமாருக்கும், அவருக்கு உதவியாக இருந்த, திண்டுக்கல் சிவசுப்பிரமணியம், பாலமேடு ராஜா, பல்லடம் வேலுச்சாமி, திருப்பூர் பொன்னுசாமி, உடுமலை பேராசிரியர். கிருஷ்ணன், தாராபுரம் பாஷா, கரூர் சரவணப்ரியன், பொள்ளாச்சி மது.இராமகிருஷ்ணன், ஒட்டஞ்சத்திரம் விஜயகுமார், அறச்சலூர் நல்லுசாமி, குடிமங்கலம் சிலம்புச்செல்வி, தேன்மொழி ரவிக்குமார் படங்கள் வரைந்த ஓவியர் ஸ்ரீதர் மற்றும் கா.கருமலையப்பன், பொள்ளாச்சி மனோகரன், ந.பிரகாசு, மா.பாலகிருஷ்ணன் அனைத்து தம்பிகளுக்கும், பெரியவர்களுக்கும், உங்களின் இந்த அரிய முயற்சிக்கும், பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை பதிப்பிக்கும், அன்புக்குரிய மருத்துவர். நல்லா. பழனிச்சாமி அவர்களின் கொங்கு மண் சார்ந்த பற்றுக்கும், அவர் செய்யும் உதவிகளுக்கும் பாராட்டுக்களையும், நன்றியுரைகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர். **செ.இராசு** எம்.ஏ.பி.எச்.டி.,

**முன்னாள் தலைவர், கல்வெட்டு – தொல்லியல் துறை**

தமிழகத் தொல்லியல் கழகம்,

தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.



## வாழ்த்துரை

உடுமலைப்பேட்டை கணினி வல்லுநர், பொறியாளர், பேராசிரியர், நண்பர் இரா.இரவிக்குமார் அவர்கள் பன்முக மாட்சிகளுக்குச் சொந்தக்காரர். துடிப்பும், தொலைநோக்குப் பார்வையும் சமுதாய உணர்வும், நாட்டு நலனில் அக்கறையும் உடைய இளைஞர். உழவர் நலனிலும், நவீன வேளாண்மை உத்திகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

கொங்கு நாடு, கொங்குச் சமுதாயம் தொடர்பான ஆய்வுகள் மூலம் நூல்களை வெளியிட்டு அனுபவம் பெற்ற அவர் ஏறக்குறைய இரண்டாண்டு முயற்சியால் இப்போது 'கொங்கு வட்டார வழக்குச் சொல் அகராதி' என்ற மிக அரிய நூலை வெளியிடுகிறார்.

வட்டார வழக்குச் சொற்கள் தொகுப்பதன் தேவை, அதன் இன்றியமையாமை, அழிந்து வரும் வட்டார வழக்குச் சொற்களைத் தொகுக்கும் முயற்சி, பிறமொழி, பிற பகுதி மக்கள் குடியேற்றத்தால் புதிய சொற்கள் மொழியில் புகுதல் இவைபற்றி ஆசிரியர் விரிவாகத் தனது 'அகராதிப் பயணம்' என்ற முன்னுரையில் மிக நன்றாக விளக்கியுள்ளார்.

வேளாண்மைத் தொழிலோடும், வேளாளர் வாழ்வோடும் தொடர்புடைய நூற்றுக்கணக்கான அழியும் நிலையில் உள்ள பழமையான சொற்களைப் பதிவு செய்து காப்பாற்றிய பெருமை நண்பர் இரா.இரவிக்குமார் அவர்கட்கு உரியதாகிறது.

இந்நூலில் மூன்று வகையான சொற்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

(1) கொங்கு நாட்டுக்கு உரிய தனித்தன்மை சொற்கள்.

(2) கொங்கு நாட்டார் சொற்களை உச்சரிக்கின்ற வடிவிலான சொற்கள்.

(3) பிற மக்கள், பிற மொழித் தாக்கத்தால் புகுந்த சொற்கள்.

என்பவை அவை. சொற்கள் வழங்கும் தொடர்களும், இன்றிமையாத படங்களும் நூலுக்கு அணிசெய்கின்றன.

கொங்கு மண்ணின் மணம் கமழும் வட்டாரச் சிறுகதைகள் இணைத்திருப்பது பாராட்டுவதற்கு உரியது.

சோர்வில்லாமல் சொல்லகராதித் தொகுப்பில் ஈடுபட்டு வெற்றி கண்ட நண்பர் இரா.இரவிக்குமார் அவர்களையும், இந்த அரிய முயற்சிக்கு அவருக்கு உறுதுணையாக இருந்த நண்பர்களையும் மனமாரப் பாராட்டி மகிழ்கின்றேன்.

இந்நூல் உருவாவதற்கு காரணமாக விளங்கியவரும், அரிய இந்நூலை பதிப்பிக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டவருமான மொழி ஆர்வலர், தக்காரைத் தகுதி அறிந்து பாராட்டி மகிழும், கோயமுத்தூர், கோவை மருத்துவ மையத்தின் தலைவர், மருத்துவர். நல்லா பழனிச்சாமி அவர்களை மனமாரப் பாராட்டி மகிழ்கின்றேன்.

இதுபோன்று பயனுடைய பன்னூல்களை வெளியிட்டுச் செம்மொழி தமிழுக்குச் சிறப்புச் சேர்க்க நண்பர் இரா.இரவிக்குமார் அவர்களை வேண்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

ஈரோடு
27.6.2008

(செ.ராசு)

# கோவை மருத்துவ மையம் & மருத்துவமனை (KMCH)



தபால் பெட்டி எண் : 3209,
அவிநாசி ரோடு, கோயமுத்தூர் – 641 014.
Ph : (0422) 4323800 Fax : (0422) 2627782

**மருத்துவர். நல்லா. பழனிச்சாமி**
தலைவர்

## பாராட்டுரை

கொங்கு மக்களின் பழக்கவழக்கங்கள், அவர்கள் பேசும் பேச்சுக்கள், வாழ்க்கை முறை எல்லாம் ஒரு தனிக் கலாச்சாரம். அவற்றைத் தொடர்ந்து அவர்கள் நடாத்திக் கொண்டு வர முடியுமா, கால வெள்ளத்தில் அவை எல்லாம் மறந்து போய் விடுமா அல்லது மறைந்து போய் விடுமா என்பது சிலருடைய மன உளைச்சல்கள். பலர் அதுபற்றி நினைப்பது இல்லை.

இன்றைய தொலைக்காட்சிகள், சினிமாக்கள், பத்திரிக்கைகள் எல்லாம் ஒரு குழம்பிய கலாச்சாரத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றன. வடமொழி, ஆங்கில மொழிகளும் கலாச்சாரங்களும் நமது மக்கள் வாழ்க்கையில் கலந்து கொண்டு இருக்கின்றன.

இந்தக் கால கட்டத்தில் நாம் என்ன செய்ய வேண்டும், என்ன செய்ய முடியும் என்பது ஒரு சிந்திக்க வேண்டிய நிலை. ஒரு கட்டுப்பாடான அமைப்பு. "Dedicated and Committed people and organization" இருந்தால் ஒழிய ஒரு மக்களின் வாழ்க்கைப் போக்கை மாற்றுவது என்பது முடியாத ஒன்று. அப்படி முடியும் என்று நடாத்திக் கொண்டு இருப்பவர்கள் இந்தியாவில் ஜைனர்களும், பார்சிகளும், உலக அளவில் யூதர்களும், முகம்மதியர்களும் ஆவார்கள். இப்படிப்பட்ட அமைப்பு நம்மிடம் இல்லை. ஆனால் இன்னும் சில ஊர்களில் நம் பழக்க வழக்கங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. அவற்றையே நாம் தொடர்ந்து பராக்கிரமிக்க முடியுமா என்று பார்க்க வேண்டும்.

நமது தனிக் கலாச்சாரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றால் நமக்கு ஒரு நல்ல அமைப்பு வேண்டும். அந்த அமைப்பு எல்லோராலும் ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

கலாச்சாரத்தில் மட்டுமல்லாமல் வர்த்தகத் துறையிலும், வேலை வாய்ப்புகளிலும் உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படிப் பட்ட ஒரு கலாச்சார அமைப்பை நல்லவர்கள், வல்லவர்கள் நடாத்திக் கொண்டு இருக்க வேண்டும். இந்தக் கூட்டு அமைப்பை ஏற்படுத்தத் தங்களைப் போன்றவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

கொங்கு சொல் அகராதி கொண்டு வரப் பாடுபட்ட தங்களையும், தங்களுக்கு உறுதுணையாக இருந்தவர்களையும் உளமாரப் பாராட்டுகிறேன். தங்கள் முயற்சிக்கு நான் எப்பொழுதும் உறுதுணையாக இருப்பேன் என்று சொல்லிக் கொள்ளுகின்றேன்.

நன்றிகள். வணக்கம்.

அன்புள்ள,

(டாக்டர் நல்லா. பழனிசாமி)



# கொங்கு மண்டல ஆய்வு மையம்

உடுமலைப்பேட்டை.

இரா. இரவிக்குமார்

## அகராதிப் பயணம்...

இந்த வட்டார வழக்குச் சொல்லகராதி எனும் நூல் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தை என்னுள் உருவாக்கியவர் கோவை மருத்துவ மையத்தின் தலைவர் நல்லா. பழனிச்சாமி அவர்கள். இந்த நூல் கொங்கு வட்டார வழக்குச் சொற்கள் அனைத்தும் தொகுக்கப் பட்ட முழு அகராதி என்று கூற முடியாது. காரணம், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் கொங்கு நாடு மாபெரும் தொழில் மையமாக மாறிவிட்டது. பல அணைகள் கட்டப்பட்டதால் விவசாயிகள் பணப்பயிர் விவசாயத்திற்கு மாறிவிட்டனர். இதனால் ஈரோடு, கோவை, சேலம் போன்ற பகுதிகளில் வாழும் மக்களின் இயல்பு வாழ்க்கைகூட முற்றிலும் மாறிவிட்டது.

கொங்கு நாட்டு வாலிபர்களின் வாழ்க்கையோடு இணைந்திருந்த ரேக்ளா வண்டிப் பந்தயம், சேவல் சண்டை போன்றவற்றை இன்று பார்க்கச் சென்றாலே ஏளனமாகப் பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டோம்.

### கொங்கு மண்டலம் :

கொங்கு மண்டலத்தின் மாண்புகளை

நீலமலைச் சாரலிலே நிலம் விரித்து
நெளிந்து வரும் தென்றலினை வளையவிட்டு
பால்போன்ற இதயத்தைப் பிள்ளை யாக்கி
பண்பினையும் அன்பினையும் துணைவ ராக்கி
வாழுங்கள் எனவிட்டாள் தமிழ்மூ தாட்டி
வாழ்கின்றார் கொங்கினிலே நல்ல மக்கள்
சூழ்கின்ற பண்பெல்லாம் கோவையில் தான்
சுவையெல்லாம் பணிவெல்லாம் கொங்கினில்தான்

ஏனுங்க! என்னவுங்க! ஆமா முங்க!
இருக்குங்க! சரியிங்க! பாக்க வாங்க!
மானுங்க! வேணுங்களா! வாங்கிக் கோங்க!
மலைப்பழமும் இருக்குங்க! எடுத்துக்கோங்க!
தேனுங்க! கையெடுங்க! சாப்பி டுங்க!
அப்பப்பா! கோவையிலே விருந்து வந்தால்
ஆறுநாள் பசி வேண்டும்! வயிறும் வேண்டும்!

என கவியரசு கண்ணதாசன் கொங்கு நாட்டின் விருந்தோம்பலை மிக அழகாக கூறியுள்ளார்.

தமிழகத்தின் பண்பாட்டுப் பெருமையிலும், வர்த்தக முன்னேற்றத்திலும் தனக்கென தனி இடத்தைக் கொண்டுள்ளது கொங்கு மண்டலம். உலக வரைபடத்தில் 'சிக்கன் சிட்டி' என்று அழைக்கப்படும் வகையில் கோழி உற்பத்தியில் முன்னிலை வகிக்கிறது. கோவை நூற்புத் தொழிலில் முன்னிலை வகிப்பதால் 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவின் மொத்த மின் மோட்டார் உற்பத்தியில் நாற்பது சதவிகித உற்பத்தியும், வாகன உதிரிபாக உற்பத்தியில் இருபது சதவிகிதம் கோவை நகரமும், மஞ்சள் உற்பத்தியில் ஈரோடு பகுதி முன்னிலையில் இருப்பதால் 'மஞ்சள் நகரம்' எனப் பெருமை பெறுகிறது. தேங்காய் உற்பத்தியில் பொள்ளாச்சி முக்கிய பங்கு வகிப்பதால் 'தேங்காய் நகரம்' என சிறப்புப் பெறுகிறது. இந்தியாவில் ஓடும் லாரிகளில் எழுபத்தைந்து சதவிகித லாரிகளின் கட்டமைப்புப் பணிகள் நாமக்கல்லைச் சார்ந்ததால் 'போக்குவரத்து நகரம்' என இதனை பெருமையுடன் அழைக்கின்றனர்.

இத்தகைய கொங்கு மண்டலத்தில் வாழ்ந்து வந்த மக்கள் விவசாயத்திலிருந்து தொழில்துறைக்கு மாறியதன் காரணமாக வட்டார வழக்குச் சொற்கள் வெகுவாக அழிந்து வருகிறது.

கொங்கு நாட்டில் தனிப்பட்ட மக்களின் உச்சரிப்பு, தோரணை, சொற்களின் அழுத்தம், சொற்களின் தொனி இவற்றைப் பேசுவோரின் முகபாவனையோடு கேட்பதே ஒரு மகிழ்ச்சியைத் தரக்கூடியதாகும். வட்டார மொழியில் உள்ள சொற்கள் உணர்வோடு தொடர்பு உடையவை. பொருள் செறிந்த சொற்கள்.

ஒவ்வொரு மண்ணுக்கும் அவற்றிற்கே உரிய தனித்தனி கலாச்சாரங்கள் மட்டுமல்ல நாட்டுப்புறப் பாடல்களும் இசை வடிவங்களும் உள்ளது. கொச்சையான கொங்குப் பேச்சிலே கனிவும், கபடமற்ற அன்பும் கலந்திருக்கும்.

'வாங்கோ, போங்கோ, உக்காருங்கோ' என அடிவயிற்றிலிருந்து உள்ளன்போடு வரும் சொற்கள் கொங்கு நாட்டிற்கே உரியவை.

மெதுவாக வழக்கழிந்து வந்த வட்டார வழக்குச் சொற்கள் இன்றைய காலகட்டத்தில் மிகவேகமாக அழிந்து வருகிறது. இதனை பதிவு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

கொங்கு வட்டாரச் சொல்லகராதி தொகுக்கும்போது நீண்டகால இடைவெளியைத் தாண்டி தொகுப்பதாகவே கருதுகிறேன். நங்கையா, கொழுந்தியா போன்ற உறவுச் சொற்கள் கூட முற்றிலுமாக அழிந்து விட்டதாகக் கூறலாம். ஆட்டுக்கல்லும் அம்மிக்கல்லும் வரலாற்று நினைவுச்சின்னமாக மாறிவிட்டது. அந்த இடங்களை மிக்சியும் கிரைண்டரும் பிடித்துக் கொண்டது. சாமை, தினை போன்ற சிறு தானியங்கள் விளைந்த மேட்டாங்காடுகளில் எல்லாம் காற்றாடிகள் பறக்கிறது. இதனால் பல குருவி இனங்கள் கூட காணாமல் போய்விட்டது. அடைகாக்கும் நாட்டுக் கோழிகள் காணாமல் போய் பிராய்லர் கோழிகள் வந்துவிட்டது. மண்சட்டி சமையலை விரட்டி விட்டு பிரஷ்ஷர் குக்கருக்கு மாறி பாஸ்ட்புட்டில் வந்து நிற்கிறோம். பல வீடுகளில் மண்அடுப்பு வைத்துக் கட்டுவதே இல்லை. அதற்கான தேவையும் இல்லாமல் போய்விட்டது.

வாரக்கணக்கில் நடைபெறும் கொங்குத் திருமணங்கள் கூட ஒரு நேர கடைச்சோற்று ரிசப்சனாகிவிட்டது. பங்காளி என்ற புனிதமான சொல் கூட பங்ஸ் என்றாகிவிட்டது. சவாரி வண்டிகள் நின்ற வீடுகளிலெல்லாம் வெளிநாட்டு கார்கள் அணிவகுத்து நிற்கின்றது. கிராமத்தில் இருந்தால் குழந்தைகளின் கல்வி பாதிக்குமெனக் கருதியும், ஆங்கில மோகத்தாலும் நகர்ப்புற நரக வாழ்க்கைக்கு மாறிவிட்டோம். வாய்ப்பாடு கற்றுக் கொடுத்த திண்ணைப்பள்ளிகள் அழிந்துபோய் புதிய கல்வித் திட்டங்கள் வந்துவிட்டது. இந்நிலையில் வட்டார வழக்குச் சொற்கள் அழியாமல் காப்பது என்பது சற்று கடினமான செயல் என்பது நிதர்சனம்.

பிறப்பின் தாலாட்டிற்கும், இறப்பின் ஒப்பாரிக்கும் இடையே நடைபெறும் சடங்குகளில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, கோபி செட்டிபாளையம் பகுதியில் பொட்டிப்பணம் என்று திருமணத்திற்கு கொடுப்பார்கள். ஆனால் பொள்ளாச்சி, உடுமலை பகுதிகளில் இந்தச் சடங்கு இல்லை. இதேபோல், கொங்குநாட்டில் திருமணத்தில் பந்தல் அமைத்தல் நிகழ்ச்சி தாய்மாமன் சீராகவே கருதப்படுகிறது. ஆனால், இதே பந்தல் போடும் நிகழ்ச்சி செட்டி நாட்டில் இறப்பின் போது ஒரு சடங்காக உள்ளது. இதுபோன்று வட்டாரத்திற்கு வட்டாரம் பல சடங்குகளில் வேறுபாடு தென்படுகிறது.

**வட்டார வழக்கின் எல்லை :**

நாஞ்சில் நாடு மற்றும் செட்டி நாட்டிற்கு எல்லையாக ஒரு பகுதி கடல் இருப்பதுபோல் கொங்கு வட்டாரத்திற்கு ஒரு பகுதியாக மேற்குத் தொடர்ச்சி மலையை எடுத்துக்கொள்ளலாம்.

மேற்குத் தொடர்ச்சி மலை முழுவதும் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியாக இருப்பதால், இவர்கள் பேசும் மொழி தமிழ் மொழியின் கிளை மொழியாக உள்ளது. ஆதலால், கொங்கு வட்டாரத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. கொங்கு நாட்டை பூர்வீகமாக கொண்டவர்களிடத்திலிருந்து மட்டுமே தொகுக்க வேண்டும். ஆனால், இன்றைய சூழ்நிலையில் கொங்கு நாடு அல்லாத மற்ற பகுதியிலிருந்த மக்கள் இங்கு வந்து குடியமர்ந்ததாலும் புதிய சொற்கள் புகுந்து விட்டது. இது தவிர்க்க இயலாத ஒன்று.

கொங்கு வட்டாரத்தை ஒரு சிறு எல்லையாக வரையறுப்பது கடினம். பொள்ளாச்சி, உடுமலை, பழனி, தாராபுரம், காங்கயம், ஈரோடு, கோபி, கரூர், திருச்செங்கோடு, சேலம், நாமக்கல், பல்லடம் மற்றும் மேட்டுப்பாளையம் ஆகிய வட்டங்களை தன்னகத்தே கொண்டது கொங்கு நாடு.

பொள்ளாச்சி – உடுமலைப் பகுதிகளில் கேரள மக்கள் மற்றும் செட்டிநாட்டு மக்களின் வருகையாலும் வட்டார வழக்கின் சிதைவு அதிகமாக உள்ளது. மேட்டுப்பாளையம் பகுதியில் படுகர் இனத்தவரின் வருகையாலும், காரமடை, சத்தியமங்கலம் மற்றும் அன்னூர் பகுதிகளிலும் கன்னட மொழியின் தாக்கம் அதிகமாக உள்ளது.

பல்லடம், திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய பகுதிகளில் நூற்பாலைகள் அதிகமாக இருப்பதாலும், மதுரை, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலிருந்து தொழில் நிமித்தமாக வரும் மக்களாலும், காங்கயத்தில் எண்ணெய் நிறுவனங்கள் அதிகமாக இருப்பதாலும் மற்றும் விவசாயம் செய்வது குறைந்து வருவதாலும் வட்டார வழக்குச் சொற்கள் அருகி வருகின்றது.

அறச்சலூர், தாராபுரம், கொடுமுடி மற்றும் வெள்ளகோவில் போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் விவசாயத்தோடு வாழ்க்கையை இணைத்துக் கொண்டவர்களாக இருப்பதால், ஓரளவிற்கு வட்டார வழக்குச் சொற்கள் அங்கு புழக்கத்தில் உள்ளது. இருப்பினும், அப்பார், அப்பத்தா, அப்பிச்சி மற்றும் அம்மிச்சி போன்ற உறவுச் சொற்கள் வேகமாக மறைந்து வரும் நிலையில் உள்ளது.

அறுவடைக் களைப்பில், இரவு நேரங்களில் கிராமங்களில் நடைபெற்று வந்த அண்ணன்மார்கதை போன்ற கிராமிய கலை நிகழ்ச்சிகள் ஏறக்குறைய காணாமல் போகும் நிலைக்கு வந்துவிட்டது.

**வட்டாரச் சொற்களின் எதிர்காலம் :**

ஒரு நாட்டின் இயற்கை அமைப்பையும் சூழ்நிலைகளையும் பழக்க வழக்கங்களையும் பொறுத்து பேச்சு வழக்கு அமைகிறது. பொது மொழியில் இருந்து ஒலிப்பு முறையாலும், சொற்களாலும், இலக்கண அமைப்பாலும் சற்றே வேறுபாடு உடையதும், நாட்டின் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியை சார்ந்தவர்களால் மட்டுமே பேசப்படுவதுமான மொழி வட்டார மொழி அல்லது வட்டார வழக்குச் சொல் எனக் கூறலாம். வட்டார வழக்குச் சொற்கள் தமிழாகவே இருந்தாலும் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள வெவ்வேறு வட்டாரங்களில் உள்ளவர்கள் புரிந்து கொள்வது சற்று கடினமாகவே இருக்கும்.

வட்டார வழக்கு எந்த ஒரு குறிப்பிட்ட இனத்திற்கும் உரியதல்ல. எழுத்து வடிவில் கற்றுக் கொடுப்பதும் அல்ல. பழக்க வழக்கத்தில் மட்டுமே வருவது. அன்றாடத் தேவைகளை முன்னிறுத்தி வருவது. அந்த வட்டாரத்திற்குள் என்ன தேவையோ அதையொட்டியே அந்த வார்த்தைகள் அமைந்து இருக்கும்.

எழுத்து வடிவிற்கு வரும்போது தன்னுடைய முழு சுதந்திரத்தை அந்த சொல் இழந்து விடுகிறது. வட்டார வழக்குச் சொற்கள் காலத்திற்கும் உயிரோட்டமாக இருப்பது சாத்தியமில்லை. கமலை ஓட்டுதல், மட்பாண்டம் செய்தல், ஏர் உழவு, மரவேலைகள் செய்தல் போன்றவற்றிலிருந்த வட்டார வழக்குச் சொற்கள் ஏறக்குறைய வழக்கொழிந்து விட்டது.

வட்டார வழக்குச் சொற்கள் வாழ்வியலோடு தொடர்புடையச் சொற்களாகவே உள்ளது. இவற்றை தொகுப்பது கிராமத்தின் தொடர்பின்றி முழுமையாக செய்தல் இயலாது. வட்டார வழக்குச் சொற்கள் வழக்கிலிருந்தும், வாய்மொழியாகவும் இருந்து வருபவை. கிராமங்கள் கிராமங்களாக இருக்கும் வரை வட்டார வழக்குச் சொற்கள் உயிரோட்டத்துடன் இருக்கும். இதன் மரபு கெடாமல் தொகுப்பது என்பது எழுத்தினால் இயலாதது. சொற்களை எழுத்து வடிவில் பதிவு செய்யும்போது ஒலிக்கும் முறையும், முகபாவனைகளையும் பதிவு செய்ய இயலாது. வட்டார வழக்கு தொகுப்பதற்கென்று ஒரு நெறிமுறை கிடையாது. இலக்கண வரம்பு கிடையாது. தனது வட்டாரத்தின் மீது ஈர்ப்பு கொண்ட படைப்பாளிகளும், நாட்டுப்புறவியலில் ஆர்வம் கொண்டவர்களும் தான் இந்தப் பணியைச் செய்கின்றனர். வட்டார வழக்கு அகராதிகள் தனிப்பட்ட ஒருவருடைய ஆர்வத்தாலும், கடுமையான உழைப்பால் மட்டுமே இதுவரை உருவாகி உள்ளது. அதில் சில குறைபாடுகள் இருப்பது தவிர்க்க இயலாதது.

பேசுதல், கேட்டல் இரண்டையும் தாண்டி எழுத்து வடிவிற்கு தொகுக்கும் போது பல்வேறு சிரமங்கள் உள்ளது. இந்த சிரமங்களை தாண்டி தொகுப்பதை வட்டார வழக்குச் சொல் மீட்டுருவாக்கம் என்று கூறலாம்.

எல்லாம் சரியான பின்தான் அகராதி வெளியிட வேண்டுமென்பது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்று. ஒலியியல் மாற்றங்களை பதிவு செய்ய இயலவில்லை. இதனை இதற்காக உள்ள மொழி ஆய்வாளர்கள் செய்வார்கள் என நம்புகிறேன்.

கொங்கு வட்டார வழக்கு அகராதியைப் பொறுத்தவரை, முதன் முதலாக கொங்குத்தமிழ் என்ற நூலினை டி.எம்.காளியப்பா வெளியிட்டார். அடுத்து, கொங்கு நாட்டுத் தமிழ் என்ற நூலினை

புலவர் மணியன் வெளியிட்டார். இதனையடுத்து, கொங்கு வட்டாரச் சொல்லகராதி எனும் நூலினை பெருமாள் முருகன் வெளிக் கொணர்ந்தார். இதனை தொடர்ந்து நான்காவதாக இந்நூல் வெளிவருகிறது. இது ஒரு தொடர்ச்சியான அகராதிப் பயணம். இந்த அகராதிப் பயணம் என்னோடு முற்றுப் பெற்றதல்ல. இனிவரும் காலத்திலும் இந்தப் பயணத்தை தொடர்வார்கள், தொடர வேண்டும் என்பதே என்னுடைய அவா.

இந்த வட்டார வழக்குச் சொற்களை தொகுப்பதற்கு அறச்சலூர் நல்லசாமி, திண்டுக்கல் சிவசுப்பிரமணியம், பாலமேடு ராஜா, பல்லடம் வேலுச்சாமி, திருப்பூர் இயக்குனர் பொன்னுசாமி, உடுமலை பேராசிரியர் கிருஷ்ணன், தாராபுரம் பாஷா, கரூர் சரவணப்ரியன், பொள்ளாச்சி மது.இராமகிருஷ்ணன், ஒட்டஞ்சத்திரம் விஜயகுமார், கண்ணாடிப்புத்தூர் நா.கிருஷ்ணராஜ், குடிமங்கலம் த.சிலம்புச்செல்வி, ஓசை செயலாளர் அவைநாயகம், ஆவண எழுத்தர் இ.பா.மணிவண்ணன் மற்றும் ஓவியங்களை வரைந்த ஸ்ரீதரும் களப்பணியில் உடனிருந்தனர். வட்டார வழக்குச் சொற்களை ஒருங்கிணைத்து கணிப்பொறியில் அச்சாக்கும் வரை கா.கருமலையப்பன், பொள்ளாச்சி இரா.மனோகரன், ந.பிரகாசு, மா.பாலகிருஷ்ணன் ஆகியோர் முழு மூச்சுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். அனைவருக்கும் எனது அன்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய கரிசல் மண்ணை ருசித்துத் தின்ற கி.ரா. அவர்களுக்கும், சாகித்ய அகாடமி விருது பெற்ற கவிஞர் சிற்பி அவர்களுக்கும், கலை உலக மார்க்கண்டேயன் சிவக்குமார் அவர்களுக்கும், புலவர் செ. இராசு அவர்களுக்கும், இந்நூலின் பதிப்பாசிரியர் மருத்துவர். நல்லா. பழனிசாமி அவர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்...



(இரா. இரவிக்குமார்)

# அ

**அக்கட்டெ** : அந்தப்பக்கம். 'அக்கட்டெ எங்காச்சுங் கெடக்கும்பாரு.' அக்கட என்ற தெலுங்குச் சொல்லின் தாக்கம்.

**அக்கடானு** : சும்மா இருத்தல். 'அக்கடானு இருந்தவனெ வம்புலெ மாட்டியுட்டுட்டாம் பாரு.'

**அக்கப்போரு** : பிரச்சினைக்குரிய. 'செரியான அக்கப்போரு புடிச்ச ஆளா இருக்குறான்.'

**அக்காகுருவி** : கொங்கு நாட்டில் மட்டுமே உள்ள ஒரு வகைக் குருவி. மழை வருவதை முன்கூட்டியே உணர்த்தும் வகையில் கத்தும்.

**அக்காது** : அறுந்து போகாது. 'நூலுக் கவுத்துலெ கட்டுனா சீக்கிரொ அக்காது.'

**அக்காரொ** : அக்ரகாரம்.

**அக்கி** : உடல் சூட்டினால் வரும் புண். 'அக்கி வந்துருச்சு ஓடம்புலெ படொ எழுதோனு.'

**அக்கி எழுதறது** : மூலிகைகள் கலக்கிய செங்கல் குழம்பால் சிங்கம், நாய் போன்ற உருவங்களை முதுகில் எழுதுதல். 'ஒடம்புல அக்கி எழுதோனு.'

**அக்கியானொ புடிச்சவெ** : அடுத்தவர் களை பார்த்து பொறாமைப் படுபவன். 'எங்கியோ அக்கியானொ புடிச்சவெம் போலெ இருக்குது.'

**அக்கிரமொ** : கொடுமையான செயல். தொல்லை. 'நீ பண்றது ரொம்ப அக்கிரமொ.'

**அக்குவேறெ ஆணிவேறெயா** : தனித் தனியாக. 'அக்குவேறெ ஆணி வேறெயா பிரிச்சு வெச்சிட்டியா.'

**அக்குறுமோ**: காண்க. அக்கிரமொ.

**அகஞ்சேரனு** : தன் இருப்பிடம் சேருதல். 'எங்க சுத்துனாலு தன்னோட அகஞ்சேந்தாத்தெ நல்லது.'

**அகட்டு** : நன்றாக விரித்தல். 'காலெ அகட்டி வெச்சுக்கிட்டு உக்காரதெ.'

**அகப்பெ** : சாப்பாடு கிளறி விட பயன்படும் மரத்தாலான நீண்ட முனையில் தேங்காய் தொட்டியை பொருத்தியிருக்கும் கோல். 'சட்டியில இருந்தாத்தானெ அகப்பெயிலெ வரு.' — பழமொழி.



அகப்பை

**அகராதி புடிச்சவெ** : எதற்கும் ஒத்துவராத. 'செரியான அகராதி புடிச்சவெனாட்ட இருக்குது.'

**அகஸ்மாத்தமா** : எதேச்சையாக. 'அகஸ்மாத்தா வந்துட்டெ போலருக்குது.'

**அகினி :** பனம் பட்டையிலிருந்து உரித்தெடுக்கப்பட்ட நார். 'பந்தலு கட்டறதுக்கு அகினி உரிச்சிட்டு வரோணு.'

**அங்கராக்கு :** சட்டை. 'அங்கராக்கு புதுசு எடுக்கோணு.'

**அங்கலாப்பு :** ஏக்கம், காரியம் நடைபெறாத வருத்தம், தீராத ஆசை. 'ஒரே அங்கலாப்பு புடிச்சவனா இருக்கறெ.'

**அங்஖ணம் :** வீட்டின் அளவினை குறிக்க பயன்படும் சொல். இரு விட்டங்களுக்கிடையே உள்ள தூரம். 'வூடு எத்தனெ அங்஖ண இருக்குது.'

**அங்஖னெ :** அங்கே. அந்த இடத்தில். கண்ணுக்குத் தெரியும் பொருளை சுட்டிக் காட்டுதல். 'மூக்குத்தி அங்஖னெ கெடக்குது பாரு.'

**அச்சக்காரொ :** முன்பணம். (அட்வான்ஸ்). 'ஆகாத வேலக்கி அச்சக்காரொ வாங்காதெ' – பழமொழி.

**அச்சரொ :** மந்திரம் எழுதப்பட்ட சதுர வடிவ தகடு. 'ஊட்டுலெ அச்சரொ யெழுதி வெக்கோணு.'

**அச்சாணியொ :** அபசகுணம்.

**அச்சு :** 1.சாயல். 'அச்சு அசலா அவங்கப்பம் மாதிரியே இருக்காம் பாரு.' 2. கட்டை வண்டியின் அச்சாணி. 'வண்டிலெ அச்சு முறிஞ்சு போச்சு.'

**அச்சுப்பகலெ :** கரும்புப் பாகினைக் கொண்டு வெல்லம் தயாரிக்கும் குழிகள் கொண்ட பலகை. 'அச்சுப்பகலீல வெல்லொ போட்டு வெச்சிருக்குது.'



அச்சுப்பலகை

**அசடெ:** உலக வாழ்க்கையைப்பற்றி அறியாதவன் (விபரமில்லாதவன்). நிலைமைக்குத் தக்கவாறு நடந்து கொள்ளத் தெரியாதவன். 'எங்கியோ அசடா இருக்குறாம் பாரு.'

**அசலூர்:** வெளியூர். 'அசலூர்க்காரன் ஊருக்குள்ள வந்தா அவம்மேல ஒரு கண்ணு வெச்சுக்கோணும்.'

**அசபோடறது :** ஆடு, மாடுகள் மேயும் போது சரியாக மெல்லாமல் விழுங்கும் உணவைத் திரும்பவும் வாய்க்கு கொண்டு வந்து அறைத்து விழுங்குவது. 'மாடு அசபோடுது பாரு.'

**அசந்து :** வியப்பு. 'அவனப்பாத்து அப்பிடியே அசந்து போய்ட்டெ.'

**அசப்பு :** ஒரே மாதிரியான தோற்றம். 'அசப்புலெ அவங்கப்பம் மாதிரியே இருக்கான்.'

**அசரிக்கை :** அசதி. கடுமையான உழைப்பிற்குப் பின் வரும் சோர்வு. 'ஒரே அசரிக்கையா இருக்குது.'

**அசிங்கரொ :** அசிங்கம். அசுத்தமாக இருத்தல். 'எங்கியோ அசிங்கரொம் புடிச்சவம்போல இருக்கறெ.'

**அசுசி :** காண்க. அசிங்கரொ.

**அஞ்சாங்கல்லு:** சிறுவர் விளையாடும் ஒருவகை விளையாட்டு. 'அஞ்சாங்கல்லு வெளயாடலா வர்றியா.'

**அஞ்சுடுதல் :** கர்ப்பிணி பெண்ணுக்கு 5 வது மாதத்தில் நடைபெறும் சீர்.

**அட்டனாங்கால் :** ஒருகால்மேல் இன்னொரு காலை தூக்கிப்போட்டு உட்காருதல். 'என்ன தைரியமிருந்தா எம்முன்னாடியே அட்டனாங்கால் போட்டு உட்காருவெ.' (ரெட்டணங்கால்)

**அட்டமி :** அஸ்டமி எனும் திதி. 'அட்டமி நவமியுமா பாத்தா நல்ல காரியஞ் செய்வாங்க.'

**அட்டாலி :** வீட்டின் மேல் பகுதியில் உள்ள பரண். 'பழசு பரட்டையெல்லா அட்டாலில கெடக்கும் பாரு.'

**அட்ரெ :** தூசு. 'அட்ரெய அடிச்சுக் கூட்டு.'

**அட்டி :** 1. மூட்டைகளை ஒன்றன் மேல் ஒன்றாக வரிசையாக அடுக்கி வைத்தல். 'நெல்லு அட்டி போட்டுருக்குது பாரு.'

**அட்டியலு :** பெண்கள் உட்கழுத்தில் அணியும் தங்க நகை. 'அட்டியலு போட்டுக்கிட்டு போறா பாரு.'



அட்டியல்

**அட்டுக்குஞ்சு :** பிறந்து ஓரிரு நாட்களான பறவைக்குஞ்சு. 'அட்டுக் குஞ்சப் புடிச்சு வெளையாடாதெ.'

**அட்டுக்குட்டி :** பிறந்து ஓரிரு நாட்களே ஆன குட்டி. 'அட்டுக் குட்டிய தூக்காதெ.'

**அட்டுப்பால் :** தாயினை இழந்த குட்டிகளுக்கு வளரும் வரை புட்டியில் பால் கொடுப்பர். 'அட்டுப்பாலு குடுத்து வளத்த கெடாயி.'

**அட்டூழியொ :** அக்கிரமம் செய்தல், தீயசெயல். 'அட்டூழியொம் பண்ணாத பாதிலெயே அழிஞ்சு போவெ.'

**அடக்கொ :** 1. பிணத்தை புதைத்தல், 'பொணத்தை அடக்கொஞ் செஞ்சுட்டு வர்றொம்.' 2. அமைதி. 'பையன் ரொம்ப அடக்கொ சொடக்கமா இருக்குறான்.'

**அடக்கோழி :** அடைகாக்கும் கோழி. 'அடக்கோழி பக்கத்துல போகாத கொத்திப் போடு.'

**அடசலு :** இட்லியை வேக வைத்து எடுக்கும் அளவு. 'ரெண்டு அடசலு இட்லி ஊத்தி வெய்யி.'

**அடத்தியா :** அடர்த்தியாக. 'பயிருகெ நொம்ப அடத்தியா வந்துருச்சு.'

**அடப்பீ :** அடைகாக்கும் கோழிகள் கழிக்கும் மலம். மிகுந்த நாற்றமுடையதாக இருக்கும்.

**அடப்பு :** கெட்ட நேரத்தில் இறந்தால் வீடு அடைப்பது. 'எங்கூடு அடப்புலெ இருக்குது தீட்டு.'

**அடம்பு:** காண்க. அடத்தியா.

**அடமழெ :** விடாமல் பெய்யும் மழை. 'அடமழெயில எங்கியாவது போயி மாட்டிக்காதெ.'

**அடாபுடி :** கொடுஞ்செயல். 'ஏண்டா இப்பிடி அடாபுடித்தனம் பண்ற.'

**அடிக்குந்தலைக்குமா :** ஆரம்பம் முதல் இறுதி வரை. 'அடிக்குந்தலைக்குமா இப்பிடியா எல்லாத்தீமு போட்டு வெக்கிறது.'

**அடிச்சோறு :** பாத்திர அடியில் ஒட்டியுள்ள சோறு. 'சட்டியிலெ அடிச்சோறா இருக்குது.'

**அடிதுடி :** சண்டை. 'அங்க ஒரே அடிதுடியா இருக்குது.'

**அடிமண்ணு :** காலில் ஒட்டிய மண். 'உன்ற அடிமண்ணெ எடுத்தா சுத்திப் போடலா.'

**அடிமாடு :** இறைச்சிக்காக கொல்லப் படும் மாடு. 'அடிமாட்டு வெலைக்கு வாங்கியாந்தெ.'

**அடியுரம் :** 1. மனவலிமை. 'அவனுக்கு அடியுரம் ரொம்ப சாஸ்தி.'

2. பயிர்களுக்கு விதைக்கும் உரம். 'அடியுரம் போட்டாதெ பயிரு நல்லா மொளைக்கும்.'

**அடிவவுறு :** வயிற்றின் அடிப்பகுதி. 'அடிவவுத்துலருந்து பசி பயங்கரமா வருது.'

**அடிவாரி :** கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் கபிலையில் எருதுகள் கடைசியாக நின்று மீண்டும் பின்னோக்கி வரும் இடம்.

**அடிஸ்கோலு :** ஒரு அடி உள்ள அளவுகோல். 'அடிஸ்கோலுல கோடு போடு.'

**அடுக்களை :** சமையலறை. 'அடுக்களைலெ என்ன பண்ற.'

**அடுத்ததாட்டி :** மறுபடியும். 'அடுத்ததாட்டி வரும்போது இந்த சீட்ட கொண்டு வரோணும்.'

**அடுப்பாங்கரெ :** அடுப்பைச் சுற்றியுள்ள பகுதி. 'அடுப்பாங்கரெயில பாரு உப்பு டப்பா இருக்குது.'

**அடுப்பாம் மூலை (அக்கினிமூலை) :** தென்கிழக்கு மூலை. 'அடுப்பாம் மூலைல பாரு.' (அடுப்பாங்கொல)

**அடுப்புக்குட்டு:** அடுப்பின் ஓரத்தில் இருக்கும் உருண்டை வடிவ திட்டு. 'அடுப்புக்குட்டு ஒடஞ்சி போச்சு.'

**அடுப்புத்திட்டு :** அடுப்பின் ஓரம். 'அடுப்புத்திட்டுல பாரு சாத்துக்குண்டா இருக்குது.'

**அடெவெக்கறது :** காண்க. அடக்கோழி.

**அடைமூக்கு :** மூக்கில் சளி அதிகமாக இருத்தல். 'அடைமூக்கா இருக்குது தைலொம் போட்டுத் தடவு.'

**அண்ட நாத்தொ :** நாற்றம் அதிகமாக இருத்தல். 'அண்டநாத்தொன்டா சாமி தாங்கவே முடிலெ.'

**அண்டர்வாரு :** ஆண்கள் அணியும் உள்ளாடை. 'அண்டர்வாரு போட்டுகிட்டு சுத்தறதெ பாரு.'

**அண்ணாக்கவுறு:** அரைஞாண்கயிறு. இடுப்பில் கட்டப்படும் கயிறு. 'அண்ணாக்கவுத்தெ இடுப்புலெ கட்டு.'

**அண்ணாங்கால் :** மாட்டின் கழுத்தையும் ஒரு காலையும் இழுத்து கட்டி வேகமாக ஓடவோ, நடக்கவோ முடியாதபடி செய்தல். 'மாட்டுக்கு அண்ணாங்காலு போட்டுடு அப்பதெ ஓடாது.'

**அண்ணோவ் :** அண்ணா என்று மரியாதையாக அழைப்பது.

**அணகவுறு :** மாட்டில் பால் கறக்கும் போது இரண்டு கால்களையும் சேர்த்து (அணைத்து) கட்டப்படும் கயிறு. 'அணகவுறு போட்டு பால் கற இல்லன்னா மாடு ஒதச்சிப்போடும்.'



அணகவுறு

**அணப்பு :** குண்டலின் ஒரு பகுதி. சுமார் 50 அடி நீளத்திற்கு இருக்கும் பகுதி. 'காட்டுக்குள்ளெ மாடு பூந்து ஒரு அணப்பு சோளப்பயிரெ தின்னுருச்சி.'

**அணலு :** அணில். 'அணலு புடிச்சு வெளையாண்ட.'

**அத்தக்கூலி :** மாத சம்பளமாகவோ வார சம்பளமாகவோ இல்லாமல் வேலை இருந்தால் மட்டுமே கூலி வாங்கும் தொழிலாளி. 'அத்தக் கூலிக்கி ஆளு கெடிக்க மாட்டீங்கீது.'

**அத்தனெ :** அவ்வளவு. 'அத்தனெயென்ன கெடக்குது அப்பூமு உனுக்கு பத்திலியா.'

**அத்தாச்சோடு :** அவ்வளவு பெரிய. 'அத்தாச்சோட்ட உன்ன யாரு தூக்க சொன்னது.'

**அத்தாத்தண்டி :** காண்க. அத்தாச்சோடு.

**அத்தாந்தூரொ** : அவ்வளவு தூரம். 'அத்தாந்தூரொ ஆரு போறது.'

**அத்து** : உறுதியில்லாத. 'அத்துக் கெட்ட பயெ.'

**அத்துபடி** : முழுமையான அறிவு படைத்தவன். செய்முறை ஞானம் உடையவன். 'எல்லா வேலையும் அவனுக்கு அத்துப்படி.'

**அத்துபோச்சு** : அறுந்துவிடுதல். 'சொந்தபந்த அத்துப் போச்சு.'

**அத்துவானாமா இருக்குது** : ஒன்றும் இல்லாத நிலை. 'வானொ எங்கியோ அத்துவானமா இருக்குது மழ வராது.'

**அத்துடறது** : கணவன் மனைவிக்கு இடையேயான உறவை துண்டித்துக் கொள்ளுதல். 'உன்ற ஒறவையே அத்துட்ற வேண்டிதுதெ.'

**அதக்கு** : வாயில் ஏதாவது ஒன்றைப் போட்டு மெல்லுதல். 'வாயிலெ என்னத்தெப் போட்டு அதக்கிட்டு இருக்கெ.'

**அதுதெ** : அதைத்தான். 'அதுதெ நா உங்கிட்ட சொன்னெ.'

**அதாங்கேட்டெ** : அதுதான் கேட்டேன். 'அதாங்கேட்டெ நீ சொல்லவே இல்லெ.'

**அதிக்கலொ** : ஆணவம், தலைக் கணம். 'அதிக்கலொம் புடிச்சு திரியாதெ.'

**அதீவெ** : அதையே. 'அதீவெ திருப்பித் திருப்பி கேக்காதெ.'

**அதுக்குள்ளாறெ** : அதற்குள். 'அதுக்குள்ளாறெ போயிட்டு வந்திட்டியா.'

**அதுக்கொசரொ** : அதற்காக. 'அதுக்கொசரொ நானு என்னெ பண்ணுவ.'

**அதெ** : அதை. 'அதெ ஏங் கேக்குற.'

**அந்தரத்துலெ** : பிடிப்பில்லாமல். 'இப்பிடி அந்தரத்துலெ தொங்காதெ.'

**அந்தல்லெ** : அந்தப்பக்கம். 'அவுங்க ஊடு அந்தெல்லெ இருக்கு.'

**அந்தாண்டெ** : காண்க. அந்தல்லெ.

**அந்துசு** : உயர்ந்த நிலையில் இருத்தல். அந்தஸ்து. 'ஆள் ரொம்ப அந்துசு ஆயிட்டான்.'

**அந்துரு** : அறுந்துவிடும். 'இப்பிடி தொங்குனா கவுறு அந்துரு.'

**அந்துபோச்சு** : அறுந்துபோயிற்று. 'செருப்பு அந்துபோச்சு.'

**அந்திநேரொ** : மாலைப்பொழுது. 'அந்தி நேரொத்துலெ எங்கெ கொழந்தீயெ தூக்கிகிட்டு போறெ.'

**அப்டீனுட்டுத்தெ** : அப்படியென்று தான். 'அப்டீனுட்டுதெ நானு நெனச்செ.'

**அப்பத்தா** : அப்பாவின் அம்மா. 'அப்பத்தா ஊருக்கு போய்ட்டு வந்தெ.'

**அப்பத்தெ** : அப்பொழுதுதான். 'என்னொ நடந்துதுன்னு தெரீலெ எனுக்கு அப்பத்தெ நா வந்தெ.'

**அப்பப்ப :** அப்பொழுதே. 'அததெ அப்பப்ப செஞ்சரோனு.'

**அப்பமக்க :** அப்பாவும், மகனும். 'அப்பமக்க எல்லாரு எங்கியோ கெளம்பீட்டீங்க.'

**அப்பழயா :** அப்பொழுது. 'அப்பழயா நீ எங்க போயிட்டு வந்த.'

**அப்பறது :** கன்னத்தில் அறைதல். 'ரெண்டு அப்பு அப்பறதுதானொ.'

**அப்பன் :** தன்னுடைய மகனை அப்பன் என்று அழைப்பது கொங்கு நாட்டு மரபு. (பெரியப்பெ, நடப்பெ, சின்னப்பெ என பெயரை குறிப்பிடாமல் அழைப்பர்)

**அப்பிடியாகிப்போச்சுன்னா :** அவ்வாறு ஆகிப்போய் விட்டால். 'அப்பிடியாகிப் போச்சுன்னா என்னொ பண்றது.'

**அப்புனு :** வயதில் சிறியவர்களை மரியாதையாக அழைக்கும் சொல். 'அப்புனு சீக்கிரொ வந்துரு.'

**அப்பனூட்டுக்கு :** அப்பாவின் வீட்டுக்கு. 'எம்பொண்டாட்டி அவுங்கொ அப்பனூட்டுக்குப் போயிருக்கா.'

**அப்பராணி :** அப்பாவி. 'ஒன்னுந்தெரியாத அப்பராணி மாதிரி உக்காந்திருக்கறதெ பாரு.'

**அப்பனம்மா :** அப்பாவும், அம்மாவும். 'உங்கொ அப்பனம்மா எங்கெ போனாங்கெ.'

**அப்பனாத்தா :** காண்க. அப்பனம்மா.

**அப்பனை :** உத்தரவு. 'சாமி அப்பனை குடுத்துருச்சு.'

**அப்பாடா :** மிகுந்த களைப்புடன் வேலை செய்து விட்டு சோம்பலை வெளிக்காட்டுவது. 'அப்பாடா காலைல இருந்து வேலெ அதிகொ.'

**அப்பாரு :** அப்பாவின் அப்பா. 'அப்பாரு ஊருக்கு போய்ட்டு வந்தெ.'

**அப்பிச்சி :** அம்மாவின் அப்பா. 'அப்பிச்சியூருக்கு போனொ.'

**அப்பிசி மாசொ :** ஐப்பசி மாதம். 'அப்பிசி மாசொ அடமழெ பேயி.'

**அப்பிடியப்பிடியே :** அவ்வாறு அவ்வாறே. 'அப்பிடியப்பிடியே போட்டு வெச்சுட்டு போயிரது.'

**அப்பீறுவெ :** அறைந்துவிடுவேன். 'சொன்னாக்கேளு அப்பீறுவெ.'

**அப்பூமு :** அப்பொழுதும். 'அப்பூமு நீசொல்றதுதாம் பெருசு.'

**அப்பொ :** அப்பொழுது. 'அப்பொ நா பாத்த.'

**அப்பிறமா :** பிறகு. 'அப்பிறமா என்ன ஆச்சு.'

**அம்பட்டன் :** நாவிதன். 'அம்பட்டனெ கூப்புட்டு சீர் செய்ய சொல்லுங்கொ.'

**அம்பிலித்தொட்டி :** நாய்க்கு உணவு இடும் சிறு சட்டி. 'அம்பிலித் தொட்டியிலெ நாய்க்கு சோத்தெ ஊத்து.'

**அம்புட்டுதெ :** அவ்வளவுதான். 'அவங் கதை அம்புட்டுதெ.'

**அம்புட்டுக் கெடக்குது :** காண்க. அத்தனெ.

**அம்பிலி :** சோளம், ராய் ஆகிய தானியத்தால் செய்யப்பட்ட கூழ். 'அந்தக் காலத்துல அம்பிலி குடிச்ச ஒடம்பு இது.'

**அம்மிக்கல் :** சுக்கு, மிளகு போன்றவை அரைக்கப் பயன்படும் பட்டை வடிவ கல். 'ஆடிக்காத்துல அம்மியும் பறக்கும்.' — பழமொழி.

**அம்மிணி :** சகோதரிகளையும், பிற பெண்களையும், மரியாதையுடன் அழைக்கும் சொல். 'அம்மிணி அய்யெ எங்க போய்ட்டாரு.'

**அம்முட்டு :** அதிக அளவு. 'அம்முட்டு ரூவா குடுத்து அதெ வாங்கறதா.'

**அம்மிச்சி :** அம்மாவின் அம்மா. 'அம்மிச்சிக்கி ஒடம்புக்கு நல்லால்லெ.'

**அமத்தா :** அப்பாவின் அம்மா. 'அமத்தாவெ பாத்தெ.'

**அமுக்கிட்டெ :** 1. திருடுதல். 'அவம் பேனாவ நா அமுக்கிட்ட.' 2. உண்மை செய்திகளை வெளியிடாமல் மறைத்தல். 'உம்மையெச் சொல்லு அமுக்காதெ.'

**அமுசு :** அழகு, அம்சம். 'புள்ள பாக்கறதுக்கு அமுசா இருக்குது.'

**அமுத்துனா :** அமுத்தினால். 'தூக்கிப் போட்டு ரெண்டு அமுத்து அமுத்துனாதெ சொன்னபிடி கேப்பான்.'

**அமுத்தியுடு :** அமுத்தி விடுதல். 'காலெ அமுத்தியுடு வலிக்கிது.'

**அய்யெ :** பெரியவர்களை மதிப்புடன் அழைத்தல். 'அய்யெ ஊட்ல இருக்காறா.'

**அரஆளா :** உடல் மெலிந்து போதல். 'என்னப்பா இப்பிடி அரஆளா ஆகிப் போயிட்டெ.'

**அரக்கியுடோனு :** வெட்டி விடுதல். 'வாத அரக்கியுடோனு அருவா எடுத்தா.'

**அரசல் புரசலா :** அரைகுறையாக. 'அரசல்புரசலா கேட்டுட்டு ஓடியாந்த.'

**அரசாணிக்கா:** பறங்கிக்காய். 'அரசாணிக்காப் பொரிலு வெச்சிருக்கெ.'

**அரப்பு :** தலைக்கு தேய்த்து குளிக்க பயன்படும் துரிஞ்சமரப் பொடி. 'அரப்பு போட்டு தலைக்கு குளிக்கோணும்.'

**அரணா :** வெள்ளியால் செய்த அரை ஞாண். 'கொழந்தைக்கு ஒரு அரணா எடுத்துப் போடனும்.'

**அரணை எடுக்கிறது :** தண்ணீர் செல்ல வாய்க்காலை சுத்தம் செய்தல். 'அரணையெடுத்துட்டாதெ தண்ணி சீக்கிரொ வயிலுக்கு ஓடு.'

**அரிக்கிறது :** வயலில் நெற்பயிர்களை பாத்தியிலிருந்து பிரித்தெடுத்தல். *'பயிரெ அரிச்சி போடு.'*

**அரிக்கேன்லைட்டு :** கூம்பு வடிவ விளக்கு. *'அரிக்கேன்லைட்டெ பத்த வெய்யி.'*



அரிக்கேன் லைட்டு

**அரிகரண்டி :** வாணலியில் சுடு எண்ணெயில் இருக்கும் பொருளை எடுக்க உதவும் கரண்டி. *'அரிகரண்டிய எடுத்தா வடையெ எடுக்கலா.'*

**அரிச்சு எடுத்தல் :** துருவித்துருவி விசாரித்தல். *'பணம் வேணும்னு என்னியெ அரிச்சி எடுத்துட்டான்.'*

**அரிகெடை :** நெல்லை அறுத்து கட்டாமல் குவியலாகப் போட்டு வைக்கும் கிடப்பு. *'அரிகெடையா இருக்குது மழவந்துருமோட்ட இருக்குது.'*

**அரிக்குஞ்சு :** மிகச்சிறிய மீன் குஞ்சு. *'அரிக்குஞ்சா புடிச்சாந்து கெணத்துல உட்ருக்கறான்.'*

**அரிகிப்போச்சு :** குறைந்து வருதல். *'கோயலுக்கு போறது நொம்பவு அரிகிப் போச்சு.'*

**அரிசிப்பூடு :** சிறு இலைகளை உடைய ஒருவகைப் பூண்டு. *'அரிசிப்பூடுன்னா வெள்ளாடு நல்லா திங்கும்.'*

**அரிசீம்பருப்புஞ்சோறு :** அரிசியும் பருப்பும் கலந்து செய்யும் உணவு. *'எங்கூட்ல இன்னிக்கி அரிசீம்பருப்புஞ் சோறு.'*

**அரியாந்தரொ :** வீட்டின் விட்டத்தி லிருந்து கூரை முகட்டை தாங்கி நிற்கும் மரக்கட்டை.

**அரிவரிப்பு :** அருவருப்பு. *'ஒரே அரிவரிப்பா இருக்குது.'*

**அருகுமணொ :** கொங்குத் திருமணச் சடங்கில் இதுவும் ஒன்று. அருகம்புல்லை நெய்யில் தோய்த்து மணமக்களின் தலை, தோள், பாதங்களில் ஒற்றி எடுத்து வாழ்த்துவர்.

**அருமைக்காரரு :** திருமணச் சடங்குகளை மரபுப்படி நடத்தி வைப்பவர். இந்த மரபு அழியும் சூழல் உள்ளது. இப்போது பார்ப்பனர்களை வைத்து திருமணம் செய்து வருகிறோம். இவர்களை சீர்காரர் எனவும் பெருமையுடனும் அழைப்பர்.

**அருவாமனை :** காய்கறி நறுக்கப் பயன்படும் முனையில் கூராகவும், வளைந்த இடத்தில் கத்தி போன்று

பதமாகவும் இருக்கும் ஆயுதம். 'அருவாமுனையெ எடுத்தா காயெ நறுக்கலாம்.'



அருவாமுனை

**அருவாளு** : பயிர்களை அறுக்க உதவும் கருவி. 'அருவாளு எடுத்தா தட்டு வெட்டலாம்.'



அருவாளு

**அரைமனசு** : மனதில் இருப்பதை முழுமையாக வெளிப்படுத்தா திருத்தல். 'அரை மனசோட ஒத்துக்கறெ.'

**அல்பசுல்பமான** : அசாதாரண மான. 'அல்பசுல்பமான வேலக்கிதா லாயக்கி.'

**அல்பொ** : அற்ப புத்தி உடையவன். 'சரியான அல்பொமா இருக்கற.'

**அல்லக்கவுறு** : பனை, தென்னை மரங்களில் ஏறும்போது இடுப்போடு சேர்த்து மரத்தில் கட்டப்படும் கயிறு. 'அல்லக்கவுத்தெ நல்லா கட்டிக்கெ.'

**அல்லக்கன்னு** : வாழைமரத்தின் பக்கத்தில் வளரும் கன்று. 'அல்லக்கன்ன வெட்டியுடோனு.'

**அல்லக்கையி** : கெட்ட செயல்கள் செய்பவருக்கு உதவியாக இருப்பவர். 'எங்கெ அல்லக்கையெ இன்னிக்கி காணோ.'

**அல்லக்கொண்டெ** : பெண்கள் முடியை ஒருபுறம் சேர்த்துப் போட்டுக் கொள்ளும் கொண்டை. 'அல்லக் கொண்டெ நல்லா இருக்கு.'

**அல்லாடு** : கஷ்டப்படுதல். 'ரொம்ப அல்லாடிகிட்டு இருக்கறான்.'

**அல்லாநாளு** : எல்லா நாட்களும். 'அல்லா நாளுங் கடைய தெறந்தே வெச்சுருப்பெ.'

**அல்லாரு** : எல்லோரும். 'அல்லாரு எங்கியோ கௌம்பிட்டாங்க.'

**அல்லுப்பொறுக்கி** : தரம் குறைந்த செயல்களில் ஈடுபடுபவன். 'சுத்த அல்லுப் பொறுக்கியா இருக்கறாம் பாரு.'

**அல்லெடுக்குறெ** : 1. பிறரை நத்தி வாழ்பவன். 2. பிச்சையெடுப்பவர். 'அல்லெடுக்கறதே இவுனுக்கு பொழப்பாப் போச்சு.'

***அல்லையெடுக்கறது :*** ஆடு, மாடுகள் வயிறு நிறைதல். *'மாடு அல்லையெடுத் தாத்தெ பாலு நெறயாக் கறக்க முடியி.'*

***அலகு கருது :*** அலகு கதிர். கொங்கு நாட்டில் அறுவடை முடியும் தருவாயில் நெற்கதிர்களை கட்டி வீடு, கோயில்களில் தொங்க விடுவர். அறுவடை இல்லாத காலங்களில் பறவைகள் வந்து உணவுக்காக தன் அலகினால் கொத்தி தின்னும்.

***அலகு குத்துதல் :*** தெய்வ நேர்த்திக் கடனுக்காக நாக்கில் நீண்ட இரும்புக்கம்பியை குத்திக் கொள்ளுதல். *'முருகனுக்கு அலகு குத்திட்டு வர்றதா வேண்டியிருக்கெ.'*

***அலாக்கா :*** எதிர்பாராத அளவு. *'அலாக்கா தூக்கி வீசிட்டாம் பாரு.'*

***அலுக்கரெ :*** நினைவுபடுத்துதல், தொந்தரவு. *'சும்மா அலுக்கரெ பண்ணாத.'*

***அலுக்கு வண்ணாங்குருவி :*** அழகு + வண்ணம் + குருவி என்பது திரிந்து இவ்வாறு மாறிவிட்டது.

***அலுங்காம :*** நகராமல் இருத்தல். *'அலுங்காம இரு கண்ணுல தூசிய எடுத்துரலாம்.'*

***அலுப்பு :*** சலிப்பு, சோம்பல். *'வேல தொறப்பா இருந்ததனால ஒரே அலுப்பா இருக்குது.'*

***அவ்ளோதெ :*** அவ்வளவுதான். *'எல்லா வேலயு முடிஞ்சுது அவ்ளோதெ.'*

***அவடத்தாலெ :*** அவ்விடத்தில். *'அவடத்தாலெ பாரு கெடக்குது.'*

***அவத்தாலே :*** காண்க. அவடத்தாலெ.

***அவம்பாட்டுல :*** ஒருவர் மட்டும் தனியாக. *'அவம்பாட்டுல சுத்திகிட்டு இருக்குறாம் பாரு.'*

***அவனெவ :*** அவரவர். *'அவனெவ வேலெயே அவனவனுக்கு செரியா இருக்குது.'*

***அவிக்கோனு :*** 1. அணைக்க வேண்டும். *'தீயெ அவிக்கோனு இல்லின்னா மளமளன்னு புடுச்சுக்கு.'* 2. வேக வைத்தல். *'மொட்டு அவிக்கோனு.'*

***அவிக :*** அவர்கள். *'அவிக எங்கப் போனாங்கனு தெரிலெ.'*

***அவிங்க :*** காண்க. அவிக.

***அவிஞ்சிபோச்சு :*** 1. அணைந்து விடுதல். *'தீவொ அவிஞ்சி போச்சி.'* 2. அழுகிவிடுதல். *'மொட்டு அவிஞ்சிபோச்சு.'*

***அவிளெமாரி :*** அவர்களைப்போல். *'அவிளெமாரி நீயும் படிக்கோனு.'*

***அவியவிகெ :*** காண்க. அவனெவ.

***அவுக்கோனு :*** 1. அவிழ்க்க வேண்டும். 2. கொடுக்க வேண்டும். *'உனுக்கு அவுக்கோனுமாக்கு.'*

***அவுசநாத்தொ :*** ஈரத்துடன் துணிகளை மடித்து வைத்தால் ஏற்படும் நாற்றம். *'அவுச நாத்தொ அடிக்குது துணிய காயப் போடு.'*

**அவுசரொ** : அவசரம். 'இவ்ளோ அவுசரொமா எங்கெ போறெ.'

**அவுசேகொ** : அபிசேகம். 'கோயில்ல அவுசேகங் குடுக்கறாங்க வாங்கிட்டு வா.'

**அவுசேரி** : சோரம் போனவள். 'அவுசேரிப் போனவகூடவெல்ல சகவாசொ வெச்சிக்காதெ.'

**அவுத்து** : அவிழ்த்து. கழற்றி. 'ஆட்டெ அவுத்துடு மேயுட்டு.'

**அவுத்துடு** : அவிழ்த்துவிடு. காண்க. அவுத்து.

**அவுதி** : காண்க. அவுசரொ.

**அவுரு** : காண்க. அவுத்து.

**அழிகாடு** : வெள்ளாமை முடிந்த பின் உழவு ஓட்டுவதற்கு முன் மாடுகளை மேயவிடுதல். 'அழிகாட்டுலெ மாடு மேஞ்சிட்ருக்கு.'

**அழுக்கு** : உடை, உடலில் ஏறும் அசுத்தம். '1. துணில பாரு அழுக்கு எப்பிடி இருக்குதுனு.' '2. ஒடம்புல இவ்ளோ அழுக்கு இருக்குது தேச்சு குளி.'

**அழுக்குத்தொம்பை** : அழுக்குத் துணிகளை போட்டு வைக்கும் கூம்பு வடிவ கூடை. 'அழுக்குத் துணி யெல்லாம் தூக்கி அழுக்குத் தொம்பைல போடு.'

**அழுகாச்சி** : அழுதல். 'இவன்ற அழுகாச்சிய நிறுத்தவே முடில.'

**அழுகுனி ஆட்டம்** : திருட்டுத் தனமாக. 'அழுகுனி ஆட்டம் ஆடாத.'

**அழுஞ்சுரு** : அழிந்து விடும். 'அக்கிரமொ பண்ணாதெ அழிஞ்சுருவெ.'

**அழுத்து** : 1. தான் விரும்பியதை கேட்டால் கிடைக்காது என்றெண்ணி தெரியாமல் எடுத்துச் செல்லுதல். 'அவங்கிட்ட இருந்து இந்தப் பேனாவ அழுத்திட்டு வந்துட்டெ.'

**அழுந்த** : ஒட்டி. 'முரங்கமரத்த அழுந்த வெட்டோனு.'

**அழும்பு** : வீணான செயல்களில் ஈடுபடுதல். 'அவம் பண்ற அழும்பு தாங்க முடியல.'

**அள்ளப்புடுச்சிகிச்சு** : இடுப்பு வலி பிடித்துக் கொள்ளுதல். 'அள்ளப்புடுச்சி கிச்சு வலி தாங்கொ முடீலெ.'

**அள்ளிட்டுப்போ:** அள்ளிக் கொண்டு போ. 'இத்தனெ கெடக்குது அள்ளிட்டுப்போ.'

**அள்ளு** : கை, முறம் போன்றவற்றால் எடுத்தல். 'குப்பையெ மொறத்துல அள்ளு.'

**அள்ளீலெ** : இடுப்பில். 'அள்ளீலெ கிள்ளி வெச்சிட்டா.'

**அளத்தி** : அளவு. 'சட்டெ தெக்கிறதெக்கு அளத்தி குடுக்கோனு.'

**அறுப்புக்காலொ** : அறுவடைக் காலம். 'அறுப்புக்காலொ வந்தா வாய்க்கால்ல தண்ணியெ நிறுத்தீருவாங்கோ.'

**அறைஞ்சி :** சத்தத்துடன் பலமாக அடித்தல். 'கன்னத்துல அறைஞ்சி போட்டெ.'

**அன்னக்(வாரி)கரண்டி :** சாப்பாடு தோண்ட பயன்படும் கரண்டி. 'அன்னக் (வாரி) கரண்டில சோத்த தோண்டு.'



அன்னவாரி

**அன்னாடங்காச்சி :** தினமும் சாப்பிடுவதற்கே திண்டாடுதல். 'நானே ஒரு அன்னாடங்காச்சி எங்கிட்ட வந்து காசு கேக்கற.'

**அன்னாடு :** தினமும். 'அன்னாடு இதே பொழப்பாப் போச்சு.'

**அன்னிக்கி :** அன்றொருநாள். 'அன்னிக்கி நானு சொன்னெனல்லெ.'

**அன்னேரத்துக்கு :** அந்த நேரத்திற்கு. 'அன்னேரத்துக்கு போனா ஒரு ஆளு இருக்க மாட்டாங்கெ.'

**அனத்தம்:** அழியும் காலம். 'அவனுக்கு அனத்த காலொ ஆரம்பிச்சுருச்சு.'

**அனத்தொ :** நோய் வாய்ப்பட்டிருக்கும் போது ம்ம் என முனகுதல். 'ஒடம்புக்கு முடியாம அனத்திக்கிட்டு இருக்காம் பாரு.'

**அனாமத்து :** யாருக்கும் சொந்தம் இல்லாதது. கணக்கில் வராதது. 'அனாமத்து பண்ந்தாரனொ ஆரோருத்தருக்கு கெடக்கி.'

## ஆ

**ஆக்கருவா :** வெற்றிலை கட்டுகள் கட்டுவதற்கு பயன்படும் சிறிய அருவாள். 'ஆக்கருவா எடுத்தா வெத்தலைக் கட்டலா.'

**ஆக்காட்டிகுருவி :** ஆள் காட்டி குருவி. வனப்பகுதியில் புதிதாக ஆட்கள் வந்தால் சப்தமிடும். கொங்கு நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள பகுதியில் உள்ள வீடுகளில் சிறு கூடு கட்டி வளர்ப்பர்.

**ஆக்காட்டு :** வாயைத்திறந்து காட்டுதல். 'ஆக்காட்டு சோறு ஊட்டலாம்.'

**ஆக்கு :** உருவாக்குதல். 'சோறு ஆக்கியாச்சா.'

**ஆக்குப்பூட்டு :** எளிதில் பிரிக்க முடியாத வகையில் கயிற்றில் போடும் ஒருவகை முடிச்சு. 'ஆக்குப்பூட்டு போட்டு கட்டு அப்பத்தெ ஆடு அத்துட்டு போகாது.'

***ஆக்கூடி*** : ஆக மொத்தம். 'ஆக்கூடி கூட்டி கழிச்சு பாத்தா ஒண்ணு மிச்சமில்லெ.'

***ஆகாசொ*** : ஆகாயம். 'ஆகாசத்துல பாரு நச்சத்திரொ எரிஞ்சு உழுகுது.'

***ஆகாவளி*** : ஒரு வேலைக்கும் உபயோகமற்றவன். 'எங்கியோ சுத்த ஆகாவளியா இருக்கெ.'

***ஆகீட்டுப் போவுது*** : ஆகிவிட்டு போகட்டும். 'ஆகீட்டுப்போவுது உனுக்கென்ன.'

***ஆகுமேன்னு*** : பயன்படும் என எண்ணுதல். 'ஏதாச்சிக்கி ஆகுமேன்னு அன்னிக்கி எடுத்து வெச்செ இன்னிக்கி அதுக்கு வேலெ வந்துருச்சி.'

***ஆச்சிமாடு*** : குழந்தைக்கு பால் கொடுப்பதற்காக தாயின் வீட்டிலிருந்து சீதனமாக கொடுக்கப்படும் மாடு.

***ஆச்சுபோச்சுன்னா*** : ஆகிப்போய் விட்டால். 'ஏதாச்சி ஆச்சுபோச்சுன்னா என்னொ பண்றது.'

***ஆசாரொ*** : வீட்டின் முற்றம். 'ஆசாரத்துல உக்காரு வந்தர்றெ.'

***ஆசு*** : செருப்பின் அடியில் குதிகால் பகுதியில் வைக்கும் தோல். 'செருப்புல ஆசு தேஞ்சு போச்சு.'

***ஆசுபித்திரி*** : மருத்துவமனை. 'ஒடம்புக்கு முடியாம ஆசுபித்திரிக்கு போயிட்டு வந்தெ.'

***ஆசுவாசொ*** : களைப்பிலிருந்து விடுபட சிறிது நேரம் அமைதியாக இருத்தல். 'இருப்பா கொஞ்சொ ஆசுவாசொப்படுத்திக்கிறெ'

***ஆட்டாம்புழுக்கெ*** : ஆட்டுப் புழுக்கை. 'ஆட்டாம்புழுக்கெய அள்ளி வெளியெ போடு.'

***ஆட்டுக்கல்*** : மாவு அரைக்கும் கல். 'ஆட்டுக்கல்லுலெ போட்டு மாவெ ஆட்டு.'



ஆட்டுக்கல்

***ஆட்டுப்பட்டி*** : ஆடுகளை அடைத்து வைக்கும் தடுப்பு. 'ஆட்டுப் பட்டிலெ ஆடுகளெ உட்டு அடைச்சு வையி.'

***ஆடபாடலா*** : வசதியாக. 'சவேரி வண்டிலெ ரெண்டுபேரு உக்காந்தா ஆடபாடலா இருக்கு.'

***ஆடிநோம்பி*** : ஆடிப்பண்டிகை. 'ஆடி நோம்பிக்கி பொண்ணு மாப்பிளயெ கூப்புடோனு.'

***ஆடிப்போறது*** : மிகவும் பாதித்தல். 'நீ சொன்னத கேட்டு ஆடிப் போயிட்டெ.'

***ஆடிவெட்டெ*** : ஆடி மாதத்தில் கையில் இருக்கும் காசை செலவழித்து காட்டில் விதைத்தல். 'ஆடி வெட்டெயில கையிலெ காசே சுத்தமா இல்ல.'

**ஆண்டி :** கிராமங்களில் உள்ள கோயிலில் பூசை செய்பவர்.

**ஆத்தமாட்டாமெ :** தன்னால் இயலாமல். 'ஆத்தமாட்டாதவெ பண்ணையத்த காத்தானாமா — பழமொழி.'

**ஆத்தா :** 1. அப்பாவின் அம்மா. 'ஆத்த வூட்டுக்கு போற.' 2. அம்மை நோய் போடுதல். 'ஆத்தா பாத்துருக்கு.'

**ஆத்தாடி:** பெண்களை மரியாதையாக கூப்பிடும் சொல். 'ஆத்தாடி என்ன பண்றெ.'

**ஆத்துல :** ஆறு. 'ஆத்துலெ ஒரு காலும் சேத்துலெ ஒரு காலும் வெக்காதெ. — பழமொழி.'

**ஆத்தறெது :** ஆற வைத்தல். 'காப்பியெ கொஞ்சொ ஆத்திக்கெறது சூடா இருக்குது.'

**ஆப்பெசோப்பையா :** சாதாரணமாக நினைத்தல். 'என்னய ஆப்பெ சோப்பையா நெனக்காதெ.'

**ஆம்பளை :** ஆண்பிள்ளை. 'உன்னெய சின்னப் பையனுல பாத்தது பெரிய ஆம்பளை ஆயிட்டெ.'

**ஆமானீங்கெ :** ஆமாம் என்று கூறினீர்கள். 'நீங்கதெ ஆமானீங்கெ.'

**ஆமான்டீங்கெ :** ஆமாம் என்று கூறிவிட்டீர்கள். 'நீங்கெ ஆமாண்டீங்கெ.'

**ஆமுங்கெ :** ஆமாங்க. 'ஆமுங்கெ நீங்கொ சொல்றதெ செரீங்கெ.'

**ஆமை கொடாப்பு :** இரவில் காவலுக்கு தங்குபவர்களுக்கான கொடாப்பு. 'ராத்திரி தூங்கறதுக்கு ஆமைகொடாப்பு போட்டுடோனு.'

**ஆர்ராஅது :** யாரது. 'ஆர்ரா அது தெறந்த வூட்டுவெல நாயி பூந்தாப்பிடி.'

**ஆர்ராஅவெ :** யார் அவன். 'ஆர்ராஅவெ வெள்ளாமக் காட்டுக்குள்ள நடந்து போறது.'

**ஆரக்கால் :** மாட்டு வண்டியின் சக்கரத்தில் சுற்று வட்டத்தையும் மையத்தையும் இணைக்கும் கட்டை. 'சக்கரத்துல ஆரக்கால் ஒடஞ்சி போச்சு.'

**ஆராச்சி :** நன்மை, தீமை, தரத்தை ஆராய்தல். 'எப்பப் பாத்தாலும் ஆராச்சி பண்றதே இவுனுக்கு வேலெ.'

**ஆராலெ :** யாரால். 'இத்தினி வேலெயு ஆராலெ செய்ய முடியி.'

**ஆரோருத்தரு :** யாராவது ஒருவர். 'ஆரோருத்தரு மட்டுமு போங்க.'

**ஆரீரும் :** ஆறிவிடும். 'கொஞ்ச நேரோத்துல ஆரீரு அப்புறஞ் சோத்த தின்னு.'

**ஆரு :** யார். 'ஆரு அது வந்துட்டு போனது.'

**ஆருன்னாலு :** யாராக இருந்தாலும். 'ஆருன்னாலு ஒரே பேச்சுதா மாத்தி பேச்கொடாது.'

**ஆராரோ :** யார் யாரோ. 'ஆராரோ வந்துட்டுப் போறாங்கெ என்னொ நடக்குதுனே தெரீலெ.'

***ஆரோ*** : யாரோ. *'ஆரா சொன்னதெ கேட்டுட்டு வந்து இப்பிடி பண்றியே.'*

***ஆலக்குழி*** : ஆலைக்குழி. பனை வெல்லப்பாகு காய்ச்ச வெட்டப் படும் பெரிய குழி.

***ஆலங்கட்டி*** : மழைபெய்யும் போது உறைந்து கட்டியாகி விழும் நீர். *'ஆலங்கட்டி மழெ வருது.'*

***ஆலாத்தி*** : ஆரத்தி. *'பொண்ணு மாப்பிளக்கி ஆலாத்தி எடுங்க.'*

***ஆலாத்திகுருவி*** : வயல்வெளிகளில் நண்டை(அழவன்) திங்கும் ஒரு வகை குருவி.

***ஆலாப்பறக்காதெ*** : அவசரப்படுதல். *'ஆலாப்பறக்காதெ மெதுவா போ.'*

***ஆலாம்பாடி*** : ஒருவகை மாடு. *'ஒரு நல்ல ஆலாம்பாடியா பாத்து வாங்கோணும்.'*

***ஆவரதெ*** : முடிந்ததை. *'ஆகாததெப் பத்தி பேசாதெ ஆவரதெப் பாரு.'*

***ஆவு*** : முடியும். *'இதிய செய்ய உன்னாலெ ஆவுமா ஆவாதா.'*

***ஆவுலெ*** : ஆகவில்லை. *'பண எங்கீமு ஆவுலெ.'*

***ஆள்கட்டு*** : ஆள் பலம். *'அவனுக்கென்ன ஆள்கட்டு நெறயா இருக்குது.'*

***ஆளுக்காரெ*** : நிலம் உள்ளவரிடம் ஆண்டுக்கூலிக்காக வேலை செய்பவர். *'ஆளுக்காரெ வந்தா நெல்லெ வெதைக்கச் சொல்லு.'*

***ஆளுவாச்சே*** : வேலைக்கு வரும் ஆள். *'நல்ல ஆளுவாச்சே பாரு.'*

***ஆனமுட்டு*** : முடிந்தவரையில். *'ஆனமுட்டும் பாரு ஆகுலீனா உட்ரு.'*

***ஆனானப்பட்ட*** : திறமை வாய்ந்த. *'ஆனானப்பட்டவங்ளே அல்லாடறப்ப நீயெல்லா எம்மாத்தரெ.'*

***ஆனொ*** : குழம்பு. *'சோத்துக்கு ஆனொ ஊத்திக்கிறியா.'*

## இ

***இக்கட்டாலெ*** : இந்தப்பக்கம். *'இக்கட்டாலெ வா.'*

***இக்கட்டு*** : நெருக்கடி. *'பெரிய இக்கட்டுலெ போயி மாட்டிக்கிட்டெ.'*

***இக்கட்டெ*** : காண்க. இக்கட்டாலெ.

***இக்கலு*** : சிரமம். *'பெரிய இக்கலு புடிச்ச வேலயாஇருக்குது.'*

***இக்கொ (இக்கம்)*** : இடுப்பு. *'இக்கத்துலெ கை வெக்காதெ.'*

***இசுக்காட்டு*** : பக்கத்தில் இருப்பவர் களுக்கு ஒன்றை கொடுப்பது போல் கொடுத்து, கொடுக்காமல் ஏமாற்றுதல். *'எனக்கே நீ இசுக்காட்றியா.'*

***இசுவாயிரு*** : ஒருவருக்கு இசைவாய் இருத்தல். *'எனுக்கு எப்பூமே இசுவாயிருப்பியா.'*

**இட்டுக்கட்டி** : ஒருவரை மறைமுகமாக பேசுவது. 'இட்டுக்கட்டி பேசறதே பொழப்பாப் போச்சு.'

**இட்டேரி** : நிலங்களுக்கிடையில் உள்ள பெரிய வரப்பு. 'இட்டேரிலயே போனா சீக்கிரமா நம்மெ காட்டுக்கு போய்ரலா.'

**இட்டேரிதடம்** : இட்டேரியில் உள்ள வழி. 'இட்டேரி தடத்துல முள்ளுப் போட்டு வெச்சுருக்குது.'

**இட்ரிப்பு(இட்ரை)** : நெஞ்சுக்கரிப்பு. 'வெடியால சோறு தின்னதுலருந்து ஒரே இட்ரிப்பா இருக்குது.'

**இடுக்கு** : பனை, தெனை மரங்களில் தெளுவிறக்கப் பாளைகளை பதப் படுத்தும் முறை. 'புதுசா வந்த பாளைய இடுக்கியாச்சா.'

**இடுகாடு** : இறந்தவர்கள் உபயோகப் படுத்திய பொருட்களை எரிக்குமிடம்.

**இண்டொ** : கஞ்சத்தனம். 'செரியானெ இண்டொம் புடிச்சவெ.'

**இண்டொத்தனொ** : அற்பப்புத்தி உடையவன். 'இண்டத் தனொ நெறயா இருக்குது இவனுக்கு.'

**இணுக்கியா** : மரத்தில் உள்ள சிறு கொத்தை கையால் ஒடித்தல். 'கருவேப்பிலெயெ ரெண்டு கொத்து இணுக்கியா.'

**இத்தாச்சோடு** : இவ்வளவுபெரிய. 'இத்தச்சோடு கூடைய யாரு தூக்கிகிட்டு போறது.'

**இத்துனூண்டு** : மிகச்சிறிய. 'இத்துனூன்டா எழுத்தா எழுதியிருக்கெ பெருசா எழுது.'

**இத்தாநீளொ** : இவ்வளவு நீளம். 'ரேசங்கடயுலெ கூட்டொ இத்தா நீளொத்துக்கு நிக்குது.'

**இத்தாத்தண்டி** : காண்க. இத்தாச்சோடு.

**இத்தினி** : இவ்வளவு. 'இத்தினி சொத்து கெடக்குது அப்பூமு அடிச்சிக்கிறாங்கோ.'

**இது** : அருகில் இருக்கும் ஒன்றை காட்டி கூறுவது. 'இது எதுக்கு இங்க இருக்குனு தெரியல.'

**இந்ததாட்டி** : இந்த தடவை. 'இந்த தாட்டி நெல்லு நல்ல வெளச்சலு.'

**இந்தமாயொ** : இவ்வளவு வேகமாக. 'இந்தமாயொ போயிட்டு வந்துட்டியா.'

**இப்பத்தெ** : இப்பொழுதுதான். 'இப்பத்தெ பாத்துப் பேசிட்டு வந்தெ.'

**இப்பிடிப்பண்ணாதெ** : இவ்வாறு செய்யாதே. 'இப்பிடிப் பண்ணாதன்னு சொன்னா கேக்க மாட்டியா.'

**இப்பென்னுங்கிறீங்கெ** : இப்பொழுது என்ன சொல்கிறீர்கள். 'நீங்கெ இப்பென்னுங் கிறீங்கெ.'

**இம்முட்டூண்டு** : குறைவாக. 'இம்முட்டூண்டு எடத்துலெ எப்பிடி பெரிய ஊடு கட்டுவெ.'

**இமுசு :** துன்பம். 'கொஞ்சொ இமுசு பண்ணாமெ இருக்கறியா.'

**இருக்கறமுங்கெ :** இருத்தல். 'நாங்க இங்கதெ இருக்குறமுங்கெ.'

**இருக்கறெ :** இருக்கிறேன். 'நானு இங்கதெ இருக்கறெ.'

**இருக்குதோட்டொ :** இருக்கிறது போல். 'மாடு பயிராகி இருக்குதோட்டோ தெரீது.'

**இருங்கொ :** பொறுங்கள். 'கொஞ்சொ இருங்கொ வர்றெ.'

**இருசி :** மலடி. 'எங்கியோ இருசியா இருக்கறா கொழந்த குட்டி ஒண்ணியுங் காணொ.'

**இருட்டுக்கட்டுது :** பகல் முடிந்து இரவு ஆரம்பித்தல். 'இருட்டு கட்ட ஆரம்பிச்சுருச்சி எங்கியோ வெளயாடப் போனொ பசங்களெ இன்னுங் காணொ.'

**இருந்துக்காதெ :** இருந்து கொள்ளாதே. 'நீ போயி அங்கியே இருந்துக்காதெ சீக்கிரெ வா.'

**இரும்பாதெ :** இருமிக்கொண்டு இருக்காதே. 'அடிக்கொரு விசொ இரும்பாதெ ஊசியாச்சி போட்டுகிட்டு வா.'

**இருமெ :** வெறுமை. 'கொழந்தீக இல்லாமெ ஊடு ஒரே இருமெ புடிச்சி இருக்குது.'

**இருவாச்சி :** ஒரு வகைப்பூ.

**இல்லயோட்டெத்தெரீது :** இல்லை போலத் தெரிகிறது. 'அங்ஙனெ ஒண்ணு இல்லயோட்டத் தெரீது.'

**இல்லாட்டி :** இல்லாவிட்டால். 'நானு இல்லாட்டி நீயி என்னெ பண்ணுவே.'

**இல்லீன்னா :** இல்லையென்றால். 'இல்லீன்னா ஒண்ணு செய்யி.'

**இல்லீண்டீங்கெ :** இல்லையென்று கூறினீர்கள். 'நீங்கதெ பணங் கேட்டு இல்லீண்டீங்கெ அப்பறோ நானு கௌம்பறே.'

**இவங்கிட்ட :** இவனிடத்தில். 'இவங்கிட்ட எந்த வேல சொன்னாலு நடக்காது.'

**இவடத்தாலெ :** இவ்விடத்தில். 'இவடத்தாலெ கெடக்குது பாரு.'

**இவத்தாலே :** காண்க. இவடத்தாலே.

**இவிக :** இவர்கள். 'இவிக என்ன சொன்னாலு நாம கேட்டுக்கோணு.'

**இவுரு :** இவர். 'இவுரு என்ன சென்னாலு செரியா இருக்கு.'

**இழுதை :** காண்க. இண்டொ.

**இளிப்பு :** நமட்டுச்சிரிப்பு. 'என்ன இளிப்பு வேண்டிக் கெடக்கு.'

**இளுக்கு :** தடவி விடுதல். 'உன்றெ சட்டைலெ மையெ இளுக்கி உட்டுட்டான்.'

**இன்னாக்காலொ :** இதே காலம். 'போன வருச இன்னாக்காலொந்தான உனுக்கு கண்ணாலொ நடந்துச்சு.'

**இன்னாருன்னு** : யாரென்று. 'இன்னாருன்னு சொன்னாதானெ தெரியி.'

**இன்னிக்கி** : இன்று. 'இன்னிக்கி உங்க ஊட்டுக்கு வர்றெ.'

**இன்னேரத்துக்கு** : இந்த நேரத்திற்கு. 'இன்னேரத்துக்குப் போனா யாரு இருக்கெமாட்டாங்கெ.'

**இன்னேரோ** : 1. இந்த நேரம். 'நேத்து இன்னேரோ எங்கிருந்தெ.' 2. இவ்வளவு நேரம். 'இன்னேரோ வரைக்கி என்ன பன்னிட்ருந்தெ சீக்கிர வரவேண்டீது தானொ.'

**இன்னொருக்கொ** : காண்க. அடுத்ததாட்டி.

**இன்னொருவாட்டி** : காண்க. அடுத்ததாட்டி

**இன்னொருவிசக்கா** : காண்க. அடுத்ததாட்டி.

**இனுங்கு** : மரத்திலோ செடியிலோ கிளைகளை கையால் பிடித்து வெட்டுதல். 'ரெண்டு வேப்பெலைக் கொத்து இனுங்கிப் போடு.'

## ஈ

**ஈக்கி** : தானியத் தட்டுகளின் மேற்புறமுள்ள கெட்டியான தோல். 'பூவரச இலைகளை இணைக்கப் பயன்படும் மெல்லிய பகுதி.'

**ஈக்கிமாரு** : தென்னை ஈர்க்குகளால் ஆன (ஓலை நரம்பு) கூட்டப் பயன் படும் விளக்குமாரு. 'ஈக்கிமாத்துலெ ஊட்டக்கூட்டு.'

**ஈச்சட்டி** : அலுமினியத்தால் செய்யப் பட்ட பாத்திரம். 'ஈச்சட்டிலெ சோத்தெ ஆக்கு.'

**ஈசுகுட்டி** : குறை பிரசவத்தில் ஆடு ஈன்ற குட்டி. 'ஆடு ஈசுக்குட்டி போட்ருக்குது'

**ஈத்துமாடு** : இரண்டு, மூன்று தடவை கன்று போட்ட மாடு. 'இந்த மாடு எத்தன ஈத்து போட்ருக்குது.'

**ஈமெ** : இல்லை என்பதைக் குறிக்கும் சொல்.

**ஈயொ** : அலுமினியம். 'சட்டிக்கி ஈயொம் பூசோணு.'

**ஈயோட்டு** : எந்த வேலையும் செய்யாமல் இருத்தல். 'என்ன ஈயோட்டி கிட்டு இருக்கறாப்புலெ.'

**ஈர்கோலி** : தலையில் உள்ள ஈர்களை கோதி எடுக்க உதவும் மரச்சீப்பு. 'ஈர்கோலிய எடுத்தா தலலெ ஈரெடுக்கலா.'

**ஈவிறக்கொ** : துன்பங்களை கண்டு வருந்தி உதவுதல். 'அவரு ஈவிறக்கொ பாக்கறவரு.'

**ஈனெ** : இழிந்த புத்தி கொண்டவன். 'ஈனனுக்கு இரு செலவு.' – பழமொழி.

## உ

**உக்கழுத்துச்செயினு** : கழுத்துடன் ஒட்டி அணியும் நகை. 'உக்கழுத்துச் செயின மாட்டிகிட்டு போறா பாரு.'

**உங்கட்டெ** : உன்னிடத்தில். 'உங்கட்டெ எத்தினி தாட்டி சொல்றது.'

**உங்கொ** : கொங்கு வட்டாரத்தில் ஒருவரை மரியாதையாக அழைப்பது.

**உங்கெண்ணெ** : குழந்தைளை உண்ணச் செய்யு விளக்கெண்ணெய்.

**உங்கோனு** : சாப்பிடவேண்டும். 'பசிக்குது சோறு உங்கோனு.'

**உச்சாணி** : உயரமான. 'கொஞ்சோ எடங்குடுத்தா உச்சாணிக் கொம்புல ஏறி உக்காந்துக்குவெ.'

**உச்சிப்பொடி** : குழந்தைகள் குளிப்பதற்கு தலையில் மூலிகை களான பொடிகளை வைத்து குளிக்க வைப்பர். 'உச்சிப் பொடி வெச்சு கொழந்திக்கி தண்ணி ஊத்தியுடு.'

**உச்சிமத்தியானொ** : மதியம் 12 – 1 மணி. 'உச்சிமத்தியான வெய்யில்ல எங்க சுத்திகிட்டு திரீறெ.'

**உச்சிலெ** : காண்க. உச்சாணி.

**உசுப்பி** : பிரச்சினைகளை தூண்டி விடுதல். 'கம்முனு இருந்தவனெ உசுப்பி யுட்டு வேடிக்கெ பாக்கறாம் பாரு.'

**உட்டர்றதா** : விட்டுவிடுவதா. 'அதுக்காக அவம்போக்குலெ அப்பிடியே உட்டர்றதா.'

**உட்டா** : விட்டால். 'உட்டா நீ என்னொ வேணுனாலு பண்ணீருவெ அப்பிடித்தானொ.'

**உட்டாச்சு** : விட்டாயிற்று. 'பள்ளிக்கோடோ லீவு உட்டாச்சு.'

**உட்டாப்போயிரு** : விட்டுப் போகிவிடுமா. 'அப்பமக்கங்கறெ பாசொ அப்பூமு உட்டாப் போயிரு.'

**உட்டாபோவு** : காண்க. உட்டாப்போயிரு.

**உட்டு என்னெபண்றது** : விட்டு என்ன செய்வது. 'அவம்போக்குலெ உட்டு என்னெ பண்றது.'

**உட்டுக்குடுங்கெ**: விட்டுக் கொடுங்கள். 'ஆரோருத்துரு உட்டுக்குடுங்கொ அப்பத்தெ சுமூகமா முடியி.'

**உட்டுக்கொடுக்கோனு** : காண்க. உட்டுக்கொடுங்கெ.

**உட்டுட்டு வந்தெ** : விட்டுவந்தேன். 'கொழந்தீகளெ பள்ளிக் கோடத்துலெ உட்டுட்டு வந்தெ.'

**உட்டுப்போட்டு** : விட்டு விட்டு. 'அப்பிடியே உட்டுப்போட்டு போயிட்டியா.'

**உட்டுப்புடிக்கோனு** : விட்டுப் பிடித்தல். 'கொஞ்சொ அவுன உட்டுப்புடிக்கோனு அப்பதெ நம்ம வசத்துக்கு வருவே.'

**உட்ருங்கெ** : விட்டுவிடுங்கள். 'பிரச்சனை பண்ணாம அப்பிடியே உட்ருங்கெ.'

**உட்ரே** : விடுகிறேன். 'அப்பிடியே உட்ரே வேண்டீதுதெ.'

**உட்றாதெ** : விட்டுவிடாதே. 'அப்பிடியே உட்றராதெ அப்புற ஒண்ணும் பண்ண முடியாது.'

**உடக்கூடாது** : விடக்கூடாது. 'என்னானாலு உடக்கூடாது ஒரு கையி பாத்தரோனு.'

**உடமாட்டீனு** : விட மாட்டேன் என்று. 'அதையெ உடமாட்டீனு அடம்புடிக்காதெ.'

**உடாமே** : விடாமல். 'என்ன உடாம பின்னாடியே வந்துட்ருக்குறே.'

**உடமாட்டெ** : விடமாட்டேன். 'உன்னய பழிவாங்காம உடமாட்டெ.'

**உடுங்கெ** : விடுங்கள். 'உடுங்கெ என்னதாம் பன்றான்னு பாக்கலா.'

**உண்டுட்டுப்போ** : சாப்பிட்டுவிட்டுப் போ. 'கெஞ்சொ சோறு உண்டுட்டுப் போ வெறுவவுத்தோடொ போவாதெ.'

**உண்ணூாங்கூடொ** : இன்னும் கூட. 'இத்தனெ அடிபட்டு உனுக்கு உண்ணூாங்கூடொ புத்தி வருலெ.'

**உத்தி** : வரப்பு.

**உத்துப்புலெ** : உத்தேசமாக. ஒரு 'உத்துப்புலெ பதிலு சொன்னெ செரியாப் போச்சி.'

**உப்பசொ**: புழுக்கம். 'ஒரே உப்பசொமா இருக்குது அதான் வேத்து ஒழுவுது.'

**உப்புக்கண்டொ** : 1. திட்டும் வார்த்தை. 2. உப்பும் மஞ்சளும் கலந்து காய வைத்த கறித்துண்டம். 'தோல உறிச்சு உப்புக்கண்டொ போட்ருவ.'

**உப்புக்கெணுறு** : குறைந்த சுவை கொண்ட தண்ணீர் உள்ள கிணறு. 'உப்புக்கெணுத்துலெ போயி தண்ணி கொண்டுட்டுவா தொவைக்கறதுக்கு.'

**உப்பு சுமக்கறது** : குழந்தைகளை முதுகின் மீது ஏற்றி விளையாடுதல். 'எம்முதுகுலெ ஏறிக்கொ உன்னிய உப்புசுமக்கறெ.'

**உப்புவாங்கறது** : நிச்சயதார்த்தத்தில் நடக்கும் சடங்கு. 'இன்னிக்கி உப்பு வாங்கறதுக்கு போறொ.'

**உப்புமூட்டை** : காண்க. உப்பு சுமக்கறது.

**உம்மங்கெடாய்** : உம் என்று இருத்தல். 'உம்மங்கெடாயோட்ட உக்காந்துருக்க.'

**உம்மணாமூஞ்சி** : எதுவும் பேசாமல் முகத்தை உம்மென்று வைத்திருத்தல். 'இவனென்ன உம்மணாமூஞ்சியா இருப்பாம் போலருக்கு.'

**உம்மணாண்டி** : காண்க. உம்மணாமூஞ்சி.

**உயிர்நிலெ** : ஆண், பெண் குறி. 'உயிர்நிலெ மேலயெ ஓதச்சி போட்டான்.'

**உர்ருனு** : கோபமாக இருத்தல். 'உர்ருன்னு இருக்குறான்.'

**உரிச்சட்டி** : உரியில் வைக்கப்பட்டிருக்கும் மண் பாத்திரம். *'உறிச்சட்டிலெ பாரு தயிரிருக்கு.'*



உரிச்சட்டி

**உரிமி:** இசைக்கருவி. *'உரிமிய எடுத்து அடி சத்தொ நல்லா வரு.'*

**உரிகாமட்டெ** : உரித்த தேங்காயின் மட்டை. *'எங்க தோப்புலெ உரிகாமட்டெ நெறயெ கெடக்குது.'*

**உருப்புடி** : எண்ணிக்கை. *'மாடு எத்தனெ உருப்புடி இருக்குது.'*

**உருமாக்கட்டுசீரு** : தாய்மாமன் மணமகனுக்கு தலைப்பாகை அணிவித்து செய்யும் சீர். *'உருமாக்கட்டுசீரு தாய்மாமந்தெ பண்ணோனு.'*

**உருமாக்கட்டு** : தலைப்பாகை. *'உருமாக்கட்டெல்லா பெலமா இருக்கு.'*



உருமாலை

**உருமாலெ :** காண்க. உருமாக்கட்டு.

**உருவாஞ்சுருக்கு** : எளிதில் கழற்றுமாறு போடும் முடிச்சு. *'உருவாஞ்சுருக்கு போட்டுக்கட்டு அப்பதெ அவுக்கறதுக்கு ஈஸியா இருக்கு.'*

**உருவாரொ :** நேர்த்திக்கடனுக்காக சிலைகளை மண்ணால் செய்து வைத்தல். *'உருவாரொ செஞ்சு வெக்கரதா நேந்துக்க.'*



உருவாரம்

**உருளி :** பொய்சொல்லுதல். *'அவஞ் செரியான உருளி.'*

**உலுக்காட்டி :** தொலைத்தல். *'நகையெ எங்கியே உலுக்காட்டிட்டா.'*

**உலுத்துப்போச்சு :** பூச்சி அரித்து விடுதல். 'மர உலுத்துப்போச்சு பொடிப் பொடியா உழுவுது பாரு.'

**உழுந்துருமோட்டோ :** விழுந்து விடும்போல. 'நல்லா உள்ள தள்ளி வெய்யி உளுந்துருமோட்டோ இருக்குது பாரு.'

**உழும்பு :** மாடு, பன்றி போன்றவை தண்ணீருக்குள் கலந்த தவிட்டை பிரித்துத் தின்பதற்காக முகத்தை உள்ளே விட்டுத் தேடுதல். 'நல்லா உழும்பித் தண்ணியெ குடிக்கிது இந்த மாடு.'

**உள்சுருக்கு :** மனதில் இருப்பதை வெளிக்காட்டாமை. 'அவெ உள் சுருக்கு வெச்சு பேசும்போதே நெனச்செ.'

**உள்ளுமடி :** வெளியே தெரியாமல் உள்ளே கட்டியிருக்கும் மடி. 'உள்ளு மடியில பாரு பண நெறய வெச்சிருக்கறான்.'

**உள்ரங்கமா :** ரகசியத்தை யாருக்கும் வெளிப்படுத்தாமல் இருப்பது. 'அவெ மனசுக்குள்ளெ எதோ ஒரு உள்ரங்கோ இருக்குது.'

**உறி :** பிரித்தல். 'மக்காச்சோளத்த தட்டைல இருந்து பிரிக்கணும்.'

**உறை ஊத்து :** பாலை தயிராக மாற்ற பாலில் இரண்டு துளி தயிர் விடுதல். 'பால் உறை ஊத்தியாச்சா.'

**உன்றது :** உன்னுடையது. 'இது உன்ற நோட்டா.'

**உன்னெமாரி :** உன்னைப்போல். 'நானு உன்னெமாரி பெரிய ஆளா.'

**உன்னீ :** இன்னும். 'உன்னீ வேணும்னா சொல்லு.'

**உன்னொவேணுமா :** காண்க. உன்னீ.

**உனிமேலு :** இனிமேலும். 'உனிமேலு உன்னயெ சும்மா உட்டு வெக்கக்கோடாது.'

## ஊ

**ஊசாட்டொ :** நடமாட்டம். 'ஆளு ஊசாட்டொ நெறயா இருக்குதோட்டொ தெரீது.'

**ஊசாடிட்டு :** நடமாடிக்கொண்டு. 'அங்கியிங்கி சும்மா ஊசாடிகிட்டே இருக்காம்பாரு.'

**ஊசிப்போச்சு :** பதம் கெடுதல். 'லட்டு ஊசிப்போச்சு திங்காதெ.'

**ஊஞ்செவேலாமரொ :** அரப்பு இலை தரும் மரம். 'ஊஞ்சவேலாமரத்துலெ போயி தளய உரிச்சிகிட்டு வா அரப்பு அரைக்கலா.'

**ஊட்டெக்கூட்டு :** வீட்டைச் சுத்தப் படுத்துதல். 'ஊட்டக் கூட்டியுடு மண்ணு நெறஞ்சி கெடக்குது.'

**ஊட்டெத்தொறெ :** வீட்டைத்திற. 'ஊட்டத்தொறொந்து போட்டுட்டு எங்க போனெ.'

**ஊட்டெவளி :** வீட்டை வழித்தல். சாணம் கொண்டு வீட்டை மெழுகுதல். 'இன்னிக்கி சனிக்கெழமெ ஊட்டெ வளிச்சுடோனு.'

**ஊட்டியெ அறுத்துருவெ** : முன் கழுத்தில் இருக்கும் மூச்சுக்குழாய். 'ரொம்ப திமிரு பண்ணுன ஊட்டியெ அறுத்துருவெ.'

**ஊட்டுக்கார்ரு** : கணவர். 'உன்ற ஊட்டுக்கார்ரு எங்க போயிட்டாரு.'

**ஊட்டுக்காரி** : மனைவி. 'உன்ற ஊட்டுக்காரி எங்க போயிருக்கா.'

**ஊட்டுக்குதூரமாயிருக்க:** மாதவிடாய் காலத்தில் பெண்கள் வீட்டிற்கு வெளியில் இருத்தல். 'நானூ ஊட்டுக்கு தூரமயிருக்க.'

**ஊட்டுக்குள்ளாறெ** : வீட்டிற்குள். 'ஊட்டுக்குள்ளாறெவே இருந்துகிட்டு ஏன்னுங் கூட கேக்க மாட்டீகிறெ.'

**ஊடடைக்கிறது** : இறப்பு நடந்த நேரம் சரியில்லையென வீட்டை குறிப்பிட்ட காலத்திற்கு பூட்டி விடுதல். எங்கொ 'தாத்தா செத்தெ நேரஞ் செரியில்லீனு ஊடடச்சிருக்கறோ.'

**ஊடு** : வீடு. 'ஊடு பூட்டியிருக்குது.'

**ஊடுகட்டி அடித்தல்** : தப்பிக்க முடியாமல் சூழ்ந்து அடித்தல். 'அவன ஊடு கட்டி அடிச்சிப் போட்டாங்க.'

**ஊடுபூசோனு** : வீட்டுச்சுவர்களுக்கு வெள்ளை அடித்தல். 'பொங்கலுக்கு ஊடு பூசோனு.'

**ஊடுபூதறது** : குழந்தை பிறந்த 9 வது நாள் வீடு சுத்தம் செய்து தாயையும், குழந்தையும் வீட்டிற்குள் அழைத்துச் செல்லப்படும் சீர்.

**ஊடுமுட்டி** : யாருக்கும் தெரியாமல் வீட்டிற்குள் செல்லுதல். 'அந்த நாய் சரியான ஊடுமுட்டி.'

**ஊத்தாணிக்குச்சி** : ஏரில் கலப்பை யிலிருந்து கருவுதடி கழன்று விடாமல் இருக்க பின்பக்கத்தில் துளையிட்டு செருகப்படும் சிறு குச்சி. 'ஊத்தானிக் குச்சி கழண்டு போச்சி நல்லா அடிச்சிவுடு.'

**ஊத்து** : நீரை ஒரு பாத்திரத்தில் இருந்து இன்னொரு பாத்திரத்தில் ஊற்றுதல். 'தண்ணிய சிந்தாம ஊத்து.'

**ஊத்துத்தண்ணி** : நிலத்திலிருந்து நீர் தானாக வெளியேறிக் கொண்டே இருத்தல்.

**ஊத்தை** : கெட்டுப்போன. 'கத்திரிக்கா ஊத்தயா இருக்குது.'

**ஊத்தெறமா** : (உபத்திரம்) தொல்லையாக. 'உங்கோடொ ஒரே ஊத்தெறமாப் போச்சு.'

**ஊத்தெர** : காண்க. **ஊத்துத்தண்ணி.**

**ஊதாங்கொழலு** : அடுப்பு எரியும்போது தீ எரியாமல் இருந்தால் ஊதி எரிய வைக்க பயன்படும் குழல். 'ஊதாங்கொழலெ எடுத்து ஊதியுடு அப்பதெ தீ நல்லா புடிக்கி.'

**ஊமாங்கெடாயி** : காண்க. உம்மங்கெடாயி.

**ஊமைக்காயொ** : புண் ஆகாமல் ஏற்படும் உள் காயம். 'ஊமைக்காயொ போல இருக்கு அதுதா வலிக்குது.'

**ஊமைக்குத்து :** வெளியே காயம் ஏற்படாமல் பலமாகக் குத்துதல். 'ஒரு ஊமைக் குத்து விட்டன்னா கம்முனு அடங்கிருவ.'

**ஊய்க்காமந்தை :** ஆடு மாடுகள்ளை மேய்க்க கொண்டு சென்று சேர்க்கும் இடம்.

**ஊர்க்கட்டுமானொ :** ஒரு ஊரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும்கட்டுப்பாடு. 'இந்த ஊருலெ ஊர்க்கட்டுமானொ பண்ணி வெச்சிருக்காங்கெ.'

**ஊர்க்கெணுறு :** ஒரு ஊருக்கு பொதுவான கிணறு. 'ஊர்க்கெணுத்துலெ போயி தண்ணி கொண்டு வந்தெ.'

**ஊர்சுத்தி :** 1. வேலைக்குச் செல்லாமல் ஊரைச் சுற்றுதல். 'கழுதையோட்ட ஊர் சுத்திகிட்டு திரியறெ.' 2. கழுதையின் ரத்தி. 'ஊர்சுத்திய எடுத்துட்டுவா சுத்தி போடலா.'

**ஊர்ப்பட்ட :** அளவுக்கதிகமான. 'ஊர்ப்பட்ட பேரு வந்துட்டாங்க கூட்டொ அதிகமாப் போச்சு.'

**ஊர்ப்பட்டெ நேரொ :** அதிகமான நேரம். 'அங்கிருந்து வர்றதுக்கு ஊர்ப்பட்டெ நேரொ ஆயிரு.'

**ஊர்ப்பண்ணாடி :** ஊர்த்தலைவர். 'ஊர்ப் பண்ணாடி ஊட்டுலெ இருப்பாரு போய்ப்பாரு.'

**ஊர்மந்தை :** விழாக்களில் பொதுமக்கள் ஒன்று கூடும் இடம்.

**ஊர்மேய்றா :** ஆணோ, பெண்ணோ முறையற்ற தொடர்பு வைத்திருத்தல். 'ஊரை மேஞ்சிகிட்டு திரியாதெ.'

**ஊர்வேலெ :** திருவிழாக் காலங்களில் இளைஞர்கள் ஊரைச் சுத்தப்படுத்துவது.

**ஊரடிபூமி :** ஊரை ஒட்டி அமைந்துள்ள பூமி. 'ஊரடி பூமிதெ எங்களோடது.'

**ஊரல் :** உடம்பில் ஏற்படும் புண். 'ஒடம்புலெ ஊரல் வந்துருச்சு மருந்து வாங்கிப் போடோனு.'

**ஊராளி :** ஊர்த்தலைவர். 'ஊராளிகிட்ட சொன்னா ஒரு நாயங் கெடக்கி.'

**ஊளை :** 1. கெட்டுப்போன பொருள். 'ஊளெயெ திங்காத.' 2. சளி. 'மூக்குல ஊளெ ஒழுகுது பாரு.'

**ஊள மூக்கு :** சளி நிறைந்த மூக்கு. 'அவ ஊளமூக்கெ ஊளைய சிந்தவே மாட்டான்.'

**ஊளை மொட்டு :** கெட்டுப் போன முட்டை. 'ஊளெ மொட்டெ தின்னு போட்டு நல்ல மொட்டா கொண்டுவா' (நாட்டுப்புறப்பாடல்).

**ஊறல்:** சாராயம் காய்ச்ச தேவையான பல பொருட்களையும் கலந்து பானையில் ஊறப் போட்டிருத்தல். 'போலீசு வந்து ஊறல் பானையெ அடிச்சு நொறுக்கிட்டாங்க.'

**ஊறு(தல்)** : குழந்தைகள் சதை பிடித்து வளர்ச்சியடைதல். 'கொழந்தெ நல்லா ஊறியிருக்குதா.'

**ஊனாங்கொடி** : உறுதியான அறுந்து விடாத ஒருவகைக் கொடி. 'ஊனாங் கொடியில தூரிகட்டுனா அந்து போகாது.'

**ஊனு** : 1. பழங்களின் சதைப்பகுதி. 'தோலத்திங்காத ஊன மட்டு தின்னு.' 2. பலமாகத் தாக்குதல். 'அவன ரெண்டு ஊனு ஊனுடா அப்பதெ கம்முனு இருப்பான்.'

## எ

**எக்கச்சக்கொ** : அளவுக்கதிகமாக. 'மொய்ப் பனொ எக்கச்சக்கொமா வந்து குமுஞ்சிருச்சு.'

**எக்கு** : வயிற்றை உள்ளே இழுத்தல். 'வவுத்த நல்லா எக்கு அப்பதெ டவுசரு பட்டன போட முடியி.'

**எக்குத்தப்பா** : தவறிவிட்டால். 'எக்குத் தப்பா ஏதாவது ஆயிருச்சுன்னா.'

**எகத்தாளொ** : திமிராகப் பேசுதல். 'என்னொ எங்கிட்டியே எகத்தாளொம் பேசறீயா நீயி.'

**எகனமொகன** : எகத்தாளமாக. எதுகை, மோனையாக. 'இவுனுக்கு எகனமொகனயா சேறதே வேலயாப் போச்சு.'

**எகுறுது** : 1. பேச்சில் எல்லை மீறுதல். 'என்ன ரொம்ப எகுறுறெ.' 2. செலவு, விலை முதலியன அளவுக்கு அதிகமாக உயருதல். 'தக்காளி வெல ரொம்ப நாளுக்கு நாளு எகுறுது.'

**எங்காச்சு** : எங்கேயாவது. 'எங்காச்சுஞ் சுத்திட்டிருப்பாம் பாரு.'

**எங்காலு** : காண்க. எங்காச்சு.

**எங்கீனு** : எங்கே என்று. 'எங்கீனு நாம் போய்த் தேடுவே.'

**எங்கெனெ** : எங்கே. எந்தப்பக்கம். 'தம்பி எங்கெனெ போயிட்டு வர்ற.'

**எச்சக்கலெ** : அதிகப் பிரசங்கித்தனம். 'எச்சக்கல நாயி சொன்னா கேக்க மாட்டியா.'

**எச்சாயிரு** : அதிகமாகிவிடும். 'நாளுக்கு நாளு வெலெ எச்சாயிரு.'

**எச்சு** : அதிகம். 'சோறு கொஞ்சம் எச்சாத் தின்னாங்கிட்டி வவுறு வலிக்குது.'

**எச்சுப்பேச்சு பேசறெ** : தேவையற்ற வார்த்தைகளைப் பேசுதல். 'ரொம்ப எச்சுப்பேச்சு பேசிப் பழகிட்டெ.'

**எச்சுப்பன்னாட்டு** : தேவை இல்லாமல் அதிகாரம் செய்தல். 'எச்சுப் பன்னாட்டு பன்ற வேல யெல்லா இங்கெ வேண்டா.'

**எசகடொ** : தெய்வத்திற்கு செலுத்தும் காணிக்கை, வேண்டுதல். 'சாமிக்கி எசகடொ குடுக்கறதா வேண்டி யிருக்கெ.'

**எசமான்** : குடியானவனுக்கும் காணியாளனுக்கும் தலைமைப் பொறுப்பேற்று செயல்படுபவன்.

**எசவா :** இசைவாக. 'எசவா ஏதாச்சி இருந்தா சொல்லுங்கெ.'

**எசிலி :** போட்டி. 'எசிலிக்கு பொடம்போட்டு ஏத்தெ ஊடும் பாழாச்சு' (பழமொழி).

**எட்டாங்கரொ :** தாயம் போன்ற எட்டுக்கரம் உள்ள ஒருவகையான விளையாட்டு. 'எட்டாங்கரொ வெளயாட வர்றியா.'

**எட்டிப்பாக்குலே :** வந்து பார்க்கவே இல்லை. 'ஒரு எட்டு வந்து எட்டிப் பாக்குலே.'

**எட்டிப்போடு :** வேகமாக நட. 'சீக்கிரொ எட்டிப் போட்டு நடொ.'

**எட்டு:** நடக்கும்போது இருகாலுக்கும் உள்ள தூரம். 'ரெண்டு எட்டு வெக்கிறதுக் குள்ளெ மூச்சுவாங்குது.'

**எடக்கு :** எதற்கும் ஒத்துவராத. 'சரியான எடக்கு புடிச்ச ஆளா இருக்கற.'

**எடங்காடு :** பயிர்செய்வதற்கு இடையூறுகள் நிறைந்த நிலம். 'எடங்காட்டுல எள்ளு வெதை. கொறங்காட்டுல கொள்ளு வெதை. பழமொழி.'

**எடங்கெட்டவெ :** வாழ்க்கை நடத்துவறகான சாமார்த்தியம் இல்லாதவன்.

**எடஞ்சலு :** இடையூறு. 'எவ்ளோ எடஞ்சல்லியுமு நானு உன்னய படிக்க வெச்சந் தெரீமா.'

**எடத்தானு :** மாட்டு வண்டியில் இடதுபக்கம் செல்லும் மாடு. 'எடத்தான புடிச்சி கட்டிவை.'

**எடமொடக்கு :** எதற்கும் ஒத்துவராத. 'சரியான எடமொடக்கு புடிச்ச ஆளா இருக்கற.'

**எடாலு:** எலிப்பொறி. 'எடாலு வெச்சு பத்து எலிய புடிச்செ.'

**எடவன் :** காண்க. எடத்தான்.

**எடுப்புச்சோறு :** பிச்சை எடுத்து சாப்பிடும் சோறு. 'எடுப்புச்சோத்தெ திங்கற உனக்கு இவ்ளவு திமுரு இருந்தா ஊட்டுசோறு திங்கற எனுக்கு எவ்ளோ திமுரு இருக்கு.'

**எடுப்பு :** கம்பீரம். 'ஆளு வாட்டசாட்டமா எடுப்பா இருக்கறான்.'

**எடையில :** இடையில். 'பேசிக்கிட்டு இருக்கறப்ப எடையில நொழஞ்சு பேசாத.'

**எடொ :** இடம். 'இந்த எடொம் பூரா என்றதுதெ.'

**எண்ணெக்கச்சலு :** நாள்பட்ட பலகாரங்களில் இருந்து வரும் கெட்ட எண்ணெயின் நாற்றம். 'மிச்சரு எண்ணெக்கச்சலு அடிக்குது இதப் போயி வாங்கியாந்திருக்குற.'

**எணக்கம் (இணக்கம்) :** ஒத்துப்போதல். 'ரெண்டு பேரு ரெம்ப எணக்கமா இருக்கறாப்புடி தெரீது.'

**எணக்கரொ :** நட்பு.

**எணச்சீர் (இணைச்சீர்)** : கொங்கு திருமணங்களில் மணமகனின் திருமண மாகாத தங்கைக்கு செய்யப் படும் சீர்.

**எணப்பொளி** : இரு காடுகளுக்கு இடையில் உள்ள பொளி. 'நாங்க ரெண்டு பேரு எணப்பொளி காட்டுக் காரங்க.'

**எத்தெ** : விபரமானவன், பிரச்சினை களில் சிக்காமல் நழுவி விடுபவன். 'ஆளு பயங்கர எத்தனா இருக்கரெ.'

**எத்தினிதாட்டி** : எத்தனை தடவை. 'ஒனக்கு எத்தினிதாட்டி நாஞ் சொல்றது.'

**எத்தினிதவெ** : காண்க. எத்தினி தாட்டி.

**எத்தினி** : எத்தனை. காண்க. எத்தினி தாட்டி.

**எத்தென** : எத்தனை. 'எத்தென ரூவா குடுத்து இத வாங்குன.'

**எதுக்களிக்குது** : அளவுக்கதிகமாக சாப்பிடும் போது ஏற்படும் குமட்டல். 'ரொம்ப அதிகமா சோத்தெ தின்னாங்கட்டி எதுக்களிக்குது.'

**எதுக்காலெ** : எதிரில். 'உனுக்கு எதுக்காலெதா இருக்குது பாரு.'

**எதுக்கூ** : எதற்கு. 'எதுக்கூ அடிக்கொருக்கொ ஊட்டுலெ சண்டெ போடறெ.'

**எதுத்தூடு:** எதிர்வீடு. 'இவுங்கொ எங்கூட்டுக்கு எதுத்தூட்டுலெ இருக்குறாங்கொ.'

**எதுன்னாலு** : எது என்றாலும். 'இவெ எதுன்னாலு முன்னுக்கு வந்துவந்து நிக்கறது.'

**எதெத்தெ** : எதைத்தான். 'எதெத்தெ நானு பண்றதுனு எனக்கே தெரீலெ.'

**எந்தரொ** : தாயத்து. 'எந்தரொ மந்திரிச்சு வாங்கியாந்து கட்டு காச்சலு சீக்கிரொ நல்லாயிரு.'

**எந்திரிச்சி** : எழுந்து. 'பெரிவிகிட்டெ பேசறப்பொ எந்திரிச்சி நின்னு பேசோனும்னு தெரீயாதா.'

**எந்நேரொமே** : எப்பொழுதே. 'எந்நேரமே கெளம்பிப் போன அப்பு லேட்டாயிருச்சு.'

**எந்தெடத்லெ** : எந்த இடத்தில். 'எந்தெடத்லே நீ இப்ப இருக்கெ.'

**எப்பத்தெ** : எப்பொழுதுதான். 'இந்த வேலெ எப்பத்தெ முடியும்னு தெரீலெ.'

**எப்பிடீன்னாலு** : எப்படி என்றாலும். 'எது எப்டீன்னாலு நமுக்கு சோறு கெடக்கிறதே பெருசு.'

**எப்பப்புடுச்சு** : எப்பொழுதிருந்து. 'எப்பப்புடுச்சும் பாக்குற நீயி சும்மாவே இருக்குறெ.'

**எப்பீலிருந்து** : காண்க. எப்பப்புடுச்சு.

**எப்பூம்போல** : எப்பொழுதும் போல். 'எப்பூம்போல நீயி கம்முனு இருந்தீனா எந்தப்பிரச்சினையு இல்லெ.'

**எம்படது** : என்னுடையது. 'இந்தப் பேனா எம்படது.'

**எம்மல் :** ஏமாற்றுதல், ஏய்த்தல். 'இந்த எம்மல் வேலயெல்லா எங்கிட்ட வேண்டா.'

**எமட்டன் :** மிகச்சிரமமான காரியத்தை யும் முடிக்கும் ஆற்றல் உள்ளவன். 'சரியான எமட்டனா இருப்பாம் போலருக்கு.'

**எமுட்டு:** எவ்வளவு. 'இந்த சட்டைய எமுட்டு ரூவா குடுத்து வாங்குன.'

**எமுட்டுநேரெ :** எவ்வளவு நேரம். 'எமுட்டு நேரெ ஆச்சு வேலக்கி போனவிகயெ இன்னுங் காணோமே.'

**எரப்பு :** வீட்டை ஒட்டியதுபோல் பக்கவாட்டில் இருக்கும் கூரை. 'எரப்புக்குள்ள போயி படுத்துத் தூங்கு.'

**எரவு :** இரவல். 'எந்தப் பொருளெ எரவு கொடுத்தாலு திரும்ப வராது.'

**எரிகொள்ளி :** இறந்தவர்களுக்கு இடும் கொள்ளி. 'எரிகொள்ளி போட்டுட்டு திரும்பி பாக்காமா போவனும்.'

**எருக்கலாஞ்செடி :** தண்டுகளில் பால் நிறைந்த தானாக வளரும் செடி. 'எருக்கலாஞ்செடியில ரெண்டு தண்ட ஒடிச்சிட்டு வா.'

**எருமைத் தேளு :** கருமையான நிறத்தில் இருக்கும் பெரிய தேள். 'எருமைத் தேளு கடிச்சு ஆளு உசிரே போச்சு.'

**எருவாமுட்டி :** சாணத்தை வட்டமாகத் தட்டி காய வைத்தல். 'எருவா முட்டி இருந்தா அடுப்பெரிக்கலா.'

**எருவு :** காட்டிற்கு உரமாகப் போடும் சாணம் மற்றும் பல பொருட்கள். 'காட்டுக்கு எருவு போட்டு ஒழவு ஓட்டணும்.'

**எல்லாத்தீ :** அனைத்தையும். 'எல்லாத்தீ அவனுக்கே கொடுத்துரு.'

**எல்லாத்துங்குந்தெரியீ :** எல்லாருக்கும் தெரியும். 'நீ ஆருன்னு எல்லாத்துங்குந் தெரியீ.'

**எவடத்தாலே :** எவ்விடத்தில். 'நீ எவடத்தாலே நிக்கிறெ.'

**எவத்தாலே :** காண்க. எவடத்தாலே.

**எவெத்திக்கி :** காண்க. எவடத்தாலே.

**எழப்புளி :** மரம் இழைக்கும் உளி. 'எழப்புளிய எடுத்தா மரத்தெ கொஞ்ச எழைக்கலா.'

**எழவு :** இறப்பு. 'எழவுக்கு போகோனும்.'

**எழவாளு :** இறப்பை சொந்தங்களுக்கு தெரிவிக்க போகும் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர். 'எழவாளு வந்தருக்குது.'

**எழும்புலெ :** எழுந்திரிக்கவில்லை. 'அவெ இன்னுந் தூங்கிகிட்டு இருக்கறே இன்னு எழும்புலெ.'

**எள்ளுரண்டெ :** எள்ளை இடித்து செய்யப்படும் உருண்டை 'எள்ளுரண்டெ செஞ்சு திங்கோனும் போல இருக்கு.'

***எளக்காரொ :*** கிண்டல் கேலியாக. *'என்னப்பாத்தா எளக்காரமாத் தெரியுதா உனுக்கு.'*

***எளங்கன்னு :*** இளம் கன்று. *'எளங்கன்னு வெய்யில இருக்குது நெழல்ல புடிச்சிக் கட்டு.'*

***எளச்சு :*** உடல் மெலிந்து. *'நொம்ப எளச்சுப் போயிட்ட.'*

***எளசு :*** இளையவர். *'இவெ யெனக்கு எளசு.'*

***எளந்தேரி :*** வாலிபன் (வயசு பையன்). *'எளந்தேரி ஊரச் சுத்திகிட்டு திரியறே.'*

***எளப்பு :*** வேகமாக நடக்கும்போதோ, படிக்கட்டுகளில் ஏறும்போதோ ஏற்படும் மூச்சிரைப்பு. *'வேகமா வந்தாங்கிட்டி பயங்கரமா எளப்பெடுக்குது.'*

***எளப்புநோவு :*** காசநோய். *'எளப்பு நோவு வந்து ஆளு போய் சேந்துட்டான்.'*

***எளம்பு :*** முதிராத. *'ஆட்டுக்கறி எளம்பா இருக்குது.'*

***எளம்பயிரு :*** முளைத்து சிறிது நாட்களே ஆன பயிர். *'எளம்பயிருல மாட்ட உட்டு மேச்சராத.'*

***எள ரத்தொ:*** வாலிப இரத்தம். *'எளரத்தமாச்சா பையெ முறுக்கறான்.'*

***எளவட்டொ :*** வாலிபன். *'எளவட்டங் களாச்சு சொன்னா கேக்க மாட்டிகிறாங்க.'*

***எளவெய்யிலு :*** அதிகாலை நேர சூரிய வெளிச்சம். *'எளவெய்யில்ல உக்காராத.'*

***எளுசா :*** எளிதாக. *'என்னப் பாத்தா ஒனக்கு எளுசா தெரீதா.'*

***எளெனி :*** இளநீர். *'வெய்யிலுக்கு எளெனி குடிச்சா நல்லாயிருக்கு.'*

***எளையகுடி :*** இரண்டாவது மனைவி. *'இந்தாளு கெட்ட கேட்டுக்கு எளையகுடி கட்டீருக்காரு.'*

***எறகூடை :*** நீர் இறைக்கும் கூடை. *'எறகூடைய நல்லா மாட்டியுடு கெணுத்துலருந்து தண்ணி எறைக்கலாம்.'*

***எறங்காடு:*** கரிசல் காடு. *'எறங்காட்டுல எள்ளு வெதைக்கோணு, கொறக்காட்டுல கொள்ளு வெதைக்கோணு.' (பழமொழி).*

***எறங்கு :*** இறங்குதல். *'மேல ஏறி என்னெ பன்ற கீழ எறங்கு.'*

***எறவாரொ :*** சிறு சிறு பொருட்களை செருகி வைக்கும் கூரையின் கீழ்ப் பகுதி. *'எறவாரொத்துல சீப்பு சொருகி இருக்குது எடு.'*

***எறிஞ்சிட்டா :*** வீசி விடுதல். *'காசெ தூக்கி மூஞ்சிலெ எறிஞ்சிட்டா.'*

***எறையாமெ :*** கீழே விழாமல். *'சோத்தெ கீழ எறயாம தின்னு.'*

***என்றது :*** காண்க. எம்படது.

**என்றெமகெ** : எனது மகன். 'என்றெமகெ வேலக்கி போயிருக்குறான்.'

**என்றெமகொ** : எனது மகள். 'என்றெமகொ சொன்னான செரியா இருக்கு.'

**என்றெ பழக்கொ** : என்னுடைய பழக்கம். 'இதுதா என்ற பழக்கொ இத நா மாத்திக்க முடியாது.'

**என்ன அவுசரொ** : ஏன் இவ்வளவு வேகம். 'என்ன அவுசரொ மெதுவா போகவேண்டீதுதானே.'

**என்னாவோனு** : என்ன உறவு வேண்டும். 'அவுரு உனுக்கு என்ன ஆவோனு.'

**என்னப்புனு** : வயதில் சிறியோரை பெரியோர்கள் விளிக்கும் சொல். 'என்னப்புனு நல்லாக்கீறியா'

**என்ன பண்றெ** : என்ன செய்கிறாய். 'இங்ஙனெ உக்காந்துகிட்டு நீயி என்ன பண்றெ.'

**என்னாராகு** : எவ்வளவு நேரம் ஆகும். 'இது முடியறதுக்கு என்னாராகு.'

**என்னாவறது** : என்ன ஆகும். 'கீழ உளுந்தா என்னாவறது.'

**என்னுங்கோ** : என்னங்க. 'என்னுங்கோ இங்கெ வாங்கோ.'

**என்னுதெஞ்சொன்னாலு** : எவ்வளவு தான் சொன்னாலும். 'நா என்னுதெஞ் சொன்னாலு நீ கேக்கப் போறதில்லெ.'

**என்னெமாரி** : என்னைப்போல். 'என்னெமாரி ஒருத்தருங் கூடொ இருக்கமாட்டாங்கெ.'

**என்னேரொ வந்தீங்கெ** : எப்பொழுது வந்தீர்கள். 'ஒறமனைக்காரங்க எல்லா என்னேரொ வந்தீங்கெ.'

**எனெத்தெ** : எதை. 'நீ எனெத்த சொன்னாலு நாங் கேக்க மாட்டெ.'

## ஏ

**ஏகாலி** : சலவைத் தொழிலாளி. 'ஏகாலிகிட்ட துணிய குடுத்து தேய்க்கணும்.'

**ஏகதேசமா** : ஏறக்குறைய. 'ஏகதேசமா இந்தெ வேலெ முடிஞ்சுது.'

**ஏங்கல்**: 1. எதுவும் கிடைக்காமல் வருந்துதல். 'அப்பனம்மா பாசத்துக்கு கொழந்த ஏங்கிப் போச்சு.' 2. மூச்சு விடுவதற்கு திணறும் நோய். 'குளுருகாலொ வந்தா ஏங்கலு வந்துரு.'

**ஏச்சுட்டு** : ஏமாற்றுதல். ஏச்சிக்கிட்டே இருக்குறாம் பாரு.

**ஏசகோசலா** : இறைந்து கிடத்தல். 'எல்லா சாமானு ஏசகோசலா கெடக்குது பாரு.'

**ஏடாகூடொ** : முறைகேடான செயல். 'ஏடாகூடொம் புடிச்செ ஆளா இருக்கறியே.'

**ஏடு** : நடுத்தண்டைக் கீறி நறுக்கப்பட்ட வாழை இலை. 'இத்தச்சோடு எலை எதுக்கு சின்ன ஏடு எடுத்துப்போடு.'

**ஏடுஎழுதறெது** : குழந்தைகளுக்கு நோய் நீங்க ஓலையில் எழுதிக் கட்டுவது. 'கொழந்திக்கி ஒடம்புக்கு செரியில்லெ ஏடுஎழுதோனு.'

**ஏத்தொ** : திமிர் பிடித்தவன். 'உனுக்கு எவ்ளோ ஏத்தொ இருந்தா எங்கிட்டியே சண்டெ கட்டுவெ.'

**ஏத்தோனு** : ஏற்ற வேண்டும். 'வயிலுக்குள்ள இருக்குற பயிரயெல்லா கரைக்கி ஏத்தோனு.'

**ஏதாச்சொன்னு ஆச்சுனா** : ஏதாவது நடந்துவிட்டால். 'இப்பிடி போறியே ஏதாச்சொன்னு ஆச்சுன்னா என்னெ பண்றது.'

**ஏப்பு** : ஏமாற்றுதல். 'இந்த ஏப்பு காமிக்கிற வேலயெல்லா எங்கிட்ட வேண்டா.'

**ஏமினி** : ஏன் அம்மினி என்பதின் சுருக்கம். பெண்களை மரியாதையாக கூப்பிடுதல். 'ஏமினி அய்யெ எங்கெ போனாரு.'

**ஏய்க்கறவேலெ** : வேலை செய்யாமல் ஏமாற்றுதல். 'ஆளு இல்லன்ன ஏய்க்கற வேலெயே செரியாப் போகு.'

**ஏர்க்காலு** : 1. ஏரையும் நுகத்தடியையும் இணைக்கும் கட்டை. 'ஏர்க்கால நல்லா கட்டு உருவிகிட்டே வருது.' 2. மாட்டு வண்டியின் முன் பக்கத்தை நிலத்தில் ஊன்றச் செய்யும் கட்டை. 'ஏர்க்கால் முறிஞ்சு போச்சு வேற கட்டை மாத்தனும்.'

**ஏவாரொ** : வியாபாரம். 'ஏவாரொ எல்லா எப்பிடி போயிட்ருக்குது பரவாயில்லையா.'

**ஏவல்** : கெடுதல் செய்ய தீய சக்திகளை ஏவிவிடுதல். 'அவனோட ஊட்டுல ஏவல் செஞ்சு வெச்சுட்டாங்களாமா.'

**ஏவொகமில்லாமெ** : நினைவு இல்லாமல். 'உன்ற ஏவொக மில்லாமெ நாம் பாட்டுல போய்ட்டெ.'

**ஏழாம் பொருத்தொ** : ஒருவர் மற்றொருவரோடு ஒத்துப்போக முடியாத சூழ்நிலை. 'ரெண்டு பேருக்கும் எப்பவுமே ஏழாம் பொருத்தொந்தான்.'

**ஏழைபாழை** : ஏழை, எளியவர். 'ஏழைபாழையா இருந்தாவே யாரும் ஒதவமாட்டாங்க.'

**ஏறுக்குமாறு** : முரண்பாடாக. 'ஏறுக்கு மாறா பேசாத.'

**ஏறுவெயிலு** : சூரியன் மேலே எழும்போது வரும் வெயில். 'ஏறுவெயில்லெ பொழப்புக்கு போனாத்தா எறங்கு வெய்யில்ல வவுத்துக்கு திங்க முடியி.'

**ஏனவானோ** : வீட்டில் பயன்படுத்தும் பாத்திரங்கள். 'ஏனவானங்களெ எடுத்து கழுவி வெய்யி.'

**ஏனுங்கோ** : காண்க. என்னுங்கோ.

# ஒ

**ஒக்காரொ :** உட்கார. 'ஒக்காரொக்கோட நேரமில்லாமெ பொழப்பு ஓடிகிட்டு இருக்குது.'

**ஒகைக்கறது :** அசைத்தல். 'வாத ஒகைக்காத நெல்லிக்காயெல்லா கீழ உளுகுது பாரு.'

**ஒசக்கொ :** காண்க. ஒசரமா.

**ஒசம்பு :** கனத்த மழை பெய்யும் போதும் நிலங்களுக்கு அருகில் ஏரிகளில் அளவுக்கதிமாக தண்ணீர் தேங்கினால் தானாக வயலில் ஊறும் நீர். 'மழைபேஞ்சி வயில்ல ஒசம்பு தூக்கிருச்சு.'

**ஒசரமா :** உயரமாக. 'ஆளு நல்லா வளத்தியா ஒசரமா இருப்பாப்பிடி.'

**ஒட்டாஎடுக்கலா :** ஒன்றாக எடுக்கலாம். 'ரெண்டு பேரு துணிய ஒட்டா எடுக்கலா.'

**ஒட்டியாணொ :** இடுப்பில் அணியும் நகை. 'ஒட்டியாணொ போட்டுகிட்டு போறா பாரு.'



ஒட்டியாணம்

**ஒட்டு :** மிக நெருக்கமாக. 'இப்பிடி ஒட்டுஒறவுமா இருக்கிறீங்க.'

**ஒட்டுக்கா :** ஒன்றாக. ஒட்டுக்கா 'இத்தனயென்னத்தெ தூக்கிட்டு போகாத.'

**ஒட்டுக்கூடை :** அடிப்பகுதி அகன்றும், உயரம் குறைந்தும் இருக்கும் மண் அள்ள பயன்படும் கூடை. 'ஒட்டுக் கூடைய எடுத்தா மண்ணு அள்ள.'



ஒட்டுக்கூடை

**ஒட்டுத்திண்ணை :** வீட்டை ஒட்டியது போல் கட்டப்பட்டிருக்கும் திண்ணை. 'ஒட்டுத் திண்ணைல போய் படுத்துத் தூங்கு.'



ஒட்டுத்திண்ணை

**ஒட்டுத்துணி :** உடம்பில் ஒரு துணியும் இல்லாமல். 'ஒட்டுத்துணியுங் கூட இல்லாம இருக்குற.'

**ஒட்டுவாரொட்டி :** தொற்றுநோய். 'அவங்கூட சேராத ஒட்டுவாரொட்டி ஒனக்குமு ஒட்டிக்கும்.'

**ஒட்றை :** ஒட்டடை. 'இப்பிடி ஒட்றை புடிச்சிக் கெடக்குது தொடச்சி உடலாமல்லொ.'

**ஒடக்கா :** ஓணான். 'ஒடக்கா புடிக்கிறதே இவனுக்கு வேலயாப் போச்சு.'



ஒடக்காய்

**ஒடதட்றது :** காய் அடிப்பது. கிடாய், எருதுகளுக்கு ஆண்மைக்குறைவை ஏற்படச் செய்வது. 'கெடாயிக்கு ஒட தட்டியுடோனு இல்லீன்னா மேயாமெ பிரவெ பின்னாடியே ஓடிகிட்டு இருக்கு.'

**ஒடம்புக்கு முடியலெ :** உடல்நிலை சரியில்லாமை. 'யெனக்கு ஒடம்புக்கு முடியலெ.'

**ஒண்டவெட்டுறது :** அழுந்த வெட்டுதல். 'மசுர ஒண்டொ வெட்டோனும்.'

**ஒண்டி சண்டி :** 1.ஆதரவற்றவன். 'ஒண்டி சண்டிக்கு ஆதரவா ஒருத்தருங் கெடையாது.' 2.கதவுமாட்ட நிலவுக் காலில் அடிக்கப்படும் பூண். 'ஒண்டிய நல்லா அடிச்சுடு கதவு கழண்டுக்கிட்டு வருது.'

**ஒண்டி மணியொ :** ஒருவராக செய்யும் விவசாயம். 'ஒண்டி மணியொத்துக்கெ இங்கெ ஒன்னீங் காணொ.'

**ஒண்டுது :** ஒதுங்கி நிற்றல். 'மழைக்கி ஆடு செவுத்தோரமா போயி எப்பிடி ஒண்டுது பாரு.'

**ஒண்ணாவெய்யி :** ஒன்றாக வை. 'எல்லாத்தியு கலைக்காதெ ஒண்ணா வெய்யி.'

**ஒண்ணில்லெ :** ஒன்றும் இல்லை. 'ஒண்ணில்லே சும்மா பாத்துட்டுப் போலாம்னு வந்தெ.'

**ஒண்ணுமாத்திஒண்ணு :** ஒன்று மாற்றி ஒன்று. 'ஒண்ணு மாத்தி ஒண்ணு ஏதாச்சி வந்துகிட்டே இருக்குதாச்சி.'

**ஒத்தடொ :** உடம்பில் ஏற்படும் காயங்களுக்கு வெதுவெதுப்பாக துணியைச் சுற்றி தடவி தடவி எடுத்தல். 'ஒடம்வெல்லா ஓரே வலியா இருக்குது ஒத்தடொங் குடுக்கோனு.'

**ஒத்தவண்டி :** ஒரு மாட்டைக் கட்டி ஓட்டும் வண்டி. 'ஒத்தவண் கட்டிகிட்டு எங்கியோ கௌம்பியாச்சி.'

**ஒத்தாசெ :** ஒருவருடைய வேலையின் சிரமத்தை குறைப்பதற்குச் செய்யும் உதவி. 'அவனுங் கூட பரவாயில்ல எனக்கு ரொம்ப ஒத்தாசையா இருந்தான்.'

***ஒத்து ஊதறது*** : இன்னொருவருக்கு ஒத்து பேசுதல். 'ஒத்து ஊதறதெ உட்டுட்டு உன்றெ வேலயெப் பாரு.'

***ஒத்துப் போறது*** : இணங்கி போதல். 'எந்த விசியத்தெ சொன்னாலும் ஒத்துப் போய்ருவாந் தம்பி.'

***ஒத்தைக்கொத்தை*** : ஒருவருக் கொருவராக. 'ஒத்தைக் கொத்தை மோதிக்கலாமா.'

***ஒத்தையடுப்பு*** : பக்க அடுப்பு இல்லாமல் ஒரே அடுப்பு கொண்டது. 'ஒத்தையடுப்பு வெச்சி சோத்த ஆக்கு.'

***ஒதவல்*** : குவியலாக போட்டு வைக்கப்பட்டிருக்கும் செடி, கொடி மற்றும் புல் பூண்டு. 'ஒதவலா இருக்குது பாத்துபோ பூச்சி புழுவு இருக்கப் போவுது.'

***ஒதறனு*** : உதறிவிடுதல். 'எள்ளுக் கடுங்கிய நல்லா ஒதறனு அப்பதான் எள்ளு கீழ உழுகும்.'

***ஒதுக்குப்படலு*** : ஒருபுறமாக திறந்து மூடும் வகையில் இருக்கும் சிறு தடுப்பு. 'காத்து பயங்கரமா வீசுது பாரு ஒதுக்குப்படலு வெச்சு மறப்பு கட்டு.'

***ஒதை*** : உதைத்தல். 'ரெண்டு ஒத குடுத்தாத்த சொன்ன பேச்சு கேப்பாம் போலருக்கு.'

***ஒப்புக்கு*** : காண்க. ஒப்புக்குச்சப்பா.

***ஒப்புக்குச்சப்பா*** : தேவைப்படும் போது பயன்பாட்டிற்கு வைத்து கொள்ளும் ஆள். 'அவன் ஒப்புக்கு சப்பாத இருக்குறான்.'

***ஒப்புட்டு*** : கடலைமாவும், மைதா மாவும் சேர்த்து செய்யப்படும் ஒரு வகை பதார்த்தம். 'எங்கூட்டுல ஒப்புட்டு செஞ்சு தின்னமாக்கும்.'

***ஒரக்கு ஊத்தறது*** : பாலில் தயிரை ஊற்றி பிரை ஊற்றுவது. 'பாலுக்கு ஒரக்கு ஊத்தி வெக்கோனு.'

***ஒரட்டாங்கை*** : இடது கை. 'ஒரட்டாங்கையில சாப்புடக் கூடாது.'

***ஒரப்பான்*** : குழந்தைகளுக்கு சுக்கு, வசம்பு, ஜாதிக்காய், மஞ்சள் போன்றவைகளை அரைத்து பாலில் கலந்து கொடுப்பது.

***ஒரப்பு*** : உப்பு, காரம் அதிகமாக இருத்தல். 'கொஞ்ச ஒரப்பா இருக்கற மாதிரி கொழம்பு வெய்யி.'

***ஒரம்பரெ*** : விருந்தினர், உறவுக்காரர். 'எங்கவீட்டுக்கு ஒரம்பரெ வந்துருக்குது.'

***ஒரம்பு*** : காண்க. ஓசம்பு.

***ஒரேஎட்டெ*** : சமவயது. 'நானுமு அவனுமு ஒரே எட்டதான்.'

***ஒருக்கா*** : ஒருதடவை. 'ஒருக்கா சொன்னா கேக்கெ மாட்டியா.'

***ஒருக்காங்கூடொ*** : ஒரு தடவையாவது. 'நானு உங்க ஊட்டுக்கு ஒருக்காங்கூடொ வந்ததில்லெ.'

***ஒருச்சோடு*** : ஒரே அளவு. 'நாங்க ரெண்டு பேரும் ஒருச்சோடு.'

**ஒருசந்தி** : ஒருமுறை. ஒரொரு 'வெள்ளிக்கெழமையு ஒரு சந்தி வெரதொ இருக்கோணு.'

**ஒருத்தன்** : ஒருவன். 'இவனொருத்த எப்பப் பாத்தாலு சும்மா ஒளறிட்டே இருக்கறது.'

**ஒருதரம்** : காண்க. ஒருக்கா.

**ஒருநேரொ** : நாளில் ஒரு பகுதி. 'இன்னிக்கி பள்ளிக்கோட ஒரு நேரந்தான்.'

**ஒருபாடு நேரொ** : ஒரு பகுதி வேலை முடியும் நேரம். 'ஒருபாடு நேரொ ஆகிப் போச்சு இதுக்கே.'

**ஒருபேச்சுக்கு** : வேறு வகையில் அர்த்தப்படுத்திக் கொள்ளத் தேவை இல்லாமல். 'ஒருபேச்சுக்கு நாஞ் சொன்னெ அதெ நீ பெருசா எடுத்துகிட்ட.'

**ஒருபொளிக்காடு** : ஒரே வரப்பை இரு நிலத்தினர் பொதுவாக வைத்துக் கொள்வது. 'நாங்க ரெண்டுபேரும் ஒருபொலிக் காட்டுக்காரங்கெ.'

**ஒருமுட்டு** : காண்க. ஒரே முட்டா.

**ஒருவாடுநேரொ** : அதிக நேரம். 'ஒருவாடு நேரமா இந்த வேலயத்தெ செய்ய முடிஞ்சுது.'

**ஒருவிச** : காண்க. ஒருக்கா.

**ஒரே முட்டா** : ஒரு முறையில். 'ஒரே முட்டா இத்தனெயுந் தூக்கிட்டு போகாதெ.'

**ஒரேயடியா** : காண்க. ஒரே முட்டா.

**ஒல்ட்ரது** : தாறுமாறாக பேசுவது. செய்வது. 'இந்தெ ஒல்ட்ரெ வேலயெல்லா இங்கெ வேணா.'

**ஒல்லி** : சதைப்பற்று இல்லாத. 'ஆளு எங்கியோ ஒல்லிக்குச்சியா இருக்குறான்.'

**ஒல்லிக்காயி** : பருப்பில்லாத தேங்காய். 'எல்லாக்காயுமு ஒல்லிக்காயாப் போச்சு.'

**ஒலக்குப்பூண்** : உலக்கையின் இரு புறமும் உள்ள இரும்பால் பூட்டப் பட்ட வளையம். 'ஒலக்குப் பூணுல பாரு மாவு அப்பிக்கிட்டு இருக்குது.'

**ஒலாத்திகிட்டு** : இங்கும் அங்கும் நடந்து கொண்டு இருத்தல். 'எதுக்கு இங்கி அங்கி ஒலாத்திகிட்டு இருக்குற கம்முனு படுத்துதூங்கு.'

**ஒலவமரம்** : இலவம்பஞ்சு மரம். 'ஒலவமரத்துல பாரு கிளி உக்காந்துருக்குது.'

**ஒலைக்காப்படை** : உழுதாழ் படை. உழுவதை பிரித்துக் காட்டுவதற்காக மிக ஆழமாக உழப்படும் முறை.

**ஒலைக்கா மீனு** : மூன்று நட்சத்திரங்கள் இரவில் ஒரே வரிசையில் காணப்படும் இந்த வடிவத்தை ஒலைக்கா மீன் என்ற கூறுவர்.

**ஒலைத்தல்** : குரைத்தல். 'இந்த நாயி இப்பிடியே ஒலச்சிகிட்டு இருக்குது.'

**ஒலெவெக்கிறது :** உணவு செய்ய சட்டியில் தண்ணீரை ஊற்றி கொதிக்க வைப்பது. 'சோத்துக்கு ஒலெவெக்கோனு.'

**ஒவ்வுனுக்கு :** ஒவ்வொன்றிற்கு. 'ஒவ்வுனுக்கு நானேதெ சொல்லோனு மாக்கு.'

**ஒவ்வொருக்காலெக்கி :** ஏதாவது ஒரு தடவை. 'ஒவ்வொருகாலக்கி உன்ற ஞாவகொ வரு.'

**ஒவுத்திரியொ :** தொந்தரவு. 'உங்கூட ஒரே ஒவுத்திரியமாப் போச்சு.'

**ஒவெ :** அசைத்தல். 'நெல்லி மரத்த நல்லா ஒவை அப்பத காயெல்லா கீழ உழுகும்.'

**ஒழவு :** உழவு. 'மழை பேஞ்சா காட்டுல ஒழவு ஓட்டிரனும்.'

**ஒளப்பறது :** குளம்பச் செய்தல். 'சேத்துலெ இந்தெ ஒளப்பு ஒளப்புறெ.'

**ஒறமொறெ :** உறவுமுறை. 'உங்கூட்டுக்கு ஒறமொறெ வந்துருக்கு தோட்ருக்குது.'

**ஒறைக்கி :** காண்க. உறை ஊத்தறது.

**ஒன்னறை :** ஒன்றரை. 'மணி ஒன்னறையாச்சு இன்னுஞ் சாப்புடுலியா.'

**ஒன்னுக்கு உடுற நேரம் :** இடைவேளை. காலை 11 மணி. 'ஒன்னுக்கு உடுற நேரமாச்சு இன்னுமு பள்ளிக் கோடம் போகிலியா நீயி.'

**ஒனத்தி :** ருசி, சுவை. 'காப்பி ரொம்ப ஒனத்தியா இருக்குது.'

**ஒனத்துறது :** காயவைத்தல். 'துணிய ஒனத்து இப்பிடி ஈரமாயிருக்குது.'

## ஓ

**ஓகொ :** அப்படியா. 'ஓகொ இப்பிடியா அவஞ் சொன்னெ.'

**ஓசனெ :** யோசனை. 'ஓசனெ செஞ்சு பாரு.'

**ஓசிச்சு :** யோசித்து. 'ஓசிச்சு ஒரு முடிவெடு.'

**ஓசு :** காண்க. எரவு.

**ஓசுக்கு :** பணம் வாங்காமல் செய்து தரும் வேலை. 'சும்மா ஓசுக்கு செஞ்சு தர்றம்னு நெனச்சிகிட்டியா.'

**ஓஞ்சுட்டெ:** களைத்துப் போதல். 'வேல செஞ்சு ஓஞ்சுட்டெ.'

**ஓஞ்சுபோச்சு :** ஓய்ந்து விடுதல். 'மழ பேஞ்சு ஓஞ்சுபோச்சு.'

**ஓட்டைவாயெ :** வாயில் பற்கள் இடைவெளி விட்டு அமைந்திருத்தல். 'அவனொரு ஓட்டவாயெ அவங்கிட்ட ஏதாச்சு சொன்ன அப்பிடியே போய் சொல்லிருவான்.'

**ஓட்டாண்டி :** நல்ல நிலையிலிருந்து பிச்சை யெடுக்கும் நிலைக்கு ஆளாகுதல். 'எல்லாருக்கும் குடுத்துட்டு அவன் இப்ப ஓட்டாண்டியா கிட்டான்.'

**ஓட்டக்கை** : எவ்வளவு பணம் கையில் இருந்தாலும் எளிதாக செலவாகி விடுதல். 'அவங்கையில காசே தங்காது ஓட்டக்கைய செலவு செஞ்சுருவான்.'

**ஓட்டாங்கரம்** : சிறுவர் சிறுமியர் விளையாடும் ஒருவகை விளையாட்டு. 'ஓட்டாங்கரொ வெளயாடலாமா.'

**ஓட்டீட்டு** : கழித்துக் கொண்டு. 'இப்பிடியே பொழப்பெ ஓட்டீட்டு இருக்க வேண்டீதெ.'

**ஓட்டைஒடைசலு** : பாத்திரங்கள் உடைந்து ஓட்டை விழுதல். 'பாத்திரமெல்லா ஓட்டைஒடைசலா ஆயிருச்சு.'

**ஓட்டைப்பல்லு** : பல் வரிசைகளில் பல் விழும்போது ஏற்படும் இடைவெளி. 'ஓட்டப்பல்ல வெச்சுகிட்டு கறி திங்காத.'

**ஓடக்கல்லு** : சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள கல். 'ஓடக்கல்லு பொறுக்கியா சுண்ணாம்பு வேக வெக்கலா.'

**ஓடியாங்கெ** : ஓடி வாருங்கள். 'எல்லாரு ஓடியாங்கெ இங்கெ.'

**ஓடியாந்தெ** : ஓடி வந்தேன். 'பஸ்ஸ புடிக்க எவ்ளோ வேகமா ஓடியாந்தெ அப்பூமு புடிக்க முடீலெ.'

**ஓடியாரப்பொ** : ஓடி வரும்பொழுது. 'ஓடியாரப்பொ கல்லு தடிக்கி உழுந்து கீழெ உளுந்துட்டெ.'

**ஓடை** : இயற்கையாக ஆற்றிலிருந்து பிரிந்து வரும் நீர்வழி. 'ஓடைக்கு போயி குளிச்சுட்டு வர்றெ.'

**ஓடைமண்ணு** : நீர் ஓடும் பகுதியில் இருக்கும் கொழிமண். 'வூடு கட்ட ஓடை மண்ணு எடுத்துட்டு வந்தெ.'

**ஓடுகாலி** : 1.ஒரு இடத்தில் இருக்காமல் சுற்றிக்கொண்டே இருப்பவர். 'அவ ஓடுகாலிப்பய.' 2.வீட்டை விட்டு காதலனோடு ஓடி விடும் பெண். 'அவ ஒரு ஓடுகாலி.'

**ஓணவாயி** : சட்டி பானைகளில் வாய்ப் பகுதி உடைந்திருத்தல். 'ஓணவாயிப் பானைல பாரு பணம் போட்டு வெச்சிருக்கறெ.'

**ஓதம்** : மழைக்காலத்தில் சுவரிலோ, தரையிலோ ஏற்படும் ஈரக்கசிவு. 'செவுத்துல என்ன இப்பிடி ஓத ஏறிக்கெடக்குது.'

**ஓப்பாளொ** : கோபத்திற்கு எதிராக கோபமாக பேசுதல். 'உனக்கென்ன இவ்ளோ ஓப்பாளொ வருது.'

**ஓமத்திரான்** : ஓமத்திராவகம். 'வவுறு செரியில்லெ ஓமத்திரா கொஞ்சங் குடிச்சா செரியாப் போயிரு.'

**ஓமல்** : பொறாமைப் பார்வை. 'ஊரு ஓமல் பட்டே இந்தூடு வெளங்காமப் போச்சு.'

**ஓயாமெ** : ஓய்ந்து விடாமல். 'ஓயாமெ வேல செஞ்சு செஞ்சு சலுப்பாயிருச்சு.'

**ஓர்சலு** : ஒரே முறையில் ஒரு வேலையை முழுமையாகச் செய்தல். 'இரு இந்த வேலைய ஓர்சலா முடிச்சிட்டு வார.'

**ஓரக்கால்** : வயலின் ஓர உழவுத்திட்டு. பாத்தி. 'ஓரக்கால மிதிக்காம போ.'

**ஓரியாட்டொ** : சிறு குழந்தைகளுக்குள் ஏற்படும் சிறு சிறு சண்டை. 'எப்ப பாத்தாலும் ஓரியாண்டுகிட்டே இருக்காதீங்க.'

**ஓரெட்டு** : குறிப்பிட்ட தூரத்தை குறிக்கும் சொல். 'ஓரெட்டு வெச்சா போய்ச்சேந்தர்லா.'

**ஓலவாயி** : பொக்கை வாய். 'அவ ஓலவாயிக்கார வாயிலெ பல்லே இல்லெ.'

**ஓல** : காதில் அணியும் ஓலை, காதணி. 'காதுல ஓல போட வேண்டியதுதான காத சும்மா வெச்சுருக்கற.'

**ஓலக்கருக்கு** : பனம்பட்டையில் இரண்டு பக்கமும் இருக்கும் முள் போன்ற செதிலான பகுதி. 'ஓலக் கருக்கில கைய வெச்ச இப்பிடி கிழிச்சிருச்சு.'

**ஓலக்குடுச** : தென்னை மட்டையால் வேயப்படும் குடிசை. 'நானெ ஓலக்குடுசயிலெ குடியிருக்குறெ.'

**ஓவிடியொ** : உபதேசம். 'இவனுக்கு ஓவிடியொம் பண்றதே வேலயாப் போச்சு.'

**ஓவு** : மண் அடுப்பில் எரியும் தீ படுமாறு அடுப்பை ஒட்டி இணைந்த பக்க அடுப்பு. 'ஓவுல பாரு சுடுதண்ணி சட்டி வெச்சிருக்கறெ.'

## க

**கக்கிட்டி** : கண்ணுக்கு அருகில் வரும் வீக்கம். 'கக்கிட்டி வந்து கண்ணு வீங்கியிருச்சு.'

**கக்கொ** : தோள்பட்டையின் அடிப் பகுதி. 'கக்கத்துல என்ன இடுக்கியிருக்கற.'

**கக்குதல்** : வாந்தி எடுத்தல். 'சும்மா கக்கிகிட்டே இருக்குறாம் பாரு. ஆஸ்பத்திரிக்கி கூட்டிட்டு போ.'

**கங்கணொ** : ஒன்றை நினைத்து அதை செய்து முடித்தல். 'அத செஞ்சு வாங்கறதுக்கு கங்கணொங் கட்டிகிட்டு நிக்காதெ.'

**கங்காணி** : கால்காணி. 'கங்காணி நெலமிருந்தாப் போது பொழச்சிக்கலா.'

**கங்கு** : 1. விளிம்பு. 'கெணத்து கங்குலெ போயி நிக்காத.' 2. தணல். 'தீ கங்கு பாரு எப்படி எரியுது.'

**கச்சடா** : எண்ணெய்க் கச்சல். 'கச்சடா நாத்தத்துலெ போயி உக்காந்திருக்கறெ.'

**கச்சுதொ** : சரியாக. 'அடேங்கப்பா கச்சுதமா போச்சுபோ.'

**கச்சேரி** : நீதிமன்றம். 'என்னய கச்சேரி ஏற வெச்சிட்டியாடா.'

**கசக்கிபிழிறது** : கடுமையாக வேலை வாங்குதல். 'போயும் போயி அவங்கிட்டயா வேல செய்யற கசக்கி பிழிஞ்சிருவாப்பிடியே.'

**கசமுசா:** வெளிப்படையாக இல்லாமல். 'கசமுசான்னு பேசிக்கிறாங்க என்னன்னு தெரியல.'

**கட்ட :** அறுத்தபிறகு நிலத்தில் மீதமிருக்கும் பயிரின் அடிப்பகுதி. 'கட்டயெ நல்லா தழய விடனும்.'

**கட்டக்குருத்து :** அறுவடை செய்தபின் எஞ்சியிருக்கும் பயிரின் அடிப்பகுதி மீண்டும் தழைதல். 'கட்டக் குருத்து விட்டுருச்சு.'

**கட்டாந்தரெ :** வறண்டு இருகி இருக்கும் நிலப்பகுதி. 'கட்டாந்தரைல மாட்டுச் சாணியிருக்கு அள்ளிட்டு வா.'

**கட்டாது(கட்டுபுடி):** கட்டுபடியாகாது. 'இந்த வெலைக்கு கட்டாது.'

**கட்டவண்டி :** மரக்கட்டைகளால் ஆன வண்டி. 'கட்டவண்டிய பூட்டு டவுனுக்கு போலா.'



கட்டவண்டி

**கட்டிவளத்தானியம் :** இறந்தவர்களைப் புதைத்த பின் இடுகாட்டில் ஏழைகளுக்கு கொடுக்கப்படும் தானியம்.

**கட்டீத்திண்ணி :** திட்டும் சொல். 'கட்டீத்திண்ணி நாசமாப் போனவெ.'

**கட்டுச்சோத்து விருந்து:** ஐந்து வகையான உணவு வகைகளை செய்து உறவினர்களை அழைத்து விருந்து வைத்து கர்ப்பிணிப் பெண்ணை ஏழாவது மாதம் பிறந்த வீட்டுக்கு அழைத்துச் செல்லும் சீர். 'கட்டுச்சோத்து விருந்துக்கு போயிட்டு வர்றெ.'

**கட்டுத்தாரெ :** காண்க. கட்டாந்தரெ.

**கட்டுவழியாகாது :** காண்க. கட்டாது.

**கட்டுவிரியன் :** உடம்பைச் சுற்றிலும் வரிவரியுடன் காணப்படும் பாம்பு. 'கட்டு விரியங் கடிச்சு ஒடம்புலெ கட்டு கட்டா வந்திருக்குது.'

**கட்டையிலெ போறவெ :** கிராமப் புறங்களில் திட்டும் வார்த்தை. 'கட்டையிலெ போறவென எங்கூட சண்டெ கட்டுறியா.'

**கடக்குட்டி :** குடும்பத்தில் கடைசியாக பிறக்கும் குழந்தை. 'கடக்குட்டிக்கு ரொம்ப செல்லங் குடுத்தது தப்பாப் போச்சு.'

**கடகடனு :** 'கட்டைவண்டில பாரு அச்சு கழுண்டுருச்சோட்ட இருக்குது கடகடனு சத்தம் வருது.'

**கடகால் :** அஸ்திவாரம். 'நாளைக்கி நல்ல நாளு கடகாலு போட்ரு.'

**கடங்காரத்தனமா :** ஏனோதானோ வென்று. 'ஒரு வேலயச் சொன்னா கடங்காரத்தனமாத்தஞ் செய்யறது.'

**கடகெட்டவொ :** பெண்ணை திட்டும் சொல். 'கடகெட்ட உனக்கு மதிப்பெதுக்கு.'

**கடப்பாரெ :** குழி தோண்ட உதவும் முன்பக்கம் கூர்மையான, நீண்ட இரும்புக் கம்பி. 'கடப்பாரெக் கம்பி இருந்தா எடுத்தா இங்ஙனெ குழி தோண்டலா.'

**கடபோவுது :** கிணற்றில் நீர் வழிந்து செல்லுதல். 'தண்ணி கடபோவுது அந்தளவுக்கு மழ பேஞ்சிருக்குது.'

**கடமொளை :** வண்டியில் மாடுகளை பூட்ட உதவும் கோல். 'வண்டில கடமொள ஒடஞ்சி போச்சு.'

**கடலெமுத்து :** நிலக்கடலை விதை. 'எங்க காட்டுலெ கடலெமுத்து போட்டுருக்கோ.'

**கடனக்கழிக்கறது :** ஒருவரிடம் வாங்கிய கடனை திரும்ப அடைத்தல். 'உங்கிட்ட பட்டக் கடனக்கழிக்கோணு.'

**கடாசு :** வீசி எறிதல். 'ஆகாத சாமானையெல்லா கடாசி எறியனு.'

**கடவாயி :** வாயின் ஓரம். 'கடவாயிலெ பாரு சல்லு ஒழுகுது.'

**கடுக்காய் கொடுத்தல் :** மறைந்து கொள்ளுதல். 'எனக்கே கடுக்காய் குடுக்கிறியா.'

**கடுக்கு :** ஆண்கள் காதில் அணியும் ஆபரணம். 'ஆள் பாரு கடுக்குப் போட்டுகிட்டு சுத்தறான்.'



கடுக்கண்

**கடுவெ :** ஆண், (நாய், பூனை போன்ற பிராணி வகைகளில் ஆண் குட்டிகள்). 'இந்த நாயி கடுவங்குட்டி போட்டுருக்குது.'

**கடையாணி :** வண்டிச்சக்கரம் கழன்றாமல் இருக்க செருகும் அச்சு. 'கடயாணியெ நல்லா அடிச்சுடு சக்கரொ கழன்றப் போவுது.'

**கண்கட்டி :** மாயாஜாலம். 'இந்த கண்கட்டி வித்தையெல்லாம் எங்கிட்ட வேணா.'

**கண்டமேனிக்கு :** சகட்டு மேனிக்கு. 'கண்ட மேனிக்கு ஊர் சுத்திட்டு வராதெ.'

**கண்டுட்டுவா :** பார்த்துவிட்டுவா. 'நீ போயி அவியள கண்டுட்டு வா.'

**கண்ணசரரெ :** தூங்குகிறேன். 'கொஞ்சொ நேரொ கண்ணசரரெ.'

**கண்ணாமுழி :** கண். 'கன்னாமுழியெ தோண்டி காக்காயிக்கி போட்டுவெ.'

**கண்ணார :** கண்களால் நன்றாக பார்த்தல். 'எங்கண்ணாரப் பாத்த.'

**கண்ணாலொ :** திருமணம். 'வெடியாலெத்திக்கி கண்ணாலத்துக்குப் போகோனு.'

**கண்ணாலொ மூச்சுக்கொ :** திருமணம் செய்துகொள். 'இப்பிடியே இருக்காதெ கண்ணாலொ மூச்சுக்கொ.'

**கண்மண்ணு தெரியாமெ :** எதிரில் இருப்பது தெரியாமல். 'கண்மண்ணு தெரியாமெ வண்டி ஓட்டறாம் பாரு.'

**கண்றாவி :** அசிங்கம். 'அந்தக் கண்றாவிய வேற என்ற வாயால சொல்லணுமா.'

**கத்தறது :** சத்தம் போடுதல். 'காட்டு கத்துக் கத்தறது உனக்கு கேக்குலியா.'

**கத்துக்குட்டி :** ஒன்றும் தெரியாத. 'செரியான கத்துக்குட்டியா இருக்கியே.'

**கத்தாழக்கவுறு :** கற்றாழையில் பிரிக்கப்பட்ட நார். 'கத்தாழக் கவுத்தெ எடுத்தாந்து இந்தக் கொடிய கட்டு.'

**கத்தாழபஞ்சொ :** கொங்கு நாட்டில் கடுமையான பஞ்சத்தின் போது மக்கள் கற்றாழை கிழங்கை உண்டு வந்தனர்.

**கத்தாழமுட்டி :** கற்றாழை செடியின் அடிபாகம். 'கத்தாலமுட்டிய எடுத்தா தீயெரிக்க.'

**கதகதனு :** ஒரு வித வெப்பம். 'குளிருக்கு இங்ஙன கதகதன்னு நல்லா இருக்குது.'

**கதனை :** வெடி. 'நோம்பிக்கி ஊருக்குள்ள கதனையுட்டு நாயெல்லா ஓடிப்போயிருச்சு.'

**கதைக்காகாத :** நடைமுறைக்கு சாத்தியப்படாத. 'கதைக்காகாததெ வுட்டுட்டு வேற வேலயப் பாரு.'

**கதையளத்தல் :** கற்பனை செய்து பொய் சொல்லுதல். 'அவன் ரொம்ப கதையளப்பாந் தெரியுமா.'

**கந்தாயொ :** வரி. 'காட்டுக்கு கந்தாயொங் கட்டணு.'

**கந்தரகோலொ :** முற்றிலும் கலைக்கப் பட்ட நிலை. 'என்ற வாழ்க்கையே கந்தரகோலொ ஆயிப் போச்சு.'

**கப்பொ :** லஞ்சம். 'போலீசுக்கு கப்பங் கட்டியே ஆகோணு.'

**கப்பி :** மணலை சலித்தபின் எஞ்சி இருக்கும் பொருள். 'கப்பிய அள்ளிட்டு வா.'

**கப்பு :** உருண்டையான அடிப்பக்கம் குறுகியும் மேல்பக்கம் விரிந்தும் இருக்கும் பத்திரம். 'கப்புல சோத்தப் போட்டுக்குடு.'

**கப்புசிப்புனு :** வாயை மூடிக்கொண்டு, அமைதியாக இருத்தல். 'கப்சிப்புனு இருக்கோனு, சத்த வந்தது அப்புறம் பாரு.'

**கப்பை :** காண்க. அங்கராக்கு.

**கபகபனு** : வயிற்றில் பசியை தூண்டும் வகையில். 'கபகபனு வாச மூக்கத் துளைக்குது.'

**கம்கூடு** : தோளின் கீழ்பகுதி. 'கொடையெ கம்கூடுல வெச்சுகிட்டு போறாரு.'

**கம்பரக்கத்தி** : ராகி, சோளம் போன்றவற்றை அறுக்க உதவும் பிறை வடிவிலான கத்தி. 'கம்பரக்கத்தி இருந்தா குடு கம்மம் பூட்ட அறுக்கெ.'



கம்பரக்கத்தி

**கம்பி நீட்டு** : யாருக்கும் தெரியாமல் ஓடி விடுதல். 'பணத்தெ எடுத்துக்கிட்டு கம்பி நீட்டிட்டான்.'

**கம்பு வெளையாட்டு** : தடிகொண்டு விளையாடுவது. தடிவிளையாட்டு என்றும் கூறுவர். இதில் சிறப்பாக விளையாடுபவர்களை வீடு கட்டுதல், கோட்டை கட்டுதல் என்று அழைப்பர்.

**கம்மியா** : குறைந்த அளவு. 'இந்த வருசொ வெளச்சலு கம்மியாப் போச்சு.'

**கம்மஞ்சோறு** : கம்பால் செய்யப்பட்ட சாதம். 'கம்மஞ்சோத்த தின்னா ஒடம்புக்கு ரொம்ப நல்லெது.'

**கம்மந்தட்டு** : காய்நத கம்புப்பயிர். 'கம்மந்தட்ட அள்ளி மாட்டுக்குப் போடு.'

**கம்மம்பூட்டெ** : கம்பை எடுத்தபின் எஞ்சி இருக்கும் பூடு. 'கம்மம்பூட்ட எடுத்துட்டுவந்தா தீ எரிக்கலாம்.'

**கம்மம்மாவு** : கம்பை அரைத்து வெல்லம் சேர்த்து செய்யப்படும் மாவு. 'கம்மம்மாவு தின்னுருக்கிறியா.'

**கம்முனு** : அமைதியாக. 'கம்முனு இருக்கனும் சத்த வெளிய வந்துது ஒத கெடைக்கும்.'

**கமுக்கொ** : அமைதியாக. 'செய்யறதையுஞ் செஞ்சுட்டு கமுக்கமா உக்காந்திருக்கியா.'

**கமுக்கெ** : அமைதியானவன். 'பயங்கரமான கமுக்கனா இருக்கறியே.'

**கமுந்துருச்சு** : கவிழ்ந்துவிட்டது. 'அங்கனெ ரெயிலு கமுந்துருச்சாமா.'

**கரகட்டறது** : வீட்டில் தளத்திற்கும் சுவற்றிற்கும் இடையில் அழகிற்காக இடப்படும் வண்ணக் கோடு.

**கரசோறு** : நீரையும் தயிரையும் சேர்த்து கரைத்த சோறு. 'கரசோறு இருந்தா கொஞ்சம் போடு பசிக்குது.'

**கரட்டுமுரட்னு** : சிரமப்பட்டு. 'கரட்டுமுரட்டுனு எப்பிடியோ பாசாயிட்டெ.'

**கரடு** : மலைப்பாங்கான இடம். 'அந்தக் கரட்டுமேல பெருமாகோயிலு இருக்குது.'

**கரண்டுகம்பொ :** மின்கம்பம். 'கரண்டு கம்பொத்துல பாரு காக்காயி உக்காந்துருக்குது.'

**கரணை :** சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட கரும்பு. 'கரணை வெட்ட வர்றியா.'

**கரொ :** நொண்டி, தாயம் போன்ற விளையாட்டுக்க விளையாடுவதற்கு சிறுவர்கள் போடும் கோடு. 'கரத்த நல்லா தீண்டியுடு.'

**கரிக்குருவி :** கொங்கு நாட்டில் வாழும் ஒருவகைக் குருவி. 'கரிக்குருவி காட்டுக்குள்ளெ இருந்த புழுவெயெல்லா கொத்திட்டு போயிருச்சி.'

**கரிச்சுக்கொட்டறது :** கோபம் கொண்டு அடுத்தவரை திட்டுதல். 'சும்மா அவன கரிச்சுக் கொட்டிகிட்டே இருக்காதெ.'

**கரிசக்காடு :** கரிசல் மண் நிலம். 'கரிசக்காட்டு மண்ணுலெ வெளஞ்சது.'

**கரிசனொ :** அன்பு, அக்கரையுடன் விசாரித்தல், ஆதரவு. 'எம்மேல உனக்கென்ன இவ்வளவு கரிசனொ.'

**கரித்துணி :** சமையலறையில் சூடான பொருட்களை பிடித்து தூக்க உபயோகிக்கும் துணி. 'கரித்துணியப் புடிச்சு சட்டியத் தூக்கு இல்லன்னா சுட்டு வெச்சுரு.'

**கருக்காய் :** நெல்லில் வரும் பாளை. 'கருக்காயத் தூத்தி எடுக்கணும்.'

**கருக்கலு :** 1. மேகம். 'கருக்கலு இப்பிடி கட்டிருக்கு மழ வரு.' 2. அதிகாலைப் பொழுது. 'கருக்கல்லயே எங்கியோ கெளம்பீட்ட.'

**கருக்க நேரொ :** மாலை நேரம். 'கருக்க நேரத்துல எங்க கெளம்பீட்ட.'

**கருக்கருவா :** புல் அறுக்கும் கருக்கு முனை கொண்ட ஆயுதம். 'கருக்கருவா எடுத்தா பில்லு அறுக்கலாம்.'

**கருக்குநாரு :** பனம்பட்டையின் இருபுறமும் உள்ள கூர்மையான பல்வரிசை. 'கருக்குநார்ல கையெ கிழிச்சுக்கிட்டெ.'

**கருக்குனு :** பகீரென்று. 'எனக்கு அப்பிடியே கருக்குனு ஆயிருச்சு.'

**கருகருனு :** கருமையான. 'வானங் கருகருனு இருக்கு. மழ வரப்போகுது.'

**கருகும்னு :** பயங்கர இருட்டு. 'வூடு கருகும்னு இருக்குது வெளக்க பத்த வெக்கவேண்டியதுதானெ.'

**கருங்காத்து :** அதிக ஈரப்பதத்துடன் வீசும் காற்று.

**கருஞ்சுக்கிட்டி :** மணத்தக்காளி. 'கருஞ்சுக்கிட்டி கீரை தின்னா ஒடம்புக்கு நல்லது.'

**கருது :** தானியக்கதிர். 'மக்காணிக் கருது அடிக்கணும்.'

**கருநாக்கு :** நாக்கில் கருமையாக இருப்பது. இவர்கள் ஏதாவது கூறினால் பலிக்கும் என்பது ஐதீகம். *'கருநாக்குக் கார இவம் பல்லுலெ உளுகாதெ.'*

**கரும்பிலிகுட்டி :** கறுப்புநிற ஆட்டுக் குட்டி. *'கரும்பிலிகுட்டியெப் புடிச்சிக் கட்டு.'*

**கருமருந்து :** திருநீறு. *'இவ்வளவு கருமருந்து பூசியிருக்கற.'*

**கருமழை :** பகலில் சூரிய ஒளி இல்லாமல் மேகம் மறைத்து பெய்யும் மழை.

**கருமாதி :** இறந்தவர்களுக்கு செய்யும் ஈமச்சடங்கு. *'ஞாயித்துக்கெழமெ கருமாதி வெச்சிருக்குது எல்லாரு வந்துருங்கெ.'*

**கருமானக்காரி :** சிக்கனக்காரி.

**கருமுசுன்னு :** கும்மிருட்டு. *'கருமுசுன்னு இருக்குது எங்கெ போறெ.'*

**கருவாப்பில்லு :** கறிவேப்பிலை. *'கருவாப்பில்லு கொஞ்சொ இணுங்கீட்டு வா.'*

**கருவுத்தடி :** ஏரில் கலப்பையையும், நுகத்தையும் இணைப்பதற்கு கலப்பையில் சொருகப்பட்டிருக்கும் நீண்ட மரம். *'கருவுத்தடியெ இழுத்து நொகத்துல கட்டு.'*

**கரையேனு :** கருப்பு வர்ணத்தை அழுத்தமாகக் கூறுதல். *'வானங் கரையேனு இருக்குது மழை வரும்போல தெரியுது.'*

**கல்லாபெட்டி :** கடைகளில் பணம் போட்டு வைத்திருக்கும் பெட்டி. *'கல்லாப்பெட்டில பணமிருக்குது எடுத்துட்டு வா.'*

**கல்லுக்கட்டு :** கற்களை வரிசையாக அடுக்கி வைத்திருத்தல். *'கல்லுக் கட்டுல பாம்பு எத்தாச்சோடு இருக்குது.'*

**கல்லுக்கண்டு :** இனிப்பு சுவையுடைய கற்கண்டு.

**கல்மாரி :** மழை வரும்போது விழும் பெரிய பனிக்கட்டி. *'கல்மாரி மழெ உழுவுது.'*

**கல்றெ :** குருணையும், கற்களும் கலந்த கலவை. *'அரிசிலெ கல்றையாக் கெடக்குது.'*

**கல்லாங்காடு :** கல்நிறைந்த பூமி. *'கல்லாங்காட்டுலெ பாரு ஆடு மேயுதான்னு.'*

**கல்லிமடையான் :** ஒரு வகை நெல்.

**கல்லுளிமங்கெ :** மனதில் ஒன்றும் பதிய வைத்துக்கொள்ள முடியாதவன். *'சுத்த கல்லுளி மங்கனா இருக்குற.'*

**கல்லெறி தூரொ :** கல்லை எறியும் தூரம். *'கல்லெறி தூரத்துலதெ அவுங்க வூடு இருக்குது.'*

**கலசொ :** சிறிய மண்பானை. *'கலசத்துக்குல்ல பாரு காசு இருக்கு.'*



கலசொ

**கலப்பெ :** ஏர் உழுவதற்கு பயன்படும் மரத்தாலான முன்புறம் கூர்மையான மரக்கட்டை. 'கலப்பைய நல்லா ஊனி ஏரோட்டு.'



கலப்பை

**கலயப்பானெ :** அடிப்பகுதி அகன்றும் வாய்ப்பகுதி குறுகியும் உள்ள சிறு பானை. 'கலயப் பானைய எடுத்தா.'



கலயப்பானை

**கலியாணொ :** திருமணம். 'ஒரு கலியாணங்காச்சி உண்டா ஒண்ணா.'

**கவ்வுதல் :** வாயால் கடிப்பது. 'நாயி என்னத்தெ இப்பிடி கவ்விகிட்டு ஓடுது.'

**கவ்வெ :** இரண்டாகப் பிரியும் மரத்தின் கிளைப் பகுதி. 'கவ்வெக் குச்சியெ எடுத்துட்டு வா.'



கவ்வை

**கவ்வாத்து :** மரக்கிளையை வெட்டுதல். 'மரத்தெ கவ்வாத்து செய்யோணும்.'

**கவலைஓட்றது :** கிணற்றிலிருந்து நீரை வெளியே இறைத்தல். 'கெணுத்துலெ கவலையோட்டோனு.'

**கவிட்டிகுச்சி :** காண்க. கவ்வெ.

**கவுச்சி :** நாற்றம். 'இந்த எடத்துலெ மீனுக் கவுச்சி அடிக்கிது.'

**கவுண் :** கயிற்றில் கட்டப்பட்ட பட்டையான தோலில் கல்லை வைத்து சுழற்றி வீசி எறியும் சிறு கருவி. விவசாயிகள் இதை வைத்து பறவைகளை விரட்டுவர்.

**கவுத்தெ :** கயிற்றை. 'கவுத்தெ நல்லா இறுக்கிக் கட்டு.'

**கவுரத்தி :** கௌரவம். 'உனுக்கு கவுரத்தி அதிகமாகப் போச்சு.'

**கவுறு வாய்க்கால் :** சிறு வாய்க்கால். கவுறு வாய்க்கால்லெ தண்ணி நெறயாப் போவுது.

**கவுளி :** வெற்றிலைக்கட்டு அளவு. 'இந்தொ வருசொ அம்பது கவுளி வெத்தலெயாச்சு.'

**கழி :** 1. ஏரிலோ, வண்டியிலோ பூட்டப் பட்டிருக்கும் மாடுகள் நிலையில்லாமல் திரும்பிக் கொள்ளுதல். 'மாடு கழி போட்டுக்குச்சு பாரு.'

**கழிச்சுப் போடுதல் :** திருஷ்டி கழித்தல். 'கொழந்தைக்கு கொஞ்ச கழிச்சுப் போடு கண்ணு பட்ருக்கப்போவுது.'

**கழிதட்டு :** மாடுகள் தின்னாமல் கழிக்கும் தீவனத்தட்டை. 'கட்டுத் தரைலருந்து கழிதட்ட வெளிய அள்ளிப் போடு.'

**கழிமட :** தண்ணீர் கடைசியாக சென்று சேரும் மடை. 'கழிமட தண்ணியெ திருப்பியுடு.'

**கழுச்சுடறது :** கணவன் மனைவியை பிரித்து விடுதல்.

**கழுஞ்சிக்கல் :** சிறுவர்களின் ஒருவகை விளையாட்டு. 'கழிஞ்சிக்கா வெளையாட லாமா.'

**கழுத்துக்கட்டி :** வண்டியில் மாட்டைக் கட்டுவதற்காக கழுத்தில் பிணைக்கப் பட்டிருக்கும் கயிறு. 'கழுத்துக்கட்டிய தளத்திவுடு.'

**கள்னீர்த்தண்ணி :** அரிசி கழுவிய நீர். 'கள்னீர்த்தண்ணியெ எடுத்தாந்து மாட்டுக்கு ஊத்து.ங

**கள்ளக்காய்:** நிலக்கடலை. 'கல்லக் காயெல்லாம் புடுங்கியாச்சா.'

**கள்ளங்கண்டுக்குவெ :** முன்கூட்டி அறிந்து கொள்ளல். 'இப்புடிப் போனா கள்ளங்கண்டுக்குவெ.'

**கள்ளுத்தண்ணி :** கள். 'கள்ளுத் தண்ணி குடிச்சா ஒடம்புக்கு நல்லது.'

**கள கட்டிருச்சு :** மகிழ்ச்சிப் பெருக்குடன் கூடிய கூட்டத்தினால் வரும் சிறப்பு. 'கல்யாண வீடு களகட்டிருச்சு.'

**களத்துமேடு :** காட்டில் நெல் மற்றும் தானியங்களை காய வைக்கும் இடம். 'களத்துமேட்டுல உக்காந்திருப்பாம் பாரு.'

**களரிப்பணம் :** திருமணம் முடிந்த பிறகு பணிசெய் குடிகளுக்கு கொடுக்கப் படும் அன்பளிப்பு.

**களவாணி :** திருடன். 'களவாணிப்பயெ திருடிட்டு போய்ட்டான்.'

**களி :** ராகி மாவினால் செய்யப்படும் உணவு. 'களி கௌறி வெச்சிருக்கெ தின்னுட்டுப் போ.'

**களெ :** பயிர்களுக்கு இடையில் வளரும் தேவையற்ற செடிகள். 'களை வெட்டுனாத்த பயிருக கொஞ்ச நல்லா இருக்கு.'

**கறச்சுக்கிரீயா :** தயிரை ஊற்றி கரைத்து சாப்பிடுதல். 'ஏஞ்சாமி தயிரூத்தி கறச்சுக்கிரீயா.'

**கன்னமிடறது :** திருடுவதற்காக சுவற்றில் அடையாளம் பதித்தல். இந்தூட்டுலெ கன்னமிட்டு திருடிட்டு போயிட்டாங்கெ.

**கன்னித்தும்பு :** கன்றுகுட்டிகளுக்கு போடும் சிறிய தும்பு. 'கன்னுக்கு கன்னித்தும்பு போட்டுடு.'

**கன்னிமாங்காய் :** பிஞ்சு மாங்காய். 'கன்னி மாங்கா ஊறுகாப் போட்டா நல்லா இருக்கு.'

**கன்னிவெடெ :** முதன்முதலாக முட்டை இடும் கோழி. கன்னிவெடைய புடிச்சு கழுத்தி வெய்யி மொட்டு வெக்கும் போல இருக்கு.

## கா

**காக்காக்குளியல் :** உடம்பு நனையாமல் தண்ணீர் ஊற்றுவது. 'கொஞ்சம் பொறு காக்கா குளியலு போட்டுட்டு வந்தர்ர.'

**காக்காபொன்னு :** கருப்பு நிறத்தில் மின்னும் தன்மையுடையது.

**காக்காயி :** காகம். 'காக்காயி கோழிக்குஞ்செ தூக்கிகிட்டு போயிருச்சு.'

**காச்சலு :** காய்ச்சல். 'காச்சலு வந்து பய்யெ ரொம்பொ எளச்சிப் போயிட்டான்.'

**காசரளி :** நித்திய கல்யாணி. ஒருவகை மலர். 'காசரளி மாலெ கட்டோணு.'

**காசா :** விடாமல், திரும்பத்திரும்ப. 'இது காசா கட்டுற சேலை.'

**காஞ்சுபோச்சு :** காய்ந்து விடுதல். 'மழயில்லாம பயிரெல்லாங் காஞ்சு போச்சு.'

**காடாத்தறது :** இறப்பு சடங்கு.

**காட்டம் :** கடுமையான. 'ஆளு ரொம்ப காட்டமா இருக்கறான்.'

**காட்டுக்கத்து :** அதிகமாக சத்தம் போடல். 'காட்டுக்கத்து கத்திகிட்டு இருக்குற காதுல உழுகுதானு பாரு.'

**காட்டுகம்பு :** புன்செய் நிலங்களில் விளையும் கம்பு. (தானியம்). 'காட்டுக் கம்பு மணமே தனி.'

**காடி :** கட்டுத்தறியில் மாடுகளுக்குத் தீவனம் போட குறுக்கே மரத்தை போட்டு வைத்தல். 'காடியெ மிதிக்காத மாடு தட்டு திங்காது.'

**காண்டு :** கோபம்.

**காணப்பொறந்தவெ :** தான்பிறந்த பின்பு பிறந்தவன். 'நாங்காணப் பொறந்தவெ நீ எங்கிட்டியே சவாலு உடுரியா.'

**காணாம்பிள்ளு :** ஒருவகை களை. 'காணாம்பிள்ளு நெறயா மொளச்சுக் கெடக்குது.'

**காணி :** குலதெய்வக்கோயிலுக்கு காணி என்று பெயர். கோயில் அமைந்துள்ள ஊருக்கு காணியூர் என்று பெயர்.

**காணியாளன் :** குலக் கோயில் உள்ள பகுதியில் இடம் பெயராமல் விவசாயத்தை செய்து வருபவன்.

**காத்தாட :** காற்று வாங்க. 'காத்தாட சித்தெ அப்பிடியே வெளியெ வந்தெ.'

**காத்தாலெ :** காலை நேரத்தில். 'காத்தாலெ எங்கியோ கெளம்பறாப்புலெ இருக்கு.'

**காதுபட :** காதில் விழுமாறு. 'எங்காது படவே பேசிக்கிட்டு போறாம் பாரு.'

**காதுகுத்து :** குழந்தைகளுக்கு செய்யும் ஒரு சடங்கு. 'கொழந்திக்கி காதுகுத்து வெச்சுருக்குற.'

**காதோடுகாதா :** மெதுவாக காதின் அருகில் பேசுதல். 'காதோடுகாதா குசுகுசுன்னு பேசிக்கிறாங்க.'

**காதோலகருகுமணி :** பனை ஓலையை சுருட்டி ஒரு வளையத்தால் சுற்றி வைத்தல்.

**காந்தலு :** வெப்பம். 'ஒரே வெய்யக் காந்தலா இருக்கு.'

**காப்புக்கட்டு:** போகியன்று பூளைப்பூ, வேப்பிலை, ஆவாரம்பூ சேர்த்து வீட்டுக் கூரைகளில் செருகுதல். இன்னிக்கி காப்பு கட்றெ நோம்பு.

**காமங்கூத்து :** கிராமங்களில் நடைபெறும் தெருக்கூத்து.

**காமி :** காட்டு. 'எங்கிட்டெ காமி பாக்கலா.'

**காயடிக்கறது :** நிலக்கடலையை செடியிலிருந்து தனியாகபிரித்து எடுத்தல். 'காயடிக்கிற சீசனு வந்துருச்சு இனி வேலக்கி கொறவிருக்காது.'

**காயக்கருப்பட்டி :** குழந்தை பிறந்தவுடன் தாயிற்கு ஏற்படும் களைப்பை நீக்க கொடுக்கப்படும் மூலிகைகள் கலந்த கருப்பட்டி.

**காராட்டு :** நாய், பூனை ஆகியவற்றின் புணர்ச்சி. 'நாய் எங்கியோ காராட்டுக்குப் போய்ட்டு வருது.'

**காராட்டுக்காலொ :** நாய், பூனை ஆகியவற்றின் புணர்ச்சிக் காலம். 'காராட்டுக்காலொ வந்துட்டா நாய்க ரவுசு தாங்க முடியாது.'

**காராட்டுப்பூனை :** புணர்ச்சிக்காக இடம் மாறும் பூனை. 'இது காராட்டுப் பூனையோட்ட இருக்குது.'

**காரிமாடு :** கரிய நிறமுள்ள மாடு. 'அந்தக்காரிய புடிச்சுக்கட்டு.'

**காரியக்காரெ :** தன்னுடைய செயலை முடிக்க பாடுபடுபவன். 'ஆளு பயங்கரமான காரியக்காரம்பா.'

***காரவாசலு :*** *சிமெண்ட் பூசப்பட்ட வாசல். 'காரவாசலுக்கு சாணித் தொளி போட்டுடு.'*

***கார வூடு :*** *சிமெண்ட் பூசப்பட்ட வீடு. 'அந்தக்கார வூட்டுலதெ குடி இருக்கறாங்க.'*

***காரீத்தெ :*** *காரியத்தை. 'இவுங்கிட்டெ எந்தக் காரீத்தெ சொன்னாலு கச்சிதமா முடிச்சுருவெ.'*

***கால்கவுறு :*** *மரம் ஏறும்போது இரண்டு கால்களை இணைத்துக் கட்டும் கயிறு. 'கால்கவுத்த நல்லா இறுக்கிக்க.'*

***கால்செராயி :*** *பேண்ட். 'கால் செராயி மாட்டிட்டு எங்கியோ கெளம்பீட்டெ.'*

***கால்தாரெ :*** *கால் சுவடு. 'இங்கெ யாரோ நடந்துபோனெ கால்தாரெ இருக்குது பாரு.'*

***கால்மிதி :*** *காலடிச்சுவடு. காலை துடைக்க வாசற்படியில் இருக்கும் கோணி. கால்மிதியில இருக்குற மண்ணெ தட்டியுடு.*

***காலு :*** *கால். மரத்தாலான குச்சி. 'காலு நட்டு பந்தலு போடோணு.'*

***காவிக்கல்லு :*** *காவி நிற மண் உருண்டை. 'மாட்டுக்கொம்புக்கு பூச காவிக்கல்லு வாங்கியா.'*

***காலேசு மாடு :*** *உயர்ரக கலப்பினமாடுகள். 'காலேசு மாட்டுக்கு வெய்யக்கண்டா செலெ புடுச்சிக்கு.'*

***காவு குடுக்கறது :*** *பலி கொடுத்தல். 'சாமிக்கி கெடாயி காவு குடுக்கோனு.'*

***காவெட்டு :*** *பழுக்கத் தொடங்கும் போது காயாக இருக்கும் பழ வகைகள். 'ஒரே காவெட்ட இருக்கு.'*

***காளங்கன்னு :*** *மாடு வகையில் ஆண்கன்று. 'இந்ததடவெ கெடேரி காளங்கன்னு போட்ருக்குது.'*

***கானாக்கோழி :*** *தாழம்பூ செடியின் அடியில் மறைந்து வாழும் கோழி.*

***கானாப்பொணொ :*** *உருத் தெரியாமல் அழித்தல். 'உன்னக் கானாப் பொணொமா வெட்டிப் போட்ருவெ.'*

## கி

***கிச்சத்துலெ :*** *கக்கத்தில். 'கிச்சத்துலெ என்னத்தெ இடுக்கிகிட்டு போறெ.'*

***கிட்டெ :*** *அருகில். 'கிட்டெ தான இருக்குது நடந்து போ.'*

***கிட்டக்கெ :*** *காண்க. கிட்டெ.*

***கிட்டத்தாலெ :*** *காண்க. கிட்டெ.*

***கிட்டி :*** *தேங்காய் உரிக்கப் பயன் படும் கருவி. 'கிட்டியெ எடுத்து மட்டையுரி.'*

***கிடுக்கிட்டி :*** *ஒல்லியான. 'அவங் கெடக்கறாங் கிடுக்கிட்டி.'*

***கிடுகிடுப்பான் :*** *நிலநடுக்கம். வெளிநாட்டுல கிடுகிடுப்பாம் வந்து நெறய பேரு செத்துப் போயிட்டாங்களாமா.'*

**கிடுகு :** தென்னங்கீற்று. 'கிடுகு இருந்தா எடுத்தா பின்னலா.'

**கிண்ணி :** மேலே அகன்றும் கீழே குவிந்தும் காணப்படும் வெண்கலப் பாத்திரம். 'கிண்ணிலெ சோத்தப் போடு.'

**கிரமொ :** கஷ்டம். 'இவ்வளவு கிரமொ வந்து நானு பாக்கவேயில்ல.'

**கிராக்கி :** தட்டுப்பாடு. 'திடீர்னு தக்காளிக்கி இவ்ளோ கிராக்கி வரும்னு தெரீலெ.'

**கிருத்தீலு :** கார்த்திகை நட்சத்திரம் வரும் நாள். 'கிருத்தீலுக்கு பழனிக்கி போகோனு.'

**கிரும்பு :** குறும்பு. 'கிரும்பு ஏதாச்சும் பண்ணுன ஒத படுவ ராஸ்கல்.'

**கில்லிதாண்டு :** ஒரு வகை விளை யாட்டு. 'கில்லிதாண்டி வெளையாடலா வா.'

**கிலுக்கை :** குழந்தைகளுக்கு விளை யாட்டு காட்டும் பொருள். 'கிலுக்கையெடுத்து ஆட்டு அப்பதெ பாப்பா அழுகாது.'

**கிளி ஜோசியம் :** பரப்பி வைக்கப்பட்டுள்ள சாமி படங்கள் உள்ள சீட்டுக்கட்டில் ஒரு சீட்டை கிளியை வைத்து எடுக்கச்செய்வது.

**கிறுகிறுன்னு :** மயக்கம் வருவது போல் தலையைச் சுற்றுதல். 'பசிக் கெறக்க கிறுகிறுன்னு வருது.'

## கீ

**கீ காத்து :** கிழக்குத் திசையிலிருந்து அடிக்கும் காற்று. 'கீ காத்தடிக்குது மழ போட்டு தட்ட போவுது.'

## கு

**குக்கு :** உட்கார். 'இங்ஙனெ சித்த குக்கு.'

**குச்சிவள்ளிகெழங்கு :** ஒரு வகை கிழங்கு. 'குச்சிவள்ளிக் கெழங்கு திங்கோனு.'

**குச்சு :** அறுவடை செய்த தீவனத் தட்டைகளை கூம்பு வடிவத்தில் சேர்த்து கட்டி வைத்தல். 'மழ வருமோட்ட இருக்கு தட்ட குச்சு கட்டி வை.'

**குச்சூடு :** ஓலை அல்லது தட்டைகளால் வேயப்பட்ட வீடு. 'குச்சூட்டுல தாங் குடியிருக்கறான்.'

**குஞ்சறது :** கயிற்றை இறுக்கிக் கட்ட அதிக முயற்சி செய்தல். 'நல்லா குஞ்சறது அப்பதெ கவுறு முறுக்கேறு.'

**குட்டக்கலப்பெ :** தேய்ந்து போன குறுகிய கலப்பை. 'குட்டக் கலப்பெ உழவ கெடுக்கும்.' (பழமொழி)

**குட்டிச்செவுரு :** பயன்படுத்த முடியாத இடிந்த நிலையில் உள்ள வீடு. 'கழுத கெட்டா குட்டிச் செவுரு' — பழமொழி.

**குட்டு** : ரகசியம். 'அவங்குட்டு வெளுத்துருச்சு.'

**குட்டய குழப்பு** : கலங்கச்செய்தல். 'அவம்பாரு குட்டய குழப்புற.'

**குட்லி** : குள்ளமானவன். 'குட்லியோட்ட இருந்துகிட்டு என்னா வேலெ செய்யறாம் பாரு.'

**குடிவளவு** : விவசாயம் செய்யக்கூடிய மக்கள் குடும்பத்துடன் வசிக்கும் பகுதி. 'குடிவளவுல அவுங்க வூடு இருக்குது.'

**குடியானவன்** : விவசாயத்தை மட்டுமே முழு மூச்சாக செய்து வருபவன்.

**குடுக்கோனு** : கொடுக்கவேண்டும். 'அவனுக்கு காசு குடுக்கோனு.'

**குடுக்கமுடியலெ** : கொடுக்க முடியவில்லை. 'என்னாலெ குடுக்க முடியலெ.'

**குடுசெ கட்றது** : பருவமடைந்த பெண் சில நாட்கள் தனியாக இருக்க தாய்மாமன் பச்சை ஓலையால் கட்டும் குடிசை. 'பொண்ணுக்கு தாய்மாமந்தெ குடுசெகட்டோணு.'

**குடுத்தாச்சு** : கொடுத்தாகி விட்டது. 'அவிகளுக்கு குடுத்தாச்சு பாக்கியில்லயே.'

**குடுத்தர்றே:** கொடுத்து விடுகிறேன். 'நாங்குடுத்தர்றே செரியா.'

**குடுத்தரோனு** : கொடுத்துவிட வேண்டும். 'அவனுக்கு சேர வேண்டிதெ குடுத்தரோனு.'

**குடுத்தவியெ** : கொடுத்தவர்கள். 'குடுத்தவியெ அவிக.'

**குடுத்துப்போடு** : கொடுத்துவிடு. 'உங்கிட்டெ இருக்கறதெ குடுத்துப்போடு.'

**குடுப்பானுங்களா** : கொடுப்பார்களா. 'நாம் போயிக் கேட்டா குடுப்பானுங்களா.'

**குடெமெ** : குடுமி. 'குடமெய போட்டுகிட்டு எங்கியோ கெளம்பீட்டெ.'

**குண்டொஎறங்கறது** : காண்க. பூமித்திக்கிறது.

**குத்தலு** : கிணற்றில் நீர்வடியும் பகுதி. 'குத்தல்ல பாசி படர்ந்துருக்கு.'

**குத்தவெ** : குத்தகை. 'காடு குத்தவெக்கி ஓட்டிகிட்டு இருக்கறோ.'

**குத்தொ** : குற்றம். 'குத்தொங் கண்டுபுடிக்கிறதே இவனுக்கு வேலயாப் போச்சு.'

**குத்தேரி** : முறையில்லாமல் தீவனப் பயிர்களை போடுதல். 'பயிருகள குத்தேரி போட்டு வெச்சுருக்குது.'

**குத்திக்காட்டு** : ஒருவர் சொன்னதை திரும்ப அவருக்கே கூறுவது. 'என்ன குத்திக் காட்றியா.'

**குத்தீட்டி :** வேட்டையாடும்போது மிருகங்களை குத்துவதற்குப் பயன் படும் முனையில் கூர்மையாக உள்ள ஆயுதம். 'குத்தீட்டில குத்து.'

**குத்து :** ஒரு கைப் பிடி அளவு. 'ஒரு குத்து அரிசி அள்ளிட்டு வா.'

**குத்துக்கல்லு :** வெளியில் சிறிதளவு நீட்டிக் கொண்டு இருக்கும் வகையில் மண்ணில் நடப்பட்ட கல். 'சித்தெ குத்துக்கல்லு மேலெ உக்காரு.'



குத்துக்கல்லு

**குத்துச்சரொ :** வீட்டுக்கூரை முகட்டை யும் விட்டத்தையும் இணைக்கும் மரத்தாலான கட்டை. 'குத்துச் சரொத்துல பாரு ஒட்றெ நெறஞ்சி கெடக்குது.'

**குத்துச்செடி :** உயரமாக வளராமல் புதராக இருக்கும் செடி. 'குத்துச் செடியில பாம்பு இருக்குது.'

**குத்துமதிப்பா :** தோராயமாக. 'ஒரு குத்து மதிப்பாச் சொல்லு.'

**குத்துளி :** அகலம் குறைந்த கூர்மையான மரம் செதுக்கும் உளி. 'குத்துளிய எடுத்தா மரத்த சீவலாம்.'



குத்துளி

**குதம்பெ :** தேங்காய்க்கு மேல் உள்ள மட்டை. 'குதம்பெய உறிச்சி எடு.'

**குதிரு :** சோளம் போன்றவற்றை போட்டு வைக்கும் இடம். 'குதிருக் குள்ளெ பாரு சோளமெல்லா போட்டு வெச்சிருக்குது.'

**குதிரவால்சடெ :** பெண்கள் தலையில் மடித்தாற்போல் போடும் கொண்டை. 'குதிரவால்சடெ போட்டு கிட்டு போறா பாரு.'

**குந்தாணி :** நெல்லில் இருக்கும் உமியை நீக்கி அரிசியாக்கப் பயன்படும் மரத்தாலான உரல். 'குந்தாணி இருந்தா கொஞ்சங்குடு நெல்லு குத்தணு.'

**குந்து :** '1.உட்கார். 'இங்ஙன குந்து.' கதவில் மாட்டப்படும் குமிழ். 'கதவுல குந்தெ நல்லா மாட்டியுடு.'

**குப்பமண்ணு :** தொழு உரம். 'குப்ப மண்ணெ அள்ளிட்டுப் போய் காட்டுலெ போடோனு.'

**குப்பாலு :** அடித்தல். 'ரெண்டு குப்பாலு குடுத்தா குசும்பு அடங்கிரு.'

**குப்பாயம் :** 60 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் அணியும் சட்டை. 'அந்தப் பாட்டீமா பாரு குப்பாயம் போட்ருக்குது.'

**குப்பாரிகொட்டல் :** கொங்கு சடங்குளில் ஒன்று.

**குப்பி :** சிறிய டப்பி. 'குப்பிலெ போட்டு அடச்சி வெச்சிருக்குது.'

**குபுகுபு :** வேகமாகவும் மிகுதியாகவும். 'தண்ணி பாரு குபுகுபுன்னு வருது.'

**கும்பொ தாளிக்கறது :** திருவிழாக் காலங்களில் சாமிக்கு கரகம் வைத்தல். 'கோயில்ல கும்பொந் தாளிக்கிறாங்க.'

**கும்பொ :** வண்டி ஆரக்கால்கள் இணையும் மையப்பகுதி. 'கும்பந்தேஞ்சு போச்சு மாத்தோணும்.'



கும்பம்

**கும்பலடிக்குது :** சோறு, பால் தீய்ந்து விடுவதால் வரும் வாசம். 'சோறு கும்பலடிக்குதோட்ட இருக்குது அடுப்புலெ இருந்து எறக்கி வெய்யி.'

**கும்பலா :** கூட்டமாக. 'அங்கென்ன ஒரே கும்பலா இருக்குது.'

**கும்பக்கட்டெ :** காண்க. கும்பொ.

**கும்மிருட்டு :** அதிகமான இருள். 'கும்மிருட்டுல எங்க போற.'

**கும்மு :** துணியை இரண்டு கைகளாலும் கசக்குதல். 'நல்லா கும்மு அப்பதா துணில அழுக்குப் போகும்.'

**குமியா :** ஒன்றாக குவிந்தது. 'கல்லக்காயெ ஒரே குமியா போட்டு வெய்யி.'

**குமுஞ்சு :** குனிந்து. 'குமுஞ்சு நிமுந்து வேலெ செஞ்சாத்தானொ ஆகு.'

**குமுனி :** குன்றிமணி. 'குமுனியபொறுக்கி வெளையாண்ட.'

**குய்யோ முறையோ :** உரத்த குரலில் சத்தமிடல். 'குய்யோ முறையோனு நானு கத்திகிட்டு இருக்க நீ பாட்டுல மெதுவா வர்ற.'

**குரம்பெ :** தேங்காய் மற்றும் நுங்கின் பிஞ்சு. 'தோப்புல குரம்பெயா உழுந்து கெடக்குது.'

**குருட்டாம் போக்குலெ :** முன் யோசனை இல்லாமல். 'குருட்டாம்போக்குலெ பதில் சொல்லாத.'

**குருட்டுப்பாடொ :** அர்த்தம் புரியாமல் படிப்பது. 'குருட்டுப் பாடம் பண்ணாத படிச்சது மறந்து போகும்.'

**குருத்தோலெ :** பனை, தெனை மரங்களில் உள்ள விரியாத ஓலை. 'மடலோலயெப் பாத்து குருத்தோலெ சிரிச்சுதாம்.'— (பழமொழி)

**குலுமை :** படி வைத்துக் கட்டி அதன் மேல் ஏறி தானியத்தை அந்த அறைக்குள் கொட்டிவிடுவர். அறையின் கீழ்ப்பக்கம் சிறிய துளையிருக்கும். அந்தத் துளை வழியாக தானியத்தை வெளியே எடுத்துக் கொள்வர்.

**குழிதாழி :** மாடுகளுக்கு கழிநீர் தண்ணீர் ஊற்றி வைக்க பயன்படும் தொட்டி. 'குழிதாழில தவுட்ட போடு.'

**குழிமேட்லெ :** பிணத்தை புதைத்த குழியின் மேற்பகுதி. 'குழிமேட்லெ பாலு ஊத்தப் போறாங்கெ.'

**குழிவயிலு :** நீர் விரைந்து ஓடும் வகையில் பள்ளமாக உள்ள வயில். 'குழிவயில்லெ பாரு தண்ணி நெறஞ்சி நிக்குது.'

**குளிப்பாட்றது :** இறப்பு ஒரு சில நாட்களில் நடைபெறும் என்று உறுதியாகும்போது அவர்களை தலைக்கு எண்ணெய் தேய்த்து மிகசிறப்பான முறையில் குளிப் பாட்டுவர். வயதின் காரணமாக குளிப்பாட்டும்போதே இறப்பதும் நடக்கும். அல்லது ஓரிருநாளில் மரணம் சம்பவிக்கும்.

**குளியூட்டு சீர் :** குழந்தை பிறந்த 9வது நாள் நடத்தப்படும் சீர்.

**குளுந்தண்ணி :** குளிர்ந்த நீர். 'குளுந்தண்ணியெ குடிக்காதெ சளி புடுச்சிக்கு.'

**குளுமெ :** குளிர்ச்சி. 'இங்ஙனெ ஒரே குளுமெயா இருக்குது.'

**குளுவெ :** சிறிய மாத்திரை. 'நிறைய குளுவெய தின்னும் தூக்கமே வரல.'

**குறிச்சி :** பிரம்பால் செய்த நாற்காலி. 'குறிச்சில போய் உட்காரு.'

**குறுப்பு :** தங்களுடைய ஜாதகத்தை சிறிய வடிவில் வைத்துக் கொள்ளுதல். 'ரவி கம்ப்யூட்டருல போயி ஜாதகக் குறுப்பு ஒன்னு எழுதோனு.'

**குறுக்காட்டு :** வழிமறித்தல். 'அவன குறுக்காட்டு பணங் குடுக்காம போறான்.'

**குறுக்காலெ :** இடையில். 'குறுக்காலெ ஓழவு ஓட்டியுடோனு.'

**குறுக்குத்தடொ :** விரைவில் சென்று அடையும் வழி. 'குறுக்குத் தடத்துல போனா காட்டுக்கு சீக்கிரம் போய்ரலா.'

**குறும்பாடு :** விவசாயத்தில் ஏற்படும் சிரமம்.

**குறும்பி :** காதினுள் இருக்கும் அழுக்கு. 'காதுக்குள்ளெ இவ்வளவு குறும்பி இருக்குது.'

**குனுக்கு :** காதில் அணியும் கல் வைக்காத நகை. 'குனுக்கு போட்டுக் கிட்டு சுத்தறா பாரு.'

## கூ

**கூகெ :** பருப்பில்லாமல் வெறும் தண்ணீர் மட்டும் இருக்கும் தேங்காய். 'எல்லாக் காயும் கூகெயா இருக்குது.'

**கூச்சொ** : வெட்கம். 'புதுப்பொண்ணு ரொம்பொ கூச்சப்படுது.'

**கூசி** : பொங்கல் வைக்கப்பயன்படும் மிகப்பெரிய பாணை.

**கூசொ** : வீட்டின் நடுவில் வைக்கப்பட்டிருக்கும் மரத்தூண். 'கூசொத்தெப் புடிச்சு தொங்காதெ.'

**கூட்டாஞ்சோறு** : காண்க. அரிசிபருப்புஞ்சோறு.

**கூட்டியா** : அழைத்து வா. 'அவனக் கூட்டியா.'

**கூட்டியாறெ** : அழைத்து வருகிறேன். 'நாம் போயி அவனெக் கூட்டியாறெ.'

**கூட்டுச்சாறு** : அனைத்து வகையான காய்கறிகளைப் போட்டு வைக்கும் குழம்பு. பருப்பை அரைத்து வைக்கும் குழம்பு. 'எங்கூட்லெ கூட்டுச்சாறு வெச்சிருக்கறொ.'

**கூட்டுவண்டி** : கூண்டு கட்டப்பட்ட பயண வண்டி. 'கூட்டு வண்டில டவுனுக்கு போனொ.'

**கூட்டுவாரு** : செருப்பின் மேற்புறத் தோல். 'கூட்டுவாரு செருப்பு போட்ருக்கறெ.'

**கூட்டொ** : நெரிசல். 'பஸ்ஸுலெ இவ்ளோக் கூட்டொ இருக்குது.'

**கூடக்கதுரு** : அறுவடையின் முதற்பகுதி செய்ய வரும் தொழிலாளிகளுக்கு கூலியாக அறுவடை செய்யும் கதிரை கொடுப்பர். அறுவடை செய்ததில் நன்றாக உள்ள கதிரை எடுத்து கூடையில் நிறை தட்டாமல் மன மகிழ்ச்சியுடன் கொடுப்பர்.

**கூடக்குறைய** : ஏறத்தாழ. 'கூடக்குறைய நாஞ் சொல்றது கரெக்டா இருந்துது.'

**கூடப்போட்டுட்டரன்** : தொலைத்து விடுதல்.

**கூடமாடெ** : துணையாக. 'ஒருத்தனே சிரமப்படாத கூடமாடெ ஒரு ஆளெ வெச்சுக்கெ.'

**கூடாரொ** : சிறு வீடு வடிவ அமைப்பு. 'கூடாரொத்துக்குள்ளெ போய் பாரு'



கூடாரம்

**கூத்தான்** : கிராமியக் கூத்துகளில் கூத்து ஆடுபவர்.

**கூதலு** : குளிர்.

**கூப்பன்கடெ** : நியாயவிலைக்கடை. 'இன்னிக்கி கூப்பன் கடயில சீமெண்ண ஊத்தறாங்கொ.'

**கூப்பாடு** : சத்தம்போடுதல். 'கூப்பாடு போடாம இருக்கமாட்டியா.'

**கூப்புடே** : கூப்பிடு.

**கூமாச்சியா :** கூர்மையாக. 'பென்சில இவ்ளோ கூமாச்சியாவா சீவறது, ஒடிஞ்சிபோச்சி பாரு.'

**கூமுட்டெ :** முட்டையில் ஒன்றும் இல்லாத நிலை. திட்டும் வார்த்தை. 'சுத்த கூமுட்டெயா இருக்கியே.'

**கூரத்தண்ணி :** மழைபெய்தவுடன் ஓட்டிலிருந்து விழும் தண்ணீர். 'கூரத்தண்ணி உழுகற அளவுக்கு எட என்றது இருக்குது.'

**கூலிகாட்டி :** ஆங்கிலேயர்களை பல்லக்கில் வைத்து தூக்கிச் செல்லும் கொத்தடிமைகள்.

**கூலித்தவசொ :** செய்த வேலைக்கு கூலியாக கொடுக்கும் தானியம். 'கூலித்தவசொ நாலு வள்ள நெல்லு குடுத்தாங்க.'

**கூலிப்படி :** நிலத்தில் வேலை செய்பவருக்கு தானியம் அள்ளிக் கொடுக்க பயன்படும் படி.

**கூலிப்பணொ :** வேலை செய்வதற்கு கூலியாக கொடுக்கும் பணம். 'கொத்துக்காரங்கிட்ட கூலிப் பணொ இருக்கு.'

**கூலி வள்ளொ :** நிலத்தில் வேலை செய்பவருக்கு தவசம் அள்ளிக் கொடுக்க பயன்படும் வள்ளம்.

**கூளையெ :** காண்க.குட்லி.

**கூறுகெட்டவெ :** அறிவில்லாதவன். 'எங்கியோ சுத்தொ கூறுகெட்டவனா இருக்கே.'

## கெ

**கெடக்குது போ :** கிடக்கட்டும் போ. 'கெடக்குதுபோன்னு போறாம் பாரு.'

**கெடங்கடான்னு :** கிடக்கட்டும் என்று.

**கெடங்கு :** வெற்றிலைக் கொடிக்கால் நடும் இட அளவு. 'வெத்தலெ பத்து கெடங்கு போடனும்.'

**கெடச்சுதா :** கிடைத்து விட்டதா. 'காணாமப் போனெ பணங் கெடச்சுதா.'

**கெடெ :** ஒரே இடத்தில் ஒரு பொருள்ள அதிக நாட்கள் போட்டு வைத்தல். 'ஒரே கெடெயில இத்தன நாளா கெடக்குது.'

**கெடெதண்ணி :** ஒரே இடத்தில் வெகுநாளாக இருக்கும் தண்ணீர். 'கெடதண்ணிய குடிச்சா சளி புடிச்சுக்கும்.'

**கெடெப்போகுது :** கிணற்றில் நீர் வழிந்து செல்லுதல். 'மழபேஞ்சி கெணுத்துல தண்ணி கெடப்போகுது.'

**கெடாயி :** ஆடு வகையில் ஆண். 'கெடாய்க்குட்டி அடிச்சுக் கொழம்பு வெய்யி.'

**கெடேரி :** பசு. 'மாடு இந்த தடவ கெடெரி கன்னு போட்டுருக்குது.'

**கெடுவுத்தண்ணி :** விவசாயத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட நாளில் பயன்படுத்தும் நீர்.

**கெணுத்துமேடு** : கிணற்றில் ஏற்றம் வைக்கப்பட்டுள்ள மேட்டுப் பகுதி. 'கெணுத்து மேட்டுல வாளி இருக்கு பாரு.'

**கெத்து** : தலைக்கணம். 'கெத்து புடிச்சு திரியராம் பாரு.'

**கெதியில்லெ** : வழியில்லை. (பிடிப்பில்லை). 'உன்ன வுட்டா வேறெகெதியில்லெ.'

**கெரகணொ** : கிரகணம். உனுக்கு கெரகணொ புடிச்சி ஆட்டுது.'

**கெராணோ** : காண்க. கெரகணொ.

**கெரகொ புடுச்சிருச்சு** : காண்க. கெரகணொ.

**கெரமிச்சு** : கழித்து. 'இப்பதெ கடையெ தெறந்தொ சித்தநேரொங் கெரமிச்சு வாங்க.'

**கெராக்கி** : 'அவனுக்கென்ன அவ்ளோ கெராக்கி.'

**கெழ்டு** : வயதானவர்கள். 'கெழ்டு ஒரு கெடயிலெ அடங்கி இருக்க மாட்டீங்குது.'

**கெழக்காலெ** : கிழக்குத் திசையில். 'கெழக்காலெ பாரு தண்ணி நெறஞ்சு நிக்குது.'

**கெழக்குமின்னா** : கிழக்கு திசை நோக்கி. 'கெழக்குமின்னா பாரு.'

**கெழகோட்டுலெ:** காண்க. கெழக்காலெ.

**கெழபொறொ:** காண்க. கெழக்காலெ.

**கெழமெபுடிக்கிறது** : புரட்டாசி மாதம் ஒவ்வொரு சனிக்கிழமையும் விரத மிருந்து கடைசி சனியன்று விரத்தை முடித்துக் கொள்வது. 'நானு கெழமெபுடிக்கிறதுனால ஒரு நேரந்தெ சாப்புடுவெ.'

**கெளப்போனு** : கிளம்ப ஆயத்தமாக்க வேண்டும். 'எல்லாரையு சீக்கிர கெளப்போனு.'

**கெளம்புறெ** : கிளம்புகிறேன். 'நாங் கெளம்புறெ எனுக்கு நேரொ ஆயிருச்சி.'

**கெளாசு** : தம்ளர். 'காப்பிய கெளாசுல ஊத்திக் குடி.'

**கெனா** : கனவு. 'ராத்திரி கெட்ட கெனா ஒண்ணு கண்ட.'

**கெஸ்எடுக்குது** : மூச்சு வாங்குதல். 'வேகமா ஓடி வந்தாங்கிட்டி கெஸ் எடுக்குது.'

**கெஜம்** : சேலை அளவு. 'எட்டு கெஜ சீலை எடுக்கோணு.'

**கெஜக்குழி** : ஆழமான குழி. 'கெஜக்குழிக்குள்ள போயி காலெ உட்டுட்டாம் பாரு.'

## கே

**கேக்காமெ** : கேட்காமல். 'எங்கிட்டெ கேக்காமெ எதையிஞ் செய்யாதெ.'

**கேக்கிட்டா:** கேட்கிறேன். 'நாங் கேக்கிட்டா.'

***கேக்கிலீன்னா*** : கேட்கவில்லை என்றால். *'நாஞ் சொல்லி கேக்கலீன்னா என்ன பன்றது.'*

***கேக்கோனு*** : கேட்க வேண்டும். *'என்னானு கேக்கோனு இல்லீன்னா சங்கொ வந்துரு.'*

***கேட்டுட்டீங்களா*** : கேட்டு விட்டீர்களா. *'நீங்க கேட்டுட்டீங்களா இல்ல நாங் கேக்கவா.'*

***கேத காரியம்*** : இறப்பு நடப்பதை தெரிவித்தல். *'கேத காரியமொன்னு ஆயிப் போச்சு.'*

***கேப்பாங்கெ*** : கேட்பார்கள். *'நீங்க சொன்னாத்தெ கேப்பாங்கெ.'*

***கேப்பாரு இல்லாமை*** : ஆதரவு இல்லாதிருத்தல். *'கேப்பாரு இல்லாம இருக்கறெ.'*

***கேப்மாரி*** : மாற்றி மாற்றி பேசுபவன். *'எங்கியோ சுத்த கேப்மாரியா இருக்குறா.'*

***கேருது*** : கோழி முட்டையிடுவதற்கு முன் கத்துதல். *'கோழி கேருது முட்டெ வெக்கிம்போலெ தெரீது.'*

***கேவகொ*** : நினைவு. *'ரொம்ப நாளாச்சா கேவகொமே வருலெ.'*

***கேவலொ*** : அவமானம். *'ரொம்ப கேவலொப்படுத்தாத.'*

***கேளை ஆடு*** : மலைப்பகுதியில் உள்ள ஒரு வகை ஆடு. *'கேளை ஆட்ட புடி.'*

***கேனச்சி*** : எதையும் ஒழுங்காகச் செய்யத் தெரியாத பெண். *'அவளே ஒரு கேனச்சி.'*

***கேனயெ*** : எதையும் ஒழுங்காகச் செய்யத் தெரியாதவன். *'அவஞ் சுத்தக் கேனயெ.'*

## கை

***கைகாரி*** : கெட்டிக்காரபெண்.

***கைகோர்வெ*** : மணமகனும் மணமகளின் சகோதரனும் தட்டில் குவிக்கப்பட்ட பச்சரிசியில் கைகோர்த்து உ பலப்படுத்துதல்.

***கைச்சாளை*** : வீட்டை ஒட்டியிருக்கும் சிறு சமையல் அறை. *'கைச்சாளைக் குள்ள பாரு சோத்துச் சட்டி இருக்கு.'*

***கைப்புள்ள:*** பிறந்து சிறிது நாட்களே ஆன குழந்தை. *'கைப்புள்ளயத் தூக்காத கீழ போட்ருவ.'*

***கைமட்டெ*** : தென்னை மர மட்டை. *'கைமட்டையெ இழுத்துக் கீழ போடு இல்லீனா யாராவது மேலெ உளுந்துரு.'*

***கைமாத்து*** : கடன். *'பணம் ஒரு அம்பது ரூவா கைமாத்தா குடு.'*

***கையிலெஆவுலெ*** : கைக்கு கிடைக்க வில்லை. *'பணங் கையிலெ ஆவுலெ.'*

***கையுடுற நேரம்*** : வேலை விட்டு திரும்பும் நேரம். *'கையுடுற நேரமாச்சு இன்னு கொத்துக்காரம்மாவக் கானொ.'*

**கைவெச்சுட்டானுக** : அடித்துக் கொண்டார்கள். 'எம் மேலெயே கைவெச்சுட்டானுகன்னா பாத்துக்கோ.'

## கொ

**கொக்காணி** : ஏதாவது ஒன்றை சாப்பிடும் போது அடுத்தவர்களுக்கு கொடுக்காமல் விரலை மடக்கி வளைத்துக் காட்டுதல். 'எனுக்கு கொக்காணி காட்டிகிட்டு அவம் மட்டுந் திங்கறாம் பாரு.'

**கொக்கி** : மேலும் கீழும் வளைந்து காணப்படும் நீண்ட இரும்புக்கம்பி. 'கொழந்தயெ தொட்டக் கொக்கிலெ போடு.'

**கொக்கிச்சள்ளெ** : காண்க. சள்ளெக் குச்சி.

**கொங்க காளெ** : காங்கேயம் காளை. 'கொங்க காளெ ரெண்டு வாங்கி உடோனு.'

**கொங்கணிக்கூத்து** : கொங்கு நாட்டில் நடைபெறும் கிராமியக் கூத்துகள். 'கொங்கணிக் கூத்துப் போட்ருக்காங்கெ வா போயி பாக்கலா.'

**கொங்காடெ** : மழையில் நனையாமல் இருக்க சணல் பையை உட்புறம் நுழைத்து கூர்மையாக செய்து தலைக்கு அணிந்து கொள்ளுதல். 'மழ வருது தலக்கி கொங்காடெ போட்டுகிட்டு போ.'



கொங்காடை

**கொசகொசன்னு** : பிசுபிசுவென்று. 'இப்பிடி கொச கொசன்னு எழுதீனீயின்னா எப்பிடி தெரியி.'

**கொசவர்** : குயவர். 'கொசவங்கிட்ட மண்பானையொன்னு செய்யச் சொல்லோணு.'

**கொசலொ** : ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் கோள் சொல்லுதல். 'அவந்தாங் கொசலொமூட்டியிருப்பான்.'

**கொசலக்காரெ** : கோள் சொல்லுபவன். 'அவஞ்செரியான கொசலக்காரெனோட்ட இருக்கற.'

**கொசலொமூட்டி** : காண்க. கொலமூட்டி.

**கொசவனோடு** : குயவர்களால் செய்யப்படும் மண் ஓடு. 'கொசவனோடு நாலு எடுத்துட்டு வரோனு.'

**கொசுவொ** : சேலையின் முன்பகுதி. 'கொசுவொ வெச்சு சேலையக் கட்டு.'

**கொசுரு** : அதிக அளவு சாமான்கள் வாங்கும்போது கடைக்காரரிடம்

ஏதாவது ஒன்று அதிகமாக கேட்பது. 'இத்தன யெண்ண வாங்கிருக்க கொஞ்ச ஏதாவது கொசுரு குடுக்கக்கூடாதா.'

**கொசுகொசுனு** : காண்க. பிசுபிசுன்னு.

**கொஞ்சநஞ்சொ** : அதிகளவு. 'உனக்கு திமிரு கொஞ்சநஞ்சமில்ல.'

**கொஞ்சுண்டு** : காண்க. இம்முட்டூண்டு.

**கொட்டறா** : வாய் அகன்ற பெரிய பாத்திரம். 'கொட்டறா இருந்தா எடுத்தா தண்ணிய ஊத்தி வெக்கலா.'

**கொட்டாப்புளி** : நார் அடிக்கப் பயன்படும் மரத்தாலான பொருள்.

**கொட்டாயி** : திரையரங்கம். 'கொட்டாயிலெ என்னொ படொ போட்ருக்குது.'

**கொட்டு** : விரலை மடக்கி தலையில் கொட்டுதல். 'அவனுக்கு ரெண்டு கொட்டுடு அப்பதே சொன்னபடி கேப்பான்.'

**கொட்டுமொளக்கு** : இசைக் கருவிகளை இசைத்தல். 'கொட்டு மொளக்கு கொட்டிகிட்டு வர்றாங்க என்னொ விசேஷம்னு தெரீலெ.'

**கொட்டெ மரம்** : ஆமணக்கு விதை மரம். 'கொட்டமரத்துல பாரு எவ்ளோ கொட்டமுத்து.'

**கொட்டெமுத்து** : ஆமணக்கு விதை. 'கொட்டெமுத்து மரம்பாரு எவ்ளோ பெருசு.'

**கொட்டெமுத்தெண்ணெ** : ஆமணக்கு விதையினால் அரைக்கப்படும் எண்ணெய். 'கொட்டெ முத்து எண்ணெ யாட்டனும்.'

**கொட்டெ வாங்குதல்** : புளியின் உள் இருக்கும் கொட்டையை எடுத்தல். 'புளிய கொட்டெ வாங்கனும்.'

**கொட்டொ** : காண்க. கைச்சாளை.

**கொட்டொ புடிக்கிறது** : ஆடு, மாடுகளுக்கு மருந்து ஊற்றும் மரத்தலான உருளை. 'மாட்டுக்கு கொட்டம் புடிச்சு மருந்த ஊத்து.'



கொட்டம்

**கொட்றை** : விதைகளை அடுத்த பருவத்திற்குப் பதப்படுத்தி பயன் படுத்த சேர்த்து வைக்கும் பனை அல்லது தெனை ஓலையால் வேயப்பட்ட கிடங்கு.

**கொடங்கு** : சிறு பொந்து. 'அந்தக் கொடங்குல பாம்பு இருக்குது.'

**கொட தூக்கியுடறது** : மாட்டு வண்டியின் நுகத்தில் உட்கார்ந்து கொண்டு சிறுவர் சிறுமியர் விளையாடும் விளையாட்டு.

**கொடவாழை :** ஒரு வகையான நெல். ஐந்து அடி உயரம் வரை வளரும். குடிசை வேய்வதற்கு சிறந்த ரகம்.

**கொடாப்பு :** ஆட்டுக்குட்டிகளை உள்ளே வைத்து கவிழ்த்து வைக்கும் சிறு கூடை. 'கொடாப்புக்குள்ள ஆட்டுக் குட்டியெ கமுத்தி வை.'



கொடாப்பு

**கொடி :** தாலிக்கொடி. 'கல்யாணத்துக்கு ரெண்டு பவுன் கொடி எடுக்கணும்.'

**கொடுக்குத்தேளு :** தேள். 'கொடுக்குத் தேளு கடிச்சு உசுரு போற மாதிரி வலிக்குது.'

**கொடுங்கோலு :** வைக்கோல் உதறிவிட நுனியில் வளைந்த இரும்பு வளையம் பொருத்திய நீள குச்சி. 'கொடுங்கோலு இருந்தா எடுத்தா ரெண்டு வாத ஒடிச்சி ஆட்டுக்குப் போடலா.'

**கொடுப்பினை :** 'இதுக்கெல்லா ஒரு கொடுப்பினை வேணும்.'

**கொடுவாளு :** மரம் வெட்ட உதவும் கருவி. 'கொடுவாளெ எடுத்தா தென்ன மட்டெ வெட்டலா.'

**கொடெ :** குடை. 'மழெ வருது கொடெயெ எடுத்துட்டுப் போ.'

**கொடொ :** குடம். 'கொடொத்த எடுத்துட்டுப் போயி தண்ணி கொண்டா.'

**கொண்டி :** வாசற்கதவில் கதவு மாட்ட அடிக்கப்படும் இரும்பு கம்பி. 'கொண்டியெ நல்லா அடிச்சுடு.'



கொண்டி

**கொத்தாளுக :** கொத்துக்காரர் வசம் இருக்கும் வேலையாட்கள். 'கொத்தாளுக ஒரு பத்துபேரக் கூட்டிட்டு போகோணு.'

**கொத்து :** களைகளை வெட்ட உதவும் கருவி. 'கொத்தெ பட்றீலெ குடுத்து வாய்தார தட்டோணு.'

**கொத்துக்காரரு :** காட்டு வேலைகளுக்கு கூலி ஆட்களை அழைத்துச் செல்பவர். 'நீ என்ன கொத்துக்காரனோட்ட பன்னாட்டு பண்ற.'

***கொதர்*** : வெடித்த தென்னம்பாளையில் குறும்பைக் காய்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் கொத்து.

***கொதிக்குது*** : வெப்பம் அதிகமாகுதல். 'ஒடம்பு என்ன அனலா கொதிக்குது.'

***கொந்தாளொ*** : கிணறு வெட்ட உதவும் ஆயுதம். 'கொந்தாளொ பதொ வெக்கோனு.'

***கொப்பு*** : காளைகளுக்கு பித்தளையால் அணியும் அணிகலன். 'மாட்டுக்கு கொப்பு போட்டுடோனு.'

***கொம்பு*** : 1. மாட்டுக்கொம்பு. 'மாட்டுக்கொம்புக்கு பெயிண்டு அடிச்சுடோனு.' 2. மரக்கிளை : காண்க. வாது.

***கொம்புகட்டி*** : காளைகளுக்கு கொம்பில் கட்டும் கயிறு. 'மாட்டுக்கு கொம்புகட்டி கட்டியுடோனு.'



கொம்புகட்டி

***கொம்பு சீவுதல்*** : கூர்மையாக்குதல். 'அந்தக் காளைக்கு கொம்பு சீவனும்.'

***கொம்பை (கொம்பி)*** : கம்பு போன்ற தானியங்களின் மேற்புறத்தோல். 'கம்புலெ கொம்பியா கெடக்குது ஊதீட்டு தின்னு.'

***கொமட்டுது*** : வாந்தி வருவதற்கு முன் ஒருமாதிரியாக இருத்தல். 'ஒரே கொமட்டலா இருக்குது.'

***கொமரெ*** : குமரன். 'கொமரெனோட்ட வளந்துட்டெ ஆனா ஒருவேலக்கி லாயக்கில்லெ.'

***கொமுரி*** : குமரி. 'கொமுரிகிளுக்கு குசும்பு அதிகமாயிருச்சி.'

***கொரங்குப்பெடல்*** : 1. எதைப் பற்றியும் முழுமையான அறிவு இல்லாதிருத்தல். 2. சிறுவர்கள் சைக்கிள் ஓட்டிப் பழகும்போது முன்பகுதியில் உள்ள முக்கோணத்தில் காலை வைத்து ஓட்டுவது. 'சுத்த குரங்குபெடல்லா இருக்குறெ.'

***கொரடு*** : இரும்பாலான இருபக்கமும் விரிந்த, ஒரு பொருளை இறுக்கிப் பிடிக்க உதவும் கருவி. 'கொரடு எடுத்த தேங்கா மட்டெ உரிக்கலா.'

***கொரத்தனம்*** : ஒன்றும் தெரியாததுபோல் இருத்தல். 'பைய ரொம்பொவு கொரத்தனொ புடிச்சி திரியறெ.'

***கொரவளி*** : குரல்வளை. 'தொண்டை. கொரவளிய புடிச்சு அமுத்திட்டா மூச்சே வாங்க முடியல.'

**கொல்லப்பக்கொ :** வீட்டின் பின்புறம். 'கொல்லப்பக்கொம் பாரு.'

**கொலகபோடறது :** மாட்டுப் பொங்கலன்று பட்டியில் மாட்டுக்கு உணவு ஊட்ட செல்லும்பொழுது சத்தமிடல்.

**கொலகை :** குலவை சத்தமிடல். 'எல்லாருங் கொலகெ போடுங்கொ.'

**கொலதெய்வொ :** குலதெய்வம். 'நேத்து எங்க கொலதெய்வொ கோயிலுக்கு போயிட்டு வந்தொ.'

**கொலபட்டினி :** மிகுந்த பசியுடன் இருத்தல். 'ரெண்டு நாளா கொல பட்டினியா இருக்குற.'

**கொலையறது :** கொஞ்சி குலாவுதல். 'இந்தக் கொலையற வேலயெல்லா எங்கிட்ட வேணா.'

**கொலொ :** குலம். ஒவ்வொரு சாதியினருக்கும் உள்ள உட்பிரிவு. 'நாங்க முழுக்காது கொலொத்துக் காரங்கெ.'

**கொழக்கட்டெபில்லு :** ஒரு வகைப் புல். கொழக்கட்டப் பில்லு புடுங்கியரோனு.

**கொழந்தீகெ :** குழந்தைகள். 'உங்குளுக்கு எத்தெனெ கொழந்தீகெ.'

**கொழுந்தனாரு :** கணவரின் தம்பி. 'உங்க கொழுந்தனாரு எங்க போனாரு.'

**கொழுந்தியா :** கணவரின் தங்கை. 'கொழுந்தியா வூட்டுக்குப் போன.'

**கொழுந்து :** செடியில் தழையும் போது முன்னால் இருக்கும் பகுதி. 'செடி நல்லா கொழுந்து உட்டுருச்சு.'

**கொழுந்தெ :** காண்க. கொழுந்தனாரு.

**கொழுவு:** கலப்பையில் செருகப்பட்டு இருக்கும் கூர்மையான இரும்புப் பட்டை. 'கொழுவு தேஞ்சு போச்சு வெலா நல்லாவே வல்லெ.'

**கொள்ளாது :** பிடிக்காது. 'இத்தன சோத்தப் போட்டு வெச்சிருக்கெ என்ற வவுறு கொள்ளாது.'

**கொள்ளிக்கண் :** பார்வையில் தீ பற்றி எரிதல். 'அவங்கண்ணு கொள்ளிக் கண்ணு.'

**கொள்ளுப்புடி :** கொள்ளால் செய்யப் பட்ட உணவு. (தொக்கு). 'கொள்ளுப் புடி போட்டுச் சாப்புடு.'

**கொள்ளேநாளு :** அதிகநாள். 'இந்த அகராதி தொகுக்க கொள்ளே நாளு ஆகிப்போச்சு.'

**கொள்ளைலெ போனவெ :** திட்டும் வார்த்தை. 'கொள்ளைலெ போனவெ எங்கப் போய்த் தொலஞ்சான்னு தெரிலெ.'

**கொளச்சி :** மண்வெட்டியின் கைப்பிடி நெகிழ்ந்து விடாதபடி இருக்கிப் பிடிக்கும் இரண்டு இரும்பு வளையங்கள்.

**கொளப்படி :** குளறுபடி. குழப்பம். 'எந்த வேலயக் குடுத்தாலு கொளப்படி பண்றீயே.'

***கொளமாத்து :*** *தில்லுமுல்லு. 'உன்ற கொளமாத்து வேலெயெல்லா எனக்குத் தெரியாதாக்கு.'*

***கொளம்முறிக்கறது :*** *மாட்டுப் பொங்கலன்று தோட்டங்களில் வழிபாடு செய்வதற்காக சிறு குளம் அமைப்பர். வழிபாடு முடிந்தபின் இளம் கன்றினை விட்டு அதனை மிதிக்க விடுவர்.*

***கொளாம்பு :*** *மாட்டுக்காலின் அடிப் பகுதியில் இருக்கும் கெட்டியான தோல். இதில் மாடுகளுக்கு லாடம் கட்டுவர். 'மாட்டுக்கு கொளாம்பு செதுக்கி உடணும்.'*

***கொளுஞ்சி :*** *வயல்களுக்கு உரமாகப் பயன்படும் களைச்செடி. 'நாலு வண்டி கொளுஞ்சிய கொண்டாந்து காட்டுக்குப் போடோணு.'*

***கொறெ (கொறவு) :*** *1.குறைந்த. 'இதுமட்டுந்தெ கொறையாப் போச்சு.' 2. தரிசு நிலம் (பயன்படுத்தாத நிலம்).*

***கொறெக்கூடை :*** *தானியங்கள் அள்ளப் பயன்படும் சிறு கூடை. 'கொறக் கூடைய எடுத்தா சோளொ அள்ள.'*

***கொறெச்சலு :*** *குறைச்சல். 'திங்கறதுக்கு மட்டு ஒண்ணு கொறெச்சலு இல்ல.'*

***கொன்னவாயி :*** *திக்குவாய். 'பையெ கொன்னவாயி போலத் தெரீது.'*

***கொன்னிகொன்னி பேசறது :*** *திக்கித் திக்கி பேசுதல். 'கொன்னவாயம்போலத் தெரீது திக்கித் திக்கிப் பேசறதப் பாரு.'*

***கொனெ :*** *முனை. 'கொனெயிலெ நிக்காதெ.'*

***கொனைக்காதெ :*** *சந்தோசத்தில் துள்ளுதல். 'ரொம்பக் கொனைக்காதெ.'*

## கோ

***கோக்கலிப் பகலெ :*** *கொஞ்சம் உயரமாக பொருட்களை வைக்க சுவரில் பொருத்தப்படும் பலகை. 'கோக்கலிப் பகலெ மேல பாரு குண்டாவு இருக்குது.'*

***கோச்செ :*** *சேவல் சண்டையில் தோற்றுவிட்ட சேவலை வெற்றி பெற்ற சேவலின் உரிமையாளர் எடுத்துக் கொள்வார். தோல்வியுற்ற சேவலுக்கு கோச்சை என்று பெயர்.*

***கோச்செக்கறி :*** *தோற்ற சேவலின் கறி. 'கோச்செக் கறி நல்லா இருக்குது.'*

***கோட்டடுப்பு :*** *அடுப்பின் மறுபகுதி. 'கோட்டடுப்புல பாரு வெந்தண்ணி வெச்சுருக்குது.'*

***கோட்டேரு :*** *உழவு முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பும் போது கலப்பையை சாய்த்து ஏரில் கட்டி இழுத்து வருதல். 'கோட்டேரு கட்டிக்கிட்டு வர்றாங்க பாரு.'*

***கோட்டெ :*** *பனை ஓலையில் சிறு கிண்ணம் போல் செய்து கள் குடிக்கப் பயன்படுத்துவது.*

**கோடாலி:** மரம் வெட்டப் பயன்படும் ஆயுதம். 'கோடாலிய எடுத்த இந்த மரத்த வெட்டலா.'



கோடாலி

**கோடி போடுதல் :** இறந்தவர்களுக்கு செய்யும் சடங்கு. 'கோடி போடறவங்க முன்னால வாங்க.'

**கோணெ :** வளைவு. 'தடமென்ன இவ்வளவு கோணெயா இருக்கு.'

**கோணெ மாணெயா :** காண்க. கோணெ.

**கோதும்பி :** மிகுந்த விஷமுடைய பின் புறம் மஞ்சள் நிறமுடைய கருவண்டு. 'கோதும்பி கடிச்சுரப் போவுது. வெசொ அதிகமா இருக்கு.'

**கோந்தாளெ :** கரும்பின் நுனிப்பகுதி. 'ஒரே கோந்தாளெயா இருக்குது.'

**கோந்து :** பசை. 'கோந்த எடுத்து நல்லா ஒட்டியுடு.'

**கோப்பு :** அறிகுறி. சூழ்நிலை. 'இன்னிக்கி மழவர்ற கோப்பு தெரீது.'

**கோம்பச்செவுரு :** வீட்டின் இரு பக்கத்தில் கூம்பு வடிவில் உயரமாக அமைந்துள்ள சுவர். 'கோம்பச் செவுத்துக்கு சுண்ணா அடிச்சியுடோனு.'

**கோமணொ :** கோவணம். 'அந்தக் காலத்துலெ எல்லாருங் கோமணங் கட்டிகிட்டு திரிஞ்சங்கெ.'

**கோமியொ :** மாட்டுச் சிறுநீர். 'மாட்டுக்கோமியொ புடிச்சாந்து வீட்டுக்கு தெளிக்கோணும்.'

**கோயக்கெணறு :** கோயிலில் இருக்கும் கிணறு 'கோயெக்கெணுத்துலெ போயி தண்ணி கொண்டா.'

**கோரி :** மூடுபனி. 'ஒரே கோரி மூட்டமா இருக்குது.'

**கோரப்பாய் :** கோரைப்புல்லினால் செய்யப்படும் பாய். 'கோரப் பாயெ எடுத்து விரிச்சுடு தூங்கலா.'

**கோவக்காரெ :** அதிகமாகக் கோபப் படுபவன். 'அவனொரு கோவக்காரெ அவங்கிட்ட வம்பு பண்ணாத.'

**கோவக்காய் :** கசப்புச் சுவையுடையது. 'வேலியில பாரு கோவக்காயி செடி எப்பிடி படந்துருக்குதுனு.'

**கோவப்பழொ :** வேலியில் படர்ந்திருக்கும் கொடியில் இருக்கும் சிவப்பு நிறப்பழம். 'கோவப்பழொத்த தின்னா கசக்கு.'

**கோவுரொ :** கோபுரம். 'கோயில்லெ கோவுரொம் பாரு எத்தாச்சோடு கட்டியிருக்காங்கனு.'

**கோவொ :** கோபம். 'இவனுக்கென்ன இவ்ளோ கோவொ வருது.'

**கோழயடிக்குது :** மாடு வயிற்றிலிருந்து வெளியேறும் ஒரு வகை திரவம். (பருவம் வந்த அறிகுறி). மாட்டுக்கு 'கோழயடிக்கிது காளெ சேத்த கொண்டு போகோணு.'

**கோழிக் கூண்டு :** கோழிகளை அடைத்து வைக்கும் சிறு அறை. 'கோழிக்கூண்டெ தொறந்து உட்றாதெ.'



கோழிக்கூண்டு

**கோழி கூப்புடரப்பொ :** சேவல் கூவும் நேரம் (அதிகாலை 4 மணி). 'கோழி கூப்புடரப்பொ இருந்து தூக்கமே வர்ல.'

**கோழித்தூக்கொ :** கண்ணை மூடி தூங்காமல் இருத்தல். கோழித் தூக்கொம் போட்டெ.

**கோழி முகூர்த்தம் :** அதிகாலையில் சூரிய உதயத்திற்கு முன் நடைபெறும் திருமண நேரம்.

**கோழை :** மாடு கன்று ஈன்றவுடன் க்ன்றின் மேலே ஒட்டியிருக்கும் ஈரப்பசை. 'மாடு பாரு கோழைய நக்குது.'

**கோளை:** கரும்பை பிழிந்து சர்க்கரை காய்ச்சும்போது வெளிவரும் கழிவு.

**கோணங்கிதங்தனம் :** முட்டாள் தனமான செயல்.

## கௌ

**கௌளி :** இளஞ்சிவப்பு நிற இளநீர். 'தென்னமரத்துலருந்து கௌளியெ புடுங்கிப் போடோனு.'

## ங்

**ங்கப்பெ :** என் அப்பா. 'ங்கொப்ப ஊட்டுலெ இல்லெ.'

**ங்கம்மா :** என் அம்மா. 'ங்கம்மா எங்கியோ போயிருச்சு.'

**ங்கொ :** மரியாதையாக அழைக்கும் சொல். கொங்கு நாட்டை உலகிற்கு உணர்த்தும் பேச்சுவழக்கில் மரியாதைக்குரிய சொல் இது.

**ங்கொக்கா :** உங்கள் அக்கா. 'ங்கொக்கா பள்ளிக்கோடொம் போகுலியா.'

**ங்கொண்ணெ :** உங்கள் அண்ணன். 'ங்கொண்ணனெ நாங் கேட்டென்னு சொல்லு.'

**ங்கொப்பொ :** உங்கள் அப்பா.

**ங்கொம்மா :** உங்கள் அம்மா.

**ங்கொம்மிணி :** உங்கள் தங்கை.

## ச

**சகலப்பாடி:** ஒரே வீட்டில் இருவர் பெண் எடுத்தல். 'அவரு எங்க சகலப்பாடியாக்கு.'

**சகவாசொ :** நட்பு, பழக்க வழக்கம். 'கண்டவங்கிட்டயெல்லா சகவாசொ வெச்சுக்காதெ.'

**சங்கடை :** குழந்தைகளுக்கு பால் ஊட்டும் கிண்ணம். 'சங்கடையிலெ கொழந்தக்கி பாலெ ஊத்து.'

**சட்டு :** கிணறு வெட்டும்போது நீர் இருப்பதை உறுதி செய்யும் மண். 'சட்டு மண்ணு வந்துருச்சு இனி தண்ணி வந்துரும்.'

**சட்டுவொ :** தோசை சுடும்போது திருப்பிப்போட உதவும் நீண்ட கைப்பிடி உள்ள தப்பை. 'சட்டுவொத்த தொடாத சுட்டு வெச்சுரு.'



சங்கடை



சட்டுவம்

**சங்காத்தொ :** உறவு. 'உங்கொ சங்காத்தமே வேண்டானுதானெ நா இங்கெ வந்தெ.'

**சங்காயொ :** நெல்லை பிரித்தெடுக்கும் போது நெல்லும் கூளமும் கலந்து விழும் பாளை. 'நெல்லுல ஒரே சங்காயமா இருக்குது.'

**சங்கு :** கழுத்து. 'சங்க நெரிச்சுப் போடுவ.'

**சட்டமாடு :** இரண்டு, மூன்று நிறங்கள் கலந்திருக்கும் மாடு. 'சட்ட மாட்ட புடிச்சுக் கட்டு.'

**சட்டுனு :** உடனே. 'சட்டுனு வா பஸ் போயிரு.'

**சட்டுவச்சோறு :** கொங்கு சடங்கு.

**சட்டுபுட்டுனு :** காண்க. சட்டுனு.

**சட்டொ :** 1.மரச்சட்டம். 2.சட்டம். 'எங்கிட்டியே சட்டொ விட்டொ சேறியா நீ.'

**சட்டொவிட்டொபேசறெ :** தான் சொல்வதுதான் சரி என்று பேசுதல்..

**சடஞ்சுக்குறது :** சங்கடப்பட்டுக் கொள்ளுதல். 'எது சொன்னாலு சடஞ்சுக்குறது.'

**சடஞ்சுபோச்சு :** களைப்பாகுதல். 'வேல செஞ்சு சடஞ்சு போச்சு.'

**சடவு :** சலிப்பு. 'வேல செஞ்சு செஞ்சு ஒரே சடவா இருக்குது.'

**சடாமினி :** காவல்தெய்வம்.

**சடார்னு :** உடனடியாக. 'சடார்னு கம்பத்துல தீப்பிடிச்சுருச்சு.'

**சடிச்சடினு :** தொடர்ந்து. 'மழ சடிச்சடினு ஓயாம பேஞ்சிகிட்டே இருக்குது.'

**சண்டாளி :** திட்டுச்சொல். 'அடி சண்டாளி பாவி இப்பிடி பண்ணிட்டியே.'

**சணக்கிட்டெ :** பலமாக அடித்தல். 'அடி சணக்கிப் போட்டாங்கெ.'

**சத்தொ :** சப்தம். 'சத்தொம் போடாமெ கம்முனு இருங்கெ.'

**சந்திநேரம் :** காண்க. ஒருசந்தி.

**சப்பட்டக்கல் :** பட்டை வடிவிலான கல். 'சப்பட்டக் கல்லா தூக்கியா இங்ஙனெ போட்டு உக்காரலா.'

**சப்பல் :** நீர் செல்லும் பாதையில் அடைத்துள்ள குப்பை. 'வாய்க்கால்ல ஒரே சப்பலா அடச்சிருக்கு.'

**சப்பாபகலெ :** குறிகள் பொறித்து காவலுக்கு வைக்கப்படும் பலகை. 'சப்பா பகலெ சாமிக்கு செஞ்சு வைக்கணும்.'

**சப்பாரொ :** கோயில் திருவிழாவின் போது சாமியை ஊர்வலமாக எடுத்து வருவது. 'சாமி சப்பாரொ ஊருக்குள்ள வெளையாடுது.'

**சப்பைக்கட்டு :** வலிந்து கூறும் காரணம். 'செய்யறதையுஞ் செஞ்சுட்டு சப்பக்கட்டு கட்டாதெ.'

**சம்பலு :** அதிகமாக இருத்தல். 1. 'உங்கூட்ல என்னோ ஒரே சம்பலா இருக்குது.' 2. 'வெங்காயொ வெலெ ரொம்பொ சம்பலாப் போச்சு.'

**சம்பா :** புளியங்கொட்டைகளை இரண்டாக உடைத்து பெண்கள் விளையாடும் விளையாட்டு.

**சம்பு :** நீர் ஓடும் பகுதியில் வளரும் ஒருவகை கோரைப்புல். 'ஊடு மேய சம்பு புல்லு புடுங்கியாறணு.'

**சம்மணோ :** இரண்டு கால்களையும் மடக்கி உட்காருதல். 'சம்மணோம் போட்டு உக்காரு.'

**சமஞ்சிட்டா :** ருதுவாதல். 'எம் பொண்ணு சமஞ்சிட்டா.'

**சமாச்சாரோ :** விசயம். 'என்ன சமாச்சாரோ இவ்ளோ தூரொ வந்துருக்கீங்கெ.'

**சமுக்காளம் :** தடிமனான போர்வை. 'குளுருக்கு சமுக்காளத்த எடுத்துப் போத்திக்கெ.'

**சயனொ :** சகுனம். 'சயனொம் பாக்கறதே இவுனுக்கு வேலயாப் போச்சு.'

**சரடு :** சணல் கயிறு, தாலி. சரட்டெ எடுத்தாந்து மூட்டெயெ கட்டு. 'சரடு பழசாயிருச்சு புதுசு மாத்தோனு.'

**சராங்கமா :** எந்தவித பதட்டமும் இன்றி. 'சராங்கமா அவம்பாட்டுலெ வர்ராம் போறெ என்னன்னு தெரீலெ.'

**சருகு :** மெல்லிய. 'இந்தத்துணி என்னொ சருகோட்டோ இருக்குது.'

**சல்லி :** பழங்கால காசு. 'சல்லிக் காசுக்கு பிரயோஜனமில்ல.'

**சல்லிக்காடு :** சிறுசிறு கற்கள் நிறைந்த காடு. 'சல்லிக்காடா இருக்குது மண்ணவே காணொ.'

**சல்லீங்குடுகுடு :** கபடி விளையாடும் போது பாடுவது.

**சல்லிமாடு :** நேர்த்திக்கடனுக்காக விடப்படும் மாடு.

**சல்லிவாசலு :** சிறுகற்களால் அமைக்கப்பட்ட வாசல்.

**சலகை :** நெல் அளவைக் குறிக்கும் ஒருசொல்.

**சலகைகுத்தல் :** பொன்னர் சங்கர் கதையில் பன்றியை குத்தும் நிகழ்சிச நடைபெறும். அதற்கு சலகைகுத்தல் என்று பெயர்.

**சலகெருது :** பொங்கல் திருவிழாவின் போது பூ நோன்பிற்குப் பின் சாமிக்கு நேந்து விடும் மாடு.

**சலதாரி(சலதேரி) :** குளியலறை. 'சலதேரிலெ பாரு சோப்பு இருக்குது.'

**சலம் :** கிணற்றில் நீர் ஊறும் பகுதி. 'கெணுத்துல பாரு சலொ எப்படி ஒழுகுது.'

**சலமூல :** வடகிழக்குப் பகுதி. 'சலமூல நேரு மின்னுது மழ வரு.'

**சலீசு :** சகாயம், உதவி. 'இவ்ளோ சலீசா கெடைக்குதா.'

**சலுச்சிக்கிறது :** காண்க. சடஞ்சுக்கிறது.

**சலுச்சுப்போடு :** காண்க. பொடச்சுப் போடு.

**சலுவு தண்ணி :** நடவு முடிந்து மூன்று நாட்கள் கழித்து பயிரை வாடவிட்டபின் பாய்ச்சப்படும் முதல் நீர். 'சலுவுத் தண்ணி பாய்க்கோனும்.'

**சவளப்புள்ள :** தகுந்த இடைவெளி இல்லாமல் குழந்தை பிறக்கும்போது மிகவும் பலகீனமாக இருக்கும்.

**சவாரித்தப்பெ :** வண்டியின் முன் பகுதியில் உள்ள பலகை. 'சவாரித்தப்பெ ஒடஞ்சி போச்சு.'

**சவுரீமா :** நலமா. 'அப்பறொ சவுரீமா இருக்கீங்ளா.'

**சவேரி வண்டி :** பயணம் செய்வதற் கான மூடாப்பு போடப்பட்ட வண்டி. 'சவேரி வண்டில கோயிலுக்குப் போன.'

**சவொ :** பிணம். 'சவொத்தை தூக்கி பாடையில வை.'

***சள்ளவாயெ :*** தூங்கும்போது வாய் ஓரத்தில் நீர் வடியும். 'சள்ளவாயெ ஒழுக்கிகிட்டு தூங்கறாம் பாரு.'

***சள்ளை :*** விலா. 'அவஞ்சள்ளையில ஒரு குத்து வுடு.'

***சள்ளெக்குச்சி :*** கத்தி (அ) கொக்கி கட்டிய தழை ஒடிக்கப் பயன்படும் நீண்ட குச்சி. 'சள்ளெக்குச்சிய எடுத்தா புளியங்காயெ புடுங்கலாம்.'

***சளசளனு :*** ஓயாத இறைச்சல். 'தண்ணி சத்தம் சளசளனு கேட்டுகிட்டே இருக்கு.'

***சளப்பு :*** பாறையில் தண்ணீர் அலைவீசி செல்லும் இடம்.

***சளித்தல் :*** மணலையும், கல்லையும் பிரித்தல். 'மண்ணெ சளிச்சாச்சா.'

***சன்னொ :*** சிறிய. 'கம்பி இவ்ளோ சன்னொமா இருக்கு.'

## சா

***சாக்கு :*** சணலால் ஆன பை. 'சாக்கெ எடுத்தா நெல்லு அள்ளிவெக்கெ.'

***சாக்குப்போக்கு(சாக்காடு) :*** காரணம் சொல்லுதல். 'சாக்குபோக்கு சொல்றதே வேலயாப் போச்சு.'

***சாச்சராதெ :*** சாய்த்து விடாதே. 'கொடத்தெ சாச்சராதெ தண்ணி கீழெ கொட்டீரு.'

***சாஞ்சுக்காரு :*** சாய்ந்து உட்கார். 'நல்லா சாஞ்சுக்காரு.'

***சாட்டவாரு :*** எருதுகளை ஓட்டப் பயன்படும் முனையில் கயிறு கட்டியுள்ள குச்சி. 'சாட்டவாருலெ ரெண்டு இழு இழுத்தினா மாடு ஒழுக்கமா போவு.'

***சாட்டு :*** பறை அடித்து பொது நிகழ்ச்சியை மக்களுக்கு தெரிவித்தல். 'எங்கூருல நோம்பு சாட்டியிருக்குது.'

***சாட்டுலெமாட்டீட்டெ :*** நோன்பு சாட்டுதலின் போது வெளியில் எங்கும் செல்லாமல் ஊருக்குள் இருப்பது. 'நோம்பு சாட்டுலெ மாட்டீட்டெ அதுனால வெளியெ எங்கீயும் போகமுடிலெ.'

***சாடமாடயா :*** ஜாடையாக. 'இந்தொ சாடமாடயா பேசற வேலயெல்லா வெச்சுக்காதெ.'

***சாடு :*** தானியம் அள்ள உதவும் கூடை. 'தட்டப்பயிரு ரெண்டு சாடு ஆச்சு.'

***சாத்தீட்டியா :*** மூடிவிட்டு. 'வெளிக் கதவெ சாத்தீட்டியா.'

***சாத்திரிக்கொ :*** எதிர்த்து பேசுவது. 'எங்கிட்டியே சாத்திரிக்கொம் பேசறியா நீ.'

***சாதகொ :*** ஜாதகம். ஒவ்வொரு தங்களுடைய பிறந்த தேதி, நேரத்தை கணித்து ஜாதகம் எழுதி வைத்துக் கொள்ளுதல். சாதகொ கம்ப்யூட்டருலெ போடறதுக்கு ரவி அச்சகத்துக்கு போகோணு.

**சாப்டுங் :** சாப்பிடுங்கள்.

**சாப்பு :** காண்க. சாளை.

**சாமக்கோடங்கி :** நடு இரவில் வந்து குறி சொல்பவர். 'ராத்திரி சாமக்கோடங்கி வந்து என்னொ சொன்னான்னு தெரீலெ.'

**சாமம் :** நடு இரவு. 'சாமத்துல வெளிய போகாத.'

**சாமி சாட்றது :** காண்க. நோம்பி சாட்றது.

**சாமி மலையேறிருச்சு :** ஒருவரின் மேல் சாமி வந்து ஆடிவிட்டு திரும்பச் சென்று விடுதல்.

**சாய்மானொ :** சாய்ந்து உட்காரும் இடம். 'உனக்கு சாய்மானொங் கேக்குதா.'

**சாய்திண்ணெ :** சாய்ந்து கொள்ள வசதியான ஒருபுறம் திட்டு வைத்துக் கட்டப்படும் திண்ணை. 'அந்த சாய் திண்ணெயில படுத்திருப்பாம் பாரு.'



சாய்திண்ணை

**சாயந்தரொ :** மாலை நேரம். 'சாயந்தரொ நேரமே வர்ற.'

**சார மண்ணு :** சோப்புக்குப் பதிலாக துணி துவைக்க பயன்படும் மண். 'சார மண்ணுல துணிய தொவைக்காத.'

**சால்நடவு :** விதையை கையிலெடுத்து ஏருக்குப் பின் விதைத்தல். 'எங்க காட்ல தட்டைப் பயிரு சாலு போட்ருக்குது.'

**சால்போடறது :** காண்க. சால்நடவு.

**சால்பரி :** நீர் இறைக்கும் இடை.



சால்பரி

**சால்பானை :** தண்ணீர் பானை.

**சாலாணி :** நீர் நிறைத்து வைக்கும் தவலையை தாங்கி நிற்கும் மரத்தாலான தாங்கி. 'சாலாணிமேல பாரு தண்ணி அண்டா இருக்குது.'



சாலாணி

**சாலு :** காண்க. சால்ப்பானை.

***சாவகாசொமா :*** நேரங்கழித்து. 'எங்க போயிட்டு இவ்வளவு சாவகாசொமா வர்ற.'

***சாவக்கட்டு :*** சேவல்சண்டை. 'சாவக்கட்டுக்குப் போறதே இவனுக்கு வேலயாப் போச்சு.'

***சாவடி :*** இரவில் தங்குமிடம். பொதுமக்கள்போன்றோர் கூடுமிடம். 'எப்பப் பாத்தாலு சாவடிலியே படுத்துக் கெடப்பே.'

***சாவுகாசமா :*** மெதுவாக. 'இப்பிடி சாவுகாசமா வந்தா எப்பிடி.'

***சாளேசுவரம் :*** கண் பார்வை மங்குதல். 'கண்ணு சாளேசுவரமா யிருச்சி.'

***சானை :*** பச்சை மாவால் செய்யப்படும் ஒரு சதுர வடிவ அமைப்பு. 'மாவ சான புடிச்சி வெய்யி.'

***சானபுடிக்கிறது :*** கத்தி பதம் இல்லாவிட்டால் அதை பதம் வைக்கும் முறை. 'கத்தியெ சான புடிக்கோனு.'

## சி

***சிக்கி :*** குழந்தைகள் விளையாட்டு.

***சிக்கு :*** பின்னிக்கொள்ளுதல். 'தலையில முடி சிக்கு உளுந்துருச்சு.'

***சிக்குனே :*** சிக்கிக் கொண்டாய் எனில். 'நீ சிக்குனெ சின்னா பின்னமாயிருவெ.'

***சிங்கியடி :*** அடிப்படைத் தேவைகளுக்கு மிகவும் சிரமப்படுதல். 'காசுக்கு சிங்கியடிக்க வேண்டியதா இருக்குது.'

***சிடுமூஞ்சி :*** முகத்தை எப்போதும் கோபமாக வைத்திருத்தல். 'எங்கியோ சிடுமூஞ்சியா இருக்கறாம்பா.'

***சிண்டு மூட்டுதல் :*** சண்டை மூட்டி விடுதல். 'அவனொரு சிண்டுமூட்டி.'

***சித்தநேரொ :*** சிறிது நேரம். 'சித்தநேரொம் பொறு அப்புறம் போலா.'

***சித்தப்பெ :*** அப்பாவின் தம்பி. 'சித்தெப்பெ வூட்டுக்குப் போயிட்டு இப்பத்தெ வந்தெ.'

***சித்தப்பெங்கூட்டொ :*** சித்தப்பா மார்கள். 'அவுங்கெல்லா எங்கொ சித்தப்பங் கூட்டந்தானுங்கோ.'

***சித்தபெரம :*** தன்னிலை மறத்தல். 'சித்தபெரம புடிச்சவனாட்ட இருக்குறாம் பாரு.'

***சித்தெபொறுத்து :*** சிறிது நேரம் கழித்து. 'சித்தபொறுத்து போலாம் பொரு.'

***சித்தெமுன்னாடி :*** சிறிது நேரத்திற்கு முன்பு. 'சித்தெ முன்னாடிதெ கௌம்பிப் போனாரு.'

***சித்துவெடெக்கோழி :*** சிறிய ரக நாட்டுக்கோழி.

***சிந்தாமெ :*** காண்க. எறயாம.

***சிப்பிக்கோடாலி :*** இலை தழைகளை வெட்ட உதவும் கருவி.

***சிம்பிட்டு*** : கோபத்தில் கத்துதல். 'ஏ அவன இப்பிடிச் சிம்புற.'

***சில்லி மூஞ்சி*** : முகத்தில் கோபத்தையும் எரிச்சலையும் காட்டுதல். 'சில்லி மூஞ்சிய பாத்துட்டு போனா வெளங்கன மாதிரிதா.'

***சிலாக்கியம்*** : ஒத்துவராத. 'இந்தொ சிலாக்கியம் சேற வேலயெல்லா வேண்டா.'

***சிலுப்பு*** : அசைத்தல். (தயிர் கடைதல்). உடலை ஆட்டுதல். 'இந்த சிலுப்பு சிலுப்புற.'

***சிலுவாணொ*** : சில்லறைக் காசுகள். 'சிலுவாணமிருந்தாக் குடு அப்புறந்தார.'

***சிலுவாடுன்னு நெனச்சியா*** : சாதாரண மான ஆள் என்று நினைத்தாயா.

***சிவனேன்னு*** : எதிலும் தலையிடாமல். 'நானே சிவனேன்னு கெடக்குற என்னப் போயி வம்பிழுக்காத.'

***சிறுசு*** : சிறிய. 'வூடு ரொம்ப சிறுசா இருக்குது.'

***சிறுவாடு*** : கணவனுக்கு தெரியாமல் மனைவி சேர்க்கும் பணம். 'சிறுவாடா சேத்து வச்செப் பணத்தையெல்லா தொலச்சிட்டு வந்து நிக்கிறியே.'

***சின்னப்பட்டு*** : தொடர்ச்சியாக துன்பப் படுதல். 'சின்னப்பட்டு சீப்பட்டு போய்ட்டான்.'

***சின்னப்படோனு*** : காண்க. சின்னப்பட்டு.

***சின்னாத்தா*** : பாட்டியின் தங்கை. 'சின்னாத்தா வூட்டுல இன்னிக்கி சாமி கும்புடறாங்கோ.'

***சின்னுக்கோழி*** : சிறிய புள்ளிகளை உடைய கோழியினம்.

***சினுக்கு*** : கதவை தாள் போடுதல். 'கதவ சினுக்குப் போட்டியா.'

## சீ

***சீக்காளி*** : நோயாளி. 'அவனே சீக்காளி அவங்கிட்ட போயி வம்பிழுக்குறெ.'

***சீக்கு*** : நோய். 'அவனுக்கு சீக்கு வந்து ஆஸ்பத்திரியில இருக்குறான்.'

***சீசா*** : கண்ணாடி குடுவை. 'சீசாவுலெ பரு சீமெயெண்ணெ இருக்குது.'

***சீசீனு*** : 'இந்த வேலயெசெஞ்சு முடிக்கிறதுக்குள்ளெ சீசீனு ஆயிப்போச்சு.'

***சீடைபாய்ச்சல்*** : களை படர்ந்த காடுகளில் நீர் பாய்ச்சுதல். 'காட்டுக்கு சீடை பாச்சோனு.'

***சீண்ட்ரம்*** : குளிக்காமல் அழுக்குப் பிடித்துத் திரிதல். 'எங்கியோ சீண்ட்ரம் புடிச்சவனோட்ருக்குது.'

***சீப்படு*** : காண்க. சின்னப்பட்டு.

***சீம்பு*** : மாடு, எருமை முதலியவை கன்று ஈன்றவுடன் முதலில் சுரக்கும் பால். 'மாட்டு சீம்புக் குடிச்சா ஒடம்புக்கு நல்லது.'

***சீம எலந்தை*** : *உயர் ரக சதைப் பற்றுள்ள இலந்தை.*

***சீமக்கருவை*** : *வெளிநாட்டிலிருந்து கொண்டு வரும் விறகு. 'சீமக் கருவேலாம் வெறகு நல்லா எரியும்.'*

***சீமச்சரக்கு:*** *காண்க. சீமச்சாராயம்.*

***சீமச் சாராயம்*** : *வெளிநாட்டு மதுபான வகை. 'சீமச் சாராயங் குடிச்சுக் குடிச்சு பய ரொம்பக் கெட்டுப் போனான்.'*

***சீமநாய்*** : *வெளிநாட்டு நாய்வகை. 'சீமநாய புடிச்சுக் கட்டி வைய்யி கடிச்சிரப் போவுது.'*

***சீம மாடு*** : *வெளிநாட்டு மாடு வகை. 'சீம மாடு வெய்யிலக் கண்டா ஓடிரு.'*

***சீமாத்துக்குச்சி*** : *காண்க. ஈக்கிமாறு*

***சீமாரு*** : *தென்னை ஓலையிலிருந்து பிரித்து எடுக்கப்படும் குச்சியில் செய்யப்பட்ட துடைப்பம். 'சீமாத்த எடுத்து வூட்ட கூட்டியுடு.'*

***சீமிலெ இல்லாதெ*** : *உலகத்தில் இல்லாத. 'சீமிலெ இல்லாததெ கண்டுபுடிச்ச மாதிரி பேசறதப்பாரு.'*

***சீமெயோடு:*** *வெளிநாட்டு ஓடு. 'சீமெயோட்டெ வூட்டுக்கு மேயோனு.'*

***சீமெண்ணை*** : *மண்ணெண்ணெய். 'ரேசங்கடயில சீமெண்ணெ ஊத்தறாங்க.'*

***சீர்காரரு*** : *காண்க. அருமைக்காரரு.*

***சீர்தண்ணீர்*** : *கொங்கு திருமணச் சடங்குகளில் ஒன்று.*

***சீரழிஞ்சு*** : *கெட்டுப் போதல். 'அவஞ் சீரழிஞ்சுப் போய்ட்டான்.'*

***சீராடிகிட்டு*** : *மனைவி கணவனிடம் சண்டை கட்டி கொண்டு தாய் வீடு செல்லுதல். 'சீராடிகிட்டு அம்மா வூட்டுக்கு போய்ட்டா.'*

***சீலெ*** : *சேலை. 'சீலெ கூட கட்டத் தெரிலெயா உனுக்கு.'*

***சீவக்கட்டெ*** : *நெற்பயிர்களை வளர விடாமல் தடுக்கும் ஒரு வகை நோய். 'சீவக்கட்டெ தாக்கி பயிருகெ காஞ்சு போச்சு.'*

***சீவக்காய்*** : *தலைக்கு தேய்த்து குளிக்கும் தூள்.*

***சீவனொ*** : *வயிற்றுப்பிழைப்பு. 'சீவனொத்துக்கே வழியில்லாம இருக்குறெ.'*

***சீனிப்புளிங்கா:*** *கொடுக்காங்காய்.*

## சு

***சுக்குட்டிச்செடி*** : *மணத்தக்காளிச் செடி. 'மழைக்கி சுக்குட்டிசெடி பாரு எப்பிடி வளந்துருக்குது.'*

***சுங்கிடி*** : *ஒரு வகை சேலை. 'சுங்கிடி சீலெ கட்டிக்கிட்டு வர்றா பாரு.'*

***சுட்டித்தலையன்*** : *குறும்பு செய்யும் சிறுவன். 'சுட்டித் தலையன ஆளக் கானோ.'*

***சுடுதண்ணி*** : *வெந்நீர். 'சுடுதண்ணியெ கால்லெ ஊத்துனவனோட்டோ பறக்குறெ.'*

**சுண்டறது :** ஆட்காட்டி விரலை பெருவிரலால் மடக்கி பின் வேகமாய் விரித்தல்.

**சுண்டவெக்கறெது :** குழம்பை சுண்ட வைத்தல். 'பழைய கொழம்பெ சுண்டவெக்கறது தானொ.'

**சுண்டாச்சட்டி :** மீதமிருக்கும் குழம்பை ஊற்றி அடுப்பில் சுண்ட வைக்கும் மண்சட்டி. 'சுண்டாச் சட்டியில பாரு பழைய கொழம்பு இருக்கு.'

**சுண்டுகாரம் :** குழந்தை பிறந்ததும் தாய்க்கு சுக்கு,மிளகு போன்றவற்றை அறைத்துக் கொடுப்பது.

**சுண்டுகால் :** நரம்புப் பிடிப்பால் காலை இழுத்து நடத்தல். 'சுண்டுகால் மாட்ட எதுக்கு வாங்கியாந்தெ.'

**சுண்ணாம்புக்காய் :** சுண்ணாம்பை போட்டு வைக்கும் சிறு டப்பி. 'சுண்ணாம்புக்காயெ எடுத்தா வெத்தலக்கி போடோணும்.'

**சுத்தப்படாது :** சரிப்பட்டுவராது. 'உங்கிட்டெ பேசறது சுத்தப்படாது.'

**சுத்தபத்தமா :** சுத்தமாக. 'சுத்தபத்தமா இருந்தாத்தானெ ஆகு.'

**சுத்திப்போடு :** மிளகாய், தெருமண், கூரை போன்றவற்றை எடுத்து திருஷ்டி சுற்றிப் போடுதல். 'கொழந்திக்கி கண்ணுபட்ருக்குது சுத்திப் போடோணு.'

**சும்மாடு :** கனமான பொருளை தலையில் வைக்கும் போது ஏற்படும் வலி ஏற்படாமல் இருக்க துணியை வட்டமாக சுருட்டி வைப்பது. 'சும்மாட்ட தலக்கி வெச்சு எடுத்துட்டுப் போ.'

**சும்மாநாச்சிக்கி:** விளையாட்டுக்காக சொல்லுதல். 'சும்மாநாச்சிக்கி சொன்னெ பெருசா எடுத்துகிட்டெ.'

**சுமை :** 104 வெற்றிலை கொண்ட ஒரு அடுக்கு. 'வெத்தல எத்தன சும ஆச்சு.'

**சுரப்பு :** மாடு மடியில் பால்சுரத்தல். 'சுரப்பே இல்லெ எப்பிடி பாலு கறக்குறது.'

**சுரீரனு :** எறும்பு, தேள் போன்றவை கடித்தவுடன் உடனே ஏற்படும் வலி, 'எறும்பு கடிச்சி சுரீரனு வலிக்குது.'

**சுருக்க :** விரைவாக. 'சுருக்கச் சொல்றங் கேட்டுக்கோ.'

**சுருக்காமுடி :** இலகுவாக அவிழ்க்கும் படி போடும் முடிச்சு. 'சுருக்கா முடி போட்டுடு அப்பதெ அவுக்கெ சௌரீமா இருக்கு.'

**சுருக்குப்பை :** பெண்கள் இடுப்பில் சொருகிக் கொள்ள வசதியா சுருக்கம் வைத்துத் தைத்த பை. 'சுருக்குப் பையில பாரு வெத்தல யிருக்கு.'

**சுழக்கெ :** ஒரு வகை எறும்பு. 'சுழக்கெ கடிச்சு இம்மாம் பெருசா தடிச்சிருச்சி.'

**சுழயா :** முழுமையாக. 'சுழயா கெடச்சா வெச்சுக்கொ.'

**சுழி :** மாடு வாங்கும்போது அதன் உடம்பில் இருக்கும் நல்ல சுழிகளைப் பார்த்து வாங்குவர். 'இந்த மாடு சுழி சுத்தமா இருக்கு.'

**சுழுவா :** எளிதாக. 'சுழுவா வேல முடிஞ்சுருச்சி.'

**சுள்ளி வெறகு :** சிறு விறகுக் குச்சி. 'சுள்ளி வெறகு ஒரு கத்தெ ஆச்சு.'

**சுள்ளுன்னு :** வெய்யில் அதிகமாக இருக்கும்போது உடம்பில் உடனே ஏறும் வெப்பம். வெய்யிலு சுள்ளுனு ஏறுது.

**சுள்ளெபொறுக்கி :** காண்க. அல்லுப்பொறுக்கி.

**சுள்ளெறும்பு :** சிறு எறும்பு. 'சுள்ளெறும்பு பாரு கடிக்கிது.'

## சூ

**சூட்டாங்காய் :** சூடு பறக்க தேயத்தால் அநதக் காயிலிருந்து வெப்பம் வெளிவரும்.

**சூட்டிக்கவுறு :** தேங்காய் நாரில் செய்யப்பட்ட கயிறு. 'சூட்டிக்கவுத்தெ எடுத்தாந்து கட்டு.'

**சூட்டிப்பு :** சுறுசுறுப்பும், விபரமும் கொண்டவர். 'ஆளு ரொம்ப சூட்டிப்பா இருக்கான்.'

**சூதானம் :** பத்திரமாக. 'சூதானமா வெச்சிக்க இதையெ.'

**சூந்து :** கார்த்திகை ஜோதி திருவிழாவின் போது வளையத்தில் தீப்பந்தம் சுருட்டி சுற்றுதல். 'சூந்து சுத்தொ வருலியா.'

**சூர நாத்தம் :** துர்நாற்றம். 'அந்த எடத்துல ஒரே சூர நாத்தமா இருக்கு.'

**சூரிக்கத்தி :** இடுப்பில் தொங்க விடும் கத்தி. 'சூரிக்கத்திலெ குத்திட்டா ரத்தொ வந்துரு ஜாக்கிரதெ.'

**சூளை :** செங்கல் தயாரிக்கும் இடம். 'செங்கல் சூளைலெ இருந்து வாங்கியாந்தெ.'

**சூறையுடுறது :** திருவிழாக்களில் வேண்டுதலுக்காக பழங்களை மக்கள் கூட்டத்தில் வீசுவது.

## செ

**செக்கச் செவேலுனு :** சிவப்பு நிறத்தை அழுத்திக் கூறுதல். 'செக்கச் செவேலுனு இருக்குது பாரு.'

**செகெ அடிக்கிது:** அனல். 'தீ இவ்ளோ செகை அடிக்குது தள்ளி நில்லு.'

**செகெபிடிச்சிகிச்சி :** சிறுநீர் சூடு பிடித்தல். 'திடீர்னு செகை பிடிச்சுகிச்சு.'

**செஞ்சாலுஞ்செரி :** செய்தால் சரி. நீ என்ன செஞ்சாலுஞ்செரின்னு விட்ற வேண்டிதெ.

**செஞ்சு :** செய்து. 'இத செஞ்சு முடிக்கிறதுக்கு இவ்ளோ நேரமா.'

**செண்டாக்கல்லு :** எல்லைக் கோட்டில் வைக்கப்படும் கல்.

**செத்தெ :** 1.இலைச்சருகுகள். காய்ந்த தானியத் தட்டைகளின் சோகைகள். 'செத்தயெ அரிச்சிட்டு வா தீயெரிக்கெ.' 2. ஆடு மாடுகள் குட்டி போடும் போது போடும் ஒரு வகை நஞ்சு. 'மாடு செத்தெ போட்ருச்சா.'

**செம்பட்டெ :** சிவப்பும் கருப்பும் கலந்த நிறம். 'முடி செம்பட்டக் கலராயிருச்சு.'

**செம்பாளெ :** பொரி செய்வதற்காக உற்பத்தி செய்யப்படும் ஒருவகை நெல்.

**செம்புலியாடு :** செம்மறியாடு. 'செம்புலியாட்டுக்கறி நல்லா இருக்குது.'

**செம்மண்காடு :** விவசாயம் செய்ய வசதியான செம்மண் கொண்ட காடு. 'செம்மண்ணுக் காட்டுலெ என்னொ போட்ருக்கிறீங்கெ.'

**செமக்கறது :** சுமத்தல். ஊட்டு பாரத்தெ 'செமக்கறது எந்தலயிலெ உளுந்துருச்சி.'

**செமத்தியா :** அதிகமாக. பலமான. 'செமத்தியா ரெண்டு ஒத குடு.'

**செய்யான் :** சிவந்த நிறமுடைய பூரான் வகை. 'செய்யாங் கடிச்சு ஆளே போய்ச் சேந்துட்டான்.'

**செயிச்சுகிட்டெ :** ஜெயித்து விட்டான். 'நீயே செயிச்சுகிட்டெ.'

**செரகு :** காட்டில் விரைவில் நீரைப் பாய்ச்சுவதற்கு தனித்தனியாக பாத்தி கட்டி பாய்ச்சும் முறை. 'செரகு ஒடஞ்சி தண்ணி வெளிய போயிருச்சு.'

**செரகு அடிக்கோனு :** உடல்நிலை சரியில்லை எனில் மந்திரம் ஓதி துண்டால் அடித்தல். 'கொழந்தக்கி செரகடிக்கோனு.'

**செரமமுன்னு :** சிரமம் என்று. 'உனுக்கு செரமமுன்னுதானொ நாங் கடங்குடுத்தெ.'

**செராப்பு :** சிறிதாக ஏற்படும் காயம். 'கீழ வுழுந்து செராப்பு ஆகியிருச்சு.'

**செராய் :** மரத்தை துண்டாக சிறிது சிறிதாக வெட்டுதல். 'செராய பாத்து எடு இல்லீன்னா செலாக்கு ஏறிரு.'

**செரிங் :** சரிங்க. 'நீங்கொ சொன்னா செரிங்.'

**செரியானெ :** சரியான. 'செரியானெ ஆம்பளையா இருந்தா ஒத்தைக் கொத்தொ மோதிக்கலாமா.'

**செரியில்லெ :** சரியில்லை. 'நீ பண்றது கொஞ்சங்கூட செரியில்லெ.'

**செருப்பதொட்டுட்டு :** காலணியை காலில் அணிந்து. 'செருப்ப தொட்டுட்டு உள்ளெ வராதீங்கெ.'

**செருத்து :** காண்க. ஒரேமுட்டா.

**செல்லாக்காசு :** பயன்படாத நாணயங்கள். 'செல்லக்காசுக்கு பிரயோசனப்பட மாட்டே.'

**செல்லு :** தானியத்தை துளைத்துத் தின்னும் ஒரு வகை பூச்சி. 'அரிசில செல்லு செல்லா இருக்குது.'

***செலந்தி :*** உடல் சூட்டினால் வரும் கொப்பளம். *'செலந்தி வந்து உக்காரக் கூடொ முடியலெ.'*

***செலாக்கு :*** மரப்பட்டைகளில் இருக்கும் கூர்மையான செதில்கள். *'செலாக்கு கையில குத்திருச்சு.'*

***செலவாங்குது :*** வீடே அதிரும்படி கத்துதல். *'நீயி கத்தற கத்து வூடே செல வாங்குது.'*

***செலவுப்பெட்டி :*** பட்டை, கிராம்பு போன்றவை போட்டு வைக்கும் மரத்தாலான பெட்டி. *'செலவுப் பெட்டிலெ பாரு சில்லரக் காசு இருக்குது.'*

***செலவு ரசொ :*** சீரகம், மல்லி, மிளகு போன்றவறறைக் கொண்டு வைக்கும் ரசம்.

***செவலெ :*** சிவப்பு நிறக் காளை. *'செவலய புடிச்சுக் கட்டு.'*

***செவுரு :*** சுவர். *'அந்த வூட்டுல செவுரு இடிஞ்சி உளுந்துருச்சி.'*

***செவுனி :*** கன்னத்தின் கீழ்ப்பகுதி. *'செவுனிமேல ரெண்டு அப்பு குடு.'*

***செவையேனு :*** காண்க. செக்கச் செவேல்னு.

***செறாயி :*** மரத்தை வெட்டும்போது வீணாகும் துண்டுகள். *'செறாயி பொறுக்கியா அடுப்பு எரிக்கெ.'*

***செறை :*** உழும்போது கலப்பையின் கொழுவில் சிக்கி இருக்கும் செடி, கொடி, மண் போன்றவை. *'செறையெ தள்ளியுட்டு ஓட்டு அப்பதே ஒழவு செரியா வரு.'*

***செறையெடுக்கறது :*** தெனை, பனை மரங்களில் பாளைகளை சீவி ஒழுங்கு படுத்துதல். *'தெனெமரத்துல செறையெடுக் கோனும்.'*

## சே

***சேகண்டி :*** சிறு குச்சியால் தட்டி ஒலியெழுப்பப்படும் தட்டு. *'மார்கழி மாசத்துலெ தினோமு பூரா ஊட்டுக்கு சேகண்டி அடிப்பாங்கொ.'*

***சேகு :*** மரத்தில் நன்கு முற்றிய சிவந்த நிறப்பகுதி. *'மரொ நல்லா சேகேறிப் போச்சு.'*

***சேத்து :*** அதிகப்படுத்து. சேர்த்து. *'பணொ நெறயா சேத்தி வெக்கோனு.'*

***சேத்தொழவு :*** நெல் பயிரிட சேற்றில் உழும் உழவு. *'சேத்தொழவு ஓட்டி நெல்லு வெதக்கணும்.'*

***சேந்துகெணறு :*** கயிற்றில் குடத்தை கட்டி கையால் இழுக்கும் கிணறு. *'சேந்துகெணுத்துல போயி தண்ணி கொண்டாந்தெ.'*

***சேந்துட்டுது :*** சேர்ந்து விட்டது. *'இப்பதெ அகராதி வேல ஆரம்புச்சுது அதுக்குள்ள இத்தெனெ வார்த்தீக சேந்துட்டுது.'*

***சேரங்கராயன் :*** ஒருவகை முள்செடி.

***சேரி :*** ஒப்புக்கொள்ளுதல். *'நீ சொன்னாச்சேரி.'*

***சேரெ :*** *ஒரு கை அளவு. (தானியம்). 'ஒரு சேர அரிசி எச்சாப் போட்டே அப்புஞ் சோறு கம்மியாப் போச்சு.'*

## *சொ*

***சொக்காயி :*** *துணி. 'புதுச் சொக்காயி போட்டுக்கிட்டு கௌம்பி யாச்சா.'*

***சொகுசு :*** *வசதி படைத்த. 'சொகுசா வாழ்ந்தவனுக்கு இந்தக் குடுச புடிக்குமா.'*

***சொங்கி :*** *சோம்பேறி. 'சுத்த சொங்கியா இருக்குற.'*

***சொச்சொ :*** *மீதி. 'கணக்குப் போட்டுப் பாத்தா சொச்சொ வருது.'*

***சொட்டெ :*** *சருகுமான் கொம்பினால் செய்யப்பட்ட ஒரு ஆயுதம்.*

***சொடக்கு :*** *கட்டை விரலையும் நடு விரலையும் சேர்த்து ஒலியெழுப்புதல். 'என்ன சொடக்குப் போட்டு கூப்படுற கைய ஒடிச்சுருவ.'*

***சொண்டி :*** *இடதுகை பழக்குமுள்ளவர்.*

***சொணக்கம் :*** *சுறுசுறுப்பில்லாத நிலை. 'என்ன ஒரே சொணக்கமா இருக்கெ.'*

***சொணக்கட்டி புடிச்சவெ :*** *உடல் மெலிந்திருப்பவன், சிரமமான வேலைகளை செய்யாதவன்.*

***சொம்பு :*** *தண்ணீர் குடிக்க உதவும் குவளை.*

***சொமதாங்கி :*** *கருவுற்ற பெண்கள் மரணமடைய நேர்ந்தால் அவர்கள் நினைவாக தலையில் கொண்டு வரும் பாரமான சுமையை இறக்கி வைக்கும் வகையில் அமைக்கப்பட்ட மேடைக் கல்.*

***சொரவாணம் :*** *கிணற்றில் அல்லது ஆற்றில் மேலிருந்து தலைகீழாக நீருக்குள் பாய்வது. 'ஒனக்கு சொரவாணம் போடத்தெரியுமா.'*

***சொராப்புரடை :*** *கய்ந்த சுரைக்காயை தேன் சேகரிக்க பயன்படுத்துவர்.*

***சொருகு :*** *நுழைத்தல். 'ஊசிக்குள்ளொ நூலெ சொருகு பாக்கலா.'*

***சொல்லாமெகொள்ளாமெ :*** *எதுவும் கூறாமல். 'சொல்லாமெ கொள்ளாமெ கௌம்பீட்டீங்கெ.'*

***சொல்லிட்டு :*** *கூறிவிட்டு. 'எங்கிட்டெ சொல்லிட்டுதெ போனாங்கெ.'*

***சொல்லிப்போட்டு :*** *காண்க. சொல்லிட்டு.*

***சொல்லியுட்டாங்களா :*** *சொல்லி விட்டார்களா. 'உங்கிட்டெ சொல்லியுட்டாங் களா.'*

***சொல்லோனுமிங்குறெ :*** *கூற வேண்டும் என்கிறேன்.*

***சொளமாடுதல் :*** *ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே சுற்றிச் சுற்றி வருதல். 'நல்லபாம்பு இங்கினியே சொளமாடிகிட்டு இருக்குது.'*

***சொள்ளெ*** : கொசு. 'சொள்ளெ கடிச்சிப்போடுச்சி.'

***சொளயெ*** : கில்லாடி.

***சொன்னபுடிசெய்*** : சொல்கிறபடி செய்.

## சோ

***சோங்கி*** : களைத்து. 'பையெ ரொம்பொ சோங்கி போயிட்டெ.'

***சோசிகாரரு*** : ஜோதிடர். 'சோசிகாரரு கிட்டெ போயி சாதகங் கணிக்கோனு.'

***சோசியொ*** : ஜோதிடம். 'சோசியகாரரு கிட்டெ ஜோசியொ பாக்கோனு.'

***சோட்டாதடி*** : போலீஸ் தடி. 'சோட்டா தடிலெ போலீஸ் அடி வெளுத்துக்கட்டீட்டாங்கெ.'

***சோட்டாலி*** : நண்பன். 'உன்ற சோட்டாலிய எங்கக் கானொ.'

***சோடிக்கிறது*** : அழகுபடுத்துதல். 'வூட்ட சோடிக்கிறதே இவனுக்கு வேலயாப் போச்சு.'

***சோடை*** : கெட்டுப்போன. 'அந்தக் குடும்ப சோடை போயிருச்சு.'

***சோத்தாங்கை*** : சாப்பிடும் கை. (வலது கை). 'சோத்தாங்கையில யெடுத்து தின்னு.'

***சோத்தான்*** : கடினமான வேலைகளை செய்யாதவன். 'செரியான சோத்தானா இருப்பானோட்டோ இருக்குது எந்த வேலெயு செய்ய மாட்டீகிறே.'

***சோத்துப்பட்டாளொ*** : சாப்பிடும் கூட்டம். 'ஒரு சோத்துப்பட்டாளொமே வந்து எறங்கிருச்சு.'

***சோத்துலெ*** : உணவில். 'சோத்துலெ உப்புப் போட்டு தின்னாத்தானெ ஆகு.'

***சோந்து*** : காண்க. சோங்கி.

***சோப்பலாங்கி*** : காண்க. சொங்கி.

***சோப்புலெ*** : சட்டைப்பையில். 'சோப்புலெ எத்தனெ பணொ வெச்சிருந்தாலு இருக்குறதில்லெ.'

***சோர் உண்டாச்சா*** : சாப்பிட்டு விட்டீர்களா. 'கண்ணா சோர் உண்டாச்சா.'

***சோர் உண்ணு*** : சாப்பிடு. 'கண்ணா சோர் உண்ணு.'

***சோலி*** : வேலை. 'உன்ற சோலியப் பாத்துகிட்டு போ.'

***சோளக்காட்டு பொம்மை*** : கட்டிடங்கள் கட்டும்போதும், சோளக்காட்டிலும் திருஷ்டிக்காக வைக்கப்படும் பொம்மை. 'சோளக்காட்டுப் பொம்மையெப் போலெ நிக்கிறாம் பாரு.'

***சோளக்குழி*** : சோளம் போட்டு வைக்க பயன்படும் குழி. 'அந்தக் காலத்துல சோளக்குழியிலதெ சோளத்தப் போட்டு வெப்பாங்க.'

***சோளரட்டு*** : சோளத் தவிடு. 'சோள ரட்ட ஆட்டுக்கு வெய்யி நல்லா திங்கும்.'

**சோறாக்கிப்போடறது** : காண்க. கட்டுச்சோத்து விருந்து.

**சோறாக்கு** : சாப்பாடு செய். 'சீக்கிரோ சோறாக்கு பசிக்குது.'

## ஞா

**ஞாயொ** : நியாயம். 'ஊர்பன்னாடிகிட்ட போனா இதுக்கொரு ஞாயொங் கெடைக்கி.'

**ஞாவகம்** : நினைவாற்றல். 'என்னமே நெனச்ச ஞாவகமெ இல்லாமப் போச்சி.'

**ஞானசூனியம்** : அறிவில்லாத ஆள். 'சுத்த ஞானசூனியமா இருக்குற.'

## ட

**டக்குனு** : உடனே, உடனுக்குடன். 'நாஞ்சொன்னத டக்குனு செய்.'

**டபாய்** : ஏமாற்றுதல். சமாளித்தல். 'இந்த டபாய்க்கிற வேலயெல்லா எனக்குத் தெரியாதா.'

**டம்பொ** : தற்பெருமை. 'அவெ வெத்தி டம்பொ அடிக்கிறதுல மன்னன்டா.'

**டமாரொ** : இசைக்கருவி. 'ஊருக்கே கேக்கற மாதிரி டமாரொம் போட்டுச் சொல்லு.'

## டா

**டாண்ணு** : மிகச்சரியாக. குறிப்பிட்ட நேரத்தில். 'சொன்ன நேரத்திக்கி டாண்ணு வந்துட்ட.'

## டி

**டிச்சுக்குழி** : கழிவு நீர் செல்வதற்கு வசதியாக தோண்டப்படும் சிறு கால்வாய். சாக்கடை. 'டிச்சுக்குழிலெ பாரு கொசு நெறஞ்சி கெடக்குது.'

**டிமிக்கி** : ஏமாற்றி நழுவிக் கொள்ளுதல். 'பணந்தரணும்னா டிமிக்கிக் குடுத்து கிட்டே இருக்கியா.'

## டீ

**டீச்சிக்கல்** : சிறு குழந்தைகள் விளையாடும் விளையாட்டு. 'டீச்சிக்கல்லு வெளயாண்டுகிட்டு இருக்காதெ போய்ப்படி.'

## டூ

**டூப்பு** : பொய். 'எங்கிட்டியே டூப் விடுறியா.'

**டூ விடுதல்** : சிறுவர்கள் நட்பை முறித்துக் கொள்ள சுட்டு விரலையும் நடுவிரலையும் சேர்த்துப் பின் பிரித்துக் காட்டுவர். 'அவங்கூட நா டூ விட்டுட்டெ.'

## டே

**டேலேய்** : நெருக்கமான ஒருவரை உரிமையுடன் அழைக்கும் சொல். 'டேலேய் தம்பி நாஞ் சொல்றத கேளுடா.'

**டேரா** : பலநாள் தங்குதல். 'இங்கியே டேரா போட்டுட்ட.'

## டோ

**டோக்லா :** காண்க. டிமிக்கி.

**டோப்பா முடி :** தலைமுடிக்கு பதிலாக வைத்துக் கொள்ளும் பொய்முடி. *'தலயில டோப்பா முடி வெச்சிருக்க.'*

**டோஸ் :** செய்த தவறுக்காக கிடைக்கும் திட்டு. *'எங்க அப்பா எனக்கு செரியான டோஸ் விட்டாரு.'*

## த

**தக்குரி:** விபரமறியாதவன். *'எங்கியோ சுத்த தக்குரியா இருக்குற.'*

**தகதகன்னு :** மின்னுதல. *'நகை தகதகன்னு மின்னுது.'*

**தகலாறு :** பிரச்சினை. *'இந்தத் தகலாறெல்லா எங்கட்ட வேண்டா.'*

**தகிரியொ :** தைரியம். *'ஒனக்கு ஆரு இவ்ளோ தகிரியொ குடுத்தாங்க.'*

**தகுப்பு :** வேலை செய்த களைப்பு. *'நெறய வேல ஒரே தகுப்பா இருக்கு.'*

**தகுமானொ :** தகுந்த காரணம். *'தகுமானொஞ் சொல்றதே இவுனுக்கு வேலயாப் போச்சு.'*

**தட்டச்சட்டி :** பானையை மூடப் பயன்படும் தட்டையான சட்டி.

**தட்டழி :** அல்லல்படுதல். *'இவந் தட்டழிஞ்சி நாசமாப் போயிட்டா.'*

**தட்டியுட்டுட்டாங்க :** கெடுத்து விட்டார்கள். *'கல்யாண காரியத்தெ தட்டியுட்டுட்டாங்க.'*

**தட்டுக்குச்சி :** தானியப்பயிர்களின் குச்சி. *'தட்டுக்குச்சி போரு போட்டுடோனு.'*

**தட்டுக்கெட்டு :** நிலைதடுமாறுதல். *'புத்திகித்தி தட்டுகெட்டுப் போச்சா.'*

**தட்டுசீர் :** கொங்கு நாட்டில் நடைபெறும் பூப்பு நன்னீராட்டு சடங்குகளில் ஒன்று.

**தட்டுப்படுலெ :** தென்படவில்லை. *'எங்கண்ணுக்கு எதுந் தட்டுப்படுலெ.'*

**தட்டுப்போரு :** காண்க. வக்கிபில் போரு.

**தட்டுமுட்டுசாமான் :** உபயோமற்ற பொருட்கள். *'தட்டுமுட்டு சாமானெல்லா இந்த ரூமுலெ போட்டு வெச்சிருக்குது.'*

**தட்டுமுட்டுச்செலவு :** திடீரென்று ஏற்படும் செலவு. *'தட்டுமுட்டுச் செலவுக்கு காசு சேத்தி வெக்கோணு.'*

**தட்டுவாணி :** திட்டும் சொல். *'எங்கியோ சுத்தெ தட்டுவாணியா இருக்கறா.'*

**தட்டொ :** தட்டு. *'தட்டொத்துலெ சோத்தப்போட்டு தின்னு.'*

**தடதடன்னு :** சத்தத்தோடு முரட்டுத் தனமாக. *'என்ன தடதடன்னு ஒரே சத்தமா இருக்குது.'*

**தடபுடலா :** மிகுந்த ஆடம்பரமாக. *'என்ன தடபுடலா விருந்து நடக்குது.'*

**தடொ:** பாதை. *'வண்டித்தடத்துலயே போனா காட்டுக்குக் போயிரலா.'*

**தடாபுடானு :** திடீரென்று. 'தடாபுடானு கல்யாணொ பண்ணிகிட்டெ.'

**தடுக்கு :** தென்னை ஓலையால் பின்னப்பட்டது. 'தடுக்கு ரெண்டு செமை வாங்கியாந்து பந்தலு போடொனு.'

**தடுதலை :** குறுக்கீடு. 'எங்கெ போனாலு நமக்கு இவந் தடுதலையா வந்தர்றே.'

**தடுப்பு :** குளிப்பதற்காக ஓலைகளால் மறைக்கப்படும் மறைப்பு. 'அந்தத் தடுப்புக்குள்ள போயி குளி.'

**தண்டல்காரன் :** மணியகாரருக்கு (கிராம அதிகாரி) உதவியாக இருப்பவர். 'தண்டல்காரெ வந்துட்டுப் போறெ.'

**தண்டு :** சண்டை. 'மாடு இல்லாதவ மழைக்கி ராசா. பொண்டு இல்லாதவ தண்டுக்கு ராசா.' — பழமொழி.

**தண்டெ :** குழந்தைகள் காலில் போடும் செம்பும் இரும்பும் கலந்து பின்னப்பட்ட வளையம். 'தண்டையெ நல்லாப் போட்டுடு.'

**தண்ணி அடுப்பு :** வெந்நீர் தயாரிப்ப தற்கான அடுப்பு. 'தண்ணி அடுப்புக்கு தீ எரிச்சுடு.'

**தண்ணிஉழுந்துருச்சி :** ஆழ்குழாயில் துளை போடும்போது தண்ணீர் கிடைத்தல். 'போரு போட்டு இங்ஙனெ தண்ணிஉழுந்துருச்சி.'

**தண்ணி ஊத்து :** குளித்தல். 'தம்பி தண்ணி ஊத்தியாச்சா.'

**தண்ணிகட்றெது :** வயலுக்கு நீர் பாய்ச்சுதல். 'வயில்லெ தண்ணி கட்றெ வேலயெனக்கிருக்கு.'

**தண்ணிகாட்டுறெது :** அலைக் கழித்தல். 'எனக்கே தண்ணி காட்றியா.'

**தண்ணிக்கொட்டொ :** காண்க. கைச்சாளை

**தண்ணிசேந்தோனு :** கிணற்றில் நீர் இறைத்தல். 'தண்ணிக்கெணுத்துலெ போயி தண்ணிசேந்திட்டு வர்றோனு.'

**தண்ணித் தாவொ :** தண்ணீர் தாகம். 'தண்ணித் தாவமடிக்குது தண்ணி குடிக்கோனு.'

**தண்ணிதொளிச்சுடு :** ஒருவரை அவருடைய போக்குக்கே விடுதல். 'அவனெ தண்ணித் தொளிச்சுடு எக்கேடோ கெட்டுப் போகுட்டு.'

**தண்ணிமோந்து :** நீர் மொண்டு எடுத்தல். 'செம்புலெ தண்ணி மோந்துட்டு வா.'

**தண்ணிப்பூடு :** ஒருவகையான தாவரம். 'வேலிலெ தண்ணிப்பூடு நெறயா இருக்குது.'

**தண்ணிவெலாவு :** சூடான நீரை ஆற வைத்தல். 'சுடு தண்ணியெவெலாவு குளிக்கோனு.'

**தத்துபித்துன்னு :** முண்ணுக்குப்பின் முரணாக. 'தத்துபித்துன்னு ஒளறாம சும்மா இரு.'

**ததக்காபுதக்கா:** ஒன்றும் தெரியாமல் உளறுதல். 'ததக்கா புதக்கானு உளர்தே வேலயாப் போச்சு.'

**தப்பட்டெ** : கையில் தட்டி ஒலி எழுப்பும் வட்டமான ஒருவகை தோல் கருவி. 'தப்பட்டய அடிக்கிறாங்க அதுதா சத்தொ.'

**தப்பட்டெபலகை :** காண்க. தப்பெ

**தப்படி** : காலை அகட்டி எடுத்து வைக்கும் அடி. 'தப்படி வெச்சு நடக்காதெ கீழெ உளுந்துருவெ.'

**தப்பாமல் :** 1. தவறாமல். 'செஞ்ச தப்புக்கு தப்பாம தண்டனெ கெடக்கி.' 2. குணம், உருவம் முதலியவற்றில் இம்மியும் பிசகாமல். 'அப்பனுக்கு மகெ தப்பாமெ பெறந்துருக்காம் பாரு.'

**தப்பிச்சம் பொழச்சம்னு :** தப்பித்தோம் பிழைத்தோம் என்று. 'தப்பிச்சம் பொழச்சம்னு ஓடியாந்தெ.'

**தப்புத்தண்டா** : தவறுகள். 'எப்பப் பாத்தாலு தப்புத் தண்டா செய்யறதே வேலயாப் போச்சு.'

**தப்பெ** : குறுக்காக வெட்டப்பட்ட மரக்குச்சி. 'தப்பெய எடுத்து நல்லா கட்டியுடு.'

**தபா :** தடவை. 'எத்தன தபா உனக்கு சொல்றது.'

**தம்புடிச்சு:** உடல் வலிமையை உபயோகித்து மூச்சை அடக்கி ஏமாவது ஒரு கடினமான பணியைச் செய்தல். 'தம்புடிச்சி இந்த மூட்டய தூக்கி வெச்ச.'

**தயிருமத்து** : தயிரைக் கடையும் மத்து. 'தயிருமத்தெ எடுத்தா தயிரு கெடைலாம்.'



தயிருமத்து

**தயிருசிலப்பறது** : தயிர் கடைதல். 'தயிருமத்துலெ தயிருசிலப்போனு.'

**தர்ம அடி:** பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து அடித்தல். 'தர்மஅடி தின்னாலு புத்தி வராது.'

**தரிச்சுப்போடு** : குச்சிகளை சிறு துண்டுகளாக வெட்டுதல். 'விறகுகளை சிறுசிறு துண்டுகளாக வெட்டுதல்.'

**தருமச்சோறு** : இலவசமாக அளிக்கப் படும் உணவு. 'இவனுக்கு தருமச்சோறு திங்கறதே பொழப்பாப் போச்சு.'

**தருமாசுபித்திரி** : அரசு மருத்துவமனை. 'தருமாசுபித்திரியிலெ போயி ஊசி போட்டுகிட்டு வந்தெ.'

**தலக்கட்டு** : பரம்பரை. 'எங்க தலக் கட்டுலெ ஆருக்கும் இந்தெ நோவு கெடயாது.'

**தலக்கட்டுவரி** : ஒரு குடும்பத்து வரி. 'கோயிலுக்கு தலக்கட்டுவரி குடுக்கோணு.'

**தலவு சேக்கறது** : ஆங்காங்கு மேய்ந்து கெண்டிருக்கும் மாடுகளை பட்டிக்கு கொண்டு வர ஒன்று சேர்ப்பது.

**தலுக்கு** : வேலைப்பாடு இல்லாத, கல் வைக்காத மூக்குத்தி. 'தலுக்கு போட்டு கிட்டு வந்துட்டா.'

**தலெக்கவுறு** : ஆடு, மாடுகளைக் கட்ட அதன் தலைப்பகுதியோடு சேர்த்து கட்டப்படும் கயிறு. 'தலெக்கவுத்த தளத்தியுடு.'

**தலெகாணி** : தலையணை. 'தலெகாணில தலெவெச்சுப் படுத்தாத்தெ தூக்கம் வரு.'

**தலெச்சன்** : முதலாவதாக பிறப்பவன். 'இவந்தே தலெச்சம் பிள்ள.'

**தலெச்சங்குட்டி** : ஆட்டின் முதல் குட்டி. 'ஆடு தலெச்சங்குட்டி ஈனிருக்குது.'

**தலெதட்டி** : சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு. 'தலெதட்டி வெளையாடலா வர்றியா.'

**தலெபோடறது** : இரண்டு எருதுகள் சண்டையிடும் போது கொம்புகளை பிணைத்துக் கொள்வது.

**தலெபோற வேலெ** : தவிர்க்க முடியாத, அவசரமான வேலை. 'தலெபோற வேலயா இவ்வளவு வேகமா போற.'

**தலெமடை** : மதகின் கீழ் வயலிலுள்ள முதல் மடை. 'தலெமடைல தண்ணி பாச்சாச்சா.'

**தலெமாடு** : படுத்திருக்கும் போது தலை உள்ள பகுதி. 'தலெமாட்டுல போயி உக்காரு.'

**தலெமாறு** : மடையிலிருந்து வந்து நீர் பாயும் முதல் பகுதி. 'தலெமாறுலெ தண்ணியெ திலுப்பியுடு.'

**தலெயக்காமுச்சுட்டு** : பார்த்ததும் திரும்புதல். 'கண்ணாலத்துலெ தலெயக் காமுச்சுட்டு போலான்னு பாத்தெ புடுச்சுகிட்டீங்ளே.'

**தலெயீத்து** : மாடுகள் முதலில் கன்று போடும் பருவம். 'தலெயீத்து மாடு.'

**தலெவரி** : முதலில் கொடுக்கும் வரி. 'எப்புமே நானு கோயிலுக்கு தலெவரி குடுத்துருவ.'

**தலெவாசலு** : தலைவாசல். 'தலெ வாசல்லெ போயி படுத்து தூங்காதெ.'

**தவக்கா** : தடவை. 'எத்தன தவக்கா ஒனக்கு சொல்றது.'

**தவக்காயி** : தவளை. 'இங்ஙன பாரு எத்தன தவக்காயி இருக்குது.'

**தவசெ** : தானியம். 'தவசத்த பூச்சி அரிச்சுருச்சு.'

**தவலெ** : பெரிய பித்தளைப் பாத்திரம். 'தவலைலெ பாரு தண்ணி இருக்கு மோந்து குடி.'

**தவழ்குழந்தை** : குழந்தை வரம் வேண்டி மற்றும் குழந்தைகளுக்கு நோய் வராமல் இருக்கவும் வேண்டி வைக்கப்படும் குழந்தை வடிவான உருவாரங்கள்.

**தவுட்டுத்தாழி**: கால்நடைகள் குடிநீர் அருந்தும் தொட்டி. 'தவுட்டெ தவுட்டுத் தாழிலெ போடு மாடு குடிக்கிட்டு.'

**தவுந்த** : தவறிய. 'இந்த தடவெ தவுந்து போச்சி.'

**தழஞ்சிருக்கு** : பயிர் நன்றாக வளருதல். 'பயிரு நல்லா தழஞ்சிருக்குது.'

**தளக்கமா** : இளக்கமாக. 'கவுத்தெ கெஞ்சொ தளக்கமா கட்டு.'

**தளயலு** : ஆடு, மாடுகளின் முன்னங் கால்களை இணைத்து போடப்படும் கட்டு. 'தளயலு போட்டுடு ஆடு மேயுட்டு இல்லின்னப அங்கியு இங்கியு ஓடிட்ட இருக்கும்.'

**தளுக்கு** : மிகையான கவர்ச்சி. 'இந்தத் தளுக்கு தளுக்கிகிட்டு போறா பாரு.'

**தளுவு சோறு** : கோயில் பூசையில் படைக்கப்படும் படையல். 'கோயில்ல தளுவு சோறு தர்றாங்க.'

**தளெக்கயிறு** : மரம் ஏறும்போது இரண்டு கால்களையும் சேர்த்துக் கட்டப்படும் கயிறு. 'தளெக்கவுத்த நல்லா இறுக்கிக்க.'

**தறிச்சுப்போடு** : வெட்டுதல். 'ஆகாத வேலயெல்லா செஞ்சீனா கைய தறிச்சிப் போடுவ.'

**தறுதலெ** : பொறுப்பும், கட்டுப்பாடும் இல்லாமலும் ஊர் சுற்றித் திரிபவன். 'அவனே ஒரு தறுதலெ.'

**தன்னப்பாட்லெ:** தனக்குத்தானே. 'தன்னப்பாலெ பேசிட்டு இருக்கறான்.'

**தன்னப்பாலெ** : காண்க. தன்னப் பாட்லெ.

**தனிக்கட்டெ** : தனியாக வாழ்பவர். 'நானே தனிக்கட்டெயா இருக்குறெ.'

## தா

**தாக்குப்புடி:**சமாளித்துக் கொள்ளுதல். 'அவெ என்ன கஷ்டம்னாலு தாக்குப் புடிப்பெ.'

**தாங்கு** : பிடித்தல். 'செல்லங் குடுத்து இந்த தாங்கு தாங்கறியே.'

**தாட்டி** : தடவை. 'எத்தனதாட்டி உனக்கு சொல்றது.'

**தாட்டி உட்டுட்டு :** அனுப்பி வைத்து விட்டு. 'பொறு இவன வேலெக்கி தாட்டியுட்டுட்டு வர்ற.'

**தாட்டு** : அனுப்பு. 'இவன தாட்டியுடு மொதல்ல.'

**தாட்டுமை** : ஆளுமைத் தன்மை.

**தாண்டுகொணொ** : மந்திரித்து வைத்ததை தெரியமால் மிதிக்கும்போது காலில் ஏற்படும் புண். 'கால்லெ தாண்டு கொணொ வந்து நடக்கவே முடிலெ.'

**தாதரா** : ஒரு வகை களைச்செடி. 'காட்டுக்குள்ளாறெ தாதரா நெறஞ்சி கெடக்குது.'

**தாம்பு ஓட்றது :** தானியப்பயிர்களைப் பரப்பி அதன் மேல் மாடுகளை நடக்க விடும் போது தானியங்கள் தனியாகவும், செடிகள் தனியாகவும் பிரியும். 'உளுந்துக்கு தாம்பு ஓட்டணும்.'

**தாம்புக்கண்ணி** : போரடிக்கும் களத்திலுள்ள மாடுகளின் பிணைக் கயிறு. 'தாம்புக்கண்ணி நல்லா இறுக்கியுடு.'

**தாம்புக்கவுறு** : காண்க. தாம்புக்கண்ணி.

**தாம்பு மாடு** : தானியப்பயிர் போரடிப்பதற்கு பயன்படும் மாடு. 'தாம்பு மாட்டுக்கு வாக்கூடைய மாட்டு.'

**தாயக்கரொ** : தாயம் விளையாடும் கரம். 'தாயக்கரொ அழிஞ்சிருச்சி நல்லா போட்டுடு.'

**தாயத்து** : மந்திரித்த பொருளை அடைத்து வைக்கும் நீண்ட உலோகக் குப்பி. 'காச்ச குளுரு வந்து தாயத்து மந்திரிச்சு கட்டுன செரியாப் போச்சு.'

**தாயொ** : தாயம் விளையாட்டில் ஒன்று போடும் எண்ணிக்கை. 'ஒரு தாயொ உழுந்தா செயிச்சுருலா.'

**தாயொக்கட்டெ** : நான்கு பக்கமும் புள்ளிகள் பொறிக்கப்பட்ட வெவ்வேறு எண்ணிக்கையை கொண்ட செவ்வக வடிவிலான கட்டை. 'தாயக்கட்டெ எடுத்தா வெளையாடலா.'

**தார்** : வயலில் பல குண்டடல்கள் சேர்ந்தது ஒருதார்.

**தாரெ** : கால்சுவடு. 'இந்தபக்கம் யாரோ நடந்து போன தாரெ தெரீது.'

**தாவு** : இரு கையிலும் சேர்த்து அள்ளுவது. 'ரெண்டு தாவு பில்லு அள்ளி மாட்டுக்குப் போடு.'

**தாழ்மாடம்** : கதவிலிருக்கும் தாழ்ப்பாள் போய் சுவரில் பொருந்தும் பகுதி. 'தாழ்மாடத்துல நல்லா சொருகு.'

**தாழெ** : இறக்கிகட்டுதல். 'வேட்டியக் கொஞ்ச தாழக் கட்டு.'

**தாவாக்கொட்டெ** : வாய்க்கும், கழுத்துக்கும் இடைப்பட்ட பகுதி. 'தாவாக்கொட்டெய பேத்துருவ.'

**தானாவதி** : இருவீட்டாருக்கும் இடையில் சென்று திருமணத்திற்கு ஏற்பாடு செய்பவர். (இப்போதைய தரகர் போல. பணம் வாங்குவதில்லை). 'எங்கலியாணத்துக்கு அவருதா தானாவதியா இருந்தாரு.'

## தி

**திக்காலுக்கு** : திசைக்கு. 'திக்காலுக்கு ஒண்ணா போட்டு வெச்சி கெடக்குது.'

**திக்குமுக்கு** : திசை. 'திக்குமுக்குத் தெரியாம நானு முழிச்சிகிட்டு இருக்க.'

**திக்குவாயி(திக்கி)** : வாய் சரியாக பேச முடியாமல் திக்கி திக்கி பேசுதல். 'திக்குவாயங்கிட்ட பேச முடியாதுடோய்.'

**திட்டி** : கண் திருஷ்டி. 'கொழந்தைக்கி திட்டி பட்டுருச்சு சுத்திப் போடனும்.'

**திட்டு** : சிறு மண் மேடு. திட்டு மேல பாரு. வசை. 'அவன ஏண்டா திட்டி கிட்டே இருக்க.'

**திடுதிடுனு** : வேகமான சத்தத்துடன். 'தண்ணி திடு திடுன்னு வந்துச்சு.'

***திடுதிப்புனு*** : திடீரென்று. *'திடு திப்புனு இப்பிடி மாலையுங் கழுத்துமா வந்து நிக்கிறியே.'*

***திடுமுட்டி*** : ஊருக்கு ஒரு விசயத்தை அறிவிக்க தொடைக்கு நடுவில் வைத்து அடிக்கும் இசைக் கருவி. *'திடுமுட்டி அடிக்கிறாங்க என்ன விசயம்னு தெரில.'*

***திண்டுமல்லெ*** : உருவத்தில் பெரியவன். *'ஒரு வேலக்கிமு ஆகமாட்டான்டா திண்டுமல்லெ.'*

***திப்பி*** : மாவு இடிக்கும் போது இடிபடாமல் இருக்கும் கெட்டியான மாவு. *'மாவுல ஒரே திப்பியா இருக்குது.'*

***திமிசுக்கட்டை*** : தரையை சமப்படுத்த கனமான அடிப் பாகத்தைக் கொண்ட நீண்ட கைப்பிடியுள்ள கருவி.

***திரகை*** : மண் சட்டியை வைக்கும் திரவைக் கொடியால் பின்னப்பட உருளை.

***திராணி*** : வலு. *'நானே திராணியத்து கெடக்கற.'*

***திரீது*** : திரிதல். *'அங்கீஇங்கீ சுத்தீட்டு திரீது.'*

***திருகாணி*** : 8 வடிவிலான இரும்பு வளையம். *'திருகாணிய கவுத்துல கட்டியுடு.'*

***திருகினி*** : கொலுசு கழண்டு விடாமல் இணைக்கும் ஆணி. *'திருகினிய நல்லா திருகியுடு.'*

***திருகினிசங்கிலி*** : ஆட்டின் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை இணைக்கும் திருகும் சங்கிலி.

***திருகினிச்சொம்பு*** : திருகி மூடும்படி மேல் மூடி அமைந்த சொம்பு. *'திருகினிச் சொம்புல டீ வாங்கியா.'*

***திருவாத்தெ*** : முட்டாள். *'எங்கியோ திருவாத்தனா இருக்கறான்டா.'*

***திலுப்பு*** : திருப்பு.

***திறவைக்கொடி*** : பிரம்பு, கொடிகள் போன்றவற்றால் பின்னப்பட்ட பிரிமனை. *'இந்தக் கொடியில ரெண்டு திரவ பின்னிரலா.'*

***தின்னீரு*** : திருநீறு. (சாம்பல்). *'தின்னீ ரெடுத்து பட்டெ போட்டுக்க.'*

***தின்னு*** : சாப்பிடு. *சோறு தின்னுட்டுப் போ.*

***தினுசா*** : ஒருமாதிரி. *'என்னொ ஒரு தினுசா பாக்குறே.'*

## தீ

***தீஞ்சுபோச்சு*** : கருகிப்போயிற்று. *'சாத்தெ அடுப்பலெ வெச்சு எல்லாந் தீஞ்சு போச்சு.'*

***தீஞ்சோறு*** : சட்டியின் அடியில் கருகிய சாப்பாடு. *'தீஞ்சோறு இருந்தா எடுத்துப் போடு.'*

***தீட்டூடு*** : இழவு வீடு. *'தீட்டுட்டுக்கு போய்ட்டு வந்த.'*

**தீட்டுச்சோறு** : இழவு வீட்டிலும், பூப்பு நன்னீராட்டு விழாவிலும் பரிமாறப் படும் சோறு. 'தீட்டுச்சோறு தின்னா சேராது.'

**தீத்தொ:** கோயில்களில் கொடுக்கும் புனித நீர். 'தீத்தொ வாங்கிக்கெ.'

**தீந்துபோச்சு** : தீர்ந்துவிட்டது. 'எனக்கே பத்துலெ எல்லாந் தீந்து போச்சி.'

**தீந்துருமாட்டொ:** தீர்ந்துவிடும் போல்.

**தீப்பாஞ்சம்மன் :** தீயில் பாய்ந்து தன் உயிரை நீத்துக் கொண்ட பெண்ணின் நினைவாக அப்பெண்ணின் உருவத்தை வைத்து வழிபடுதல். 'தீப்பாஞ்சம்மெங் கோயிலுக்கு போயிட்டு வரோனு.'

**தீருமாட்டொ** : காண்க. தீந்துருமாட்டொ.

**தீவட்டி** : தீப்பந்தம். 'தீவட்டி புடிச்சிகிட்டு சுடுகாட்டுக்கு போறாங்க.'

**தீவொ :** தீபம். 'தீவத்த எடுத்து மின்னாடி வெய்யி கரண்டு போச்சுன்னா பத்த வெச்சுக்கலா.'

**தீவாளி** : தீபாவளி. 'தீவாளிக்கி புதுத்துணி எடுக்கோணு.'

## து

**துக்கிலியூண்டு** : மிகச்சிறியது. 'துக்கிலியூண்டு சுண்ணாம்பு குடு.'

**துச்சனகாரெ** : கெடுதி செய்பவன். 'துச்சனகாரெனா இருக்காம் பாரு.'

**துத்தாரி** : அறுப்புக் காலத்தில் எல்லோரையும் எழுப்ப ஊதப்படும் கருவி. 'துத்தாரி ஊதியாச்சு எந்திரி.'

**துப்பட்டி** : போர்வை. 'துப்பட்டியெ நல்லா காயப்போடு.'

**தும்பி** : நீர் ஏற்றக்கூடையில் இருக்கும் தோலால் ஆன பகுதி. 'தும்பியெ நல்லா இழுத்துக்கட்டு.'

**தும்பிக்காது** : நீர் ஏற்றக் கூடையில் கயிறு கட்ட வைத்திருக்கும் வளையம். 'தும்பிக்காது வேற அந்து போச்சு.'

**தும்பு** : ஆடுகளை கயிற்றோடு சேர்த்து கழுத்தில் கட்டும் சிறு கயிறு. 'தும்ப தட்டியுடு ஆடு மேயுட்டு.'

**துலக்கமல்லி** : ஒரு வகைப் பூ. 'துலக்கமல்லி தலயிலெ வெக்கக் கோடாது.'

**துவலை** : வேப்பிலை, மரிக்கொழுந்து, திருநீர்பத்திரி போன்றவை கலந்த கலவை. குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்புக்காக குளிக்கப் பயன்படுத்துவர்.

**துவையலு** : சாப்பாட்டில் உப்பில்லாமல் செய்தல். 'இன்னிக்கி சோறு துவையலா செஞ்சிருக்க.'

**துள்ளுகெடாய் :** வெட்டுக்கிளி.

**துளியூண்டு** : மிகச்சிறியது. 'துளியூண்டு வெத்தல குடு.'

## தூ

**தூக்குப்போசி:** கையில் பிடிக்கும் வளையம் உடைய பாத்திரம். 'தூக்குப் போசில சோத்தப் போட்டுக் குடு.'



தூக்குப்போசி

**தூத்துக்கூடை :** எள் போன்றவற்றில் உள்ள குப்பைகளை தூற்றுவதற்கு பயன்படும் கூடை.

**தூதாளு :** தூதுசெல்பவர். மரணமடைந்த நிகழ்வை அண்டை ஊரில் போய் கூறுபவர்.

**தூரந்தொலெ :** அதிக தூரம். 'தூரந்தொலெ அதிகமா இருக்குது எப்பிடி போறது.'

**தூரிக்கல்லு :** கோயிலில் நிறுத்தப் பட்டிருக்கும் கல்லால் ஆகிய ஊஞ்சல். 'கோயில்ல தூரிக்கல்லு இருக்குது.'

**தூவானம் :** ஆற்றில் வற்றாத இடம்.

**தூறி :** ஊஞ்சல். 'குழந்தைய தூறில போட்டு ஆட்டியுடு.'

## தெ

**தெக்காலெ :** தெற்குத்திசை. 'தெக்காலெ வரப்பு ஒடஞ்சிருச்சு பாரு.'

**தெக்குமின்னா :** தெற்குப்பார்த்து. 'தெக்குமின்னா தலவெச்சி படுத்து தூங்காதெ.'

**தெக்கோட்டுலெ :** தெற்குத்திசை மூலை. 'தெக்கோட்டுலெ பாரு கொத்து இருக்குது.'

**தெக்கோனு :** தைக்க வேண்டும். 'எனுக்கு துணி தெக்கோனு.'

**தெச்சுக்குடுங்கோ :** தைத்துக் கொடுங்கள். 'நடராஜ் அண்ணா என்ற சட்டெயெ கொஞ்சொ சீக்கிரமா தெச்சுக்குடுங்கோ.'

**தெட்டுப்பட்டவன் :** பலே கில்லாடி. 'சுத்தெ தெட்டுப்பட்வெம்போலத் தெரீது.'

**தெண்டச்சோறு :** எந்த வேலையும் செய்யாமல் சாப்பிட்டு விட்டு ஊரைச் சுற்றுபவர். 'தெண்டச்சோறு தின்னே பொழப்பு ஓடுது.'

**தெண்டத்துக்கு :** விரையத்திற்கு. 'தெண்டத்துக்கு எல்லா செலவும் பண்றது.'

**தெணாசு :** மாட்டின் மேலிருக்கும் ஒரு வகை ஈ. 'தெனாச அடி ரத்தத்த உறிஞ்சுது பாரு.'

**தெப்புத்தேறாது :** பயன்படாது. 'இது கொஞ்சங்கூட தெப்புத் தேறாது.'

**தெம்பொறெ :** காண்க. தெக்காலெ.

**தெய்யக்கூலி :** தைத்த கூலி. 'தெய்யக் கூலி குடுத்தாத்த சட்டய குடுப்ப.'

**தெரக்கா :** வேகமாக. 'தெரக்கா வேல நடக்குதோட்ட இருக்குது.'

**தெராச்செ :** திராட்சை. 'இந்தொ வருஷொ தெராச்செ நல்லொ வெளச்சலு.'

**தெரட்டிசீரு :** பூப்பு நன்னீராட்டு விழா. 'பொண்ணுக்கு தெரட்டி சீரு வெச்சிருக்கெ வந்துருங்கெ.'

**தெரீமே :** தெரியும். 'எனக்கெல்லாந் தெரீமே.'

**தெரீலெ :** தெரியவில்லை. 'எனக் கொண்ணுந் தெரீல.'

**தெவசம் :** இறந்தவர்கள் நினைவாக செய்யும் ஈமச்சடங்கு. 'எங்க தாத்தாவுக்கு தெவச வெச்சிருக்கற போகோனும்.'

**தெவட்டுது :** இனிப்பு சாப்பிடும்போது ஏற்படும் சுவை. 'லட்டு தின்னு ஒரே தெவட்டுது.'

**தெவண்டு :** துவண்டு. 'நாக்கு தெவண்டு போச்சு தண்ணித் தாகொ அடிக்குது.'

**தெள்ளவாரி :** பெண்களை கிண்டல் செய்து கொண்டு ஊர் சுற்றும் வாலிபன். 'எங்கியோ தெள்ளவாரியா இருப்பாம் போல.'

**தெள்ளுக்காய் வெளையாடறது :** நொண்டி விளையாடுதல். 'தெள்ளுக்கா வெளயாடலா வர்றியா.'

**தெளுவு :** பதநீர். 'வெடியாலெ வெறுவவுத்துலெ தெளுவு குடிச்சா ஒடம்புக்கு நல்லது.'

**தெறொ :** திற. 'கதவொக் கொஞ்சொ தெறொ.'

**தெறொம்பாக்கறது :** ஒருவரது திறமையை சோதிப்பது. 'என்னீவே தெறொம்பாக்கிறியா.'

**தென்னந்தடுக்கு :** தென்னை ஓலையால் பின்னப்பட்ட கீற்று. 'தென்னந்தடுக்க எடுத்துப் போட்டு உக்காரு.'

**தென்னமட்டெ :** தென்னை ஓலை. 'தீ எரிக்க தென்னமட்டெ வாங்கணும்.'

**தெனத்திக்கி :** அனுதினமும். 'தெனத்திக்கி இவனுக்கு இதே வேலயாப் போச்சு.'

**தெனஞ்சோறு :** தினை அரிசியில் செய்யப்பட்ட சோறு. 'தெனஞ்சோறு தின்னு தின்னு ஒடம்புலெ பலொ ஏறிருச்சி.'

**தெனோமு :** காண்க. தெனத்திக்கி.

## தே

**தேங்காத்தொட்டி :** தேங்காய் மூடி. பருப்பை எடுத்தபின் இருக்கும் ஓடு. 'தேங்காத் தொட்டிய எடுத்துப்போட்டு தீ நல்லா எரிய்யு.'

**தேஞ்சுபோச்சு :** தேய்ந்துபோதல். 'செருப்பு தேஞ்சுபோச்சு வேறொன்னு எடுக்கணும்.'

**தேட்டொ :** விருப்பம். 'எனுக்கு அதுல ரொம்ப தேட்டொமா இருக்கு.'

**தேர் கட்றெது :** மூங்கிலினால் தேர் போல கட்டப்பட்ட பாடையில்

இறந்தவர்களின் உடலை எடுத்துச் செல்வது. இறந்தவர்களின் மகள் தான் இதைச் செய்வர்.

**தேரைப்புள்ளே :** குழந்தை நன்றாக ஊறாமலிருந்தால் தேரை எனும் ஒருவகை நோய் ஏற்படும் இதற்கு உடம்பில் சூடு வைப்பர்.

**தேவுலெ :** பரவாயில்லை. 'ஒடம்புக்கு இப்பத் தேவுல.'

## தை

**தைநோம்பி :** பொங்கல் பண்டிகை. 'தைநோம்பிக்கி எங்கொ பட்டிலெ பொங்கலு வெக்கோனு.'

## தொ

**தொக்கடா :** தோட்டத்தில் ஆடு, மாடுகள் செல்லாதவகையில் மனிதர்கள் மட்டும் செல்லும் வகையில் சிறிய வழி செய்தல். 'காட்டுக்குள்ளெ ஆடு, மாடு பூதாமெ தொக்கடா போட்டு வெக்கோனு.'

**தொங்குவாது :** மரத்தில் ஏறி விளையாட ஏதுவாக கீழே வளைந்திருக்கும் வாது. 'தொங்குவாதுல தொங்காத.'

**தொசக்கான்:** குண்டாக இருந்தாலும் உடல் பருமனற்று இருத்தல். 'எங்கியோ தொசக்கானா இருக்குற.'

**தொசுக்குனு :** முடியாமல் கீழே விழுதல். 'தொசுக்குனு வுழுந்துட்டெ.'

**தொட்டகட்டறது :** குழந்தை வேண்டி கோயிலில் உள்ள மரத்தில் தொட்டிலை போன்று சிறு உருவம் மரத்தில் செய்து கட்டுதல். 'கோயில்லெ தொட்டகட்டோனு'

**தொட்டு :** 1.வேலிச் செடியை வெட்டி ஒன்றாக கட்டுதல். 'காட்டுலெ தொட்டு கட்டி பரம்படிச்சுடோனு.' 2. காய்கறிகளின் மேற்புறத்தில் காம்பை ஒட்டியுள்ள பகுதி. 'கத்தரிக்கா தொட்டு எடுத்துப் போட்டுட்டு தின்னு.'

**தொட்டெசீலெ :** தொட்டில் கட்டும் சேலை. 'தொட்டெ சீலெய எடுத்தா கொழந்திக்கி தொட்டெ கட்டலா.'

**தொட்டெகொக்கி :** தொட்டில் கட்ட பயன்படும் இரும்பு கொக்கி. 'தொட்டெ கொக்கிலெ தொட்டலெ போடு.'

**தொட்டிகட்டுஊடு :** தொட்டி போன்று நான்கு புறமும் வீடும், அதற்கு நடுவில் உள்ள காலி இடமும். வெயில் அடித்தாலும் மழைபெய்தாலும் வீட்டிற்குள் விழும். 'தொட்டி கட்டு ஊட்டுக்குப் போனெ.'

**தொடுப்பு :** கள்ள உறவு. 'அவகிட்டெ உனக்கென்ன தொடுப்பு.'

**தொண்டுப்பட்டி :** மாடுகட்டும் தொழுவம் தீவனப்போர், சிறு பொருட்கள் வைக்கும் குடிசை போன்ற அமைப்பு. 'தொண்டு பட்டியில பாரு கொடமிருக்கு.'

**தொண்டுமுட்டி :** எருமையோ, மனிதனோ தப்பி ஓடாதிருக்க முன்னங் கால்களுக் கிடையே கட்டப்படும் முட்டி 'எருமைக்கு தொண்டுமுட்டி கட்டியுடோனு.'

**தொணந்தொணன்னு** : திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருத்தல். *'தொணந் தொணன்னு ஓயாம பேசிக் கிட்டே இருக்காத.'*

**தொணெப்பொண்ணு** : மணமகனின் தங்கை. *'தொணெப் பொண்ணெக் கூப்புட்டு பக்கத்துலெ உக்காரெ வெய்யிங்கெ.'*

**தொணெமாப்ளெ** : மணமகளின் சகோதரர். *'மொதல்லெ தொணெ மாப்ளெயெ கூப்புட்டு உக்கார வெய்யிங்க.'*

**தொப்பக்கட்டெ** : மாட்டு வண்டியின் இருசுப் பகுதியையும், பார் பகுதியையும் இணைக்கும் பருத்த மரக்கட்டை.

**தொம்பை** : தேவையற்ற பொருட்களை வைக்க மூங்கிலால் பின்னப்பட்ட பெரிய கூடை. *'தொம்பைல பாரு அழுக்குத் துணி இருக்கு.'*

**தொரத்தீட்டு** : துரத்திக்கொண்டு. *'இப்படி தொரத்தீட்டு வெளெயாண்டீங்னா கீழெ உளுந்தரோனு.'*

**தொரலை** : காய்கறிகளின் மேலிருக்கும் தோல். *'ஆரஞ்செ தொரலை உறிச்சித் தின்னு.'*

**தொலாவு** : தேடு. *'எல்லாப் பக்கமு தொலாவிப் பாத்த கெடக்கில.'*

**தொலை** : ஏற்றம் உள்ள கிணற்றுப் பகுதி. *'தொலையில போயி நிக்காத உளுந்துருவ.'*

**தொவட்டோனு** : துவட்டுதல். *'தல ஈரமாயிருச்சு தொவட்டோனு இல்லனா சளி புடிச்சுக்கி.'*

**தொவண்டு** : காண்க. தெவண்டு.

**தொவயலு** : சட்னி. *'இட்டிலிக்கி தொவயெலு செய்யோனு.'*

**தொவரெம்பருப்பு** : துவரம்பருப்பு. *'இன்னிக்கி தொவரம் பருப்பு கொழம்பு.'*

**தொவுரு** : கோணப்புளியங்காயின் பிஞ்சில் முதிர்ந்த நிலை. *'கோணப் புளியங்கா தின்னு தொவுரு தொண்டய புடிக்குது.'*

**தொவைக்கோனு** : துணியை துவைத்தல். *'துணி ஒருமோழி சேந்துருச்சு தொவைக்கோனு.'*

**தொளக்குழி** : கிணற்றினுள் ஏற்றச்சால் வந்து நீர் மொள்ளும் பகுதி. *'தொளக் குழியில முக்கி மண்ணெடு பாக்கலா.'*

**தொளதொளன்னு** : இறுக்கமாக இல்லாமல் தளர்வாக இருப்பதைக் கூறுவது. *'சட்டையெ தொளதொளன்னு தெச்சி வெச்சிட்டாங்கெ.'*

**தொளிக்கோனு** : தெளிக்க வேண்டும். *'வாசலெ தொளிக்கோனு.'*

**தொறந்துபோட்டுட்டு** : திறந்து வைத்து விட்டு. *'ஊட்டெ தொறந்து போட்டுட்டு எங்க போனாங்கனு தெரியில.'*

***தொறப்பு :*** பூட்டு. 'வூட்டுக்கு தொறப்ப போடு.'

***தொறப்புக்கையி :*** சாவி. 'தொறப்புக் கையெ தொளச்சிப் போடாதெ.'

***தொன்னு :*** தொணதொணவென்று பேசுதல்.

## தோ

***தோண்டிக்கொடொ :*** மண், பிளாஸ்டிக் அல்லது உலோகத்தால் ஆன குடம். 'தோண்டிக்கொடொத்துல தண்ணி யெடுத்துட்டு வா.'

***தோணி :*** இரு கூரைகளுக்கிடையில் தண்ணீர் ஓடுமாறு தகட்டால் அமைப்பது. 'தோணி கட்டியுடு ஊட்டுக்குள்ளெ தண்ணி உழுகுது.'

***தோது :*** சரியாக இருந்தால். 'தோதுப் பட்டா பாக்கலா.'

***தோரணை :*** மிரட்டும்படியான. 'ரொம்பவுந் தோரணை பண்ணாதெ.'

***தோல்மொட்டு :*** கால்சியம் பற்றாக் குறையினால் மேல்ஓடு இல்லாமல் கோழி வைக்கும் மொட்டு.

***தோலாந்துருத்தி :*** எந்தவித தகுதியும் இல்லாதவர்கள். 'தோலாந்துருத்தியெல்லாம் எனக்கு ஓசனெ சொல்லொ வந்துட்டாங்க.'

## ந

***நகநட்டு :*** நகைகள். 'நகநட்டு போட்டுகிட்டு வரவேண்டியது தானெ.'

***நகாப்பழொ :*** நாவல் பழம். 'நகாப் பழொந் தின்னா ருசியா இருக்கு.'

***நங்குபாக்கறது :*** சாப்பிடலாமா வேண்டாமா என்று யோசனை செய்வது. 'இந்தொ நங்கு பாக்கற வேலெயெல்லா வேண்டா.'

***நங்கெயா :*** அண்ணனின் மனைவி. 'உங்க நங்கயா எங்க போயிருச்சு.'

***நச்சீட்டு :*** தொந்தரவு செய்தல். 'ஏ இப்பிடி நச்சிட்டு இருக்கெ கம்முனிரு.'

***நச்சுத்தீனி :*** அடிக்கடி தின்னும் திண்பண்டம். 'நச்சுத் தீனி திங்கறதே வேலயாப் போச்சு.'

***நசவல்வேலெ :*** 'இந்த அகராதி தொகுக்குறது ஒரு நசவல்வேலடா சாமி.'

***நஞ்சு :*** ஆடு, மாடுகள் ஈன்ற சிறிது நேரம் கழித்து போடும் உதிரமும் சதையும் கலந்த கொடி. 'ஆடு நஞ்சத் தின்றப் போவுது.'

***நட்டொ :*** 1. செங்குத்து. 'படி இவ்ளோ நட்டொமா இருக்கு.' 2. இழப்பு (நஷ்டம்). 'பண நெறய நட்டொமாப் போச்சு.'

***நட்டாநடுவுலெ :*** மையப்பகுதியில். 'நட்டாநடுவுல போயி உக்காந்துகிட்டெ.'

***நடக்கதவு :*** எதிரெதிராக அமைந்த வீடுகளுக்கு பொதுவாக அமைந்து இருக்கும் வழி. 'நடக்கதவெ நல்லா சாத்து.'

**நடவண்டி :** சிறு குழந்தைகள் நடை பழகும் சிறிய கட்டையால் ஆன வண்டி. 'கொழந்திக்கி நடவண்டி செஞ்சு குடுக்கனும்.'

**நடுவாலெ :** நடுவில். 'நட்டா நடுவுலெ போயி உக்காந்துகிட்டு என்ன பண்றெ.'

**நடுவலவெ :** தனக்கு முன் அண்ணன், பின்பு தம்பி பிறந்ததற்கு இடையில் பிறந்தவன். 'நடுவலவெ எங்க போயிட்டான்.'

**நடப்பெ :** மூவருக்கும் இடையில் பிறந்தவர். 'எங்க நடப்பெ வேலக்கி போயிட்டாரு.'

**நத்து :** ஏக்கம் கொள்ளுதல். 'இப்பிடி நத்து புடிச்சு அலையற.'

**நப்பாசை :** ஒன்றை நினைத்தால் அதை அடைய வேண்டும் என்ற ஆசை. 'ஊருக்கு போகனும்னு ஒரே நப்பாசையா இருக்குது.'

**நப்பு :** நிரப்பு. 'இந்த தொட்டிலெ தண்ணி நப்பு.'

**நம்புனுதுக்கு :** நம்பியதற்கு. 'உன்னிய நம்புனுதுக்கு கம்முனு இருந்துருக்கலா.'

**நம்புனுது :** நம்பியது. 'உன்னெ நம்புனுது வெனெயா போச்சு.'

**நம்புனசெனை :** மாடுகள் ஏழு அல்லது எட்டு மாத சினையாக இருக்கும் மாடு.

**நம்பொ :** நம்முடைய. 'நம்பொ ஊருலெ அடுத்த வாரொ நோம்பி.'

**நம்முளுக்கு :** நமக்கு. 'இந்தெ வேலெயே நம்முளுக்கு வேண்டான்டா சாமி.'

**நமச்சல் :** அரித்தல். 'உடம்பெல்லா ஒரே நமச்சலா இருக்கு.'

**நரகல் :** மலம். 'நரகலெ மிதிச்சிகிட்டு வந்துட்டானோட்டொ தெரீது நாருது.'

**நரிக்கல்லு :** ஜிப்சம் தயாரிக்கப்படும் கல்.

**நல்லால்லெ :** நன்றாக இல்லை. 'இந்த துணி ஒனக்கு நல்லால்லெ.'

**நல்லபாம்பு :** தலையை உயர்த்திப் படம் எடுத்துச் சீறக்கூடிய விஷப்பாம்பு. நாகப்பாம்பு. 'நல்லபாம்பு ஆளு போயிச் சேந்துட்டான்.'

**நல்லபுள்ளெ நாச்சி:** கேலியாகக் கூறும் சொல். செய்யறதையுஞ் செஞ்சுட்டு 'நல்லபுள்ளெ நாச்சியோட்ட உக்காந்து இருக்காம் பாரு.'

**நல்லவார்த்தெ :** திருமணத்தை உறுதி செய்யும் பேச்சு வார்த்தை. 'நல்லவார்த்தெ யெல்லா முடிச்சி கலியாணத்துக்கு தயாராயிட்டாங்கெ.'

**நலுங்குப்பொடி :** மஞ்சள், அரிசி மற்றும் தானிய வகைகளைச் சேர்த்து செய்த ஒருவகை பொடி. 'நலுங்குப் பொடி போட்டு குளி.'

**நவட்டமுடியாது :** ஒன்றும் செய்ய முடியாது.

**நவுத்துப்போச்சு** : ஈரத் தன்மையாதல். 'பொரி நவுத்துப் போச்சு.'

**நவுந்துபோ :** நகர்ந்து செல். மின்னாடி நவுந்து போயிகிட்டே இரு நிக்காத.

**நவுட்டுவிசாலொ :** சமாளித்தல். இந்த நவுட்டுவிசாலமெல்லா எங்கிட்ட வேண்டா.

**நவுண்டெ** : கீழ் உதடு. 'நவுண்டெ கடிக்காதெ.'

**நவுறமாட்டெ** : நகரமாட்டேன். 'இந்தெ எடத்த உட்டு நவுறமாட்டெ.'

**நறுவுசா :** சுத்தமாக. 'நறுவுசா எல்லா வேலையுஞ் செஞ்சு முடிச்சுரணும்.'

## நா

**நாட்டுக்கல் சீர்** : முதியோர் நினைவாக விழாக்களில் செய்யப்படும் சடங்கு.

**நாதாங்கி** : முன்கதவு பூட்டு இணைக்கும் நிலையுடன் இரும்பு வளையம். 'நாதாங்கிய நல்லா அடிச்சுடு.'

**நாந்தெ :** நான்தான். 'நாந்தெ உனுக்கு போனு பண்ணுனெ.'

**நாம்பிப் பிடி** : விரல்களை மடக்கி அழுந்தப் பிடித்தல். 'கைய நல்லா நாம்பிப் புடி.'

**நாமக்கல்** : நில அளவைக்காக அரசாங்கத்தால் நடப்படும் குறியீட்டுடன் கூடிய கல்.

**நாமளெ** : நாமே. 'நாமளெ அவனெ இப்பிடி பேசக்கொடாது.'

**நாய்த்தொளசி :** ஒரு வகை களைச் செடி. 'நாய்த் தொளசியெ புடிங்கியா கொசுவுக்கு பொகெ போடலா.'

**நாயொ** : பேச்சு. 'எப்பப்பாத்தாலு நாயொம் பேசிகிட்டே இருக்குறது.'

**நாயனொ** : நாதஸ்வரம். 'அந்தக் கல்யாணத்துல நாயனொக் கச்சேரி நடக்குது.'

**நாயுருஞ்சி** : ஒரு வகை மருந்துச் செடி.

**நாளானிக்கி** : நாளை மறுநாள். 'நாளானிக்கி வர்றன்னு சொல்லு.'

**நாறடி** : அசிங்கப்படுத்துதல். 'இந்த எடத்தெ இப்பிடி நாறடிச்சிட்டெ.'

**நாறப்பொழப்பு** : கேவலமான வாழ்க்கை. 'நாறப்பொழப்பு பொழக்கிறதுக்கு நாண்டுட்டு செத்துரலாம்.'

## நி

**நிக்குமாட்டொ :** நின்றுவிடும் போல். 'அங்ஙனெ நிக்குமாட்டொந் தெரீது.'

**நிது :** இது. 'நிது என்னன்னே தெரிலெ.'

**நிந்தநிது :** இந்த இது. 'நிந்த நிதயப் பத்தி கேள்விப்பட்டியா.'

**நிப்பாட்டு :** நிறுத்து. 'அந்த வேலய அப்பிடியே நிப்பாட்டு.'

**நிமிசோ :** நிமிடம். 'எத்தினி நிமிசோ ஒனக்காக நா காத்து கெடக்கறது.'

**நிமிண்டுதல் :** கிள்ளுதல். 'ரெண்டு நிமிண்டாலு குடுத்தா கம்முனு அடங்கிருவான்.'

**நிமுத்துநிமுத்துனு :** நெகிழ்த்துதல். 'நிமுத்துநிமுத்துனு நிமுத்திப் போட்டெ.'

**நிமுந்துநடொ :** நிமிர்ந்து நட. 'புதுப் பொண்ணோட்டோ குமுஞ்சுகிட்டே போகாத நிமுந்துநடொ.'

**நின்னுங்கெ :** பொறுத்திருங்கள். 'கொஞ்சொ நின்னுங்கெ.'

## நீ

**நீக்குபோக்கு :** ஒருவருடைய குணம், தன்மை அல்லது சூழ்நிலை முதலிய வற்றிற்கு ஒத்துப் போகிற விதம். 'நீக்குப்போக்கா நடந்துக்கனும்.'

**நீங்கெல்லா :** நீங்கள் அனைவரும். 'நீங்கெல்லா நாஞ்சொன்னா கேக்க மாட்டீங்கெ.'

**நீச்சத்தண்ணி :** பழைய சோற்றில் தண்ணீரை ஊற்றி வைத்து மறுநாள் காலையில் குடிப்பது. 'நீச்சத்தண்ணியி ருந்தாக் கொஞ்சங்குடு குடிக்கலா.'

**நீட்டம் :** நீளம். 'இவ்ளோ நீட்டமா இருக்குது.'

**நீத்தடி :** நீச்சல் அடித்தல். 'கெணுத்துத் தண்ணிலெ நீத்தடிப்பியா.'

**நீதிக்கல்லு :** ஆனைமலை மாசாணியம்மன் கோயிலில் கல் ஒன்று உள்ளது. தங்களுக்கு நீதி கிடைக்கும் பொருட்டு கல்லில மிளகாய் அரைத்து பூசுவர்.

**நீர்பிழிதல் :** இறப்பு சடங்கு.

**நீராகாரம் :** காண்க. நீச்சத்தண்ணி.

**நீவியுடு :** தடவுதல். 'ஒடம்ப நல்லா நீவியுடு.'

## நூ

**நூல்கவுறு :** நூலினால் செய்யப்பட்ட கயிறு. 'நூல்கவுத்தெ எடுத்தா கட்டறதுக்கு.'

**நூலாம்படை :** காண்க. ஒட்றை.

## நெ

**நெகக்கண்ணு :** விரல் சதையோடு ஒட்டியுள்ள நகப்பகுதி. 'நெகக் கண்ணுலெ அடிபட்டு வலிக்குது.'

**நெகசுத்து :** நகத்தை சுற்றிலும் வரும் புண். 'நகசுத்து வந்து வெரலுல வலிக்கிது.'

**நெகுலு :** காண்க. நெவுலு.

**நெசமா :** உண்மையாக. 'நெசமாவா சொல்றெ.'

**நெசந்தெ :** உண்மையாகத்தான். 'நாஞ்சொல்றது நெசந்தெ.'

**நெஞ்சகரிக்குது :** காண்க. இட்ரிப்பு.

**நெட்டெ :** விரலை மடக்கி அழுத்தினால் வரும் சத்தம். 'வெரல்லெ நெட்டெ பாரு எப்பிடி வருது.'

**நெட்டுக்குத்தலு :** நீளவாக்கில். 'படி நெட்டுக்குத்தலா இருக்குது.'

**நெடக்கலை :** நிலக்கடலை. 'நெடக்கலை புடிங்கியாச்சா'

**நெடீத்துக்கு :** நீண்டதூரம். 'இவ்ளோ நெடீத்துக்கு நிக்கிறாங்க.'

**நெத்திக்கட்டு தடி :** தடி விளையாட்டில் தன்னுடைய உயரத்திற்கு வைத்தி ருக்கும் கெட்டியான மூங்கில் குச்சி.

**நெத்திக்காசு :** இறந்தவர்களின் நெற்றியில் வைக்கப்படும் காசு.

**நெத்திச்சுட்டி:** நெற்றியில் அணியும் நகை. 'நெத்திச்சுட்டி ஒனக்கு நல்லா இருக்குது.'



நெத்திச்சுட்டி

**நெத்து :** நன்கு முதிர்ந்து மரத்தில் இருந்து தானாக விழுந்த தேங்காய். 'நெத்துக்காயா உழுந்து கெடக்குது.'

**நெமயூண்டு :** மிகச்சிறியது. 'நெமயூண்டு சுண்ணாம்புகுடு.'

**நெய்ப்பந்தொ :** இறந்தவர்களுக்கு பேரன்களால் செய்யப்படும் சடங்கு.

**நெரக்கா :** நிறைய. 'தண்ணிய நெரக்கா குடிச்சு வவுறு வலிக்குது.'

**நெரவு :** சமப்படுத்துதல். 'காட்டை நெரவியுடனு மேடுங்குழியுமா இருக்கு.'

**நெல்லுக்குத்தோனு :** நெல்லை அரிசியாக்க உரலில் போட்டு இடிப்பது. 'அரிசி தீந்து போச்சு நெல்லுக்குத்தோனு.'

**நெலம் :** நிலம். 'நெலத்துல யென்ன வெள்ளாம போட்டுருக்கெ.'

**நெலம்பூத்து போச்சு :** விவசாயம் செய்யாமல் இருக்கும் நிலத்தில் விரிசல் ஏற்படுதல். 'இந்தொ நெலத்துதுல ஒண்ணும் போடாமெ வுட்டு நெலம்பூத்துபோச்சு.'

**நெலம்பொலொ :** வீடு, வாசல், காடு கரை போன்ற சொத்துக்களை குறிப்பது. 'உனுக்குனு ஏதாச்சி நெலம்பொலொ இருக்குதா.'

**நெலவு :** கதவை மாட்டும் மரச்சட்டம். 'நெலவு மேலே பாரு தீவொ இருக்குது.'

**நெலாகாயற நேரொ :** நடு இரவில் நிலா நன்றாக தெரியும் நேரம். 'நெலாகாயுற நேரத்துலெ என்னெ பண்ணிட்ருக்கெ.'

**நெலாகெளம்பீருச்சு :** நிலவு தோன்றி விட்டது.

**நெலாவுக்கு சோறுமாத்தறது :** தைப்பொங்கல் முடிந்து பின் பவுர்ணமி வரும்வரை 15 நாட்களுக்கு நிலவுக்கு சோறு மாற்றுதல் நிகழ்ச்சி நடைபெறும். பெண்கள் கும்மியடித்து பாட்டுப் பாடி கொண்டாடுவர். 'நெலாவுக்கு சோறு மாத்தப் போலாமா.'

**நெவுலு :** நிழல். 'வெய்யில்ல ஏ நிக்கிற நெவுலுல போயி நில்லு.'

**நெளியறது :** சோத்த திங்க முடியாம 'தின்னுட்டு இப்பிடி நெளியறாம் பாரு.'

**நெளுவுசுளுவு :** வியாபார நுணுக்கங்களை கற்றுக் கொள்ளுதல். 'நெளுவு சுளுவு தெரிஞ்சிகிட்டா நல்லா ஏவாரம் பண்ணலா.'

**நெறக்கா :** நிறைய. 'படி நெறக்கா அள்ளிப்போடு.'

**நெறச்சுட்டு :** நிறைத்து விட்டு. 'இந்தொ தொட்டியெ தண்ணியெடுத்து நெறச்சுட்டுதே வேற வேலெ.'

**நெறநிமித்திமா :** நேருக்குநேராக. 'நெறநிமித்திமா எங்கிட்டியே பேசறாம் பாரு.'

**நெறமாசொ :** நிறைமாத கர்ப்பிணி. 'நெறமாசக்காரியப் போயி வேலெ வாங்கிட்டு இருக்கியே.'

## நே

**நேத்திக்கடெ :** வேண்டுதலின் பேரில் கடவுளுக்கு செய்வது. 'சாமிக்கி நேத்திக்கடெ செய்யோனு.'

**நேத்தெத்தநேரொ :** நேற்று இந்நேரம். 'நேத்தெத்தெநேரொ நானு வெளியூருல இருந்தெ.'

**நேத்தெல்லா :** நேற்று எல்லாம். 'நேத்தெல்லா ஒரே வேலெ.'

**நேந்து கலந்து :** கலந்தாலோசித்து. 'எல்லாரு நேந்து கலந்துட்டு அப்பறொ முடிவெடுங்கொ.'

**நேம்பி :** தானியங்களில் கலந்துள்ள தேவையற்ற பொருட்களை பிரித்தல். 'பாசிப்பயிறுல இருக்குறெ குப்பையெ நேம்பி வெய்யி.'

**நேர் எளசு :** தனக்கு அடுத்து உடன் பிறந்தவர். 'இவ யெனக்கு நேர் எளசு.'

**நேர்வாக்கு :** தலைமுடியை ஒதுக்கி நடுவில் நேராக வகிடெடுத்தல். 'இன்னிக்கி நேர்வாக்குல சீவியிருக்கெ.'

**நேரமாவிப்போச்சு :** நேரம் கடந்து விட்டது. 'நேரமாவிப்போச்சு நானு ஊட்டுக்கு கெளம்புறெ.'

**நேரமாவுலெ :** நேரம் ஆகவில்லையா. 'உனுக்கு பஸ்ஸுக்கு நேரமாவுலியா.'

**நேரமெ காலமெ :** சரியான நேரத்தில். 'நேரமெகாலமெ கெளம்புனாத்தா ஊடு போயி சேரமுடியி.'

## நொ

**நொக்கிட்டெ :** காண்க. சணக்கிட்டெ.

**நொகத்தடி :** வண்டி, ஏர் போன்றவற்றை இழுத்துச் செல்வதற்காக மாட்டின் கழுத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் நீண்ட தடி. 'நொகத்தடிய நல்லா இழுத்துக்கட்டு.'

**நொங்கு :** பனை நுங்கு. 'வெயிலுக்கு ரெண்டு எளநொங்கு தின்னா நல்லா இருக்கு.'

**நொட்டுக்கை :** இடைவிடாமல் எதையாவது செய்து கொண்டே இருப்பவர். 'நொட்டுக்கையெ வெச்சிகிட்டு சும்மாவே இருக்க மாட்டான்.'

**நொடி :** சாலையில் இருக்கும் குழி. 'ரோட்டுலெ ஒரே நொடியா இருக்குது எப்பிடி வண்டியோட்றது.'

**நொடுஞ்சு :** சிரமத்திற்கு ஆளாதல். 'நானே நொடுஞ்சுபோயி உக்காந்துருக்கறெ.'

**நொப்பொ :** நாக்குச் சுவை. 'கொழம்பு ரொம்ப நொப்பொமா இருக்கு.'

**நொம்பொ :** நிறைய. 'வவுறு நொம்பொ சோறு தின்னு வவுறு வலிக்கிது.'

**நொரண்டு :** ஏறுக்குமாறாய் பேசுதல். 'இந்தொ நொரண்டு பேசறதுலெ மட்டு கொறச்சலு இல்லெ'

**நொளஞ்சு :** புகுந்து. 'பாம்பு ஊட்டுக்குள்ள நொளஞ்சுருச்சு.'

**நொனைபேசறது :** வாய்க்குள்ளேயே முணுமுணுத்தல். 'என்ன நொனை பேசற எதாஇருந்தாலும் சொல்லு.'

## நோ

**நோக்காடு :** நோய். 'எப்பப் பாத்தாலு நோக்காடு புடிச்சிக்கிறது.'

**நோகாமா :** வேலை எதுவும் செய்யாமல் பலனை பெற நினைப்பது. 'நோகாம நோம்பு கும்புடோனும்னா முடியுமா.'

**நோகுது (நோவுது) :** வலித்தல். 'உனக்கென்ன நோகுது.'

**நோட்டம் :** ஒரு பார்வை பார்ப்பது. 'சும்மா ஒரு நோட்டமுட்டுட்டு வந்த.'

**நோம்பி :** திருவிழா. 'எங்கூருல மாரியாத்தா நோம்பு சாட்டியிருக்கு.'

**நோம்பி அழப்பு :** திருவிழாவிற்கு உறவுக்காரர்களைஅழைத்தல். 'நோம்பி அழப்பு சொல்லியுடணும்.'

**நோம்பி சாட்றது** : திருவிழாவை பறை அடித்து தெரிவித்தல். *'இன்னிக்கி நோம்பி சாட்றது பேசிக்கிட்டிருக்காங்கெ.'*

**நோவு** : உடல்நலம் சரியில்லாமல் போதல். *'நோவு வந்து ஒருவாரெரா ஆஸ்பத்திரியிலெ கெடந்தெ.'*

**நோவுச்சீவெ** : நோயாளி. *'ஆளு நோவுச் சீவெ புடிச்சிப் போய்ட்டாம் பாரு.'*

## ப

**பக்கக்கன்னு** : வாழை மரத்தின் அருகில் வளரும் சிறு கன்று. *'பக்கக்கன்னு இத்தாச் சோடு வளந்துருச்சி.'*

**பக்கத்தூடு** : பக்கத்துவீடு. *'பக்கத்தூட்டுக் காரனோடெ ஒரே தொல்லையாப் போச்சி.'*

**பக்கந்தெ** : அருகில்தான். *'பக்கந்தெ சீககிரொ போய்ட்டு வந்தர்றே.'*

**பக்கி** : ஒரு வகை பறவை. *'பக்கியா பறக்கறாம் பாரு.'*

**பக்கிட்டி** : வாளி. *'பக்கிட்டில தண்ணி புடிச்சா.'*

**பகுடு பேந்துரு** : காண்க. பவுடு.

**பகுமானமா** : பக்குவமாக. *'எவ்வளவு பகுமானமா வளத்தெந் தெரியுமா.'*

**பங்காளி** : தந்தையுடன் கூடப் பிறந்தவர்கள் ஆண் வழி உறவினர்கள். *'பங்காளிகளுக்குள்ளெ ஒரே பிரச்சினையா இருக்குது.'*

**பங்கும்பங்காளி** : காண்க. பங்காளி.

**பங்கிக்குடுத்துரு** : பங்கைப் பிரித்துக் கொடுத்தல். *'சொத்தெப் பங்கிக்குடுத்தர வேண்டீதுதானொ.'*

**பங்கொம்பேசாதெ** : ஒருவருடைய மரியாதைக்கு களங்கம் ஏற்படாதவாறு பேசுதல். *'அவரப் பத்தி பங்கொம் பேசாதெ.'*

**பச்சமாவு:** வேக வைக்காத மாவு பண்டம். *'பச்சமாவத் தின்னு வவுறு வலிக்குது.'*

**பச்சு பச்சுனு** : உடனடியாக. *'பச்சு பச்சுனு வேல முடிஞ்சிருச்சி.'*

**பச்செ** : பசுமை. *'பயிருகெ பச்செ புடிச்சிருச்சி.'*

**பச்சோந்தி** : தனது காரியம் ஆவதற்காக இடத்திற்கு தகுந்தாற் போல் பேசும் புத்தி உடையவன். *'அவஞ் செரியான பச்சோந்தி.'*

**பசக்குனு** : பசைபோல் ஒட்டிக் கொள்ளுதல். *'அப்பிடியே மனசுக்குள்ள பசக்குனு ஒட்டிகிச்சு.'*

**பசகெ** : சிறுவர்கள். *'ஒருவார்த்தெ சொன்னாக் கேக்கெ மாட்டாங்கெ இந்தப் பசகெ.'*

**பசப்புறது** : *'இந்த பசப்புற வேல யெல்லா வேண்டா.'*

**பசலி** : கிராமத்தில் விளைநிலம் பற்றிய கணக்குகளுக்கான ஓர் ஆண்டு.

**பசுவு :** சுடுமண் சிற்பம். மாரியாத்தா கோயிலுக்கு பசுவு செஞ்சு வெக்கிறதுனு வேண்டியிருக்க.

**பசையேனு :** பச்சை வர்ணத்தை அழுத்தமாகக் கூறுதல். 'காடு வெளஞ்சு பசையேனு இருக்குது.'

**பஞ்சப்பாட்டு :** வசதியாக இருப்பவர் ஏழ்மையாக இருப்பவர் போல் புலம்புதல். 'எப்பப்பாத்தாலு பஞ்சப் பாட்டு பாடிகிட்டே இருக்கான்.'

**பட்டங்கட்டறெது :** திருமணத்தின் போது மணமகளுக்கு நெற்றியில் தாய்மாமன் தங்கத்தாலான தகடு கட்டுவது. 'தாய்மாமனக் கூப்புட்டு பொண்ணுக்கு பட்டங் கட்டியுடுங்க.'

**பட்டா :** வண்டிச் சக்கரத்தின் சுற்றில் பொருத்தப்படும் இரும்பால் ஆன தட்டை வளையம். 'சக்கரத்துக்கு பட்டா போடனும்.'

**பட்டாவெட்டி டிராயர் :** காண்க. அண்டர்வாரு.

**பட்டி :** மேய்ச்சல் முடிந்தவுடன் அடைத்து வைக்கும் சிறு குடிசை போன்ற அமைப்பு. 'பட்டிலெ ஆட்டெ ஓட்டு.'



பட்டி

**பட்டிக்குடுசெ :** பட்டியில் காவலுக்கு இருக்கும் ஆட்கள் படுப்பதற்காக இருக்கும் குடில். 'பட்டிக்குடுசுலெ இன்னிக்கி யாரு படுக்கறா.'

**பட்டிகெடை :** ஆடு, மாடுகள் அடைத்து வைக்கும் இடம். 'பட்டிக் கெடையில ஆட்ட அடச்சி வெய்யி.'

**பட்டிநாய் :** ஆடுகள் அடைக்கும் பட்டிக்கு காவலுக்கு இருக்கும் நாய். 'குட்டி நாய் வந்தா பட்டிநாய் போயிரும்.' பழமொழி.

**பட்டிநோம்பி :** மாட்டுப் பொங்கல் திருநாள். 'பட்டிநோம்பிக்கி பொங்கலு வெக்கணும்.'

**பட்டிப்படலு :** ஆடு, மாடுகளை அடைக்கப் பயன்படும் மூங்கிலால் ஆன சதுர வடிவத் தடுப்பு. 'பட்டிப் படலு புதுசா செய்யணும்.'

**பட்டீலு :** ஓடு வேயும் முன் கூரையில் பொருத்தப்படும் பட்டையாக உள்ள மரக்கட்டை. 'பட்டீலு ஆணி வாங்கியா.'

**பட்டுளி :** மரம் செதுக்க உதவும் பட்டையான வாய்ப்பகுதி மிக அகலமாக இருக்கும் மர உளி. 'பட்டுளி எடுத்தா மரத்த செதுக்கலா.'

**பட்டிமாடு :** பட்டியில் அடைக்கப் படும் மாடு.

**பட்டியாளு நேரொ :** பட்டிக்கு காவல் காக்க ஆள் செல்லும் நேரம் (இரவு 10). 'பட்டியாளு நேரமாச்சு இன்னுந் தூங்கிலியா.'

**பட்டினிச்சோரு** : திருமணத்திற்கு முன் மணமக்களுக்கு மாமன்மார்களால் வைக்கப்படும் விருந்து.

**பட்டை** : வெற்றிலை கொடிக்காலுக்கு தண்ணீர் எடுத்துக் கொடுக்கும் மரத்தாலான தட்டு.

**படப்பு** : கடவுளுக்கு படைக்கும் சோறு. 'படப்பு போட்டு சாமி கும்படனும்.'

**படபடன்னு** : வேகமாக. 'ஏ இப்பிடி படபடன்னு பேசற.'

**படலு** : மூங்கில் அல்லது நொச்சி, அல்லது குச்சி அல்லது ஓலைகளை அடுக்கி தடுப்பு போல கட்டுவது. 'படலு ஒண்ணு கட்டி வெச்சாத்த ஆகு.'

**படிகெணுறு** : படிகளைக் கொண்ட கிணறு. 'அந்தக்காலத்துல நாங்க படிக்கெணுத்துலருந்து தண்ணி கொண்டு வந்தமாக்கு.'

**படியாளு** : தானியக் கூலிக்காக வேலை செய்பவர். 'இன்னிக்கி இன்னுமு படியாளு வல்லியா வேலக்கி.'

**படுகெடயா** : நடக்கமுடியாமல் நீண்ட நாட்கள் ஒரே இடத்தில் படுத்திருத்தல். 'அவுரு ரொம்ப நாளா படுகெடயாவே கெடந்தாரு.'

**படைக்காலு** : ஏர் உழும்போது உருவாகும் உழவுத் தடம். 'படைக்காலு படைக்காலா தண்ணியுடு.'

**பண்டுகிராமம்** : நான்கு அல்லது ஐந்து கிராமங்கள் ஒன்று சேர்ந்து அந்த ஊர் கட்டுமானத்தை காப்பற்ற ஒவ்வொரு வீட்டிற்கும் சிறு மாத வரி பெறுவது.

**பண்டுதொ** : வைத்தியம். 'ஒனக்கு பண்டுதம் பாத்தே நானு ஒரு வழியாயிட்ட.'

**பண்ணாட்டு** : பலதுறை அறிவு. 'பன்னாட்டுப் பண்றதே இவனுக்கு வேலயாப் போச்சு.'

**பண்ணாடி** : எஜமான். கணவன். 'பண்ணாடி ஊட்ல இருக்காரா.'

**பண்ணாமெ** : செய்யாமல். 'நீயி ஒண்ணும் பண்ணாமெ இருந்தீனாவே போது.'

**பண்ணீத்துலெ** : பண்ணையத்தில். 'பண்ணீத்துலெ கொண்டு போயி உன்னெ சேத்தியுடொனு.'

**பண்ணை** : காண்க. தவுட்டுத்தாழி.

**பண்ணைவாய் உருளை** : கபிலை ஏற்றத்தில் வால்கயிறு படக்கூடிய மர உருளை.

**பணிக்கம்** : எச்சில் உமிழும் கலம்.

**பத்தாததுக்கு** : பற்றாக்குறைக்கு. 'பத்தாதுக்கு அவனும் வந்து பேசிட்டுப் போறாம்பாரு.'

**பத்தாம்பசலி** : ஏதாவது ஒரு தவறை செய்துவிட்டு ஒன்றும் தெரியாதது போல் நடித்தல். 'செய்யறதையுஞ் வெஞ்சுட்டு பத்தாம்பசலியோட்ட உக்காந்திருக்காம் பாரு.'

**பத்தி :** ஊதுவத்தி. 'சாமிக்கி பத்தி பத்த வெய்யி.'

**பத்திரி :** அம்மை நோய்க்குத் தடவும் வேப்பிலையும் ஆமணக்கு விதையும் கலந்து அரைக்கப்பட்ட சாந்து. 'அம்மெ போட்டா பத்திரி அரைச்சுப்போடனும்.'

**பத்தினித்தலெ :** வேப்ப இலை. 'பத்தினித் தலெ புடிங்கியாந்து பொகை போடோனு.'

**பத்துப்போடு :** மூலிகை அல்லது மண் ஆகியவற்றை அரைத்து நெற்றியில் போடுதல். 'நெத்திக்கி பத்துபோடு தலைவலி நல்லாப் போகு.'

**பதம்பாக்கறியா :** ஒருவரிடமிருந்து கற்றுக் கொண்டதை அவரிடமே சோதித்தல். 'என்னீவே பதம் பாக்கிறியா.'

**பதம்புடிக்கிறது :** சானை பிடித்தல். 'கத்தியெ பதம்புடிக்கோனு.'

**பதரு :** உள்ளீடற்ற நெல். 'நெல்லுல பதரு அதிகமா இருக்குது.'

**பதவல் :** காடுகளுக்குள் தேவையில்லாமல் வளர்ந்து கிடக்கும் செடிகொடிகள். 'பதவல்ல போயி நிக்காத உள்ள பூச்சி புழுவு இருக்கு.'

**பதறி :** பயந்து கைகால் நடுங்குதல். 'ஊடு தீப்புடிச்சதினால நெஞ்சே பதறிப் போச்சு.'

**பதனஞ்சாங்கரொ :** பதினைந்து கட்டங்கள் போட்டு விளையாடும் ஆடுபுலிஆட்டம். 'கோயிலு திண்ணிலெ உக்காந்து பதனஞ்சாங்கரொ வெளயாடு வாங்கொ பாரு.'

**பதினெட்டாங்கரொ :** பதினெட்டு புள்ளிகளை கொண்ட கட்டம். ஆடு புலிஆட்டம். 'பதினெட்டாங்கரத்துல உக்காந்தா இவனுக்கு பொழுது போறதே தெரியாது.'

**பதுரு :** குற்றம். 'பதுரு சொல்றதே இவனுக்கு வேலயாப் போச்சு.'

**பந்தக்காலு :** திருமணச்சடங்கு. 'கல்யாணத்துக்கு பந்தக்காலு போட்டாச்சு.'

**பந்தல் போடுதல் :** திருமணம் போன்ற சுப காரியங்களுக்கு போடும் பந்தல். கொங்கு நாட்டில் மங்கலச் சொல்லாக உள்ளது. செட்டிநாட்டில் இறந்தவர் களுக்கு பந்தல் போடும் அமங்கலச் சொல்லாக வழக்கிலுள்ளது.

**பந்திப்பாய் :** உணவு உண்ண விருந்தினருக்கு விரிக்கும் அளவு குறைந்த பாய். 'பந்திப்பாயெ எடுத்துப் போடு சாப்பிடலா.'



பந்திப்பாய்

**பந்தொ :** தீப்பந்தம். 'பந்தொம் புடிக்கப் போவோனு.'

**பந்தொ புடிக்கிறது** : திருவிழா, இறப்பு போன்ற காரியங்களில் இரவு நேரத்தில் சலவைத்தொழிலாளர்கள் பிடிக்கும் தீப்பந்தம்.

**பம்பல்** : அறுவடைக்காலம். 'உங்க காட்டுல பம்பலு முடிஞ்சுருச்சா.'

**பம்பு** : தயங்குதல். 'என்ன இந்த பம்பு பம்பற.'

**பம்மாத்து** : வெறும் நடிப்பு, பொய்ச் செயல். 'இந்த பம்மாத்து வேலயெல்லா நம்மகிட்ட வேண்டா.'

**பய்யெ** : மெதுவாக. 'அப்பிடியே பய்யெ வா.'

**பயகெ** : காண்க. பசகெ.

**பயிராகுதல்** : கால்நடைகள் சினையாதல். 'அந்தப் பிரவெ பயிராயிருச்சா.'

**பரசல்** : சிறு படகு. 'ஏரிலெ பரிசலு ஓட்டுறாங்க.'

**பரம்படிக்கறது** : உழுதபின் கலப் பைக்குப் பதில் பலகையைப் போட்டு நிலத்தை சமமாக்குதல். 'வயிலுக்கு பரம்படிக்கோனு.'

**பரம்புப்பகலெ** : கலப்பைக்குப் பதிலாக கட்டும் நிலத்தை சம மாக்கும் பலகை. 'பரம்புப்பகலெய எடுத்துக்கட்டு.'

**பரவிடி** : பரவலாக. 'காடு பரவிடியா இருக்கு.'

**பருப்பாமுட்டி** : பருப்புக் கடையும் மத்து. 'பருப்பா முட்டிய எடுத்தா பருப்புக் கெடையலா.'



பருப்பாமுட்டி

**பருவகாரெ** : நெல் வயலை அறுவடை முடியும் வரை கவனித்துக் கொள்பவர். 'பருவகார வந்துட்டானா.'

**பல்லாப் பொழுதுக்கும்** : பகல் முழுவதும். 'பல்லாப் பொழுதுக்கும் வேலயே தீருல.'

**பல்லிப்பூட்டுத் தழை** : இந்தவகை தழையை ஆடு, மாடுகள் சாப்பிட்டால் இறந்துவிடும். 'பல்லிப் பூட்டுத் தழைய மாடு மேஞ்சரப் போவுது.'

**பலதியு** : பல பிரச்சினைகளையும். 'பலதியும் போட்டு மனசுக்குள்ளெ கொழப்பிக்காதெ.'

**பலபலனு** : பரவலாக. 'பலபலனு அப்பிடியே எல்லாத்தியும் போட்டு வெச்சிருக்குது.'

**பவுடு** : முகத்தின் கீழ்ப்பகுதி. தாடை. 'அடிச்சன்னா பவுடு பேந்துரு.'

***பவுசு :*** மரியாதை. 'என்ற பவுசே போச்சு.'

***பழசுபட்டரெ :*** பழையது. 'பழசுபட்டரெ இருநதா எடுத்துப் போடு.'

***பழமெ :*** பேச்சு. 'பழமெ பேசறாம்பாரு என்ன பேசறதுனு பேசத்தெரியாம.'

***பழயசோத்து நேரொ :*** காலை உணவு. இரவில் மீதமாகும் சோற்றை தண்ணீர் ஊற்றி வைத்து காலையில் உண்ணும் நேரம். (காலை 8.00 மணி) 'பழயசோத்து நேரொ ஆயிருச்சு.'

***பள்ளயம் :*** பல தானியங்களையும் சேர்த்து வேக வைத்து கொடுக்கப் படும் பிரசாதம். 'கோயில்லெ பள்ளயங் குடுக்கறாங்க.'

***பளபளன்னு :*** தெளிவாக. 'பாத்தரொ பளபளன்னு இருக்குது.'

***பளிச்னு :*** காண்க. பளபளன்னு.

***பறத்தலாங்கொடி :*** வேலியில் படரும் கொடி. 'பறத்தலாங் கொடிய புடுங்கியா.'

***பறயறது :*** புறம் பேசுதல். 'இவனுக்கு பறயதே வேலயாப் போச்சு.'

***பறி :*** ஏற்றத்தில் நீர் மொண்டு வரும் சால். 'பறியில ஓட்ட உளுந்துருச்சு.'

***பன்னாங்கல்லு :*** ஐந்து சிறு கற்களைக் கொண்டு பெண்கள் விளையாடும் விளையாட்டு.

***பன்னாங்குழி:*** பெண்கட விளையாடும் ஒரு வகை விளையாட்டு. 'பன்னாங்குழி வெளயாடலா வா.'



பன்னாங்குழி

***பன்னாட்டு :*** தலைமைப்பண்பு. 'இந்தப் பன்னாட்டுக்கு ஒண்ணுங் கொறச்சலில்லெ.'

***பன்னாடி :*** தலைவன். 'ஊர்ப் பன்னாடிகிட்ட நாயங் கேக்கோணும்.'

***பன்னாடெ :*** பனை, தென்னை மரங்களில் மட்டைகளை மரத்தோடு இணைக்கும் பகுதி. பன்னாடைய எடுத்தா தீ எரிக்கலாம். திட்டும் சொல். 'சுத்த பன்னாடையா இருக்க.'

***பனங்கருக்கு :*** பனைமரக்கன்று. 'பனங் கருக்கு வயலுக்கு நடுவுல மொளச்சி இருக்குது.'

***பனங்காடை :*** ஒரு வகைக்குருவி. 'பனங்காட கத்துனா ஊட்டுக்கு ஆகாது.'

***பனங்கை :*** வீட்டுக் கூரைக்காக பனை மரத்தைப் பிளந்து செதுக்கி நீள வாக்கில் தயாரிக்கப்படும் சட்டம். 'பனங்கையெ வெட்டியாந்து கூரைக்கி போடனும்.'

***பனந்தடுக்கு :*** பனை ஓலையால் செய்யப் படும் உட்காரும் தடுக்க. 'பனந்தடுக்கெ எடுத்துப் போட்டு உக்காரு.'

***பனம்பூ :*** பனைமரக் குருத்தில் சிவப்பாக ஒட்டியிருக்கும் துகள். 'காயத்துக்கு பனம்பூ எடுத்து வெய்யி நல்லாயிரு.'

***பனியிலு*** : பனியன். 'இந்தப் பயெ பனியிலு போடற்றெ வேலெயே இல்லெ.'

## பா

***பாக்கிலியா*** : பார்க்கவில்லையா. 'அவுங்கெ உன்னெ பாக்கிலியா.'

***பாக்கோனு*** : பார்க்க வேண்டும். 'நானு உன்னியெ பாக்கோனும்னு நெனச்செ நீயே வந்துட்டெ.'

***பாகு*** : சர்க்கரைக் கரைசல். 'சக்கரைப் பாகு காய்ச்சி பரிப்பி செய்யலா.'

***பாங்கா*** : பக்குவமாக. 'பாங்கா வெய்யி இல்லின்னா எங்கியாவது காணாமெ போயிரு.'

***பாங்கெணுறு*** : பாழடைந்த கிணறு. நீரில்லாமல் இருக்கும் கிணறு.

***பாசரம்*** : பாதசரம். பெண்கள் பாதத்தில் அணியும் சரம். கொலுசு. 'பாசரம் போடாமியே சுத்தறா பாரு.'



பாசரம்

***பாஞ்சாங்கரொ*** : காண்க. பதனஞ் சாங்கரொ.

***பாஞ்சுபோடு*** : மாடு பாய்ந்து விடுதல். 'மாடு பாஞ்சுபோடு கிட்டத்தால போகாத.'

***பாஞ்சுருவா*** : பாய்ந்து விடுவான். 'கோவொ வந்தா அவ ஆளுமேல பாஞ்சுருவா.'

***பாஞ்சு ரூவா*** : பதினைந்து ரூபாய். 'பாஞ்சுரூவா இருந்தாக்குடு.'

***பாட்டுமி*** : பௌர்ணமிக்கு மறுநாள். 'பாட்டுமி முடிஞ்சதும் பாக்கலாம் வா.'

***பாடமடிக்கிறது*** : பாம்பு கடித்தவுடன் பாம்பு கடித்த இடத்தில் வேப்பிலையை வைத்து மந்திரம் ஓதி விஷத்தை வெளியே எடுத்தல். 'பாம்பு கடிச்சிப் போடுச்சி ஓடனே பாடமடிக்கோனு.'

***பாடாவதி*** : மட்டரகமான. 'சுத்தொ பாடாவதியா இருக்கெ.'

***பாடு*** : உழைப்பு. 'இந்தப் பாடுபட்டாலு நமக்கு கஞ்சி கெடக்காது.'

***பாடுவாசி*** : நாற்றுக்கள் நட்டு முளைக்காமல் போன இடத்தில் மீண்டும் நடப்படும் நாற்று.

***பாண்டீங்குழி*** : தானியங்களை சேமித்து வைக்க பழங்காலத்தில் நிலத்தில் ஆழமாக வெட்டப்பட்டு பலகையான கல்லால் மூடப்பட்டிருக்கும் குழி. 'பாண்டீங்குழியிலதெ கம்பு சோளமெல்லா போட்டு வெச்சிருந்தம் மொதல்ல.'

***பாணக்கம்*** : கருப்பட்டியும் புளியும் கலந்து செய்யப்படும் நீர்ம திரவம்.

***பாத்துருக்கோனு*** : பார்த்திருக்க வேண்டும். 'அங்கெ என்னொ நடந்துதுனு நீயி பாத்துருக்கோனு.'

**பாதகொறடு** : சாமியாடி குறி சொல்பவர் காலில் அணியும் முட்கள்போல இருக்கும் செருப்பு. 'சாமிக்கிப் பாதகொறடு போடனும்.'

**பாதாள ஜோதி :** கிணற்றில் விழுந்து விட்ட பொருட்களை எடுக்க உதவும் முட்கொக்கிகள் நிறைந்த சாதனம். 'பாதாளசோதி போட்டு தேடிப்பாத்து கெடைக்கல.'

**பாந்து** : வீட்டுக் கூரைக்கும் சுவருக்கும் இடையில் இருக்கும் சந்து பொந்துகள். 'ஊட்டுக்குள்ளெ பாந்து நெறயா இருக்கு.'

**பாப்பாத்தி :** பெண்களை அழைக்கும் சொல்.

**பாப்போ :** பார்க்கலாம். 'அப்பறோம் பாப்போ செரியா.'

**பாம்பேரி :** கிணற்றின் சுற்றுச் சுவர். 'பாம்பேறிமேலெ நிக்காத உள்ள உளுந்துருவ.'

**பாமூலை :** வாயு மூலை.

**பாயி** : கோரைப் புல்லினால் செய்யப்பட்ட பாய். 'பாயி விரிச்சி தூங்குனாத்தெ தூக்கொ வரு.'

**பார்** : வெங்காயம், கரும்பு போன்ற பயிரிட அமைக்கப்படும் சிறு மேடு. பாரோட்டி வெங்காய நடணும்.

**பார்வைக் கொப்பளொ** : கண் திருஷ்டியினால் உடலில் ஏற்படும் புண். கொழந்தக்கி ஒடம்பு பூரா பார்வ கொப்பளொமா இருக்கு.

**பால்பூட்டெ** : தானியம் அரும்பும் நிலையிலிருக்கும் இளம்பயிர். 'மக்காஞ்சோள இப்பத பால்பூட்டெ உட்ருக்குது.'

**பால்ப்பூடு:** இலையைக் கிள்ளினால் மரத்திலிருந்து பால் வடியும்.

**பாலக்காலு** : கடைக்கால் போடும் போது சடங்கில் பயன்படுத்தும் பாலமரத்தின் கோல். 'வூடு கட்ட பாலக்காலு போடணு.'

**பாழி** : பாறையில் நீர் தேங்கி நிற்கும் பெரிய குழி. 'பாழியில பாரு நெறய தண்ணி இருக்கு.'

**பாளக்கத்தி :** பாளைசீவ (தெளுவு, கள் இறக்க) மரமேறுபவர்கள் பயன்படுத்தும் மிக மென்மையான நுனி பகுதி உடைய கத்தி. 'பாளைக்கத்தில குச்சிய வெட்டாத மொன்னயாயிரு.'

**பாளைசீவுதல்** : கள் இறக்கும் பனைமரப் பாளையை காலையிலும் மாலையிலும் சீவுதல். 'பாளையெ சீவியுட்டாத கள்ளு எறக்க முடியும்.'

**பாளைசேர்த்தல்** : இடுக்குக் கோல் கொண்டு பாளையைப் பதப்படுத்துதல்

**பாளை தள்ளுதல்** : 'இந்தப் பனை பாளை தள்ளிருச்சு.'

## பி

***பிக்கல்பிடுங்கல்*** : கடன் தொல்லை. கடன் தொல்லயால பிக்கலுபிடுங் கலுமா இருக்கு.

***பிக்காதெ*** : பிரிக்காதே.

***பிக்காலி*** : திட்டும் வார்த்தை.

***பிக்காலெ*** : பின்னால்.

***பிகு*** : பிறர் தன்னை மிகவும் வேண்டிக் கொள்ளுதல். 'ரொம்பத்தெ பிகு பண்ணிக்காதெ.'

***பிச்சுவாக்கத்தி*** : உரைக்குள் வைத்திருக்கும் ஆயுதம். கத்தி. 'பிச்சுவா கத்தியில குத்திபோட்டான்.'

***பிச்சுவாங்கு*** : நல்லமுறையில் செய்தல். 'பாட்டுபோட்டில பிச்சு வாங்கிட்டியே.'

***பிசகு*** : கைகால் அடிபடுதல். கால் பிசகிருச்சு நடக்க முடியல. தவறுதல். 'உனக்கு புத்தி பெசகி போயிருச்சா.'

***பிசினாறி*** : கஞ்சன். 'அவனே ஒரு பிசினாறி அவங்கிட்ட போயி கடங் கேக்குற.'

***பிசுபிசுனு*** : பசைத்தன்மை (அ) ஒட்டுதல். 'கையிலெ எண்ணெப் பச பிசுபிசுனு இருக்குது.'

***பிசுக்கு*** : எண்ணெய் படிந்து உண்டான பிசுபிசுப்பு. 'அந்த தலகாணியிலெ பிசுக்கா ஒட்டியிருக்கு.'

***பிஞ்சுபோச்சு*** : காண்க. அந்துபோச்சு.

***பிப்பு*** : உடலில் அரிப்பு ஏற்படுத்தும் தோல் நோய். 'உடம்பெல்லாம் பிப்பு புடிச்சிகிச்சி.'

***பிதுரு*** : பேரன்(அ) பேத்தியின் குழந்தை. 'அவனுக்கென்ன பேத்துபிதுரு எடுத்தாச்சு.'

***பிம்பாரொ*** : வண்டியின் பின் பக்கம் ஏற்றும் பாரம். 'பிம்பாரொ நெறக்கா இருக்குது.'

***பிரயோசனொ*** : பயன். 'உன்னாலெ ஒரு பிரயோசமுமில்லெ.'

***பிராணதாரை*** : மரணத்திற்குமுன் கொடுக்கும் சத்திய வாக்கு. 'பிராணதாரைலெ மொனகிகிட்டு இருந்தாரு.'

***பிராணெ போவுது*** : கஷ்டத்தை குறிக்கும் சொல். 'என்ற உசுரு பிராணெ போகுது.'

***பிராது*** : புகார். 'உம்மேல போலீசுல பிராது குடுக்கனும்.'

***பிரி*** : பின்னியிருக்கும் கயிற்றை பிரித்தால் தனித்தனியாக வரும் ஒரு பிரிவு. 'வடக்கவுத்தெ நெறய பிரி போட்டு பின்னியிருக்காங்க.'

***பிருத்துப் போச்சு*** : பால் கெட்டுப் போதல். 'பாலு பிருத்துப் போச்சு.'

***பில்லிந்தடி*** : சிறு குச்சியை வைத்து விளையாடும் விளையாட்டு. 'பில்லிந்தடி வெளயாடலா வா.'

**பில்லெ** : வெள்ளை கலந்த சிவப்பு நிற மாடு. 'உங்ககிட்டெ ஒரு பில்லெ இருந்துச்சு.'

**பிலுக்கு** : பிகு செய்தல். 'இந்தப் பிலுக்கு பிலுக்கற.'

**பிறவக் குட்டி** : காண்க. மூட்டுக் குட்டி.

**பின்னப்பூ போடுதல்** : இறந்தவர்களின் மகள் வயிற்றுப் பேரனால் நடத்தப்படும் சீர்.

**பின்னுபொறவு** : முன்னும்பின்னும். 'ரோட்டத் தாண்டிப் போவும் போது பின்னு பொறவு பாத்து நின்னு நெதானமாப் போகோனு.'

**பின்னேர்** : ஒரே வயலில் ஒன்றன் பின் ஒன்றாக பல ஏர்கள் உழும்போது இறுதியில் செல்லும் கடைசி ஏர். 'பின்னேர்க்காரங்கிட்டப் போய்க் கேளு.'

## பீ

**பீத்தக்கெணுறு** : சுற்றுச்சுவர் உடைந்து போன பயன்படாத கிணறு. பாழுங் கிணறு. 'பீத்தக் கெணுத்துல வுழுந்துட்டான்.'

**பீத்தக்கூடை** : பிய்ந்த பயன்படுத்த முடியாத கூடை. 'பீத்தக் கூடைய எடுத்தா சாணி அள்ள.'

**பீத்தத்துணி** : நைந்துபோன துணி. 'பீத்தத் துணிய கட்ற உனக்கு இவ்ளோ திமுரா.'

**பீத்த மொறொ** : பிய்ந்து உடைந்து போன முறம். 'பீத்த மொறொத்துல எப்பிடி பொடைக்கிறது.'

**பீத்தை** : கெட்டுப் போன மோசமான. 'இப்பிடி பீத்தையா இருக்கு இதப் போயி வாங்கிருக்க.'

## பு

**புட்டா** : சேலையில் உள்ள புள்ளிகள். 'புட்டா வெச்ச சேலயக் கட்டியிருக்க.'

**புட்டு** : இட்லி. 'ரெண்டு புட்டு திங்கவேணு.'

**புட்டுமாவு** : மாவை ஆவியில் வேகவைத்து செய்யும் பொருள். 'எங்கூட்டுல இன்னிக்கி புட்டுமாவு செஞ்சோ.'

**புடி** : பிடி. 'ஓடராம் பாரு அவனெப் புடி.'

**புடுங்கல்** : தொந்தரவு. 'ஒரே புடுங்கல் வேலெகதெ நெறயா இருக்குது.'

**புடுங்காலி** : பெரிய வேலைகள் இருப்பதாக கூறிக்கொள்பவர். 'என்னமோ புடுங்காலியோட்ட பேசறெ.'

**புடுங்கீட்டானுக** : பிடுங்கி விட்டார்கள். 'எங்கிட்டெ இருந்தெ எல்லாத்தியு புடுங்கீட்டாங்கெ.'

**புண்ணுவேசொ** : திருவிழாக்களில் சிறுவர்கள் தங்கள் உடம்பில் புண் போல பஞ்சை ஒட்ட வைத்துக் கொள்வது.

**புடுச்சாந்தெ :** பிடித்துக் கொண்டு வந்தேன். 'அங்க போயி இவனப் புடுச்சாந்தெ.'

**புருடு :** புடைத்து தனியே வெளியில் தெரியும் கட்டி. 'கழுத்துலெ புருடு புருடா இருக்குது.'

**புழுதண்ணி :** காண்க. நீச்சத்தண்ணி.

**புழுதிக்காடு :** விவசாயம் செய்யாமல் இருக்கும் நிலம். 'புழுதிக்காட்டுலெ வெளயாடறதே வேலயாப் போச்சு.'

**புழுதி ஓழவு :** கோடையில் மழை பெய்த பின் உழவு செய்த நிலத்தில் மீண்டும் உழவு ஓட்டுவது. 'புழுதி ஓழவு ஓட்டியுடணும்.'

**புள்ளத்தாச்சி :** கர்ப்பிணிப் பெண். 'புள்ளதாச்சியெ தண்ணி எடுக்கச் சொல்றியே.'

**புள்ளப்பாலு :** கறவை மாடு வைத்திருப்பவர்கள் கைக்குழந்தை வைத்திருப்பவர்களுக்கு இலவசமாக பால்தருவது.

**புள்ளவளத்தி :** வ்சம்பு.

**புள்ளார் :** சாணியில் செய்து வைக்கப்படும் பிள்ளையார். நல்ல, கெட்ட விசேங்களில் இப்படி செய்வர். 'புள்ளார் புடிச்சு வெய்யிங்க.'

**புள்ளெ :** குழந்தை. 'எனுக்கு ஒரு பொட்டப்புள்ளெ பெறந்திருக்குது.'

**புளிசாறு :** புளிக்கொழம்பு.

**புளுக்கியூண்டு :** காண்க. இத்தனூண்டு.

**புளுகறான் :** பொய் சொல்லுதல். 'என்னமாப் புளுகறாம்பாரு.'

**புளுச்சான் :** நெல்வகை. தாய்ப்பால் அதிகம் சுரப்பதற்காக பெண்களுக்கு கொடுக்கப்படும்.

**புனுச்சல் (புனி) :** மாடுகளுக்கு வரும் கோமாரி நோய். 'புனிச்சலு வந்து மாடு மேய மாட்டீங்குது.'

# பூ

**பூகேக்கோணு :** கடவுளிடம் உத்தரவு கேட்டல். 'சாமிகிட்ட பூகேக்கோணு அப்புறந்தெ ஒரு முடிவு பண்ணோனும்.'

**பூச்சாட்டு :** கோயில் திருவிழாவிற்கு சாட்டுதல். 'இன்னிக்கி மாரியாத்தா கோயில்லெ பூச்சாட்றாங்க.'

**பூச்சி :** பாம்பு என்று கூறக்கூடாது என்பதற்காக பூச்சி என்று கூறுவர். 'அங்கெ பாரு எத்தாம் பெரிய பூச்சி போகுதுன்னு.'

**பூச்சிக்காளெ :** இனப்பெருக்கத் திற்காக வளர்க்கும் காளை. 'எங்கூருல பூச்சிக் காளை இருக்குது.'

**பூச்சு வேலெ :** வீடுகட்டி முடித்தவுடன் காரை பூச்சும் வேலை. 'பூச்சு வேல மட்டு பாக்கியிருக்கு.'

**பூட்டெ :** தானியக்கதிர். 'மக்காஞ் சோளா பயிரு பூட்டை உட்ருச்சு.'

**பூடு** : சிறுசெடி. (நிலத்தில் இருக்கும் தேவையற்ற செடி). பூண்டு. 'காட்டுக்குள்ள பூடு நெறயா இருக்குது கள வெட்டனும்.'

**பூதாமெ** : புகுந்து விடாமல். 'மாடு வெள்ளாமக் காட்டுல பூதாமெ பாத்துக்கெ.'

**பூந்து** : புகுந்து. 'மாடு வெள்ளாம காட்டுல பூந்துரப்போகுது.'

**பூந்துருமாட்டொ** : புகுந்துவிடும் போல். 'சோளக்காட்டுக்குள்ளெ ஆடு பூந்துருமோட்டோ இருக்குது ஓடி முடுக்கு.'

**பூந்தெ** : புகுந்த. 'ஆமை பூந்தெ வூடு அமீனா புகுந்த ஊடு உருப்படாது.' — பழமொழி.

**பூப்பலு** : பூஞ்சானம்.

**பூமிதிக்கிறது** : கோயிலில் நடைபெறும் குண்டம் இறங்கும் திருவிழா. 'நாங்கொ பூமிதிக்கலாமுனு வேண்டியிருக்கொ.'

**பூரா** : அனைத்தும். 'பூரா எனக்குத்தாஞ் சொந்தம்.'

**பூலவாக்கு** : ஒருவருக்கு தெரியாத பிறரின் ரகசியங்கள். 'உம்பூலவாக்கு எனுக்கு தெரியாதாக்கு.'

**பூவோடு** : கோயில் திருவிழாவில் எடுக்கும் தீச்சட்டி. 'மாரியாத்தாவுக்கு பூவோடு எடுக்கோணும்.'

**பூளப்பூ** : வெள்ளை நிறத்தில் பஞ்சு போன்ற நீண்ட பூங்கொத்தினை உடைய செடி. 'பூளப்பூவெ புடுங்கியாந்து காப்பு கட்டோணும்.'

## பெ

**பெத்தாம்பெறந்தாம்வீடு** : அப்பா, அண்ணன் வீடு. 'பெத்தாம் பெறந்தாம் வீட்டுக்கு போ.'

**பெப்பளத்தெ** : ஒன்றும் தெரியாதவன். 'ஒன்னுந் தெரியாத பெப்பளத்தான இருக்கெ.'

**பெரகாண்ட** : பின்னால். 'உம் பெரகாண்டதெ நானு இருந்தெ நீ பாக்கவே இல்லெ.'

**பெரத்தி** : உறவினர் அல்லாது புதிதாக ஏற்படுத்திய உறவு. 'நானு என்னொ பெறத்தியாவா போயிட்டெ எங்கிட்டெ சொல்லுலெ.'

**பெரமிணை** : திருகை. 'பெரமிணையெ எடுத்துப் போட்டு சட்டியெ எடுத்து வெய்யி.'

**பெரியகாரியொ** : ஒருவீட்டில் நடக்கும் பெரிய மனிதர் சாவு. 'எங்கூட்லெ பெரியகாரியொமொன்னு ஆயிருச்சு.'

**பெரியப்பெ** : அப்பாவின் அண்ணன். 'எங்கெ பெரியப்பெ வூட்டுல ஆனை யிருக்குது.'

**பெரியப்பங்கூட்டொ** : பெரியப்பா மார்கள். 'அவுங்கெல்லா எங்கெ பெரியப்பங் கூட்டமாக்கு.'

**பெரியாத்தா** : பாட்டியின் அக்கா. 'பெரியாத்தா எங்கியோ போயிட்டு வருது.'

***பெருக்கெ :*** பெருச்சாளி. 'பெருக்கா னோட்ட சுத்தறாம் பாரு.'

***பெரும்போக்கு :*** தாராளகுணம். 'பெரும் போக்கான ஆளு.'

***பெருவெடக்கோழி :*** பெரிய ரக நாட்டுக்கோழிகள். 'பெருவெடக் கோழியாப் புடிச்சி அடிச்சிக் கொழம்பு வெய்யி'

***பெலமா :*** பலமாக. 'கதவெ பெலமாத் தட்டு அப்பதெ தெறக்கு.'

***பெறக்கெடெ :*** வீட்டின் பின்பக்கம். 'பெறக்கடயிலெ பாரு இருக்குது.'

***பெறட்டு :*** பொய்சொல்லுதல். 'பொய்யுமு பெரட்டுமு பேசிகிட்டுத் திரியாதெ.'

***பெறந்தவொ :*** உடன் பிறந்தவள். இவொ எங்கூடப் பெறந்தவொ.

***பெறந்தவெ :*** உடன் பிறந்தவன். 'இவெ எங்கூடப் பெறந்தவெ.'

## பே

***பேச்சுகுடுத்தாரு :*** பேச்சு கொடுத்தார். 'எங்கிட்டெ அவுரு ரொம்பொ நேரொ பேச்சுக்குடுத்தாரு.'

***பேச்சுபெராக்குலெ :*** பேச்சுவாக்கில். 'பேச்சுபெராக்குலெ அவனப் பத்தி தப்பாப் பேசிட்டெ.'

***பேசறவியெ :*** பேசுபவர்கள். 'பேசறவியெ அப்பிடித்தாம் பேசுவாகெ.'

***பேசாட்லெ இரு :*** பேசாமல் இரு. 'கம்முனு பொட்டோட்டோ பேசாட்லெ இரு.'

***பேசீட்டாங்கெ :*** பேசி விட்டார்கள். 'என்னெ அவிக தப்பாப் பேசீட்டாகெ.'

***பேசீட்டே :*** பேசிக்கொண்டே. 'பேசீட்டே இருந்தாங்கொ அப்பறம் பாத்தா என்னொ நடந்துதுனே தெரீலே.'

***பேசீட்ருக்கறபோது :*** பேசிக் கொண்டிருக்கும் பொழுது. 'பேசீட்றக் கறப்பவே மயக்கம்போட்டு உளுந்துட் டாங்கெ.'

***பேஞ்சுது :*** பெய்தது. 'எங்கூருலெ மழ பேஞ்சுது.'

***பேடு :*** ஆணுக்கும், பெண்ணுக்கும் இடைப்பட்டு பிறந்தவர்கள். அலி.

***பேண்டு :*** மலம் கழித்து. 'காக்காயி சட்டைல பேண்டு வெச்சிருச்சி.'

***பேய்க்கரும்பு :*** வேருடன் கூடிய கரும்பு.

***பேயோணு :*** பெய்யவேண்டும். 'மழெ நெறக்கா பேயோனு அப்பதெ காட்டுலெ வெள்ளாமெ வெளையி.'

## பை

***பைக்கட்டு :*** புத்தகப்பை. 'பைக்கட்டு தூக்கித் தோளுலெ போடு.'

***பைசீலு :*** இருதரப்பினருக்கும் இடையே உள்ள பிரச்சினைகளை கேட்டல். 'பைசீலு பண்றதுக்கு ஆளு வந்துருச்சா.'

**பையி** : பை. 'சந்தெக்கி பையி எடுத்துகிட்டு போ.'

**பையெ** : பையன். 'பையெ ரொம்பொ வெவராமாப் பேசறதப் பாரு.'

## பொ

**பொக்கெ** : உள்ளே ஒன்றும் இல்லாத காய். 'இந்தக் காயெல்லா ஒரே பொக்கெயா இருக்கு.'

**பொகெ** : புகை. 'அடிச்சன்னா கதுலெ பொகெ வந்துரு.'

**பொகிலெ** : புகையிலை. 'பொகிலெ பேடாதீன்னு சொன்னா கேக்க மாட்டீயா.'

**பொங்கசட்டி** : பொங்கல் வைக்கும் மண்சட்டி. 'பொங்கசட்டி எடுத்தா பொங்கலு வெக்கலா.'

**பொங்கமொடா** : பொங்கல் வைக்கும் பெரிய பானை. 'பொங்க மொடா சாஞ்செ மாதிரி கீழ உருண்டுட்ட.'

**பொங்கு** : பறவைகளின் இறகு. 'கோழிப் பொங்கெ காதுலெ வுட்டு நோண்டாத.'

**பொங்குபொங்குனு** : உடல் மெலிந்து. 'அவனே பொங்குபொங்குனு இருக்கறே நீயி அவனப் போயி தள்ளி உட்றியே.'

**பொசுக்குனு** : திடீரென்று. 'கால்ல அடிபட்டு பொசுக்குனு வலியெடுத்துருச்சு.'

**பொட்டு** : 1. பயறு வகைகள் செடியில் இருக்கும் போது பாதுகாப்பிற்காக அதன் மேல் இருக்கும் சருகு. 'தொவரம் பொட்ட ஆட்டுக்கு வெய்யி. 2. கண்ணுக்கும் காதுக்கும் இடையே உள்ள பகுதி.

**பொட்டாட்டொ** : அமைதியாக. 'அடி பின்னிருவே பொட்டாட்டொ இரு.'

**பொட்டி** : கள், பதநீர் இறக்கும் மரமேறிகள் இடுப்பில் கட்டிக் கொள்ளும் கூம்பு வடிவ பொட்டி. 'பொட்டிக்குள்ளெ ஆம்பரக்கத்தி இருக்கு எடு.'

**பொட்டிபணம்** : திருமணத்திற்கு பின் பெண்களுக்கு சீர்வரிசையாக கொடுக்கும் பணம்.

**பொட்டி வண்டி** : பயணம் செய்யும் வண்டி. 'பொட்டி வண்டி கட்டிகிட்டு உன்ற மாமஞ் சீர் கொண்டார.'

**பொட்டுவெக்கிறெது**: திருமணத்தில் மணமகளுக்கு தாய்மாமன் திலகம் இடுவது.

**பொடக்காலி** : வீட்டின் பின்புறமுள்ள (குளிக்கும்) இடம். 'பொடக்காலில பாரு தண்ணி இருக்குது.'

**பொடங்கு** : பயிரை அறுவடை செய்த பின் வேரிலிருந்து தழைந்து வரும் இரண்டாம் பயிர். 'பொடங்கு மொளச்சு இருக்குது.'

**பொடங்கெ** : எதற்கும் ஒத்துவராதவன். 'எங்கியோ சுத்தெ பொடங்கனா இருக்கெ.'

**பொடச்சுப்போடு :** தானியங்களில் இருக்கும் கற்களை நீக்க முறத்தில் போட்டு புடைப்பது.

**பொடனி :** பின் கழுத்துப் பகுதி. *'பொடனிமேல ரெண்டு போடு அப்பதெ சும்மா இருப்பாப்பிடி.'*

**பொடிக்கலரு :** காப்பி நிறம். *'பொடிக்கலருலெ இருக்கும் பாரு.'*

**பொடைத்தல் :** வீங்குதல். *'தலையிலெ அடிபட்டு பொடைச்சுகிச்சு.'*

**பொண்டுபுள்ளெ :** மனைவி மற்றும் குழந்தைகள். *பொண்டு புள்ளெயெ வெச்சி பொழெக்கத் தெரீல வந்துட்டெ நாயொம் பேசெ.*

**பொண்ணழக்கிறெது :** மணமகளை அழைத்து வருதல். *'பொண்ணழக்கிறதுக்கு போயிட்டு வர்ரெ.'*

**பொண்ணழப்பு:**காண்க..பொண்ணழக் கிறெது.

**பொணையலு :** ஒன்றோடொன்று பிணைந்த. *'பாம்புகெ பாரு பொணையலு போட்ருக்குது.'*

**பொணையல் பாம்பு :** ஒன்றோ டொன்று பிணைந்து உறவு கொள்ளும் பாம்பு. *'பொணயல் பாம்போட்ட ரெண்டுமு சுத்துது.'*

**பொத்தலு :** ஓட்டை. *'சட்டையிலெ பொத்தல் பொத்தலா இருக்கு.'*

**பொத்தாம்பொதுவா :** இருவருக்கும் பொதுவில். *'பொத்தாம் பொதுவா பேசறதுக்கு உன்னெக் கூப்புட்டா நீயி அவனுக்கே சப்பரோட்டு பண்ணிகிட்டு இருக்குறெ.'*

**பொத்திபொழி :** இரு காடுகளுக்கு இடையே பொதுவாக உள்ள பொழி. *'இந்தப் பொழி ரெண்டு பேருக்கு பொத்தபொழி யாக்கு.'*

**பொதறு :** புதர். *'பொதறுக்குள்ளெ போகாதெ பாம்பு உள்ளெ இருக்குது.'*

**பொதி :** நான்கு மூட்டை தானியம். இரண்டு மூட்டை வெல்லம் கொண்ட அளவு. *'அவங்கிட்ட ஒருபொதி பணொா இருக்குது.'*

**பொதி எருது :** பொதி மூட்டைகளை சுமக்கப் பயன்படும் எருது. *'பொதி எருது மாதிரி வளந்து என்ன பிரயோசனொ.'*

**பொம்பாரொ:**பம்பரம். *'பொம்பாரொக் கட்டை வெளயாண்ட.'*

**பொய்மோடொ :** மழைபெய்யாமல் வெறும் மேகமூட்டமாக இருந்து கலைதல். *'பொய்மோடொ போட்டுருக்குது மழெ வராது.'*

**பொரட்டாசிகெழமெ :** புரட்டாசி மாதத்தில் வரும் சனிக்கிழமை அன்று விரதமிருப்பது. *'நானு பொராட்டாசி கெழமெ புடிச்சிருக்கெ.'*

**பொரணி :** பொறாமை பேசுவது. *'இவுனுக்கு பொரணி பேசறதே வேலயாப் போச்சு.'*

**பொருமலு :** உணவு செரிக்காமல் வயிறு உப்புதல். *'வவுறுஒரே பொருமலா இருக்குது.'*

***பொரெ :*** *பாலில் சிறிது தயிர் விட்டு பாலை தயிராக்குதல். 'பாலெ பொரெ ஊத்தி வெய்யி.'*

***பொரெட்டு :*** *புரட்டு. 'அந்தக் கல்லெப் பொரட்டிப் போடு.'*

***பொலி :*** *இரண்டு நிலத்திற்கு இடையில் உள்ள வரப்பு. 'பொலி மேலெ பாரு கொத்து இருக்குது எடுத்துட்டு வா.'*

***பொழக்கத்துலெ :*** *புழக்கத்தில். 'பத்து பீசா காசு பொழக்கத்துலேயே இல்ல.'*

***பொழப்பு :*** *வாழ்க்கை. தொழில். 'இந்தப் பொழப்பு பொழக்கிறதுக்கு செத்துப் போலா.'*

***பொழைக்காமெ வந்துட்டா :*** *வாழா வெட்டியாக வந்துவிட்டாள். 'அவொ புருசவீட்டுலருந்து பொழைக்காமெ வந்துட்டா.'*

***பொழிவாக்கிமா :*** *வரிசைப்படி படித்தல். 'பொழிவாக்கிமா ஒண்ணுடாமாப் படிச்சிரோனு.'*

***பொழுதுகெளம்பெ :*** *அதிகாலையில். 'பொழுது கெளம்பெ எங்கியோ போனவெ இன்னுங் காணோ.'*

***பொழுதிருக்கறப்பவெ :*** *இரவு ஆவதற்கு முன். 'வேலக்கிப் போயிட்டு பொழுதிருக்கறப்பவெ வந்துட்டெ.'*

***பொழுதின்னிக்கி :*** *பகல் முழுவதும். 'பொழுதின்னிக்கி வெளயாண்டுட்டே இருக்காதெ படி.'*

***பொழுதோட :*** *மாலையில். 'பொழுதோடோ சீக்கரொ ஊடு வந்து சேரு.'*

***பொளந்துகட்டு :*** *திட்டும் வார்த்தை. 'ரொம்பத் திமுரு பண்ணுன பொளந்து கட்டிருவ.'*

***பொறங்கையி :*** *புறங்கை. 'பொறங்கையி பாரு அழுக்கு அப்பிடியே இருக்குது.'*

***பொறந்தவெ :*** *உடன்பிறந்தவர். 'என்றெ பொறந்தவெ ஊட்டுக்குப் போயிட்டு வந்தெ.'*

***பொறந்தவொ :*** *உடன்பிறந்தவள். 'என்றெ பொறந்தவொ ஊட்டுக்குப் போயிட்டு வந்தெ.'*

***பொறப்போவுது :*** *சாப்பிடும்போதோ, தண்ணீர் குடிக்கும்போதோ இருமுவது. 'பொறப்போவுது தலயெ தட்டியுடு.'*

***பொறவாடி :*** *பின்னால். 'உன்ற பொறவாடிதெ நிக்கிறம் பாரு.'*

***பொறவு :*** *காண்க. பொறவாடி.*

***பொறுகினித்தனம் :*** *பொறாமைக் குணம். 'பொறுகினித்தனம் புடிச்சுத் திரியாத.'*

***பொறெ :*** *கண்ணில் கட்டும் படலம். 'கண்ணு பொறையோடியிருக்குது.'*

***பொறையூத்தறது :*** *காண்க. பொரை.*

***பொறிக்கோழி*** : பொறிப்பொறியான இறக்கையை கொண்ட கோழி. 'பொறிக் கோழி பாரு அழகா போகுது.'

***பொன்றூறி வெக்கிறது*** : கொங்கு வேளாளக் கவுண்டரில் பெரிய குலத்தார் தங்களது மூத்த மகளை பொன்னூஞ்சலில் வைத்து சீர் நடத்துவர். (முழு வரலாற்றை இந்நூலாசிரியரின் கொங்கு வேளாளர் குலவரலாறு நூலில் காண்க.)

***பொன்னாம்பூச்சி*** : பொன்வண்டு. 'பொன்னாம்பூச்சி பறக்குது பாரு.'

## போ

***போக்கியொ*** : கொடுத்த பணத்திற்கு வட்டியில்லை. உழுத நிலத்திற்கு பணம் இல்லை என ஒப்பந்தம் செய்தல். 'எங்கெ காட்டெ போக்கியத் துக்கு உட்ருக்கறம்.'

***போகொ*** : விளையும் காலம். 'முப் போகொ நல்லெ வெளச்சலு.'

***போகுட்டுங்களா*** : கிளம்புவதற்கு முன் சொல்லும் வார்த்தை. 'அப்பெ நா போகுட்டுங்களா.'

***போகுமாட்டொ*** : போயிற்று போல தெரிகிறது. 'எங்கியோ போகுமாட்டோ தெரீது.'

***போச்சாட்டோ தெரீது*** : காண்க. போகுமாட்டொ.

***போத்தாலெ*** : புகையிலை. 'ஒரு துண்டு போத்தாலை வாங்கியா.'

***போதாக்கொறெ*** : பற்றாக்குறை. 'எனக்கே போதாக்கொறெயா இருக்குது.'

***போமாட்டெ*** : போகமாட்டேன். 'நாம் போமாட்டெம் போ.'

***போயரப்படாது*** : போய்விடக்கூடாது. 'நானு வர்ற வரைக்கி இங்கியே இருக்கோனு போயரப்படாது செரியா.'

***போயி*** : போய்.

***போலீன்னா*** : போகவில்லை யென்றால். 'நீ போலீன்னா உடு நானே போயிக்கறெ.'

***போவிணி*** : உருளை வடிவப் பாத்திரம். 'போவிணில தண்ணி ஊத்தி வெய்யி.'

***போழெ:*** காண்க. அழுக்குத்தொம்பை.

***போனவாட்டி*** : முந்தைய தடவை. 'போனவாட்டி உன்ன பாத்தது.'

***போனாக்கா*** : போனால். 'போனாக்கா போகுட்டு.'

## ம

***மக்கமாரு*** : வாரிசுகள். 'உனுக்கு மக்கமாரு எத்தனெ பேரு.'

***மக்காநாளு*** : அடுத்த நாள். 'மக்கா நாளு வர்றனு சொல்லு.'

***மக்காணி*** : மக்காச்சோளம். 'இந்தொ தவக்கா மக்காணி எத்தனெ மூட்டெ ஆச்சி.'

**மக்கிரி :** உழவு வேலைகளுக்குப் பயன்படும் கூடை. 'மக்கிரிகூடையெ எடுத்தா.'

**மகுட்டியுட்ருச்சு :** உள்ளங்கால் திரும்பும்படி தடுக்கி விழுதல். 'மகுட்டியுட்டு உழுந்து நெத்தியிலெ அடிபட்ருச்சு.'

**மங்கண்டம் :** ஆழமான பகுதியில் பாறை இல்லாமல் மணல் உள்ள பகுதி. 'ஆழம் போகப்போக மங்கண்டமா இருக்குது.'

**மங்கலத்தான் :** மங்கலச் செயலில் முன்நிற்பவன். (நாவிதன்). 'மங்கலத்தானெ கூப்புடுங்கெ.'

**மங்கிலியொ :** தாலி. 'மங்கிலியொ குடுக்கறதுக்குப் போறாங்கோ எல்லாரு.'

**மச்சாண்டாரு :** கணவரின் அண்ணன். 'எங்கொ மச்சாண்டாரு ஊட்டுக்குப் போனெ.'

**மச்சினெ :** மனைவியின் தம்பி. 'உங்கெ மச்சினென எங்கியோ ஆளையேக் காணொ.'

**மச்சூடு :** பெரிய வீடு. 'மச்சூடு கட்டி குடி போயாச்சா.'

**மச்சோவ் :** மச்சான். 'என்னுங்கெ மச்சோவ்'

**மசங்கெ நேரொ :** இரவு ஆரம்பிக்கும் நேரம். 'மசங்கெ நேரொ ஆயிப் போச்சு இந்தப் புள்ளயெ இன்னுங் காணொ.'

**மசநாய் :** வெறிபிடித்த நாய். 'மசநாயி கடிச்சு பதிமூணு ஊசி போட்ட.'

**மசப்பந்து :** பந்துபோல் துணியால் சுருட்டி சிறுவர்கள் தங்களுக்குள் அடித்து விளையாடுதல். 'மசப்பந்து வெளையாடெடா வர்றியா.'

**மசப்புள்ளெ :** வெகுளிப்பெண். 'சூது வாது தெரியாதெ மசப்புள்ளெயா இருக்கெ.'

**மசப்பொழப்பு :** வாழத்தெரியாமல் வாழும் வாழ்க்கை. 'நாங்கெல்லா மசப்பொழப்பு பொழச்சிட்டொ நீயாச்சி நல்லா இரு.'

**மசமசன்னு :** மயக்கத்தில் கண் நன்றாக தெரியாமல் மங்கலாகத் தெரிதல். 'கண்ணு மசமசன்னு தெரியுது.'

**மசயன்:** விபரமில்லாதவன். 'எங்கியோ மசையனா இருக்கறான்டா.'

**மசனப்பாறை :** உறுதியில்லாமல் பொடியும் தன்மை கொண்ட பாறை. 'ஒரே மசனப்பாறையா இருக்குது.'

**மஞ்சசிட்டு :** மஞ்சள் நிறமுள்ள சிட்டுக் குருவி. 'மஞ்ச சிட்டாட்ட பறந்துட்டா.'

**மஞ்சிப்பாய் :** கற்றாழையை நூலாக்கி செய்யும் பாய்.

**மட்ட மத்தியான:** உச்சிநேரம். 'மட்ட மத்தியான வெய்யிலு மண்டைய பொளக்குது.'

**மட்டி :** கள் மிடாவின் அடியில் தேங்கியிருக்கும் கழிவு. 'மெதுவா ஊத்து மட்டியெல்லாஞ் சேந்து வருது.'

**மட்டு மரியேதி** : மரியாதை. 'கொஞ்சங்கூட மட்டுமரியேதியே இல்லெ.'

**மட்டெயுரி** : தேங்காய் மட்டை உரித்தல். 'இந்தத் தேங்காயெ மட்டெயுரி.'

**மடச்சாம்பிராணி** : அடிமுட்டாள் திட்டும் வார்த்தை. 'மடச்சாம்பராணி யாட்டோ உக்காந்திருக்காம் பாரு.'

**மடி இறங்கு** : கன்று ஈனுவதற்கு முன் மாட்டு மடி பெருத்தல். 'மாடு மடி எறக்கிருச்சு கன்னு ஈனிரும்.'

**மடிக்கதிர்** : தோட்டத்து வேலைக்குச் செல்லும் போது கூலி கொடுத்தது போக, மீதமிருக்கும் விளைந்த கதிரை மடியில் எடுத்து வருவர்.

**மடிப்பிச்சை** : மடியேந்தி எடுக்கும் பிச்சை. 'மாரியாத்தாக்கு மடிப்பிச்ச போடுங்கோ.'

**மடைக்கலம்:** கொங்கு திருமணத்தில் சமையலுக்கு தேவையான பண்டங்களைப் பெற்றுக் கொண்டு தானியங்களும், காணிக்கைகளும் கொடுத்தல்.

**மடெதிருப்பு** : காண்க. மடெமாறு

**மடெமாறு** : தண்ணீரை வேறு மடைக்கு மாற்றுதல். 'சீக்கிரெ மடையெ மாத்து வயில்ல தண்ணி நெறஞ்சுருச்சு.'

**மண்டக்கட்டு** : வெய்யிலுக்காக தலையில் கட்டப்படும் கட்டு. 'வெய்யிலு தாங்க முடியலெ மண்டக்கி கட்டனும்.'

**மண்டக்கெருத்தி** : கவுரவம்.

**மண்ணுமும்பி** : ஒரு வகை பாம்பு, மொன்னை பாம்பு என்றும் கூறுவர்.

**மண்ணுஊடு:** மண்ணால் உருவாக்கப் பட்ட வீடு. 'மழெ பேஞ்சதுனா மண்ணு ஊடு ஒசம்பேறியிரு.'

**மணியகாரர்:** கிராம நிர்வாக அலுவலர். 'மணியகாரரெ பாத்துட்டு வந்தெ.'

**மத்தவியெ** : மற்றவர்கள். 'மத்தவியெ சொல்றதெக் கேட்டுட்டு பேசாதெ.'

**மத்தவீகளுக்கு** : மற்றவர்களுக்கு. 'மத்தவீகளுக்கு சொன்னா புரியாது.'

**மத்துக்கவுறு** : தயிர் கடையும் மத்தில் இருக்கும் கயிறு. 'மத்துக் கவுத்தெ எங்க வெச்செ.'

**மதக்கொ** : மந்தம். ஒரே மதக்கொ புடிச்சு திரியறாண்டா.

**மதியொ** : முழுநிலவு. பௌர்ணமி. 'மதியத்தன்னிக்கி சீட்டு வெச்சிருக்கற.'

**மந்தாரொ** : வானம் மேகமூட்டமாக இருத்தல். 'மானொ மந்தாரமா இருக்குது மழ வரப்போவுது.'

**மப்பு:** கண்ணில் கிறக்கம் உண்டாதல். 'மப்பு ஏறிப் போச்சா.'

**மப்பூட்டாந்தழெ** : உடம்பில் பட்டால் அரிப்பு ஏற்படுத்தும் பூடு. 'மப்பூட்டாஞ் செடியெ தொடாதெ.'

**மம்மானியா :** அளவுக்கு அதிகம். 'இந்த வருச மம்மானியா மலை பேஞ்சுருச்சு.'

**மம்முட்டி:** மண்வெட்டி. 'மம்முட்டியெ எடுத்தா இந்த பாத்திய கோதியுடலா.'



மம்முட்டி

**மயிர்க்கவுறு :** முடியால் செய்யப்படும் கயிறு. 'மயிர்க்கவுறு வாங்கியாந்து மாட்டுக்கு காட்டியுடோனு.'

**மயிர் கோதி :** கூந்தலில் விழும் முடிச்சுகளை கோதி எடுக்க பெண்கள் பயன்படுத்தும் சிறிய கம்பி. 'மயிர்கோதி எடுத்து கோதியுடு.'



மயிர்கோதி

**மயிலாஞ்சி :** மருதாணி. 'பொட்டப் புள்ளயாட்ட மயிலாஞ்சி வெச்சிருக்காம் பாரு.'

**மரக்கா :** தானியத்தை அளக்கும் அளவு. 'உங்கூட்டுலெ மரக்கா இருந்தாக் குடுங்கோ.'

**மரக்கொரங்கு :** சிறுவர்கள் மரத்தின் மீது ஏறி தொட்டு விளையாடும் விளையாட்டு.

**மரச்சீப்பு :** மரத்தால் செய்த சீப்பு. 'தலயிலெ பேனு எடுக்க மரச்சீப்பு எடுத்தா.'

**மரப்பு :** தடுப்பு. 'மரப்புல போயி நிக்கறாம் பாரு.'

**மரமேறி :** தென்னை, பனை மரங்களில் ஏறி கள் இறக்கும் சாணார். 'மரமேறி வந்தா இந்தக் கள்ளுப் பானையெ எறக்கச் சொல்லு.'

**மருக்காமருக்கா :** திரும்பத்திரும்ப. 'மருக்காமருக்கா தப்பு பண்ணிட்டே இருக்காதெ.'

**மருமகெ :** மருமகன். 'இது என்ற ரெண்டாவது மருமகெ.'

**மருமகோ :** மரும்கள். 'இது எம்மூத்த மருமகோ.'

**மருவாதி :** மரியாதை. 'கொஞ்சமாச்சி மருவாதெ வெச்சிப் பேசிப் பழவு.'

**மல்லாக்க :** முகத்தை நேராக வைத்து திரும்பிப்படுத்தல். 'மல்லாக்க படுக்காத எந்திரி.'

**மல்லு :** சிறுநீர். 'மல்லெ அடக்கவே முடியல.'

**மலங்கம்பு :** மலையில் விளையும் கம்பு. 'மலங்கம்பு புளிதண்ணிய குடிச்சா ஒடம்புக்கு நல்லது.'

**மவராசெ :** மகராசன். 'மவராசெ கடசி காலத்திலியு நாலு நல்லதெஞ் செஞ்சாருப்பா.'

**மவுத்தாங்கரை :** முஸ்லீம் மதத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடம்.

**மழக்கஞ்சி:** மழை வேண்டி பெண்கள் கூடி வைக்கும் கஞ்சி.

**மழக்காயதொ :** பாலீத்தீன் பை. 'மழக்காயதொ இருந்தாக்குடுங்கோ.'

**மழுங்கனுகெ :** ரோசமில்லாதவர்கள். 'வந்துட்டானுகெ மழுங்கனுங்கெ எத்தன தாட்டி சொன்னாலு கேக்க மாட்டானுகெ.'

**மழுவு :** மரத்தை வெட்டும் ஆயுதம். 'மழுவு இருந்தாக் குடுங்கெ இந்த மரத்தெ வெட்டலா.'

**மளார்னு :** உடனடியாக. 'போயிட்டு மளார்னு வரோனு.'

**மறந்தராதெ :** மறந்து விடாதே. 'நாஞ்சொன்னதெ மறந்துராதெ என்னெ.'

**மறப்பு :** மாடுகள் பிறர் கண்ணில் படாமல் இருக்க கட்டும் தடுப்பு. 'மாட்டுக்கு மறப்பு கட்டோனும்.'

**மறுக்கா :** மறுபடியும். 'மறுக்கா நாஞ் சொல்றதெ கேக்கவே மாட்டீங்குற.'

**மறுசரடு :** கொங்குத் திருமணங்களில் தாலிகட்டிய மறுநாள் விநாயகர் கோயிலில் வைத்து பெண்களுக்கு இரண்டாவது சரடாக தாலி கட்டுவது.

**மறுபூட்டெ :** அறுவடையான பயிர் மீண்டும் வளர்ந்து கதிர்விடுதல். 'பயிரு மறுபூட்டெ உட்ருக்குது.'

**மன்னகட்டி மாரியாத்தா :** வெய்யில் காலத்தில் ஏற்படும் அம்மை நோய் கன்னப்பகுதி மட்டும் வீங்கியது போல் இருக்கும். 'மன்னகட்டி மாரியாத்தா வந்து இன்னிக்கித்தெ தண்ணி ஊத்துனெ.'

**மனுவு :** பத்து கிலோ கொண்ட அளவு. 'வெறவு ரெண்டு மனுவு ஆச்சு.'

## மா

**மாக்கான் :** புத்தி இல்லாதவன். 'மாக்காங்கிட்ட ஒரு வேலயச் சொல்லாத.'

**மாசமாயிருத்தல்:** பெண் கருவுறுதல். 'எம்பொண்ணு மாசமாயிருக்கா.'

**மாஞ்சுமாஞ்சு :** சிரமப்பட்டு. 'மாஞ்சுமாஞ்சு வேலசெஞ்சு ஒரு பிரயோசனமு இல்லெ.'

**மாட்டலு :** காதில் அணியும் அணிகலன். 'மாட்டலு போட்டுகிட்டு வந்துட்டா.'

**மாட்டாசுபத்திரி :** கால்நடை மருத்துவ மனை. 'மாட்டுக்கு காலுலெ புண்ணாயிருச்சு மாட்டாசுபத்திரிக்கி கொண்டு போகோனு.'

**மாட்டீன்னு :** மாட்டேன் என்று. 'அவெ மாட்டீன்னு சொல்லிட்டு போயிட்டே.'

**மாட்டுத்தாழி :** மாடுகள் கழிதண்ணீர் குடிக்கும் தொட்டி. 'மாட்டுத் தாழில கொண்டுபோயி ஊத்து.'

**மாடாக்குழி :** வீட்டில் விளக்கு வைக்க அமைக்கும் சிறு குழி. 'மாடக்குழியிலெ பாரு வெளக்கு இருக்குது.'

**மாணாங்காணியா :** காண்க. மம்மானியா.

**மாத்து :** அடித்தல். 'அவனுக்கு ரெண்டு மாத்து குடுக்கோனு.'

**மாத்துதுணி :** திருவிழாக்களில். கோயில், திருமண விழாக்களில் வீடு போன்றவற்றில் சலவைத் தொழிலாளர்களால் விரிக்கப்படும் தரைவிரிப்பு. 'மாத்தெ விரிச்சுடுங்கொ அல்லாரு உக்காருட்டு.'

**மாத்தி :** மாற்று. 'மாத்திகீத்தி வெச்சராத.'

**மாப்பு :** மன்னிப்பு. 'இந்த தடவ மட்டு மாப்பு குடு.'

**மாயெ மாட்டீங்குது :** எந்த வேலை கொடுத்தாலும் செய்யாமலிருத்தல். 'என்னொ சொன்னாலு இவனுக்கு மாய மாட்டீங்குது.'

**மாரடித்தல் :** துக்கத்தை வெளிப்படுத்த மார்பின்மேல் கையை வேக மாக அடித்துக் கொள்ளல். 'அந்தெ எலவூட்ல மாரடிச்சு அழுகுறாங்க.'

**மாலநேரொ :** இருட்டும் நேரம். 'மாலெ நேரொத்துல கொழந்தய தூக்கி கிட்டு வெளிய போகாத.'

**மாலைக்கண்ணு :** மாலையில் கண் தெரியாமல் போதல். 'மாலைக் கண்ணு நோவு வந்துருச்சு.'

**மாவுக்கறி :** மாவு போல இருக்கும் இறைச்சி. 'மாவுக்கறியா பாத்து எடுத்து கொழ்ந்திக்கி குடு.'

**மாவெளக்கு :** திருவிழாக்களில் மாவில் ஏற்றி வைக்கும் விளக்கு. 'மாவெளக்கு வெக்கறாங்கொ பாக்கெ போகோனு.'

**மாறடிக்கிறது :** 'உங்கூட எவம் மாறடிக்கிறது.'

**மாறாயம் :** பெண்கள் பூப்படைவதை தாய்மாமனுக்கு தூதாக சொல்வது.

**மானொ :** வானம். 'மானொங் கருக்கலா இருக்குது மழவரப் போவுது.'

## மி

**மிச்சொ :** மீதம். 'சோறு எவ்வளவு மிச்சமாயிருச்சு பாரு.'

**மிஞ்சி :** மெட்டி. திருமணமான பெண்கள் கால் விரலில் அணியும் சிறு வளையம். 'காலுக்கு மிஞ்சி போடணும்.'

**மிரமினை :** கோயில் திருவிழாவின் போது சாமி ஊர்வலமாக வருதல். சாமி மிரமினை வருது.

**மின்னாம்பூச்சி** : மின்மினிப்பூச்சி. 'இருட்டுல மின்னாம்பூச்சி எப்பிடி பறக்குது.'

## மீ

**மீன்தெரியறெநேரெ** : இரவில் நட்சத்திரங்கள் தெளிவாக தெரியும் நேரம்.

## மு

**முக்கட்டக்காய்** : மூன்று விதைகளை யுடைய நிலக்கடலை காய். 'முக்கட்டக் காயி நெறயா இருக்குது.'

**முக்காலி** : மரத்தால் செய்யப்பட்ட மூன்று கால்களை உடைய உட்காரப் பயன்படுவது. 'முக்காலியெ எடுத்துப் போட்டு உக்காரு.'



முக்காலி

**முக்காத்துட்டு** : பழைய காலத்து அணா நாணயம். 'முக்காத்துட்டு மூணு காசு சம்பாதிக்க வழியில்ல பேச வந்துட்டாம் பாரு.'

**முக்கு** : 1.மூச்சை அடைத்து வெளி விடுதல். 'அப்பிடியே முக்கி தக்கி மூட்டைய தூக்கிட்டியா.' 2.தெருவின் ஓரம். 'அந்த முக்குல நிக்கிறாம் பாரு.'

**முச்சி** : சிறிய முறம்.

**முசுடு** : ஒன்றும் தெரியாத. 'அவனொரு முசுடா இருக்கறாம்பா.'

**முசுவு** : ஒரு குறிப்பிட்ட நேரம். 'ஒரு முசுவு களெ வெட்டுனா காடு தீந்துரும்.'

**முட்டாயி** : மிட்டாய். 'கடையிலெ போயி முட்டாயி வாங்கியா.'

**முட்டி** : பெரிய மரக்கட்டை. 'முட்டில வெச்சு வெறகெ வெட்டு இல்லீனா அருவா பதம் போயிரு.'

**முட்டு** : கீழே விழாமல் இருக்க தடுப்பு கொடுப்பது. 'நெலவுக்கு முட்டுக்குடு இல்லீனா கீழெ உளுந்துரு.'

**முட்டுக்கோல்** : வண்டியின் பின்பக்கம் பாரத்தை தாங்க கீழ்ப் பகுதியில் வைத்திருக்கும் கட்டை. 'முட்டுக்கோலெ எடுத்துடு நல்லா ஊனி நிக்கிட்டு.'

**முட்டுவழி** : விவசாயத்தில் சாகுபடிக்கு ஆகும் செலவு. 'முட்டுவழிக்குங் கூட தேறுலெ.'

**முடிஎறக்கறது** : மொட்டை அடித்தல். 'சாமிக்கி முடி எறக்கறதுனு வேண்டியி ருக்கெ.'

**முடிஞ்சிருப்பெ** : முடிந்து இருப்பேன். 'கொஞ்சோ பெசகியிருந்தாலு முடிஞ்சிருப்பெ.'

**முடிஞ்செ பாடில்லெ** : இன்னும் முடியவில்லை. 'வேலெ செய்யச் செய்ய இன்னுமு முடிஞ்ச பாடில்லெ.'

***முடீமே :*** *முடியுமே. 'என்னாலெ இதச் செய்ய முடீமே.'*

***முடுஞ்சுது :*** *முடிந்தது. 'எல்லா வேலயு ஓர்சலா முடுஞ்சுது.'*

***முண்டு :*** *ஒருவரை எதிர்த்து செயல்படுதல். 'எங்கிட்டியே முண்டறியா நீ.'*

***முண்டச்சி :*** *விதவை. 'முண்டச்சியெ பாத்துட்டுப் போனா வெளங்குன மாதிரிதெ.'*

***முணுக்கன்:*** *அமைதியா இருப்பவன். 'முணுக்குமுணுக்குனு இருந்துகிட்டு முன்னூறு ஊட்டுக்கு தீ வெச்சிருவான்' — பழமொழி.*

***முத்தாப்பு செய்தல் :*** *சிறப்பு செய்தல்.*

***முத்தரெ :*** *முத்திரை. தனக்கு விருப்பமான ஒன்றை தம்மேல் பதித்துக் கொள்ளுதல். 'கையிலெ முத்தரெ குத்தியிருக்காம் பாரு.'*

***முத்தரெப்படி :*** *அரசாங்க முத்திரை கொண்ட தானியம் அளக்கும் படி. 'முத்தரெப்படிலே முத்தரெ குத்திருக்கானு பாரு.'*

***முத்தரெ வள்ளம் :*** *அரசாங்க முத்திரை கொண்ட தானியம் அளக்கும் வள்ளம். 'வள்ளத்துல முத்தரை குத்தியிருக்கு பாரு.'*

***முத்திரிக்கிறது :*** *தீர்த்தம் முத்தரைத்தல். 'சாமிக்கி தீர்த்தெ முத்திரிக்கறதுக்கு போறொ.'*

***முந்தாநாள் :*** *நேற்றைக்கு முன்தினம். 'முந்தாநாளு போனவெ இப்பதெ வர்றா.'*

***முந்தி :*** *1. முந்தானை. 'முந்தி வெச்சு கட்டத் தெரியலயா.' 2. முதல் ஆளாக செல்லுதல். 'முந்திரிக் கொட்டை யோட்ட முந்திக்கிறது.'*

***முந்திகிட்டு :*** *முன்னேறிக் கொண்டு. 'என்னயே முந்திக்கிட்டு போயிட்டாம் பாரு.'*

***மும்பரமா :*** *காண்க. தெரக்கா.*

***மும்பாரம் :*** *வண்டியின் முன்பக்கம் ஏற்றும் பாரம். 'மும்பாரெ அதிகமா இருக்குது.'*

***முய்யி :*** *விழாக்களில் செய்யப்படும் செலவுகளை சொந்தங்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்ள கொடுக்கும் பணம். 'முய்யி எழுதெறதுக்கு இவ்ளோ பேரா.'*

***முழுக்காது கலியாணம்*** *முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையேயான நட்புறவை வலுப் படுத்தும் வகையில் கொங்கு வேளாள கவுண்டர் முழுக்காத குல மரபில் ஏற்பட்ட ஒரு சீராகும். முஸ்லீம்கள் சுன்னத் செய்து கொள்வதற்கு இணையாக சகோதர பாசத்தை வெளிப்படுத்தும் வகையில் காது குத்தும் சீர் நடைபெறுகிறது. (முழு வரலாற்றினை இந்நூலாசிரியரின் பிடாரியூர் காணியாளர் பொருள் தந்த குல வரலாறு நூலில் காண்க.)*

**முழுகாமலிருத்தல்** : பெண் கர்ப்பமாகுதல். 'எம்மருமவொ மூணு மாசொ முழுவாமயிருக்கா.'

**முழுமன்** : எந்த ஒரு விசயத்தையும் உடனே வெளியில் கூறாதவன். 'எங்கியோ முழுமனா இருக்கறாண்டா.'

**முழுமுண்டமா** : வெற்றுடம்புடன். 'முழு முண்டமா சுத்திகிட்டு இருக்காம் பாரு.'

**முழி** : கண்ணின் விழி. 'கண்ணாம் முழிய தோண்டிருவெ.'

**முளம்பன்றி** : முட்கள் போன்ற முடிகளையுடைய பன்றி. 'முள்ளம் பன்னி தலையா.'

**முளை** : மாடுகளைக் கட்ட நிலத்தில் ஊன்றும் தடிமனான கோள். 'மொளக்குச்சியெ நல்லா அடிச்சு கட்டு.'

**முறிவாடு** : விஷத்தை முறிக்கும் மருந்து. 'இந்த மருந்தெ குடிச்சாங்கிட்டி முறுவாடு ஆகிருச்சு.'

**மொளகுசாறு** : ரசம்.

**முறுக்குத்தட்டம்** : முறுக்கு பிழியும் கருவியில் முறுக்கின் வடிவத்திற் கேற்ப வைக்கப்படும் வட்ட வடிவத் தட்டு.

**முன்னத்தி ஏரு** : ஏரோட்டும்போது முதலில் செல்லும் ஏர்.

**முன்னாடி** : முன்னால். 'நானு இங்க முன்னாடி இருக்குற.'

**முனகுதல்** : வாயை திறக்காமல் தொண்டையிலேயே பேசுவது. 'ஒடம்புக்கு முடியாம முனகிகிட்டே படுத்துருக்கறா.'

**முஸ்தீப்பு** : மும்முரமாக. 'என்ன வேலயெல்லா ஒரே முஸ்தீப்பா நடக்குதோட்ருக்குது.'

## மூ

**மூக்கணாங்கவுறு** : மாட்டின் மூக்கில் நுழைத்துத் தலையைச்சுற்றி கட்டியி ருக்கும் கயிறு. 'மாட்டுக்கு மூக்கணாங் கவுத்த தளக்கமா கட்டியுடு.'

**மூக்காணி** : வண்டியின் முன்பகுதியில் ஊன்றும் கோல். 'மூக்காணியெ புடிச்சு இழு.'

**மூங்கக்கூடெ** : மூங்கிலால் பின்னப்பட்ட கூடை. 'மூங்கக் கூடயிலெ சாணிய அள்ளிப் போடு.'



மூங்கக்கூடை

**மூங்கலரிசி** : மூங்கிலிலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை நெல் வரும். பஞ்ச காலத்தில் இதை உணவாக உண்டனர்.

**மூச்சுடாமெ :** காண்க. கம்முனு.

**மூச்சுடப்புடாது :** மூச்சு விடக்கூடாது. 'கப்சிப்னு இருக்கோனு மூச்சுடப்புடாது.'

**மூச்சுத்தெப்பு :** மூச்சுப்பிடிப்பு எனப்படும் உடல் நோய்.

**மூஞ்சி :** முகம். 'மூஞ்சியப்பாரு அசடு வழியுது.'

**மூட்டுக்குட்டி :** ஆடு வகையில் பெண் குட்டி. 'இந்த தடவ ஆடு ரெண்டு மூட்டுக்குட்டி போட்ருக்குது.'

**மூத்தகுடி :** முதல் மனைவி. 'அவிகெ மூத்தகுடி வாரிசுகெ.'

**மூய மூய :** தீரத்தீர, முடியமுடிய. 'மூயமூய வேலயே தீர மாட்டிங்கிது.'

**மூர்த்தொ :** முகூர்த்தம். 'மூர்த்தொத்துக்கு நேரமாச்சி வாங்கெ போலா.'

**மூளி :** வெறுமை. மூளியாட்ட வந்து நிக்கறத பாரு. குறைபாடு. 'மூளிக் கொடத்த எடுத்து வெய்யி.'

**மூனாம் வருசொ :** கடந்த ஆண்டுக்கு முந்தைய ஆண்டு. 'இந்த நெல்லு போன மூனாம் வருசொ வெளஞ்சது.'

## மெ

**மெச்சிக்கோனு :** புகழுதல். 'ரொம்ப மெச்சுனும்னா அவ்ளோதெ.'

**மெதித்தல் :** ஒருவரை காலால் மிதித்தல். 'தெரியாம மெதிச்சுட்டெ மன்னிச்சுக்கொ.'

**மெரட்டுறெ :** மிரட்டுதல். 'இந்த மெரட்டுறெ வேலயெல்லா வெச்சுக்காத.'

**மெரமணெ :** திருவிழாக்களில் கடவுள் தெருக்களில் ஊர்வலம் வருதல். 'சாமி மெரமணே வருது.'

**மெனக்கெட்டு:** முயன்று. 'இவ்ளோ மெனக்கெட்டு வேல முடியல.'

## மே

**மேக்காலெ :** மேற்குதிசையில். 'மேக்காலெ இருக்குற கடெக்கி போ.'

**மே காத்து :** மேற்கு திசையிலிருந்து வீசும் காற்று. 'மேகாத்து வீசுது மழ வருமோட்டத் தெரீது.'

**மேகோடு :** மேற்கு மூலை. 'மேகோட்டுல பாரு மம்முட்டி இருக்குது.'

**மேகோப்பு :** வீட்டின் சுவற்றுக்கு மேல் உள்ள பகுதிகள். 'மேகோப்பெ நல்லா பூசியுடு.'

**மேச்சல் :** மேயுதல். 'ஆடு மேச்சலுக்கு போயிருக்குது.'

**மேச்சக்காடு :** ஆடு, மாடு மேயும் இடம். 'மேச்சகாட்டுக்கு ஆட்ட ஓட்டிட்டு போகோணு.'

**மேச்செலவு :** சில்லறைச் செலவுகள். 'மேச்செலவுக்கு மட்டு பண எடுத்துக்க.'

**மேஞ்சுதா :** ஆடு, மாடுகள் நிலங்களில் மேய்தல். 'மாடு நல்லா மேஞ்சுதா.'

**மேட்டாங்காடு** : புன்செய் நிலம். மானாவரி விவசாய நிலம். 'மேட்டாங் காட்ட ஓட்னவனுங் கெட்டான். மேனா மினுக்கிய கட்னவனுங் கெட்டான்' – பழமொழி.

**மேப்படி** : கதவு நிலவின் மேற்பகுதி.

**மேபொறொ** : காண்க. மேக்காலெ.

**மேம்போக்கு** : எதிலும் சிரமம் எடுக்காமல் மேலோட்டமாக செய்தல். 'அவ மேம்போக்கான வேலயத்த செய்வே.'

**மேலாக்கு** : பெண்கள் மார்பின் மீது போடும் துணி. 'மேலாக்கு போடாமயே சுத்தறா பாரு.'

**மேலு** : உடம்பு. 'மேலுக்கு மட்டுந்தெ தண்ணி ஊத்துனெ.'

**மேலொழவு** : பயிர் அறுவடை செய்தபின் போடும் உழவு. 'ஒரு மேலொழவு போட்டு வெக்கணும்.'

**மேவு** : ஆடு, மாடுகள் மேயும் புல். 'மேவு நெறஞ்சி கெடக்குது.'

**மேமழை** : விவசாயத்திற்கு உழவு ஓட்ட முடியாமல் மேலோட்டமாக பெய்யும் மழை.

**மேழி** : கலப்பையின் மேல் பகுதியில் இருக்கும் கட்டை. 'மேழிய புடிச்சாத்த சோறு கெடைக்கும்.'

**மேழிப்பாலு** : ஏர் பிடித்து பழகும்போது மேழியின் மீது கையை வைத்து கையால் அழுத்துதல். 'எங்கிட்டெ மேழிப்பாலு புடிச்சிதானெ நீ ஏரு கத்துகிட்டெ.'

**மேனாட்டுக் கொப்பளொ** : வயதானவர்களுக்கு குணப்படுத்த முடியாத வகையில் தண்டு வடத்தில் ஏற்படும் கொப்பளம்.

## மொ

**மொக்கு** : சாலைகளின் சந்திப்பு. 'இந்த மொக்குலெ திரும்புனதீயுமு அவிக ஊடு இருக்குது.'

**மொக்குளி** : தண்ணீரில் மூழ்கி எழுதல். 'தண்ணிக்குள்ள மொக்குளி போட்டு பாக்கலா.'

**மொக்கையடி** : உள் அடி. 'கீழ வுழுந்து மொக்கையடி பட்ருச்சு.'

**மொக்கை பட்டம்** : விளைச்சல் இல்லமால் நட்டமாகி விடும் பருவம். 'இந்த தடவ மொக்கப் பட்டமாகி போச்சு.'

**மொகயுடறது** : சேவல்களை காலில் கத்திகட்டி சண்டைக்கு விடுவது.

**மொகரக்கட்டெ** : முகம். 'மொகர கட்டெய பாரு அழுது வடியுது.'

**மொகரகவுறு** : கன்றுகளுக்கு மூக்கைச் சுற்றி மேலாக இணைக்கும் கயிறு. 'கன்னுக் குட்டிக்கி மொகரகவுறு போடோணும்.'

***மொகப்பழொ :*** *காய்ப்பருவத்திற்கும், பழுப்பதற்கும் இடைப்பட்ட நிலை. (நன்கு பழுக்கத் துவங்கும் நிலை).*

***மொக மழிக்கணும் :*** *முகத்தை வழித்தல். (சேவிங் செய்தல்)*

***மொகுட்டோடு :*** *வீட்டின் மேலே முகட்டுப் பகுதியில் போடும் ஓடு. 'மொகுட்டோட்டுலெ பாரு எலி ஓடுது.'*

***மொகுடு :*** *வீட்டின் மேலே உள்ள கூம்பு வடிவ பகுதி. 'மொகுட்டுல பாரு எலி நெறயா இருக்கு.'*

***மொகுலு :*** *மேகம். 'மொகுலு கருக்குது மழ வரும்.'*

***மொச்ச :*** *குழந்தையின் மீது வீசும் ஒருவகை பால்வாடை. 'கொழந்தய சுத்தம் பண்ணியுடு மொச்ச வாடை அடிக்குது.'*

***மொச எறும்பு :*** *கால்கள் மேல் மொய்ப்பது போல ஏறும் எறும்பு. (சாமி எறும்பு). 'மொச எறும்பு கடிக்காது.'*

***மொசலு :*** *முயல். 'ராத்திரி மொசலு புடிக்கப் போனெ.'*

***மொசுமொசுன்னு :*** *அடர்த்தி. 'மொசுன்னு பயிருகெ வளந்துருச்சி.'*

***மொட்டக்கெணுறு :*** *தண்ணீர் இல்லாமல் வறண்ட கிணறு. 'மொட்டக்கெணுறு வறண்டு போச்சி.'*

***மொட்டப்பாறை :*** *மொர மொரப்பான சிறிய பாறை. 'மொட்டப் பாறையில வத்தலு காய வெச்சிருக்க.'*

***மொட்ட வண்டி :*** *பாரம் ஏற்றும் வண்டி. 'மொட்ட வண்டியிலெ டவுனுக்கு சாமானொ வாங்கறதுக்கு போறாங்கெ.'*

***மொட்டு :*** *முட்டை. 'கோழி மொட்டு வெச்சிருக்குது.'*

***மொடக்கிடி :*** *ஒத்துவராமை. பிடிவாதம். 'அவனொரு மொடக்கிடி புடிச்ச ஆளு.'*

***மொடக்குந்தாங்கொடி :*** *நீர் ஓடும் இடங்களில் வளர்ந்திருக்கும் ஒருவகை செடி. மாட்டுப் பொங்கலின் போது இதை பட்டியில் வைப்பர்.*

***மொடக்கோனு :*** *பிறர் வளர்ச்சியை தடுப்பது. 'அவனெ எப்பிடியாவது மொடக்கோனு.'*

***மொடங்கு :*** *மிடறு. 'ரெண்டு மொடங்கு தண்ணிய குடிச்சு வவுறு வலிக்குது.'*

***மொடங்கோனு :*** *ஓய்வு எடுக்க வேண்டும். 'சித்தெ எங்கியாவது மொடங்கோனு.'*

***மொடமயிறு :*** *எதற்கும் ஒத்துவராதவன்.*

***மொடா :*** *தானியம் போட்டு வைக்கவும், நீர் ஊற்றி வைக்கவும் உதவும் பெரிய மண்பாண்டம்.*



மொடா

**மொடாச்சந்து** : அடுக்கி வைத்து இருக்கும் மொடா வரிசைகளுக்கு இடையே உள்ள இடைவெளி. 'மொடாச்சந்துல எலி நெறயா இருக்குது.'

**மொடை** : 1. பிடிவாதம். 'அவனொரு மொடை புடிச்சவன்டா.' 2. தட்டுப்பாடு. 'பணமொடை அதிகமா இருக்கு.'

**மொடையறது** : பின்னுதல். 'கூட மொடைய வேணு.'

**மொண்டி** : உடலில் கை, கால் ஊனமுற்றவர். 'மொண்டிக்கு முந்நூறு குசும்பு.'

**மொண்டிப் பன்னாட்டு** : தேவை இல்லாமல் அதிகாரம் செய்தல். 'இந்த மொண்டிப் பன்னாட்டுக்கு ஒண்ணு கொறச்சலு இல்ல.'

**மொண்டி வைத்தியம்** : அவசரத்திற்கு செய்யும் வைத்தியம். 'மொண்டி வைத்தியம் பண்ணிகிட்டே இருக்காத.'

**மொத்தச்சோறு** : அதிகமான சோறு. 'மொத்தச்சோத்த தின்னு தின்னு உடம்ப வளத்திக்க.'

**மொத்து** : ஓங்கி அடித்தல். 'ரெண்டு மொத்து குடு.'

**மொதக்கறது** : வாய்கொள்ளாத அளவு உணவை வாயில் போட்டுக் கொள்ளுதல்.

**மொதல்லெ** : முதலில். 'மொதல்லெ உக்காரு அப்றொ பேசிக்கலா.'

**மொதை** : பாளை நெல்லும் வைக்கோலும் கலந்த கலவை. 'நெல்லுல ஒரே மொதையா இருக்குது.'

**மொரசன்** : முரடன். 'அவனென்ன பெரிய மொரசனா இருக்கறான்.'

**மொல்லெ** : அளவுக்கு மீறிய கடன். 'இவ்ளோ மொல்லெய வாங்கியிருக்க எப்பகட்றது.'

**மொலுமொலுன்னு** : கூட்டமாக. 'எறும்பு மொலுமொலுன்னு ஆளு மேலெ ஏறியிருச்சி.'

**மொவுட்டோடு** : கூரை முகட்டில் கவிழ்த்து வைக்கும் ஓடு. 'மொவுட் டோட்ட மாத்தணு ஒழுகுது.'

**மொழங்கு** : தானியக்கட்டையில் இருக்கும் சிறு துகள்கள். 'மொழங்கு குத்தி அரிக்குது.'

**மொழொ** : முழம். ஒரு மொழொ மல்லிப்பூவு குடுங்கெ.

**மொள்ள வா :** மெதுவாக வா. 'மொள்ளவா எங்கியாவது உளுந்துராதெ.'

**மொளக்கட்டறது :** பயிர் முளை கட்டுதல். 'பயிருகெ மொளகட்டறதுக்கு இவ்ளோ நாளாயிருச்சி.'

**மொளக்குச்சி :** ஆடு, மாடுகளை கட்டி வைக்க தரையில அடிக்கும் மரத்தாலான குச்சி. 'மொளக்குச்சிய அடிச்சுடு மாட்ட கட்டலா.'

**மொளகாயி :** மிளகாய். 'உட்டா தலையில மொளகாயி அரச்சுருவடா நீ.'

**மொளகு :** குழம்புக்கு அரைக்கும் கூட்டு. 'மொளகு அரைச்சு ரசொ வெக்கணு.'

**மொளப்பாரி :** பெண்கள் மார்கழி மாதத்தில் தானியங்களை ஒரு சிறு தட்டில் போட்டு வளர்த்து தை காணும் பொங்கலின் போது கொண்டு போய் கங்கையில் விடுவர். 'மொளப்பாரி எடுத்துட்டுப் போறாங்கோ போயி பாக்கலா வா.'

**மொறெ :** உரிமையுள்ள உறவு. 'அது என்றொ மொறைப் பொண்ணு.'

**மொறெக்கிற :** முறைத்தல். 'என்னயப் பாத்து மொறைக்கிற.'

**மொறொ :** முறம். 'மொறொத்த எடுத்தா அரிசி பொடைக்கலா.'

**மொன்னப்பாம்பு :** மழுங்கிய தலை உடைய பாம்பு. 'மொன்னப் பாம்பு கடிச்சிரப் போவுது.'

## மோ

**மோட்டுவலை :** எலி வலை. வரப்பு களில் இருக்கும்.) 'மோட்டு வலைய நல்லா அடைச்சி வெய்யி.'

**மோடம் :** மழை வருவதற்கு அறிகுறியாக மேகம் கூட்டமாக இருத்தல். 'மோடம் போட்டுருக்குது மழ வரு.'

**மோந்து பாக்குது :** முகர்ந்து பார்த்தல். 'நாயி சட்டியெ மோந்து பாக்குது.'

**மோரி :** பாலங்களில் இருபுறமும் கட்டும் சுவர். 'மோரி மேல உக்காராத.'

**மோரு :** 'கடஞ்ச மோருல வெண்ண எடுக்கறது.'

**மோழி :** அழுக்குத்துணிகளை மூட்டையாக கட்டி வைத்திருப்பது. 'அழுக்குத்துணி ஒரு மோழி சேந்துருச்சு.'

**மோளக்குச்சி:** தாளம் எழுப்ப உதவும் கோல். 'மோளக்குச்சிய எடுத்து தட்டு.'

**மோளக்காரெ :** பறை அடிப்பவர். 'மோளக்காரனெ கூப்புட்டு பறைய தட்டச் சொல்லு.'

## ர

**ரக்கெ :** உலக்கை. 'ரக்கெயெ எடுத்து குத்து.'

**ரக்கிரி :** கீரை. 'ரக்கிரி கெடஞ்சு திங்கனும்.'

**ரகளெ :** பிரச்சினை. 'அங்ஙனெ ஒரே ரகளெயா இருக்குது.'

**ரச்செ :** தொந்தரவு. 'இவனோட ரச்செ தாங்க முடியல.'

**ரட்டு :** போர்வை. 'அந்த ரட்ட எடுத்து விரி.'

**ரணகளம் :** இரத்தம் சிந்தும் நிலை. 'எங்கிட்ட வம்பு பண்ணுன ரணகளமாகிப் போயிரு ஆமா.'

**ரவ்வும்பகலுமு :** இரவு பகலாக. 'ரவ்வும்பகலுமு வேலெ தீரவே மாட்டீங்குது.'

**ரவளெ :** காண்க. ரகளெ.

**ரவுக்கெ :** பெண்கள் அணியும் மேலாடை. 'ரவுக்கெ தெக்கெ குடுக்கோனு.'

**ரவுசு :** சண்டை. சத்தம். 'அங்கென்ன ஒரே ரவுசா இருக்குது.'

**ரவுண்டா :** உருண்டையாக. 'இதென்ன ரவுண்டா இருக்குது.'

## ரா

**ராசியாயிட்டாங்க :** சண்டைக்குப்பின் சேர்ந்து கொள்ளுதல். 'சண்டை கட்டிட்டு ராசியாயிட்டாங்க.'

**ராட்டனாந்தூறி :** கொடை ராட்டினம். 'ராட்டனந்தூறி வெளயாடோனு.'

**ராத்தலு :** எடை போடும் முறை. 'ராத்தலு வெச்சு எடெ போடோனு.'

**ராந்தலு :** அரிக்கேன் விளக்கு. 'அந்தக் காலத்துல ராந்தலு வெச்சு படிச்சமாக்கு.'

**ராயி :** கேழவரகு. 'ராயிக்கஞ்சி குடிச்சி வளத்தெ ஒடம்பு இது.'

**ராயிக்கல்லு :** கேழ்வரகு அரைக்கும் கல்லால் ஆன இயந்திரம். 'ராயிக்கல்லெ எடுத்துட்டுவா ராயி அரைக்கலா.'



ராயிக்கல்

**ராயிக்களி :** கேழ்வரகால் செய்யப்பட்ட உணவு.

**ராய்க்கூழு :** கேழ்வரகை அரைத்து செய்யப்படும் கூழ். 'ராய்க்கூழ் குடிச்சி வளந்த ஒடம்பு.'

## ரூ

**ரூவிச்சுக்காட்டு :** நிரூபித்துக்காட்டு. 'நீ. சொல்றது செரின்னு ரூவிச்சுக்காட்டு பாக்கலா.'

## ரெ

**ரெக்கெ :** கோழியின் இறகு. 'கோழி ரெக்கெய காதுலெ உட்டு நோண்டாதெ.'

**ரெட்டெ :** இரண்டு. 'அவுளுக்கு ஒரே பெரசவத்துல ரெட்டக் கொழந்தைக.'

***ரெட்டெ சடெ :*** *பெண்கள் தலையில் இரண்டு பக்கமும் போடும் கொண்டை.*

***ரெண்டகம் :*** *நம்பிக்கைத் துரோகம். 'உண்ட வீட்டுக்கே ரெண்டகம் பண்ணிட்டியே.'*

***ரெண்டாங்கட்டியா :*** *குழப்பமாக. 'ரெண்டாங்கட்டிய எதோன்னு பண்ணீ வெச்சராதெ.'*

***ரெண்டாந்தர :*** *மட்டரகமான, கீழ்த்தரமான. 'எப்பப் பாத்தாலு ரெண்டாந்தரப் பேச்சே பேசறது.'*

***ரெண்டுங்கெட்டான் :*** *ஒன்றும் தெரியாதவன். 'எங்கியோ ரெண்டுங் கெட்டானா இருக்குற.'*

## ***ரொ***

***ரொம்பீருச்சு :*** *நிறைந்துவிட்டது. 'எனுக்கு வவுறு ரொம்பீருச்சு.'*

***ரொம்பெ :*** *அதிகம். 'சோறு ரொம்பெ எச்சாப் போச்சு.'*

## ***ரோ***

***ரோசம் :*** *கோபம். 'சொன்னா ரோசம் மட்டு வந்துரும்.'*

***ரோதனெ :*** *தொந்தரவு. 'இவனோட ஒரே ரோதனையாப் போச்சு.'*

## ***ல***

***லங்கோடு :*** *கோவணம். 'அந்தக் காலத்துலெ லங்கோடு கட்டியிருந்தாங்கெ.'*

***லவக்குனு :*** *திடீரென்று. 'லவக்குனு புடிங்கிட்டு ஓடிட்டாம் பாரு.'*

***லவடெ :*** *வாயாடி. 'அவொ ஒரு லவடெ புடிச்சவொ.'*

***லவுண்டா :*** *காண்க. ரவுண்டா.*

## ***லா***

***லாடம் :*** *எருதுகளின் குழம்பில் நடப்பதற்கு ஏதுவாக பதிப்பது.*

***லாட்டரியடிக்கிது:*** *உணவு போன்றவை கிடைக்காமல் திண்டாடுதல். 'சோத்துக்கே லாட்டரியடிக்குது.'*

## ***லெ***

***லெக்கு :*** *எல்லை. 'இந்த லெக்குல போனா காட்டுக்குப் போலா.'*

***லெவுகா :*** *இலகுவாக. சுலபமாக. 'லெவுகான வேல குடுத்தாத்தெ செய்வெ.'*

## ***லே***

***லேகிடி :*** *கேலி, கிண்டல்.*

***லேசு :*** *கனமற்ற. 'கௌமே இல்ல லேசா இருக்குது.'*

## ***லோ***

***லோல்பட்டு :*** *கஷ்டப்படுதல். 'அங்கியு இங்கியு அல்லாடி லோல்பட்டுப் போயிட்டெ.'*

**லோலாக்கு** : காதில் அணியும் தொங்கட்டான். 'லோலாக்கு போட்டாங்கிட்டி காது வலிக்குது.'

**லோலாயி** : கிண்டல். பொண்ணுங்ளெ லோலாயி பண்றதெ 'இவனுகுளுக்கு வேலயாப் போச்சு எங்கெ உருப்படுவானுகெ.'

## வ

**வக்கணையா** : சுவையாக, விரும்பி உண்ணும் வகையில். 'வாய்க்கி வக்கணையா செஞ்சு போட்டா தின்னுட்டு எகத்தாளமா பேசறெ.' நாகரீகமான பேச்சு. 'வக்கணையா பேசறெ.'

**வக்கத்தவன்** : ஒன்றும் இல்லாதவன். 'வக்கத்தவம் போனானாமா வங்காள தேசத்துக்கு.'

**வக்கிப்பில் போரு** : வைக்கோல் போர். 'வக்கிப்பில் போரு போடணும்.'

**வக்கு** : வசதியற்றவர். 'வக்கத்தவெ நீ என்னெ சொல்றது.'

**வகச்சலு** : பணம் சம்பாதிக்கும் வழி. 'ஒரு வகச்சலுங் கெடயாது சும்மா இருக்குறெ.'

**வகுடு** : தலைமுடியை சீவும்போது ஏற்படும் கோடு. 'வகுடெடுத்து சீவிட்டு வர்றாம் பாரு.'

**வங்கி** : பெண்கள் கையில் அணியும் நகை. 'வங்கி போட்டுகிட்டு கெளம்பியாச்சா.'

**வங்கு** : எலிகள் போடும் பொந்து. 'எலி ஊடெல்லா வங்கு போட்டு வெச்சிருக்குது.'

**வசி** : திருட்டைத் தடுக்கும்படி மரங்களில் கட்டப்படும் அமைப்பு. 'வசி கட்டியுடனும் திருட்டு நெறயெ போகுது.'

**வட்டக்கூடை** : சாணி, மண் அள்ளப் பயன்படும் மூங்கிலால் பின்னப் பட்ட கூடை. 'வட்டக் கூடையெ எடுத்தாந்து மண்ண அள்ளிப் போடு.'

**வட்டப்பாத்தி** : நீர் பாய்ச்ச வசதியாக கட்டப்படும் பாத்தி. 'வட்டப்பாத்தி கட்டியுடு அப்பதெ தண்ணி பாய்க்கறதுக்கு சவுரீமா இருக்கு.'

**வட்டப்போர்** : தானியத் தட்டை களை மழையிலிருந்து பாதுகாக்க வட்ட வடிவில் அமைக்கும் போர். 'வட்டப்போரு போட்டுட்டா தண்ணி தட்டுலெ எறங்காது.'

**வட்டலு** : சாப்பிடப் பயன்படும் வட்ட வடிவ தட்டு. 'வட்டல்லெ சோத்தப் போட்டு தின்னு.'

**வட்டுக்கருப்பட்டி** : அச்சில் வார்த்து எடுக்கப்பட்ட கருப்பட்டி. 'வட்டுக் கருப்பட்டிய தின்னா நல்லா இருக்கு.'

**வட்டெ** : வண்டிச்சக்கரம் உருவாக்க இணைக்கப்படும் மரக்கட்டை. 'வட்டெ விரிசலு உட்ருக்குது.'

**வட்டவாசி** : காண்க. ஒவுத்திரியொ.

**வடக்காலெ** : வடக்குத்திசையில். 'எங்க காடு வடக்காலெ இருக்குது.'

**வடகோட்டுலெ** : காண்க. வடக்காலெ.

**வடகம்** : வத்தல். 'வூட்டுமேல வடகங் காயப் போட்டுருக்குது பாரு.' -

**வடச்சட்டி** : வாணலி. 'வடச்சட்டிய எடுத்தா அப்பளம் பொரிக்க.'

**வடிதட்டம்** : சாதத்தில் உள்ள கஞ்சியை வடிக்க பயன்படும் பாதிப் பரப்பில் ஓட்டையுள்ள தட்டு. 'வடிதட்டத்த வெச்சி கஞ்சிய வடி.'

**வடபொறெ** : காண்க. வடக்காலெ.

**வண்டவாளம்** : ரகசியம். 'உன்ற வண்டவாள தண்டவாள ஏறப் போகுது.'

**வண்டிச்சாளை** : வண்டிகளை நிறுத்த போடப்படும் கொட்டகை. 'வண்டிச் சாளைக்குள்ளெ பாரு பழசுபட்டறை யெல்லா கெடக்கு.'

**வண்டித்தடம்** : வண்டிகள் செல்லும் பாதை. 'வண்டித் தடத்துல போனா நம்ம காட்டுக்கு போயிரலா.'

**வண்டிப்பட்டறை** : மாட்டு வண்டி களை பழுதுபார்க்கும் இடம். 'வண்டிப் பட்டறையில கொண்டு போயி வண்டிய உடணும்.'

**வண்டிவாசிஏதாச்சி** : வாகனங்கள் ஏதாவது. 'வண்டிவாசி ஏதாச்சி வந்துறப் போவுது பாத்து ரோட்டத் தாண்டிப்போ.'

**வண்டுகடி** : வண்டுகள் கடித்தவுடன் உடலில் வட்டமாக ஏற்படும் புண். 'வண்டுகடியோட்ட இருக்குது ஒடம் பெல்லா புண்ணா இருக்கு.'

**வண்டுகட்டி வெக்கிறது** : தானியமோ அல்லது ஊறுகாய் போன்றவற்றை பாதுகாக்க துணியினால பானையின வாயை கட்டி வைத்தல்.

**வத்தக்கறவை** : கன்று போட்டு அதிக நாட்களாகியும் பால் கறக்கும் மாடு. 'வத்தக் கறவையொன்னு இருந்தாப் போதும்.'

**வத்தலுந்தொத்தலுமா** : உடல் மெலிந்த. 'அந்தப் பையனப் பாரு வத்தலுந் தொத்தலுமா இருக்குறாம்பாரு.'

**வத்திப்பெட்டி** : தீப்பெட்டி. 'வத்திப்பெட்டியெ எடுத்தா தீவொ பத்தி வெக்கலா.'

**வத்திவெக்கிற** : கோள் மூட்டுதல். 'வத்திவெக்கிறதே இவுனுக்கு லேவயாப் போச்சு.'

**வதவதன்னு** : கூட்டமாக. 'வதவதன்னு என்ன ஒரே கூட்டமா இருக்கு.'

**வதி** : சகதி, சேறு. 'இந்தெ எடத்துலெ ஒரே வதியா இருக்குது.'

**வதிக்கால்** : எப்போதும் ஈரமாக உள்ள இடம். 'வதிக்காலெ ஒழவு ஓட்டோனும்.'

**வந்ததீஞ்சொல்றெ** : வந்தவுடன் சொல்கிறேன். 'எங்கூட்டுக்காரு வந்ததீஞ்சொல்றெ நீ கேட்டீனு.'

**வந்தர்லா** : வந்துவிடலாம். 'நாமொ சீக்கரமா போயிட்டு வந்தரலா.'

**வந்தர்றெ** : வந்துவிடுகிறேன். 'நானு சீக்கிரொ வந்தர்றெ.'

**வந்துட்டனல்லோ** : வந்து விட்டேன். 'நானு வந்துட்டனல்லோ.'

**வப்படொ** : அப்பளம். 'வப்படொ பொரிக்கலியா.'

**வம்புதும்பு** : வீண்வம்பு. 'வம்புதும்பு பண்ணாம கம்முனு இரு.'

**வயலறுப்பு** : நெல் அறுவடை. 'வயிலறுப்புக்கு ஆளு கூப்புடப் போகணும்.'

**வயிசுப்பைய:** குறிப்பிட்ட வயதை அடைந்த வாலிபன். 'வயிசுப்பசங்க சொன்னா கேப்பாங்களா.'

**வயிசுப்பொண்ணு** : பருவமடைந்த பெண். 'வயிசுப்பொண்ணு அடக்க ஒடுக்கமா இருந்தாத்தானெ ஆகு.'

**வர்ரணுங்க** : போய்வருகிறேன். 'ஏனுங்க வர்ரணுங்க.'

**வர்றதே ஒருக்கா** : வருவதே ஒரு முறை. 'வர்றதே ஒருக்கா அதுக்குள்ளெ போறெங்கிறீங்க.'

**வரக்காப்பி** : பால்கலக்காத காப்பி. 'வரக்காப்பி குடிச்சா தலவலி போயிரும்.'

**வரக்காய்** : முற்றிய தேங்காய். 'எல்லாமே வரக்காயா இருக்குது.'

**வரப்பெடுக்கோனு** : வரப்பு எடுத்தல். 'காட்டுலெ வரப்பெடுக்கோனு.'

**வரப்பொகச்சல்** : வெறும் இருமல். 'ஒரே வரப்பொகச்சலா இருக்குது.'

**வரவியபோரவிய** : வருகிற, போகிறவர்கள். 'வரவியபோரவிய எல்லா சொல்ல வந்துட்டாங்கெ.'

**வராதெ** : வர வேண்டாம். 'நீயி இங்கெ இனிமே வராதெ.'

**வரிஞ்சுகட்டு** : ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி இறுக்கிக் கட்டுதல். 'நல்லா வரிஞ்சுகட்டு.'

**வருமங்கொண்டு:** கோபங்கொண்டு. 'எப்பப்பாத்தாலு வருமங்கொண்டே பேசறது.'

**வருவரும்னு** : வரும் என்று. 'பஸ்ஸு வரு வரும்னு பாத்துகிட்டு இருந்து வரவேயில்லெ.'

**வரையாடு** : செங்குத்தான மலைப் பகுதிகளில் ஏறும் ஒருவகை மலை ஆடு. 'வரையாடு போல சுத்தறாம் பாரு.'

**வல்லயம்** : ஈட்டி போன்று இருக்கும் ஆயுதம்.

**வல்லியா** : வரவில்லையா. 'நீ வேலக்கி வல்லியா.'

**வல்லெ** : வரவில்லை. 'நா எங்கீமு வல்லெ நீயே போயிட்டு வா.'

**வவக்கு வவக்குனு** : அவதி அவதியாக. 'சோத்த வவக்குவவக்குனு திங்காதெ மெதுவா தின்னு.'

**வவுத்துக்கு** : வயிற்றுக்கு. 'கொழந்த அழுகுது வவுத்துக்கு ஏதாச்சி குடு.'

**வவுத்துப்பாடு :** அன்றாட வாழ்க்கை. *'வவுத்துத்துப் பாடுக்குத்தெ இத்தனெ அலச்சலு.'*

**வவுத்துபொழப்பு :** காண்க. வவுத்துப்பாடு.

**வவுருரொம்ப :** வயிறு நிறைய. *'ரொம்ப தின்னாங்கிட்டி வவுரு வலிக்கிது.'*

**வவுத்தெரிச்சலு :** வயிற்று எரிச்சல். *'என்றெ வவுத்தெரிச்சலெ கொட்டிக்காதெ கம்முனு போயிராமா.'*

**வழமொற :** வழக்கமாக. *'வழமொற தவறாம நாங்க இப்பிடிதே பண்ணுவோ.'*

**வழுக்கல் :** பிடிப்பில்லாமல் நழுவுதல். *'சேத்துல காலவெச்சி வழுக்குது.'*

**வழுச்சுப்போடு :** அள்ளிப்போடு. *'சாணியெ வழுச்சுப் போடு.'*

**வள்ளம் :** 1. நான்குபடி தானிய அளவு. *'இந்த தடவ பத்து வள்ளங்கம்பு ஆச்சு.'* 2. வாளி. *'வள்ளத்துலெ தண்ணி ஊத்தி வெய்யி.'*

**வளச்சுப்போடு :** தன்வசப்படுத்து. *'அந்தப் பொண்ணெ வளச்சுப் போட்டுட்டான்.'*

**வளத்துனெ :** வளர்த்தேன். *'நானு என்னொ பாடுபட்டு உன்னெ வளத்தெனெந் தெரிமா.'*

**வளத்தியா :** உயரமான. *'ஆளு ரொம்பெ வளத்தியா வளந்துட்டாம் பாரு.'*

**வளவு :** இருபது இருபத்தைந்து வீடுகளைக் கொண்ட ஒரு குடியிருப்புப் பகுதி. *'மேக்கு வளவுல என்னமோ ஒரே சத்தமா இருக்குது.'*

**வளவளன்னு:** சுருக்கமும் தெளிவும் இல்லாமல். *'வளவளன்னு பேசாம இரு.'*

**வளுக்குவாலு :** சிறுவர். *'வளுக்குவாலுக எல்லா நமக்கு புத்தி சொல்ல வந்துருச்சு.'*

**வளுசல்:** காண்க. வளுக்குவாலு.

**வறடி :** மலடி. *'எங்கியோ வறடியா இருக்கா கொழந்தெ குட்டி ஒன்னியுங் காணொ.'*

## வா

**வாக்கணாக்கரண்டி :** பூஜைக்கு சாம்பிராணி புகை போடும் கரண்டி.

**வாக்கூடை :** தாம்பு ஓட்டும்போது மாடுகள் பயிரை தின்று விடாமல் இருக்க வாய்க்குப் போடும் கூடை. *'மாட்டுக்கு வாய்க்கூடைய போட்டுடு.'*

**வாக்கரிசி :** இறந்தபின் கடைசியாக வாயில் இடும் அரிசி.

**வாக்கனங்கெட்ட கழுதை** அறிவற்ற செயல்களைச் செய்பவன்.

**வாக்காணம் :** சிறிய இரும்புக் கரண்டி.

**வாக்குப்பிரிக்கறது :** பூசாரி குறி சொல்லும் போது அதனை பக்தர்களுக்கு புரியும்படியாக கூறுதல்.

***வாங்காட்டி*** *: வாங்காமல். 'முட்டாய வாங்காட்டி போகுது வா.'*

***வாங்கியாங்கெ*** *: வாங்கி வாருங்கள். 'ஏங்கெ டவுண்லருந்து வரும்போது ஏதாச்சி வாங்கியாங்கெ.'*

***வாங்குனியவெ*** *: வாங்கியவர்கள். 'வாங்குனியவிகளுக்கு தெரியாதாக்கு குடுக்கறதுக்கு.'*

***வரச்சாம்பாரு*** *: வாய்த்தவன். 'வந்து வாச்சாம்பாரு எனக்குனே.'*

***வாசக்கால்*** *: வாசலில் இருக்கும் பந்தலைத் தாங்கி நிற்கும் தூண். 'வாசக்கால்ல தல இடிச்சுருச்சு.'*

***வாசக்கூட்டு*** *: வாசலை சுத்தப் படுத்துதல். 'வெடியக்காலெ வாசக்கூட்டி தண்ணியெ தொளிச்சுடு.'*

***வாசப்பணம்*** *: இறப்பு நடந்த வீட்டில் சங்கு ஊதுபவருக்கு போடும் பணம்.*

***வாசப்புடி*** *: வாசற்படி. 'எப்பப் பாத்தாலு வாசப்புடிலெ போயி உக்காந்துக்கறது.'*

***வாசத்தொளிக்கறது*** *: விடியற் காலையில் வாசலில் தண்ணீர் தெளிப்பது.*

***வாசவெளி*** *: வீடு, காடு தோட்டம். 'வாசவெளி இருந்தாத்தெ நாலு பேரு மதிப்பாங்கெ.'*

***வாட்டி வளவெடுக்கறாங்கெ*** *: கஷ்டப்படுத்துதல். 'இவுனுகெ என்னெப் போட்டு வாட்டி வளவெடுக்கறாங்கெ.'*

***வாடிப்போச்சி*** *: காய்ந்து போதல். பொலிவு இழத்தல். 'அந்த சேதிய கேட்டதுலெருந்து மூஞ்சியே வாடிப் போச்சி.'*

***வாடை*** *: மணம். 'வாடை சும்மா ஜம்முனு வீசுது.'*

***வாணக்காரெ*** *: வெடி வைப்பவர். 'வாணக்காரன கூப்புட்டு வாணத்த உடச் சொல்லு.'*

***வாது*** *: மரக்கிளை. 'வாதப்புடிச்சி தொங்காத உளுந்துருவெ.'*

***வாப்பாடு*** *: குடம், பாத்திரங்களின் மேற்பகுதி. 'வாப்பாட்ட புடிச்சி தூக்காத பிஞ்சி போகும்.'*

***வாப்பாடு தெரியாவன்*** *: விபரம் தெரியதாவன்.*

***வாய்க்கால்*** *: கால்வாய். 'வாய்க்கால்ல தண்ணி நெறயா வருது.'*

***வாய்நீளொ*** *: அதிகம் பேசுதல். இடம், பொருள் தெரியாமல் பேசுதல். 'ஒனக்கு கொஞ்ச வாய் நீளமாக்கு.'*

***வாய்வு*** *: வயிற்றுனுள் இருக்கும் காற்று. 'வாய்வு வந்து பெருந் தொல்லையா இருக்குது.'*

***வாயக்கட்டு*** *: பேசுவதில், சாப்பிடுவதில் சிக்கனமாக இருத்தல். 'வாயக்கட்டி கிட்டு சும்மா இரு.'*

***வாயாடி :*** ஓயாமல் பேசிக்கொண்டு இருப்பவர். *'அவெ பயங்கர வாயாடி.'*

***வாயில்லாப்பூச்சி :*** எதிர்த்துப் பேசும் திறன் இல்லாதவர். *'வாயில்லாப் பூச்சி அவனப் போட்டு ஏ அடிக்கிற.'*

***வாயோடு :*** உரலில் போட்டு தானியம் குத்தும்போது வெளியே தெறிக்காமல் இருக்க உரலின் மேல் வைக்கும் நடுவில் ஓட்டையுள்ள வட்ட வடிவ தட்டு.

***வாரப்பொ :*** வருகிறபொழுது. *'வேலெயெ நா வாரப்பொ செஞ்சுமுடிச்சரனு.'*

***வாரனுங்க :*** போய்வருகிறேன். *'செரிங்கெ நானு போயிட்டு வாரனுங்கெ.'*

***வாரெவாரென்னு :*** வருகிறேன் வருகிறேன் என்று கூறிவிட்டு.

***வாரொ :*** வருகிறோம். *'நாங்கெல்லா இன்னோரு நாளைக்கி உங்கெ ஊட்டு வாரொ.'*

***வாரி :*** கபிலை ஏற்றத்தில் எருதுகள் கிணற்றிலிருந்து இழுத்து வரும் தண்ணீர் சாலை கொண்டு வந்து இறக்கும் இடம். '

***வால்பை :*** மாட்டு வியாபாரிகள் பணத்தை பாதுகாப்பாக வைக்க இடுப்பை சுற்றி கட்டியுள்ள பை.

***வாவரிசி :*** சுமங்கலியாக மரணம் அடைதல். (கணியூர்).

***வாழாவெட்டி :*** கணவனைப் பிரிந்து வாழ்பவள். *'வாழாவெட்டியா அவ அப்பனூட்டுக்கு வந்துட்டா.'*

***வானா :*** பெரிய பாத்திரம். *'வானாக் குண்டாவ எடுத்தா சோறாக்க.'*

## வி

***விக்கிவிக்கி :*** விக்கல் ஒலியுடன் கூடிய தேம்பல். *'ஏ இப்பிடி விக்கி விக்கி அழுகுறெ.'*

***விகுஞ்சுகட்டிட்டு :*** வரிந்து கட்டி கொண்டு.

***விசுக்கா :*** தடவை. *'எத்தன விசுக்கா உனக்கு சொல்றது.'*

***விசுக்குனு :*** உடனடியாக.

***விசுவுகம்பி :*** உயரமாக இருப்பதை தாங்கி பிடிப்பதற்காக சாய்வாக இழுத்துக் கட்டப்படும் கம்பி. *விசுவுகம்பி கட்டியிருந்ததெ பாக்காமெ போயி தலயிலெ அடிச்சிருச்சி.*

***விட்டம் :*** வீட்டின் குறுக்கே மேற்பரப்பில் வைக்கும் மரம்.

***விட்டிலிப்பட்டன் :*** அனாதை.

***விடலை (வெடலை) :*** சுயகட்டுப் பாடு இல்லாத வாலிபன். *'விடலைப் பசங்க குசும்பு பண்ணிட்டே இருக்காங்க.'*

***விடுபூவு :*** உதிரிப்பூ. *'விடுபூவு வாங்கியா கட்டலா.'*

***விண்ணாளம் (விண்ணாடம்):*** கேலி பேசுதல். *'எப்பப்பாரு விண்ணாளம் சேறதே இவனுக்கு வேல.'*

***விந்திவிந்தி*** : நொண்டுதல். *'ஏ இப்பிடி விந்தி விந்தி நடக்கற.'*

***விரிச்சி*** : சகுனம் பார்த்தல்.

***விர்ருனு*** : கோபமாக இருக்கும் போது முகத்தை ஒரு மாதிரியாக வைத்தல்.

***விரதலு*** : மாடுகள் சினை தாங்க முடியாத நிலை.

***விரிவாங்கு*** : இறுக்கமாக இருப்பதை இரண்டாக பிளத்தல்.

***விருத்தி*** : உற்பத்தி செய்தல். *'இந்த எருத்த விருத்திக்கி உட்ருக்கறம்.'*

***விருத்துக்குச்சு***: குளிர் அதிகமாகும் போது கை கால் விரைத்துக் கொள்ளுதல். *'கை காலு எல்லா அப்பிடியே விருத்துக்குச்சு.'*

***விருமத்தி*** : புத்தி சுவாதீனம் இல்லாமல். *'எங்கியோ விருமத்தி புடிச்சி திரியறே.'*

***விருவிருப்பு*** : குளிர்ந்த ஈரப்பதம். *'நெலத்துலெ ஒரே விருவிருப்பா இருக்கு.'*

***விரோச்சுனு*** : ஒன்றுமில்லாத நிலை. *'கொழந்தைகெஇல்லாமெ ஊடே விரோச்சுனு இருக்குது.'*

***வில்லுவண்டி*** : அச்சின்மேல் வில் பொருத்திய கூண்டு வண்டி. *'வில்லு வண்டில நாங்க சவாரி போனம்.'*

***வில்லெ*** : பொத்தான். *'அங்கராக்குலெ வில்லெயப் போடு.'*

***விறுவிறுப்பு***:வேகமும் சுவாரஸ்யமும் கொண்ட. *'அந்தப்படொ ஒரே விறு விறுப்பா இருக்குது.'*

## வீ

***வீச்சம்*** : துர்நாற்றம். *'இங்னை ஒரே வீச்சமடிக்குது.'*

***வீசுகன்னு*** : மாடுகள் குறை பிரசவத்தில் வெளியே தள்ளும் கன்று. *'இந்த தடவ கெடேறி வீசுகன்னு போட்ருச்சு.'*

## வெ

***வெக்காயி*** : நன்றாக பழுக்காத நிலை. *'வெக்காயப் போயி வாங்கியாந்திருக்கியா.'*

***வெக்காயெ*** : தெளிவில்லாதவன். *'சுத்த வெக்காயெனா இருக்கெ.'*

***வெக்கெ*** : 1. அதிக வெய்யிலால் உருவாகும் வெப்பம். *'ஒரே வெக்கெயா இருக்குது.'* 2. வேர்க்குரு. *'வெய்யிலுக்கு உடம்பெல்லா வெக்கெ போட்ருக்குது.'*

***வெகரொ*** : விபரம். *'ஒரு வெகரொமுங் கெடயாது.'*

***வெங்கநாயி*** : ஒன்றும் இல்லாதவன். *'வெங்க நாயி போகுதாமா பங்குனி உத்திரத்துக்கு'* — பழமொழி.

***வெச்சரலா*** : வைத்து விடலாம். *'இதியெ அங்கியே வெச்சராலாமல்ல.'*

***வெசனொ :*** கவலை. *'என்ன ஒரே வெசனொமா இருக்கீங்க.'*

***வெசாருச்சு :*** விசாரித்து. *'நல்லா வெசாருச்சுப் பாத்தியா.'*

***வெட்டருவாளு :*** காண்க. *கொடுவாளு.*

***வெட்டவெடியாலெ :*** காண்க. *வெடியக்காலெ.*

***வெட்டாப்பு :*** மழை தொடர்ந்து பெய்து விட்டு சிறிது இடைவெளி விடுதல். *'மழெ வெட்டாப்பு உட்ருச்சு சீக்கிர வூட்டுக்குப் போலா.'*

***வெட்டிநாயொ :*** வீண் பேச்சு. *'வெட்டிநாயொம் பேசாம வேலயப்பாரு.'*

***வெட்டுக்காப்பூ :*** ஒருவகை செடி. *'வெட்டுக்காப்பூ புடிங்கி வெளையாடலா.'*

***வெட்டுக்கையி :*** கூரை முகட்டில் இணையும் போன்ற கட்டை. *'வெட்டுக்கையில ஒரே பூச்சியா அரிச்சிருக்கு.'*

***வெடக்கோழி :*** நாட்டுக்கோழி. நல்ல *'வெடக்கோழியா அடிச்சு கொழம்பு வெய்யி.'*

***வெடலத் தேங்காய்:*** சிதறு தேங்காய். *'சாமிக்கி வெடலத் தேங்கா ஒடைக்கோணு.'*

***வெடியக்காலெ :*** விடியற்காலையில். *'வெடியாலெயெ சொன்னங் கேட்டியா.'*

***வெடியாலெ :*** காண்க. *வெடியக்காலெ.*

***வெடியெவெடியெ :*** விடியவிடிய. *'வெடியெ வெடியெ தீபாவளி வெடிஞ்சா அமாவாசை.'*

***வெடுக்குனு :*** உடனடியாக. *'எதா இருந்தாலு வெடுக்குனு சொல்லு.'*

***வெடுஞ்சுருச்சு :*** விடிந்து விட்டது. *'பொழுது வெடிஞ்சுருச்சு இன்னுமு எந்திரிக்கலயா.'*

***வெண்டு :*** சுண்டிப்போதல். *'ரொம்ப வெண்டுன காயா வாங்கியாந்துருக்க.'*

***வெதக்கூடெ :*** விதைகள் போட்டு வைத்திருக்கும் கூடை. *'தெக்காலெ பொழிமேலெ பாரு வெதக்கூடெ இருக்குது எடுத்துட்டு வா.'*

***வெதப்பொழவு:*** மழை பெய்தவுடன் விதைக்கும்போது உழும் உழவு. *'வெதப்பொழவு ஓட்டியுடனும்.'*

***வெந்தண்டன் :*** வாலிபன். *'ஆளு வெந்தண்டனோட்ட வளந்துருக்க ஆனா வெவரமே இல்ல.'*

***வெந்தண்ணி :*** சுடுதண்ணீர். *'வெந்தண்ணி ஆறிப்போறதுக்குள்ள தண்ணி ஊத்து.'*

***வெநயம் :*** விபரமான. *'ஆளு ரொம்ப வெநயமாத்த இருக்கெ.'*

***வெம்பல்:*** மழை போல் பனி பெய்தல். *'வெடியாலயிருந்து ஓரே வெம்பலா இருக்குது.'*

***வெய்யக்காயறெ :*** வெய்யிலில் அலைந்து கொண்டிருத்தல். *'ஏ இப்பிடி வெய்யக் காயறெ.'*

***வெய்க்கமுடியாது*** : வைக்க முடியாது. *'இங்கியெல்லா எந்த சாமானையு வெய்க்க முடியாது.'*

***வெய்வாங்கெ*** : திட்டுவார்கள். *'எங்கூட்டுல என்ன வெய்வாங்க நாம் போறெ.'*

***வெயிங்கெ*** : வைத்து விடுங்கள். வைத்திருங்கள். *'உங்ககிட்டியே வெய்யிங்கெ.'*

***வெயிலுதாழ*** : வெய்யில் குறைய. *'வெய்யத் தாழ போலாம் பொறு.'*

***வெரசலா*** : வேகமாக. *'வெரசலா ஓடு பஸ்சு போயிரு.'*

***வெலக்கியுடு*** : விலக்கிவிடு. *'அங்கெ சண்ட கட்டிக்கிறாங்க கொஞ்சொ வெலக்கியுடு.'*

***வெலாவுதல்*** : சூடாக இருக்கும் நீரை குளிர்ந்த நீரை ஊற்றி ஆற வைத்தல். *'சுடுதண்ணிய நல்லா வெலாவியுடு.'*

***வெலெவிக்கிலெ*** : சரியான விலை கிடைக்கவில்லை. *'சந்தக்கிப் போயிமு தக்காளி வெலெவிக்கிலெ.'*

***வெவசாயொ*** : விவசாயம். *'வெவசாயோ இல்லீன்னா சோறு எப்பிடி திங்கறது.'*

***வெவரொ*** : காண்க. விகரொ.

***வெள்ளெவெங்காயொ*** : பூண்டு. *'ரசத்துக்கு வெள்ளவெங்காயொம் போடு.'*

***வெள்ளச்சோளொ*** : வெள்ளை நிறமுடைய சோளம், அப்பாவி.

***வெள்ளப்பாச்சி*** : இரத்தம் இன்றி வெளீரென்று இருத்தல். *'ஆளு வெள்ளப்பாச்சி அடிச்சிப் போய்ட்டாம் பாரு.'*

***வெள்ளவெளேர்னு*** : வெளீரென்று. *'ஆளு வெள்ள வெளேர்னு இருக்குறாண்டா.'*

***வெள்ளாமை*** : வேளாண்மை. விவசாயம். *'இந்த தடவ வெள்ளாமை நல்ல வெளச்சலு.'*

***வெள்ளாவி*** : துணிகளை உவர்மண் கரைசலில் நனைத்துபின் சலவை செய்தல். *'துணியெ வெள்ளாவிக்கி போட்டு கலரு மாறிப்போச்சு.'*

***வெளக்கறது*** : பாத்திரங்களை சுத்தம் செய்தல். *'பாத்தரத்தெ எல்லாத்தியு வெளக்கி வெய்யி.'*

***வெளக்கமுடியாது*** : விளக்கிகூற இயலாது. *'ஒனக்கு வெளக்கஞ் சொல்ல முடியாது போ.'*

***வெளக்காஞ்சுட்டி*** : விளக்கு வைக்க களிமண்ணால் செய்யப்பட்ட சிறு விளக்கு. *'வெளக்காஞ்சுட்டிய எடுத்தா தீவொம் போடலா.'*

***வெளக்குமாடொ:*** தீபம் ஏற்றி வைக்க வீட்டின் நடுவில் இருக்கும் சிறிய குழி. *'வெளக்கு மாடொத்துலெ பாரு வெளக்கிருக்குது.'*

***வெளக்குமாவு*** : காண்க. மாவிளக்கு.

***வெளக்கு வெக்கிற நேரொ:*** மாலையில் வீடுகளில் விளக்கு ஏற்றும் நேரம். *'வெளக்குவெக்கிற நேரத்துல வந்துருக்கெ.'*

**வெளக்கெண்ணை :** 1. ஆமணக்கு எண்ணெய். 'சூடு புடிச்சிகிச்சுனு வெளக்கெண்ணைய தொப்புள்ள வெச்ச சூடு தணிஞ்சுருச்சி.' 2. திட்டும் வார்த்தை. 'சுத்த வெளக்கெண்ணயா இருக்கெ.'

**வெளங்கமாட்டீங்குது :** உருப்படியா கதது. 'எனுக்கு ஒன்னுமே வெளங்க மாட்டீங்குது.'

**வெளப்பீருவெ :** தொலைத்து விடுவாய். 'உங்கிட்டெ எதக் குடுத்தாலு வெளப்பீருவெ.'

**வெளயலு :** வளையல். 'வெளயலு வாங்கிக் குடுங்கொ.'

**வெளயாடிட்டு :** விளையாட்டு. 'எப்பப் பாத்தாலு வெளாயாடிட்டு இருக்கறதே வேலயாப் போச்சு.'

**வெளாஅறுக்குறது :** ஏர் ஓட்டுவதில் ஓர் அளவு. 'ரெண்டு குண்டலெ மட்டு வெளா அறுத்து ஓட்டு.'

**வெளீர்னு :** காண்க. வெள்ள வெளோர்னு.

**வெளுச்செண்ணெ :** தேங்காய் எண்ணெய். 'தலைக்கி வெளுச்சண்ணெ தேயீ.'

**வெளையேனு :** காண்க. வெள்ள வெளோர்னு.

**வெளையோனு :** விளைய வேண்டும். 'வெள்ளாமெ வெளையொனு அப்பத்தெ கையிலெ நாலு காசெ பாக்கமுடியி.'

**வெறிச்சோடி :** ஒன்றும் இல்லாத நிலை. 'இன்னிக்கு லீவுங்குறதுனால பஸ் ஸ்டாண்டு வெறிச்சோடி கெடக்குது.'

**வெறுமேலோட :** மேலுடம்பில் துணி இல்லாமல். 'வெறுமேலோடெ சுத்தாத மேலுக்கு அங்கராக்கு போடு.'

**வெறக்கெட்ட தூரொ :** ஒரு விரல் இடைவெளி.

**வெறுவாக் கெட்டவன் :** காண்க. வெங்கநாயி. 'வெறுவாக் கெட்டவன் விண்ணப்பம் போடறான்.'

**வெனையொ :** அறிவு.

## வே

**வேக்காடு :** வேகவைத்தல். 'சோத்த அரவேக்காட்டுலயெ எறக்கிட்டீயா.'

**வேக்கானொ :** அறிவு.

**வேக்குது :** வியர்த்தல். 'வெய்யிலுக்கு வேத்தொழுகுது.'

**வேகுவேகுன்னு :** வேகமாக. 'வேகுவேகுன்னு திங்காதெ தொண்டயில சிக்கிக்கி.'

**வேசேகாலொ :** வெய்யில் காலம், வறட்சிக்காலம். 'வேசெகாலொ ஆயிருச்சி தண்ணித் தாவொ ஆகிகிட்டே

கொங்கு வட்டாரச் சிறுகதைகள்...

# கன்னியாத்தா கோயில்...

உடுமலை ரவி

**தெ**க்காட்டு பண்ணாடி வெளக்கு வெக்கிற நேரத்துல ஊட்டுக்கு வருவாரு. சித்தநேரம் எல்லாத்துகிட்டயும் பேசிகிட்டு இருந்துட்டு பட்டிநாயிக்கி சோத்த வாங்கிட்டு கெளம்பிடுவாரு. அப்படி கெளம்பி போகில அப்பப்போ கருப்பாயி நெனப்பு வந்துரும். அவ வூட்டுக்குப் போயி ராக்கோழி கூப்புடுற நேரொ வரக்கி இருந்துட்டு ஒருத்துருக்குந் தெரியாம பட்டிக்கி போயிடுவாரு.

பத்து நாளக்கி ஒருக்கா நெனப்பு வந்தா போயிடுவாரு. புளியமரங் கெல்டு ஆனாலு புளிப்பு கொறயாதுங்கற மாதிரி இந்த அரகெழவனுக்கு இன்னுமு அந்தெ நெனப்பு வுட்டுப் போகல. ஒருநா ராத்திரி கருப்பாயி வூட்டுக்குப் போயி உக்காந்தாரு. மழ சோவுனு பேஞ்சிகிட்டுருந்துது. ஒழவு மழக்கி மேல பேஞ்சுருக்கு. கருப்பாயி வூடு மண்ணு குடுசையோட்ட இருந்துதுனால வூடு பூரா ஒரம்பேறிப் போச்சு. ரெண்டு பேரு உக்காரங்கூட முடியல. அந்தளவுக்கு வூடு ஈரமாயிருச்சு. வூடு பூரா மழத்தண்ணியா நின்னுச்சு. கருப்பாயி என்ன பண்றதுனு தெரியாம அழுதுகிட்டே இருந்தா. அப்பப்ப வந்துட்டு போற பண்ணாடிக்கி இன்னிக்கி ஒண்ணுஞ் செய்ய முடிலியேனு அழுதா. குடுசையெல்லா இப்புடி ஒழுவுதேன்னு அழுதுகிட்டே இருந்தா.

இதக் கேட்ட காட்டுப்பண்ணாடிக்கு ரொம்ப அழுகாச்சி வந்துருச்சி. ஒனக்கு ஒரு நல்ல குடுசைய நாங்கட்டித் தர்றனு சொல்லி வாக்கு குடுத்துட்டு, வேற எடத்துக்கு போனா ஒத்து வராது. நா மாமூலா போற தடத்துல உன்ற ஊடு இருந்தாத்த யெனக்கு பரவாயில்லனு சொல்லிட்டு அதுக்கு நானு கூடிசீக்கிர ஏப்பாடு பண்றனு சொன்னாரு. அன்னிக்கி ராத்திரி முழுக்கா ரெண்டு பேருக்குந் தூக்கமே இல்ல. வெடியக்கால நேரமானதி பண்ணாடி கெளம்புனாரு.

# லொல்லக் கண்ணு அரண்மனையாரு...

உடுமலை ரவி

**கோட்**டு வாக்கு சம்பல்ன்னாவே (அறுவடை) பத்துநாள்ல முடிஞ்சுரும். அவ்ளோ ஆளுகள வெச்சு எச்சு சம்பளங் குடுத்து வேலவாங்குவாரு லொல்லக் கண்ணு அரண்மணையாரு. தீந்துபோன பெருங்காய டப்பாவா இருந்தாலு வாசன போகிலினாலு தெனாவெட்டு மட்டுங் கொறையல அவருக்கு. அரண்மனையாருக்கு வயசானாலும் அப்படித்தா இருந்தாரு. அரண்மனை கழுத மேயுர குட்டிச்சுவரா போச்சு.

எறக்கத்து கரவளி வயில்ல வர்ற வருமானந்த இவுரு குடும்பத்துக்கு வருசத்திக்கி சோறு. கரகாட்டாக்காரி பவளாயிலருந்து கூத்துக்காரி செகப்பி வரைக்கி அல்லாரு வயிலறுப்புக்கு வந்துருவாங்க. ஒரு வருச சோத்துக்கு நெல் சேத்திக்குவாங்க.

அரண்மனையாரு வயிலுக்கு முன்னாடி ஒரு வாய்க்காலு ஓடுது. அதத்தாண்டிதா எல்லா பொம்பளையாளுகளுமு அரண்மனையாரு வயிலுக்கு போகோணும். வாய்க்கால்லெ தண்ணி இடுப்புக்கு மேல வரும்.

காராம்பசுவு பாலுமு, சிட்டுக்குருவி லேகியமு தின்னுட்டு பொம்பளங்கள எப்பூமே அந்த நெனப்போடவே எப்பவுமு பாப்பாரு. பொம்பளகிள பாத்தா காணாதத கண்டதுபோல அப்பிடியொரு ஆசை வந்துரு. அரண்மனையாருமு வாய்க்காலெ தாண்டிதாம் போகோணு. இந்தக் கரைலருந்து அந்தக் கரைக்கு போறதுக்கு முன்னாடி வேட்டிய அவுத்து இக்கத்துல வெச்சிகிட்டுதாம் போவாரு. வாய்க்காலுக்குள்ள பாதி தொலவு வந்தா கோமணத்துணிகூட நனஞ்சு போகு. அந்த அளவுக்கு தண்ணி ஓடுது வாய்க்கால்லெ. அந்தப்பக்கொ கரைக்கி போயி அப்பிடியே வேட்டியெ கட்டிக்குவாரு. தினோமு இப்பிடியேதே வந்துட்டு போவாரு.

திடீர்னு இவுருக்கு ஒரு நெனப்பு. நாமளே இப்பிடி கோமணொா நெனஞ்சு போயி வர்றமே பொம்பளைகொ எப்பிடி சீலைத் துணி நெனயாம வர்றாங்கன்னு பாக்கலாமுன்னு மறுநாளு வெட்ட வெடியாலெ நேரமே வந்து வாய்க்காலத் தாண்டி வந்து உக்காந்துகிட்டாரு.

அப்பொ அறுப்புக்கு வந்த பொம்பளைகெ சீலையெத் தூக்கிட்டு அக்கரைக்கி வந்து சேந்தாங்க. அங்கெ அரண்மனையாரு ஓரமா உக்காந்துருக்கறதெ பாத்துட்டு இவுரு இங்க எதுக்கு உக்காந்துருக்காறருன்னு தெரிஞ்சு போச்சு அந்தப் பொம்பளகிளுக்கு. எல்லாருமு மனசுக்குள்ளியே திட்டித் தீத்தாங்க.

ஒரு நாளு வாய்க்காலுலெ தண்ணி இடுப்புக்கு மேல வந்துது. குள்ளக்கருப்பாயி தண்ணிக்குள்ள எறங்குனா கழுத்துக்கு மேல வந்துரும்னு நீந்திகிட்டு கரைக்கி வந்துட்டா. நெல் அறுப்புக்கு வந்த எல்லா பொம்பளைகளுமு சீலையெ இடுப்புக்கு மேல தூக்கிகிட்டு இந்தப்பக்கமா வந்துட்டாங்க. அரண்மனையாரு வாய்க்காலப் பாத்துகிட்டு வாய்க்காமேட்டுலெ உக்காந்திருந்தாரு. இதப்பாத்த குள்ளகருப்பாயி பொம்பளைங்க எல்லாருமு வர்றாங்க அந்தப் பக்கொ திரும்பி உக்கார வேண்டியதுதானன்னு அரண்மனையாருகிட்ட சொன்னா. அரண்மனையாருகிட்ட அப்பிடியே பேச்சக் கொடுத்து அவுரு பார்வைய வேறபக்கந் திருப்புனா குள்ளக்கருப்பாயி.

குள்ளகருப்பாயிகிட்ட கரகாட்டக்காரி பவளாயி இந்த அறுப்புக்கு ஏ வர்லின்னு கேட்டாரு அரண்மனையாரு. பவளாயிக்கு கொழந்த பொறந்திருக்குதுன்னு அதுனால அறுப்புக்கு வர்லின்னு சொல்லிட்டுப்போனா.

அறுப்புக்கு வந்த எல்லாருமு மத்தியான சோத்துக்கு அக்கரைக்கி போனாங்க. அரண்மனையாருக்கு ஒடனே கரகாட்டக்காரி பவளாயி மேல நெனப்பு வந்து மொதல்லயே சும்மா அட்டி தாவணி இல்லாம குத்தாட்டம் போட்டா. இப்ப கொழந்த பெறந்துருக்குது இன்னுமு நல்லாவே ஒடம்பு வந்துருக்கும்னு மனசுக்குள்ளெ ஒரு கணக்குப் போட்டாரு.

வயிலறுப்பு ஆளுக எல்லாரு மத்தியான சோத்துக்கு போயிட்டு வந்ததிமு ஒடனே கொத்துகாரங்கிட்டயுமு, காவக்காரங்கிட்டிமு தலவலிக்கிது நானு அரண்மனைக்கி போறேன்னு சொல்லிட்டு கரகாட்டக்காரி பவளாயி வனப்பெ பாக்கனும்னு அவ வூட்டுக்கு நேரா வந்தாரு. வாசல்லெ வந்து நின்ன அரண்மனையார பாத்ததிமு கரகாட்டக்காரி பவளாயிக்கு என்ன பண்றதுனே தெரியலெ. ஏங்க இப்பிடி வந்து வாசல்லெ நிக்கிறீங்க திண்ணைலெ உக்காருங்கெ புளுதண்ணி கொண்டு வர்றன்னு சொல்லிட்டுப்போனா கரகாட்டக்காரி. இவுருக்கு எப்பிடி பவளாயிகிட்ட கேக்கறதுனே தெரில. புளுதண்ணி கொண்டு வந்த பவளாயிகிட்டெ எனக்கு புளுதண்ணியெல்லா வேண்டா என்ற ஒரு கண்ணுல பூ உழுந்து என்னால செரியா பாக்கவே முடில. இன்னோரு கண்ணுக்கு வந்துருமோன்னு பயமா இருக்குது. அதனால ஒரு சொட்டு தாய்ப்பாலு குடுன்னு சொன்னாரு.

அதுக்கு கரகாட்டக்காரி உங்குளுக்கு இல்லின்னு சொல்லுவனா நானு இருங்க உள்ள போயி பாலு கொண்டு வர்றன்னு சொல்லிட்டு போனா. அரண்மனையாருக்கு என்ன பன்றதுனே தெரியலெ அவளெ பாத்ததுமு அடையோனும்னு துடிச்சாரு. வூட்டுக்குப் பின்னாலே ஒதுக்குப்படலுக்குள்ள கரகாட்டக்காரி பாலெ எடுக்கறதெ பாக்குறதுக்கு தலயெக் கொண்டு போனாரு. அய்யோன்னு கத்திட்டே ஓடி அப்பிடியே கீழ வுழுந்தாரு. என்னன்னு பாத்தா படல்ல இருந்த ஈக்கிமாறு நெசமாவே இன்னொரு கண்ணெமு குத்திருச்சு. அப்பதெ பண்ணையாருக்கு புத்தி வந்துது. பொய்சொல்லி அவளெ ஏமாத்துனுதுக்கு செரியான தண்டனெ கெடச்சிருக்குது இனிமேலாவது இந்தெ நெனப்பெயெல்லா மறந்துரோனும்னு நெனச்சாரு. கரகாட்டக்காரி ஊட்டுக்குள்ளயிருந்து பாலோட வெளிய வந்து அரண்மனையார தேடிப் பாத்தா படலுக்குப் பின்னாடி என்னமோ சத்தங் கேக்குதேன்னு எட்டிப் பாத்தா அரண்மனையாரு கீழ வுழுந்து மொனகிகிட்டு கெடந்தாரு. ஈக்கி குத்துன கண்ணுல பால

கொஞ்சங்கொஞ்சமா விட்டா கரகாட்டக்காரி. அரண்மனையாருக்கு அந்த நெனப்பு போயி ஒரு தாயோட அரவணப்பு கெடச்ச மாதிரி உணர்ந்தாரு.

அப்பிடியே அவரை கைத்தாங்கலா புடிச்சிக் கொண்டுபோயி அரண்மணைல வுட்டுட்டு வந்தா கரகாட்டக்காரி. ரெண்டு கண்ணுந்தெரியாத அரண்மனையாரப் பாத்து ஊரே வெசனப்பட்டு நின்னுது.

அடுத்த வயலறுப்பு வந்துது. லொல்லக் கண்ணு அரண்மனையாருக்கு எங்க உக்காந்திருக்கறம்னே தெரியாம வாய்க்காலுப் பக்கம் பாத்து உக்காந்திருந்தாரு. பொம்பளைக எல்லா வர்ற சத்தொ மட்டுங்கேட்டுது. குள்ளக் கருப்பாயி அரண்மனை எப்பிடி உக்காந்திருந்தா நமக்கென்ன அவருக்குத்த ரெண்டு கண்ணுந் தெரியாது நாம பாட்டுக்கு எப்பிடி வேணாலு போலாம்னு சொன்னது காதுல வுழுந்துது. அரண்மணையாருக்கு அமாவாசை இருட்டுமாதிரி ஒன்னுமே தெரியல கருகும்னு இருட்டா இருந்திச்சி. பொம்பளைகெ இப்பவெல்லா எந்தப் பிரச்சினியுமு இல்லாமெ இடுப்புக்குமேலெ தண்ணி வந்தாலுமு சீலைத்துணி நெனயாமெ போனாங்கெ.

பேசும்போது - நமது மக்கள் பேச்சில் - வருகிற அசைப்பு, இளுவை, வெட்டு, மூக்கொலி இதுகளுக்கு முன்னால் நம்முடைய படைப்பாளிகள் கண்டுபிடித்த நமது தமிழ் எழுத்துக்கள் வெறும் நிராயுதபாணிகள் தான். நமது பேச்சுக்கு முன்னால் இந்த எழுத்துக்கள் பேந்த பேந்த முழிக்கும் !

**- கி.ரா**

---

வேளாண்மைத் தொழிலோடும், வேளாளர் வாழ்வோடும் தொடர்புடைய நூற்றுக்கணக்கான அழியும் நிலையில் உள்ள பழமையான சொற்களைப் பதிவு செய்து காப்பாற்றிய பெருமை நண்பர் இரா. இரவிக்குமார் அவர்கட்கு உரியதாகிறது.

**- செ.ராசு**

---

சந்தைக்குப் போகும் பக்கத்து கிராமத்தார், வேகாத வெய்யிலில் வீடு தாண்டிப் போகும்போது, அவர்களுக்கு நீர் மோரும், பானகமும் தண்ணீர்ப்பந்தலில் வழங்கியவர்கள் நம் மூதாதையர்கள்.

**- சிவக்குமார்**

---

இந்த வட்டார வழக்குகளைத் தொகுப்பது தமிழ் மொழிக்கு உயிர்தண்ணீர் அளிப்பது போன்றது. கலைச் சொற்களைக் கண்டு பிடிக்க முடியாமல் திணறும் மொழி வல்லுநர்களுக்கு இந்தக் களஞ்சியங்கள் 'இந்தா எடுத்துக் கொள்ளுங்கள்' என்று வளமான சொற்களை முன் வைக்கின்றன.

**- சிற்பி**

---

வெளியீடு

**கொங்கு மண்டல ஆய்வு மையம்**

உடுமலை